# தமிழரின் விடிவு

—தில்லைக்கூத்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரின் விடிவு

—தில்லைக்கூத்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| தொடர் இல. | | பக்கம் | வெளியீட்டுத் திகதி |
|---|---|---|---|
| 01 | இலங்கையைப் பொறுத்த வரை சர்வதேச அரங்கில் முக்கியத்துவம் பெறும் அமெரிக்காவும் இந்தியாவும் | 1 – 6 | ஏப்பிரல் 5.2002 |
| 02 | சர்வதேச உணர்வுகளுக்கு எதிராக சமாதான முயற்சிகளை முறியடிக்க இராணுவ ரீதியில் தலையிடும் சாத்தியம் கிடையாது. | 7 – 12 | ஏப்பிரல் 24.2002 |
| 03 | நிரந்தர சமாதானம் ஏற்படும் வரை தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புவது குறித்து மேற்குலகு சிந்திக்கக் கூடாது. | 13 – 18 | ஜூன் 12.2002 |
| 04 | சாவகச்சேரி, திரியாய் அழிவுகளுக்கு காரணமானவர்களுக்கு எதிராக சர்வதேச நீதிமன்றில் வழக்குத் தொடர வேண்டும். | 19 – 24 | ஜூன் 20.2002 |
| 05 | தமிழ் மக்களுக்கு எதிரான பாரபட்சங்களை புள்ளிவிபரங்களுடன் சர்வதேச சமூகத்தின் முன் கொண்டுவருவதே இன்றைய தேவை. | 25 – 27 | ஜூன் 29.2002 |
| 06 | நிறையும் குறையும் | 28 – 29 | ஆகஸ்ட் 28.2002 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 07 | சர்வதேச சமூகத்தின் அங்கீகாரம் பெற்றுள்ள இலங்கையின் சமாதான முயற்சிகள் எவ்வாறு அமைய வேண்டும்? | 30 – 34 | செப்தெம்பர் 16.2002 |
| 08 | இலங்கை தொடர்பாக இந்தியாவின் கரிசனை அரசியல் பூகோள நலன்களுக்கப்பால் வேறு ஒன்றும் இல்லை | 35 – 38 | செப்தெம்பர் 25 |
| 09 | இனப் பிரச்சினையில் சம்பந்தப்பட்ட நான்கு கதாபாத்திரங்கள் | 39 – 43 | அக்டோபர் 3.2002 |
| 10 | உண்ணாவிரதமிருக்கும் தமிழ்க் கைதிகளுக்கு விடிவு எப்போது? | 44 – 47 | அக்டோபர் 8.2002 |
| 11 | சமாதான சூழலில் அதி உயர் பாதுகாப்பு வலயங்கள் அவசியமற்றவை | 48 – 51 | அக்டோபர் 23 .2002 |
| 12 | தமிழர்களின் அபிலாஷைகளையும், அவலங்களையும் சர்வதேச, பெரும்பான்மை சமூகங்கள் புரிந்து கொண்டனவா? | 52 – 56 | அக்டோபர் 29.2002 |
| 13 | தமிழ் இனத்தைப் பூண்டோடு அழிக்க வேண்டும் என்ற நிலைப் பாட்டில் சில வெளிநாட்டு சக்திகள் | 57 – 61 | நவம்பர் 5.2002 |
| 14 | இரு மொழிப் பிராந்தியங்களின் கூட்டாட்சி அமைக்கப்படுவது அவசியம். | 62 – 66 | நவம்பர் 12.2002 |
| 15 | சமாதானத்தை குழப்ப முயற்சிப்போருக்கு கடும் எச்சரிக்கைவிடுப்பது சர்வதேச சமூகத்தின் பொறுப்பு | 67 – 72 | நவம்பர் 19.2002 |
| 16 | தமிழ்ப் பிராந்தியத்துக்கான பாதுகாப்புப் பொறுப்பை தமிழரிடமே விட்டு விடுவது அவசியத்தேவை. | 73 – 77 | நவம்பர் 26.2002 |
| 17 | பிரிட்டனிடமிருந்து சுதந்திரம் பெற்ற வரலாற்றை அமெரிக்கா திரும்பிப் பார்ப்பது அவசியம் | 78 – 82 | டிசம்பர் 2.2002 |
| 18 | இனப்படுகொலை, அடக்குமுறைகள் இடம்பெறாததை உறுதி செய்யும் சமஷ்டி அமைப்பே தேவையான தொன்று. | 83 – 88 | டிசம்பர் 10.2002 |
| 19 | தமிழர்கள் வீடத்தில் தலை கீழாக மாறிய இந்தியாவின் நிலைப்பாடு | 89 – 95 | டிசம்பர் 23.2002 |
| 20 | அரசியல் நடவடிக்கைகளில் தமிழ் மக்கள் விவேகத்துடன் செயற்படுவது அவசியம் | 96 – 100 | டிசம்பர் 31.2002 |
| 21 | மனித உரிமைகள் குறித்துப் பேசுவதற்கு முன்னர் இலங்கை அரசு சற்று பின்னோக்கிப் பார்க்க வேண்டும் | 101 – 105 | ஜனவரி 28.2003 |
| 22 | தமிழர்களை பூண்டோடு அழிக்க நினைக்கும் சக்திகளுக்கு இந்தியா ஆதரவளிக்கிறதா? | 106 – 111 | பெப்ரவரி 11.2003 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 23 | புரிந்துணர்வு உடன்படிக்கையில் தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை குறித்து குறிப்பிடாதமை பாரிய தவறு | 112 – 118 | மார்ச் 04.2003 |
| 24 | இலங்கை கடற்படையின் இரட்டை வேடம் | 119 – 122 | மார்ச் 13.2003 |
| 25 | தமிழ்த் தேசிய விடுதலைக்கு புத்தி ஜீவிகளின் பங்களிப்பு? | 123 – 1127 | மார்ச் 18.2003 |
| 26 | வட, கிழக்கின் புனர்நிர்மாணப் பணியில் உதவி வழங்கும் நாடுகளின் கண்காணிப்பு அவசியம் தேவை | 128 – 133 | மார்ச் 25.2003 |
| 27 | மனித உரிமை தொடர்பாக இரு வேறுபட்ட நிலைப்பாட்டில் சர்வதேச சமூகம் | 134 – 138 | ஏப்ரல் 1.2003 |
| 28 | முன்னோடி மாநாட்டை வேறொரு இடத்தில் நடத்தி புலிகளையும் பங்கு கொள்ளச் செய்வது அவசியம் | 139 – 143 | ஏப்ரல் 8.2003 |
| 29 | ஜனாதிபதியின் அண்மைய இந்தியா வுக்கான விஜயத்தின் நோக்கமும் பலபலன்களும் | 144 – 148 | ஏப்ரல் 18.2003 |
| 30 | "ஜனநாயகம்" குறித்து அமெரிக்க வின் வரைவிலக்கணம் என்ன? | 149 – 154 | ஏப்ரல் 23.2003 |
| 31 | வட, கிழக்கில் அபிவிருத்தியை மேற் கொள்ள பாரிய பொருளாதார அமைப்பொன்று அவசியம் | 155 – 159 | மே 3.2003 |
| 32 | புரிந்துணர்வு உடன்படிக்கை மீளாய்வு செய்யப்பட்டு புதிய அம்சங்கள் சேர்த்துக் கொள் ளப்படுவது அவசியம். | 159 – 164 | மே 7.2003 |
| 33 | டோக்கியோ மாநாட்டு விவகாரத்தில் ஜப்பானும் நோர்வேயும் கடைப்பிடிக்க வேண்டிய அணுகுமுறை | 165 – 169 | மே 17.2003 |
| 34 | இனநெருக்கடிக்கு காரணமான தரப்பிடம் தமிழர்கள் நீதியை எதிர் பார்ப்பதில் உள்ள சங்கடத்தை சர்வதேச சமூகம் உணர வேண்டும். | 170 – 175 | மே 27.2003 |
| 35 | இலங்கை தமிழர் விவகாரத்தில் சர்வதேச சமூகம் தன் மனச்சாட்சியை அடகு வைக்க கூடாது. | 176 – 180 | ஜூன் 2.2003 |
| 36 | தமிழர்களின் நியாயமான நிலைப்பாட்டை சர்வதேச சமூகம் பயன்படுத்தி பலவீனப்படுத்தும் முயற்சி | 181 – 184 | ஜூன் 17.2003 |
| 37 | விடுதலைப் புலிகளின் விரக்தியை உணர்ந்த நிலையில் டோக்கியோவில் சர்வதேச சமூகம் வெளியிட்ட கருத்துக்கள் | 185 – 189 | ஜூன் 13.2003 |
| 38 | அரசியல் ரீதியில் எந்த விட்டுக் கொடுப்பையும் செய்யாத அரசு போர் மூண்டால் அமெரிக்கா, இந்தியா உதவுமென்று கனவு | 190 – 194 | ஜூன் 24.2003 |
| 39 | இந்தியா பழைய கசப்புணர்வுகளை மறந்து இலங்கை இனநெருக்கடி தீர்வு விடயத்தில் ஆக்கபூர்வமான பங்களிப்பை செய்ய வேண்டும். | 195 – 200 | ஜூலை 01 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 40 | தமிழர் ஈழத்தை இன்னொரு கியுபாவாக மாற்றுவதற்கு இந்தியா முயற்சிக்கிறதா? | 201 – 206 | ஜுலை 20. 2003 |
| 41 | இடைக்கால நிர்வாகத்தில் தமிழரின் பிரதிநிதித்துவம் 1981 குடிசன மதிப்பீட்டின் பிரகாரம் அமைதல் வேண்டும். | 207 – 211 | ஜுலை 2003 |
| 42 | Tamil analyst warns of Indian inrercention in Lanka | 212 – 213 | April 19 |
| 43 | India will not militarily intervene in Sri Lanka: Analyst | 214 – 215 | June 28 |


# முகவுரை

"தில்லைக்கூத்தன்" என்ற பெயரினால் யாவராலும் அறியப்படும் திரு. இ. நடராஜா அவர்களின் கட்டுரைகளின் தொகுப்பாகிய இந்நூலுக்கு முகவுரை எழுதக் கேட்கப்பட்டதையிட்டுப் பெருமகிழ்வெய்துகின்றேன். பல வருடங்களாக இவருடன் கொண்ட பரிச்சயம் நூலாசிரியரது மனதைப் பெரிதும் புரிந்துகொள்ள வகைசெய்திட்டது.

இரண்டு நூல்களையும், 160க்கு மேற்பட்ட கட்டுரைகளையும் எழுதி மக்கள் மனதில் தனியிடமொன்றினைத் தில்லைக்கூத்தன் பெற்றுள்ளார் என்றால் அது மிகையாகாது. தினக்குரல் மற்றும் வீரகேசரி ஆகிய பத்திரிகைகளில் இவரது கட்டுரைகள் தொடர்ச்சியாக வந்துகொண்டே உள்ளன. இவை பெரும்பாலும் பொருளாதார, சமூக மற்றும் அரசியல் சீர்கேடுகளைச் சுட்டிக்காட்டும் வகையில் எழுதப்பட்டிருப்பினும், ஒட்டுமொத்தமாகப் பார்ப்பின் மானிட உரிமைகள் மீறலைப் பல்நோக்குக் கண்ணோட்டத்தில் ஆராய்ந்த கட்டுரைகளே அவை. திரு நடராஜா ஒரு அரசியல்வாதியல்ல. அவர் எப்போதுமே தன்னை ஒரு அரசியல் மாணவனாகவ சித்தரிக்கின்றார், கருதுகின்றார். உள்நாட்டு, உபகண்ட மற்றும் உலகளாவிய கண்ணோட்டங்களைத் துல்லியமாக ஆராய்ந்தறிந்தவராகவே தனது கட்டுரைகளை வரைந்துள்ளார். அவரது கட்டுரைகளை உள்வாங்குவதற்கு அக்கட்டுரைகளுக்கூடாகச் செல்லும் நூலிழையை அறிந்துகொள்வது மிகவும் அவசியம்.

தில்லைக்கூத்தனின் அரசியல் ஞானம், பட்டறிவு ஆகியன வாசகர்களது சிந்தனைகளைத் தூண்டிவிடும் ஏதுக்களாகும். ஐக்கிய நாடுகள் நிறுவனத்தில் சர்வதேச ஆலோசகராகக் கடமைபுரிந்தமையும், பல நாடுகளுக்குச் சென்று புலம்பெயர்ந்து வாழும் எம்மவர்களுடன் அளவளாவியதும், சர்வதேச வானொலிகளுக்கு வழங்கிய பேட்டிகளும், அவ்வப்போது எம்நாட்டுக்கு வருகைதரும் அரசியலறிஞர் மற்றும் புத்திஜீவிகளுடனான சந்திப்புக்களும் இவரது கருத்தோட்டங்களுக்கு மெருகூட்டுகின்றன.

தமிழரின் பொறுமை எல்லை கடந்துவிட்டது என்பதனை அடிக்கடி நினைவுகூரும் இவ்வெழுத்தாளர், வட்டுக்கோட்டைப் பாதையே எம்மவர் விடுதலைப் பயணத்தின் பாதையாகும் என்பதனைச் சுட்டிக்காட்டத் தவறுவதில்லை. திம்புக் கோட்பாடுகளை மறந்து தமிழ் மக்களின் விடிவு குறித்துப் பேசிடமுடியாது என்பதை ஆணித்தரமாக வலியுறுத்துகின்றார். தமிழ் மக்கள் தங்களது அடையாளத்தன்மையை உறுதிப்படுத்தவும், தங்களது வரலாற்றுச் சிறப்பினைப் பேணிப்பாதுகாக்கவும் இக்கட்டுரைகள் மைல்கல்களாக அமையும் என்பதில் எள்ளவும் சந்தேகமேயில்லை. விடுதலைப் பயணம் நெடியது. அப்பயணத்தில் தங்களைத் தியாகபலிகளாக அர்ப்பணித்தவர்களது நினைவுகள் எமது தொடர்ச்சியான பயணத்துக்கு உந்துசக்தியாக அமையட்டும். திரு நடராஜாவின் எழுத்தாக்கப்பணி மென்மேலும் தொடரட்டும். எல்லாம் வல்ல இறைவன் அவருக்கு நிறைவான ஆசியளிப்பாராக.

அருட் கலாநிதி டீ.எஸ். தியாகராஜா
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிமுகம்

அமரத்துவம் அடைந்த குமார் பொன்னம்பலம் எனது பணி தொடர வேண்டுமென்று வற்புறுத்தி இருந்தமையால், எமது பணி தொடர்கின்றது. தமிழ் இனம் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக சுதந்திரத்தை மீளவும் பெறவேண்டும் என்ற நோக்கிலேயே இப்பணி தொடர்கிறது. எம்மைப் பொறுத்தவரையில் எமது நிலைப்பாட்டில் மிகவும் உறுதியாக இருக்கின்றோம். அதாவது இலங்கை வேந்தன் இராவணன் காலத்திலிருந்து சங்கிலியன் காலம்வரை தமிழ் ஈழம் சுதந்திரமாக இறையாண்மையுடனும் சர்வதேச தொடர்புகளுடனும் திகழ்ந்தது என்பது சரித்திர உண்மை. 327 வருட காலமாக நாம் மேற்குலக ஏகாதிபத்தியத்துக்கு அடிமையாக வாழ்ந்தோம். 1948 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை சிங்கள ஆட்சியின் கீழ் அடிமைகளாக வாழுகின்றோம். இக் கால வரையில் நமது சாத்வீகப் போராட்டங்கள் யாவும் தோல்வியடைந்தமையால், ஆயுதமேந்திப் போராட முற்பட்ட பிரபாகரன் வெற்றியின் விளிம்பில் நின்று கொண்டிருக்கின்றார். ஈழத்துக் காந்தியென வர்ணிக்கப்பட்ட செல்வநாயகத்தின் கனவும், தமிழ் இனத்துக்காகத் தன் உயிரையே தியாகம் செய்த குமார் பொன்னம்பலத்தின் கனவும் தெய்வ அருளால் நிச்சயம் நனவாகும் என்பதே எமது பூரண நம்பிக்கை.

நாங்கள் பிரிவினை கோரவில்லை. ஏனைய ஆசிய ஆபிரிக்க நாடுகள் தாம் இழந்த சுதந்திரத்தை எவ்விதம் பெற்றனவோ அவ்விதமே நாமும் இழந்த சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்வதென திட நங்கற்பம் பூண்டுள்ளோம். இந்தத் திட நங்கற்பம் நிச்சயம் வெற்றி பெறுமென எதிர்பார்க்கின்றோம். இவ்விடயத்தில் எங்கள் சுதந்திர தாகத்திலிருந்து ஒரு படியேனும் கீழிறங்க நாம் தயாராக இல்லையென்பதை சர்வதேச தமிழ்ச் சமூகத்துக்கும், சர்வதேச சமூகத்துக்கும் கூறிக்கொள்ள விரும்புகின்றோம். எனவே, எத்தனை சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றாலும், வட்டுக்கோட்டைப் பாதையிலிருந்து திசைமாற வேண்டுமென இந்தியாவோ, அமெரிக்காவோ அல்லது உலகின் வேறெந்த நாடாவது அழுத்தம் கொடுத்தாலும் அதனையும் எதிர்கொள்ளத் தமிழினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயங்காதென்பதைக் குறிப்பிட விரும்புகின்றோம். எனவே இலங்கையிலுள்ள சகல தமிழ் மக்களும், சர்வதேசத் தமிழ்ச் சமுதாயமும் ஒன்றிணைந்து பிரபாகரன் தலைமையில் நடைபெறும் இத் திருப்பணிக்கு உதவி வழங்குமாறு மன்றாட்டமாகக் கேட்டுக் கொள்கின்றோம். பிரபாகரனுக்கு ஆதரவாக அரசியல் ரீதியாக பல்வேறு நாடுகளுக்குச் சென்ற அமரர் குமார் பொன்னம்பலம் அவர்கள் அங்கெல்லாம் தமிழினம் இழந்த சுதந்திரத்தை மீளவும் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று வீரமுழக்கம் செய்தார். அவர் ஆற்றிய திருப்பணி தொடர்பாக இதுவரையிலும் நீதியான நேர்மையான மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டாததை நினைத்து வருத்தப்படுகின்றோம். யாழ்ப்பாண வாக்காளர்களும், கொழும்பு தமிழ் வாக்காளர்களும் அவரை பாராளுமன்ற அங்கத்தவர் ஆக்காததை ஓர் பாரிய துரோகச் செயலாகவே நாம் கருதுகின்றோம். அவரின் நினைவுச் சின்னமாக யாழ்ப்பாணத்தில் ஓர் சிலை வைக்காதது தொடர்பாக நாம் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் செயற்குழுவுக்கு கண்டனம் தெரிவிக்கவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு நாம் ஆளாகியுள்ளோம்.

— தில்லைக்கூத்தன் —

# 1

## இலங்கையை பொறுத்தவரை சர்வதேச அரங்கில் முக்கியத்துவம் பெறும் அமெரிக்காவும் இந்தியாவும்

கடந்த காலத்தில் சந்திரிக்கா அரசு கடைப்பிடித்த கொள்கை தமிழரின் போராட்ட சக்தியான விடுதலைப்புலிகள் இயக்கத்தைப் 'பூண்டோடு அழிக்கும்' திட்டத்தையே கொண்டிருந்தது. சந்திரிக்கா அரசின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் புலிகளை பூண்டோடு அழிக்கும் கொள்கைக்கு சர்வதேச அரங்கில் ஆதரவு திரட்டிவந்தார்.

இந்த விடயத்தில் அவருக்கு கணிசமான வெற்றி கிடைத்தது. ஆனால், ஆளும் கட்சி யான ஐக்கிய தேசிய முன்னணி விடுதலைப் புலிகளுடன் ஓர் சமாதான உறவுக்கு வரவேண்டுமென்ற நிலைப்பாட்டிற்கு தள்ளப்பட்டுள்ளது.

ஏனெனில், கடந்த இருபது வருட கால யுத்தத்தினால் இலங்கையின் பொருளாதாரம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் புலிகளை யுத்தத்தின் மூலம் வெற்றி கொள்ள முடியாது என்பதும் காரணங்களாகும். இந்தச் சூழ்நிலையில் ஐக்கிய தேசிய முன்னணி இராணுவதீர்வின் மூலம் வெற்றி பெற முடியாது என உணர்ந்து கொண்டதனாலும் நாட்டின் பொருளாதாரத் துறையில் மிகவும் மோசமான நிலை ஏற்பட்டிருப்பதனாலும் புலிகளுடன் ஒரு நியாயமான தீர்வுக்கு வர வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

கடந்த ஏழு வருட காலமாக சந்திரிகா அரசு யுத்தத்திற்காக 322 பில்லியன் ரூபாவைச் செலவழித்துள்ளது. அப்படி இருந்தும் இராணுவ வெற்றிப்போக்கு புலிகளின் பக்கமே ஓங்கியுள்ளது.

ஐக்கிய தேசிய முன்னணி புலிகளுடன் நோர்வே நாட்டின் மத்திஸ்தத்துடன் பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி புரிந்துணர்வு ஒப்பற்தத்தில் கைச்சாத்திட்டது. இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒரு தற்காலிக யுத்த நிறுத்தத்திற்கு வழி வகுத்தது. இதுவொரு நிரந்தர யுத்தநிறுத்தமும், புரிந்துணர்வு ஒப்பந்தமும் நல்ல முறையில் முன்னேற்றமடைந்தால் நிரந்தர யுத்த நிறுத்தம் ஏற்பட்டு அதனால் சமாதானத் தீர்வு ஏற்படுவதற்கு வசதியாக அமையும்.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றுவதன் மூலம்தான் நிரந்தர சமாதானம் நாட்டில் ஏற்படமுடியும். சிங்களச் சமுதாயம் தமிழ் மக்களுடைய அபிலாஷைகளை உணர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளவோ ஆழ்ந்து அலசிப்பார்க்கவோ இல்லை. சுருங்கக் கூறின் 'தனி ஈழத்திற்கு சற்றுக் குறைவான' அரசியல் அமைப்பை தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளும் ஏற்கக் கூடும். இரு தேசங்கள் ஒன்றிணைந்து மத்திய அரசின் பலமில்லாத ஆட்சியை அமைப்பது தான் சாலச் சிறந்தது. தமிழ்த் தேசம், சிங்களத் தேசம் என்ற இரு அரசாங்கங்கள் அமைக்கப்பட்டு இந்த இரு அரசாங்ககங்களும் ஒரு கூட்டாட்சியை ஏற்படுத்தினால் தான் சமாதானம் மலர வாய்ப்பேற்படும். இந்த நிலைப்பாடு செயற்படாவிட்டால் சமாதானப் பேச்சுக்கள் தோல்வி அடையும் என்பதில் சந்தேகம் இல்லை.

பிரதமர் ரணில் விக்ரமசிங்க சமாதானப் பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்தாலும் யுத்த நிறுத்தத்தை தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும் என்ற கொள்கையை வெளிப்படுத்தியிருக்கின்றார். இப்படியான நிலைமை ஏற்படக்கூடுமென்ற அச்சத்தினால் ஐக்கிய தேசிய முன்னணி தனது வெளிவிவகாரக் கொள்கையை மிகவும் கவனமாக உருவாக்கி அதை சாதுரியமாகச் செயற்படுத்தி வருகின்றது.

இலங்கையைப் பொறுத்தவரையில் சர்வதேச அரங்கில் இரு நாடுகள் முக்கியத்துவம் பெறுகின்றன. ஒன்று தென்ஆசியாவில் வல்லரசான இந்தியா, இரண்டாவது உலக வல்லரசான அமெரிக்கா. ஒன்று பிராந்திய வல்லரசு. மற்றது உலகவல்லரசு. இந்த நிலையில் விடுதலைப்புலிகள் செயற்பாடுகளும், இலங்கை அரசாங்கத்தின் செயற்பாடுகளும் மிகவும் புத்திசாதுரியமாக இருத்தல் வேண்டும்.

கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதி இடம்பெற்ற பயங்கரவாத சம்பவத்திற்குப் பின்னர் அமெரிக்கா, பயங்கவாதத்திற்கெதிராக ஆபிரிக்காவிலும் வீறாப்புடன் செயற்பட்டு வருகின்றது.

விடுதலைப்புலிகள் இயக்கம் ஆயுதமேந்தியஓர் தேசிய விடுதலை இயக்கமாகவே திகழ்கின்றது. இந்த உண்மையை அமெரிக்காவோ அல்லது வேறெந்த நாடோ மறுக்கவோ அல்லது மறைக்கவோ முடியாது. சரித்திரத்தில் அமெரிக்கா சுதந்திரத்தை அனுபவிக்காவிட்டாலும் பிரிட்டிஷ் அரசிற்கு எதிராக ஆயுதம் ஏந்திய அமெரிக்க மக்கள் சுதந்திரமடைந்தனர். ஆனால் இலங்கைத் தமிழரைப் பொறுத்தவரையில் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக சுதந்திரத்தை அனுபவித்து 1621 ஆம் ஆண்டில் யுத்தத்தில் தங்கள் சுதந்திரத்தைத் திரும்பப் பெற வேண்டும் என்ற ரீதியில் துப்பாக்கி ஏந்தி விடுதலைப்புலிகள்யுத்தம் புரிகின்றார்கள்.

விடுதலைப்புலிகள் அமெரிக்காவின் நலன்களுக்கு எதிராகச் செயற்பட்டால் அவர்களை பயங்கரவாதிகள் என்று முத்திரையிட்டு இலங்கை அரசாங்கத்திற்கு இராணுவ, அரசியல், பொருளாதார



உதவிகளைச் செய்யக் கூடும்.

இன்றைய சூழ்நிலையில் அமெரிக்காவிற்கு மத்திய கிழக்குப் பிராந்தியத்தினை இராணுவ ரீதியாகக் கட்டுப்படுத்துவதற்கும் இந்தியாவினுடைய இந்து சமுத்திர மேலாண்மையை மட்டுப்படுத்துவதற்கும் அமெரிக்கக் கடற்படைக்கு திருகோணமலை தேவையாக இருக்கின்றது. இந்த சர்வதேச மாற்றங்களை இலங்கை அரசு தன்னுடைய உள்நாட்டுப் பிரச்சினையாகிய விடுதலைப்புலிகள் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அமெரிக்காவுடன் அதிக சிநேகித தன்மையை உருவாக்கி திருகோணமலையை அமெரிக்கா பயன்படுத்துவதற்கு கொடுத்துதவ முன்வரக் கூடும். அமெரிக்காவிற்கு இன்றைய சூழ்நிலையில் இலங்கை ஒரு முக்கிய கேந்திர ஸ்தானமாக விளங்குககிறது. சமீபத்தில் அமெரிக்கா தூதுவர் விடுதலைப்புலிகளுக்கு விடுத்த எச்சரிக்கையும் அமெரிக்க உயர்மட்ட கடற்படைத் தளபதியின் வருகையும், உயர்மட்ட ராஜதந்திரியின் வருகையும் இக்கூற்றை நிருபிக்கும்.

காலப் போக்கில் அமெரிக்கக் கடற்படை யுத்தக் கப்பல்களும் அமெரிக்க இராணுவத் தலைமைகளும் இலங்கைக்கு வர அதிக வாய்ப்புக்கள் உள்ளன.

இந்த நிலைப்பாட்டை ரணில் விக்கிரமசிங்கவும், அமைச்சர் ஜீ. எல். பீரிஸூம் நன்கு அவதானித்து அதற்கு ஏற்ப செயற்பாடுகளை உருவாக்குகினர். உதாரணமாக விடுதலைப் புலிகளுக்கு ஒரு எச்சரிக்கை விடுவதுபோல் இலங்கைக்கு வல்லரசுகள் பக்கபலமாக இருக்கின்றன என ஜீ.எல். பீரிஸ் கூறியது இதை உறுதிப்படுத்துகிறது. அமெரிக்காவின் தேசிய நலன்கருதிச் செய்யும் திட்டங்களும், விடுதலைப்புலிகளை பூண்டோடு அழிக்கும் திட்டங்களும் ஒன்றாக இணைந்திருக்கின்றன. இந்த உள்நோக்கம் கருதித்தான் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் அமெரிக்கவிற்கு அதிக சலுகைகளைக் கொடுத்து காலப் போக்கில் அமெரிக்காவினுடைய பொருளாதார உதவியையும், இராணுவ உதவிகளையும் பெற திட்டங்களை வகுக்கின்றது என்பதில் சந்தேகம் இல்லை.

தமிழ் மக்களை அடக்கி ஒடுக்குவதற்கு இலங்கைக்கு உலக வல்லரசுகளின் உதவிகள் தேவைப்படும். இதனால் அமெரிக்கா இராணுவ ரீதியாக விடுதலைப்புலிகளுக்கு எதிராகச் செயற்படுமா அல்லது வெறும் எச்சரிக்கையுடன் நிறுத்திக் கொள்ளுமா என்ற கேள்வி எழுகிறது? அமெரிக்கா வியட்நாமில் படித்த பாடத்தை மறந்திருக்க் கூடும். அத்துடன் ஆப்பானிஸ்தானில் நடக்கும் யுத்தம் எவ்விதம் முடிவிற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரப்போகிறது. என்பதைச் சிந்திக்கவில்லை. இப்படியான கால கட்டத்தில் இலங்கையில் ஒரு தேசிய விடுதலை இயக்கத்தை இராணுவ ரீதியாக அடக்குவதற்கு முடியுமா என்ற கேள்வி எழுகிறது. ஆனால் தமிழ் மக்கள் விடயத்தில் இலங்கை அரசாங்கத்தின் வெளிவிவகாரக் கொள்கை எந்தச் சந்தர்ப்பத்திலும் அமெரிக்காவை தன் பக்கத்திற்கு இழுக்கவேண்டும் என்பதில் ஒருவித சந்தேகமும் இல்லை.

அமெரிக்கா, இலங்கை அரசின் ஆலோசனையைக் கேட்டு தனது தேசிய அற்ப நன்மைகளைக் கருதி விடுதலைப் புலிகளுக் கெதிராக இராணுவ ரீதியில் செயற்படுமானால், அதனுடைய தாக்கத்தைப் பற்றி அமெரிக்கா முன் கூட்டியே சிந்திப்பது அவசியமாகும். முதலாவதாக உலகின் பல நாடுகளில் செறிந்து வாழும் ஏழரைக் கோடி தமிழ்மக்களின் எதிர்ப்புகளுக்கு முகங்கொடுக்க வேண்டியேற்படும்.

அமெரிக்காவின் இராணுவத் தலையீடு இந்தியாவின் நியாயமான நிலையான ஆதிக்கத்திற்கு ஓர் அச்சுறுத்தலாக அமையும். இதன் பலனாக அமெரிக்காவிற்கு வர்த்தக ரீதியாக இந்திய சந்தை இல்லாமல் போகும். இன்று இந்தியாவும் அமெரிக்காவும் சிநேகபூர்வ நாடுகளாக இருக்கலாம். ஆனால் நாளை இலங்கைத் தமிழ் மக்களுக்கு எதிராக அமெரிக்கா இராணுவ ரீதியில் ஈடுபட்டால் இந்தியாவின் கொள்கைகள் மாறக்கூடும். இதை அமெரிக்கா விரும்புகின்றதா என்ற கேள்வி எழுகின்றது.

அமெரிக்கா இலங்கையில் தனது கொள்கையை நிறைவேற்றுவதாயின், அந்தக் கொள்கையை இந்தியா மூலமாகவே செயற்படுத்துவது தனது அரசியல் சாணக்கியம் என்று எண்ணக்கூடும். உதாரணமாக ஆனையிறவு இராணுவ முகாமை விடுதலைப்புலிகள் கைப்பற்றியதன் பின்பு யாழ்நகர் விடுதலைப்புலிகள்வசம் வீழ்ந்துவிடும் என்று அச்சம் கொண்டு அங்கிருக்கும் 35,000 சிங்கள இராணுவத்தினருக்கு பாதுகாப்பில்லை எனக்கருதி அமெரிக்கா இந்தியாவிற்கு அழுத்தம் கொடுத்து இந்தியா விடுதலைப்புலிகள் மேல் அழுத்தம் பிரயோகித்து யாழ்.குடா விடுதலைப்புலிகள் வசம் வீழாமல் இருப்பதில் வெற்றி கண்டது.

1944 ஆம் ஆண்டில் சாதார் கே.எம். பணிக்கர் எழுதிய நூலில் இலங்கையும் பர்மாவும் இந்தியப் பாதுகாப்பு வலயத்துக்குள் இருக்கின்றன எனக் குறிப்பிட்டிருந்தது. இந்தக் கொள்கையை இந்திய மத்திய அரசு இன்று வரை கடைப்பிடித்து வருகின்றது. உதாரணமாக 1987.07.29 இல் உருவாகிய இலங்கை- இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் இந்திய நலன்களுக்கு எதிராக இலங்கை செயற்படலாகாது எனக்



குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே, இலங்கைத் தமிழ் மக்களை அடக்கி ஒடுக்குவதற்கு அமெரிக்காவிற்கு விசேட இராணுவச் சலுகைகள் கொடுக்கப்பட்டால் அவை இந்தியாவின் பாதுகாப்பிற்கு குந்தகம் ஏற்படும் என்பதில் ஐயம் இல்லை.

இலங்கை அரசு அமெரிக்காவின் நட்பைப் பலப்படுத்திக் கொண்டிருக்கும் அதேசமயம், இந்தியாவின் நட்பையும் பெறுவதற்கு முக்கிய கவனம் செலுத்தி வருகிறது. ரணில் விக்கிமைசிங்க பிரதமராகப் பதவியேற்ற ஒரு மாதத்தில் புதுடெல்லிக்கு விஜயம் செய்து மத்திய அரசுடன் அந்தரங்க ஆலோசனை நடத்தினார்.

சமாதாப் பேச்சுவார்த்தை தோல்வியுற்றால் தமிழ் மக்களை அடக்கி வழிக்குக் கொண்டு வருவதற்கு இந்தியாவினுடைய உதவியை பெற்றுக் கொள்வதற்கான ஒரு தந்திரோபாயமாக இவ்விஜயத்தின் நோக்கமாக இருக்கலாமென ஊகிக்க முடியும். இந்த எண்ணத்துடன் தான் இலங்கை- இந்தியாவுடன் பகைத்துக் கொள்ளாமல் இந்தியாவிற்கு புகழாரம் சூட்டுகிறது. அண்மையில் வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ பேசிய கருத்தும் இதையே உறுதிப்படுத்துகின்றது. இலங்கையில் சமாதானம் மலருவதற்கு இந்தியாவின் உதவி அவசியம் தேவை எனக் கூறியிருந்தார். சமாதானப் பேச்சுவார்த்தை தோல்வியுற்றால் இந்தியா எதிர்ப்புக்காட்டமாட்டாது என்ற சூழ்நிலையும் ஏற்படலாம். தமிழ்நாட்டு மக்களின் எதிர்ப்பைச் சம்பாதிக்க இராணுவ உதவி வழங்கமாட்டாது.

அந்தச் சூழ்நிலையில் அமெரிக்கா நேரடியாக இராணுவ ரீதியாக ஈடுபட்டால் நிச்சயம் இந்தியா இதை வரவேற்கப் போவதில்லை. ஆனால், அமெரிக்கா மறைமுகமாக இராணுவ உதவி செய்யும் பட்சத்தில் அதை இந்தியா எதிர்க்கமாட்டாது. இதிலிருந்து தமிழ் மக்கள் விடயத்தில் இலங்கை அரசின் வெளிவிவகாரக் கொள்கை அமெரிக்காவையே நம்பி இருக்கிறது. இந்தியாவைப் பகைத்துக் கொள்ளாமல் இருந்தாலே போதுமானது என்பதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

இந்தக்கொள்கை ஒரு காலத்தில் ஜே.ஆர் ஜயவர்தனாவினாலும் கடைப்பிடிக்கப்பட்டு வந்தத. ஆசிய, ஆபிரிக்க நாடுகளின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்காமல் ஒரு சிறிய நாடான இலங்கையின் பொருட்டு இரு கண்டங்களையுமே உதாசீனம் செய்வதாகக் கருதப்படுகிறது. இந்தக் கொள்கை ரஷ்யா, சீனா இந்தியா இந்தோனேஷியா, தென்ஆபிரிக்கா போன்ற நாடுகள் கடும் கண்டனத்தைத் தெரிவிக்க வேண்டும். ஐரோப்பிய சமூகமும் இலங்கையையும், அமெரிக்காவையும் கண்டனம் செய்யக் கூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விதமான சூழ்நிலை உருவாகும் போது விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு எவ்விதமாக அமையும் என்பது பற்றி சிந்திப்பது அவசியமாகின்றது. அவர்கள் இறுதிவரை நோர்வே நாட்டின் உதவியுடன் தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கு அரசியல் ரீதியாக கடுமையாகப் பாடுபடுவார்கள். ஆனால் இதுவும் தோல்வியைத் தழுவினால்அல்லது யுத்தம் தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்டால் நிச்சயம் விடுதலைப்புலிகள் சரணாகதியடைய மாட்டார்கள். அரசியல் ரீதியாக நோர்வே நாட்டின் மூலமாக இந்தியா, கனடா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றிற்கு அழுத்தம் கொடுத்து தமது அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றுவதற்கு ஆர்வத்துடன் ஈடுபடுவார்கள்.

இலங்கை அரசினுடைய இராணுவப் புலனாய்வுப் பிரிவின் தகவலின்படி விடுதலைப்புலிகளின் இராணுவப் பலம் 4,000 பேர் தொடக்கம் 5,000 வரை எனக் கூறகிறது. ஆனால், அவர்கள் இதுவரை ஈட்டிய இராணுவ வெற்றிகள் உலக சாதனைகளாகக் கருதப்படுகின்றன.

மக்கள் தொகை ரீதியில் உலகில் மிகவும் கூடிய தொகையான இராணுவத்தினரை இலங்கை அரசே வைத்துள்ளது. அப்படி இருந்தும் இலங்கை இராணுவத்தினால் இந்த 5,000 புலிகளை வெற்றி கொள்ள முடியாதுள்ளது. மீண்டும் ஒரு யுத்தத்தை இலங்கை அரசு ஆரம்பித்தால் நிச்சயமாக மிகவும் சுலபமாக பிரபாகரன் தனது படையை 15,000 தொடக்கம் 20,000 வரை வைத்துக் கொள்வதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளன. உ படியான ஒரு சூழ்நிலை ஏற்படும் பட்சத்தில் நாடு அழிவதை யாராலும் தடுக்கமுடியாது போய்விடும்.



# 2

## சர்வதேச உணர்வுகளுக்கு எதிராக சமாதான முயற்சிகளை முறியடிக்க இராணுவ ரீதியில் தலையிடும் சாத்தியம் கிடையாது.

இலங்கையில் தமிழ் மக்கள் பிரச்சினை இந்த நாடு சுதந்திரமடைந்த காலந்தொட்டு தொடர்ந்து வருகின்ற பிரச்சினையாகும். 1956 ஆம் ஆண்டு தொடக்கம் 1983ஆம் ஆண்டு வரை சிங்கள, தமிழ் இனக்கலவரங்களாக தொடர்ந்தது. 1983 ஜூலை மாத்திலிருந்து 2002 ஆம் ஆண்டு விரை இனப்படு கொலைகள் தொடர்ந்தன. 1983ல் தமிழ் மக்களுக்கெதிரான இனப் படுகொலையானது அகில உலகத்தையுமே அதிர்ச்சியடைய வைத்தது. இதன் காரணமாக இந்தியாவும், அவுஸ்திரோலியாவும் மேற்குலக நாடுகளும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு விசா இல்லாமல் தமது நாடுகளில் தஞ்சம் கொடுத்தார்கள். இவ்வுதவியானது உலகம் மனித நேயத்தை வெளிப்படுத்து வதற்காக உள்ளது.

முன்னைய காலங்களில் இலங்கைத் தமிழர்கள் படும் அவலங்களையும் துயரங்களையும் பார்த்து அண்டை நாடான இந்தியாவில் தமிழ் நாடு மாநிலத்தில் ஹர்த்தால்கள் அனுஷ்டிக்கப்பட்டன. தொடர்ந்து நடைபெற்ற இந்த இனப்படுகொலைகள் காரணமாக 65,000க்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டார்கள். இதில் இந்தியாவில் இருந்து அமைதிப்படை என்ற பெயரில் வந்த இராணுவத்தினரால் கொல்லப்பட்ட அப்பாவித் தமிழ் மக்கள் 6,500 பேருக்கு மேற்பட்டதாகும். சிங்கள பேரினவாத சக்திகளை எதிர்கொண்டு முறியடிப்பதற்காக தமிழ் இளைஞர்கள் துப்பாக்கி ஏந்தி இன்று வரை 17,220 விடுதலைப் புலிகள் வீரச்சாலைத் தழுவினார்கள். ஒரு சிறிய நாட்டில் பெருந்தொகையான அப்பாவிகள் பலியாகிக் கொண்டிருப்பதை நிறுத்தும் முகமாக சர்வதேச சமூகம் மிகவும் அக்கறையெடுத்து அதன் பலனாக நோர்வே அரசினுடைய மத்தியஸ்தத்தினூடாக இவ்வருடம் மாசி மாதம் 22ஆம் திகதி இலங்கையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு யுத்த நிறுத்தம ஏற்பட்டது. இந்த யுத்த நிறுத்தத்தை இந்தியா உட்பட அகில உலகமும் மகிழ்ச்சியுடன் வரவற்றுள்ளது.

இந்த யுத்த நிறுத்தாமானது ஓர் நிரந்தர சமாதானத்திற்கு அடிக்கல்லாக அமையுமென அமைதியை விரும்பும் சகல நாடுகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ச்சியடைந்தன. கடந்த 12 வருடகலாமாக காடுகளுக்குள் வாழ்ந்து துப்பாக்கி முனையில் இராணுவத்துடன் சமரிட்ட பிரபாகரன், இந்த யுத்த நிறுத்தத்தைத் தொடர்ந்து ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி வன்னிக்காட்டில் சர்வதேச ஊடகவியலாளர் மகாநாட்டைக் கூட்டி தனது கருத்துகளை உலகத்திற்கு வெளிப்படுத்தினார். இந்த வெளிப்படுத்துதலினால் அகில உலகமும் அசைந்து விட்டது என்றே சொல்ல வேண்டும். இலங்கையில் சமாதானம் ஏற்படவேண்டும் என விரும்புபவர்களுக்கு அவருடைய ஊடகவியலாளர் சந்திப்பானது நல்ல அறிகுறியாக அமைந்து விட்டது. சுருங்கக் கூறின் சர்வதேச சமூகம் இவருடைய கூற்றை மகிழ்ச்சியுடன் வரவேற்றுள்ளது. சிங்கள மக்களிலும் கணிசமான புத்திஜீவிகள் இவருடைய செய்தியை நன்கு பாராட்டியுள்ளார்கள். ஆனால், துரதிர்ஷ்ட வசமாக தமிழ்நாட்டின் முதல்வர் ஜெயலலிதா பிரபாகரனுடைய கூற்றை மிகவும் கோபாவேசத்துடன் விமர்சித்துள்ளார். ஜெயலலிதா தனது தனிப்பட்ட கருத்தை வெளிப்படுத்தி யிருந்தால் அதை மன்னிக்கலாம். ஆனால், அவர் அண்ணாதிராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவி, அக்கட்சியே இன்று தமிழ் நாட்டின் ஆளும் கட்சியாகவும் அமைந்திருக்கின்றது. பிரபாகரனின் ஊடகவியலாளர் மகாநாட்டின் பின்பு தமழ் நாட்டுச் சட்ட சபையில பிரபாகரன் இந்தியாவிற்கு நாடுகடத்தப்பட வேண்டும், இது சாத்தியமாகாவிடில் இந்திய இராணுவத்தை இலங்கைக்கு அனுப்பி அவரைக் கைது செய்ய வேண்டுமென ஒரு பிரேரணையை நிறைவேற்றிய துர்பபாக்கியத்தை என்னவென்று சொல்வது?

## ஜெயலலிதானவின் நிலைப்பாடு காங்கிரஸுடன் கூடடுச்சேர அவருக்கு வசதியாயிருக்கலாம்.!

ஜெயலலிதா ஓர் சிறந்த நடிகை. அவருடைய சிறந்த நடிப்பு காரணமாகத்தான் எம்.ஜி.. ராமச் சந்திரன் அவர் மீது பாசம் வைத்து அவரை அரசியலில் புகுத்தினார். ஆனால், ஜெயலலிதா தமிழ் நாட்டைச் சேர்ந்தவரல்லர். அவர் "கன்னடத்தை" சேர்ந்தவர். 6 கோடி தமிழக மக்களின் தலைவி "பிராமணியத்தை" சேர்ந்த ஒருவர் தமிழகத்துக்கு முதல்வராக வந்துள்ளதாகும். ஜெயலலிதா தமிழர்களுக்கு எதிரான பிராமணியத்திற்கு முக்கிய சின்னமாக விளங்குகின்றார். எனவே தான், இவருக்கு இலங்கைத் தமிழர்களின் அபிலாஷைகள் பற்றியோ அல்லது அவர்கள் படும் அவலங்கள், துயரங்கள் பற்றியோ சிந்திக்க முடியாதுள்ளது.



பிராமணியத்திற்கு எதிரான இயக்கத்திற்கே மறைந்த பேறறிஞர் அண்ணாத்துரை தலைமை தாங்கினார். அதில் அவர் வெற்றியும் பெற்றார். இவரின் மறைவிற்குப் பின்பு அண்ணாவின் கொள்கையைப் பின்பற்றிய எம்.ஜி. ராமச்சந்திரன் திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து பிரிந்து அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை அமைத்து அதில் வெற்றி பெற்றுத் தமிழ் நாட்டின் முதல் மந்திரி ஆனார். எம்.ஜி. ராமச்சந்திரன் முதல் மந்திரியாக இருந்த காலத்தில் பிரபாகரனை மதித்து, அரவணைத்து அவருக்குச் செய்த உதவிகள் யாவரும் அறிந்ததே. இதிலிருந்து நாம் உணரக் கூடியது என்னவென்றால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பிராமணியத்துவத்திற்கு எதிரானது மட்டுமல்ல, விடுதலைப் புலிகளைத் தமது "உடன் பிறப்புகளாக" மதித்து தமிழ்நாட்டில் அடைக்கலம் கொடுத்து நிதி உதவியும் செய்துவந்தது. எம்.ஜி.ராமச்சந்திரனைப் பொறுத்த மட்டில் விடுதலைப் புலிகளுக்கு செய்த உதவிகள், சேவைகள் என்றுமே மறக்கமுடியாதவை.

எம்.ஜி. ராமச்சந்திரனின் மறைவிற்குப் பின்னர் ஜெயலலிதா அக்கழகத்தின் தலைவியாகத் திகழந்தார். இவர் தமிழகத்தையோ, தமிழினத்தையோ சேர்ந்தவராக இல்லாதிருந்தும் கூட எம்.ஜி. ராமச்சந்திரனின் சிநேகிதி என்ற ஒரே காரணத்தினால் தான் இந்த தலைமைப் பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டார். இன்று அறிஞர் அண்ணாத்துரையோ அல்லது எம்.ஜி.ஆரோ உயிருடன் இருந்தால் வேலுப் பிள்ளை பிரபாகரனைக் கைது செய்ய வேண்டுமென்று சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றுவார்களா? தமிழ் நாட்டில் சுயமரியாதையுள்ள திராவிட இனத்தைச் சேர்ந்த எந்தத் தமிழனும் இத்தீர்மானத்தை ஆதரிக்கமாட்டான்.அதுவும் பிரபாகரன் இந்தியா தங்கள் "தந்தையர் நாடு" என்று கூறியதன் பின்பு இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. எனவே, இத்தீர்மானம் அண்ணாவின் கொள்கைக்கோ, எம்.ஜி.ராமச்சந்திரனின் கொள்கைக்கோ எதிரானது. எம்.ஜி.ஆர் கொள்கையையே பின்பற்றுகிறேன் என்று "கீதை உபதேசம்" செய்யும் பிராமணியத்துவத்தைச் சேர்ந்த ஜெயலலிதா தனது மனச்சாட்சியை அடகு வைத்துவிட்டாரா? என சுய மரியாதை உள்ள ஒவ்வொரு தமிழ்மகனும் கேட்க வேண்டும்.

ஜெயலலிதா இந்தியாவினுடைய சுயாதிபத்தியத்திற்கு ஆபத்து ஏற்படக் கூடாது என்ற காரணத்தினால் பிரபாகரனை கைது செய்ய வேண்டுமெனக கூறி தனது "தேசப்பற்றை" வெளிப்படுத்தினார். அப்படியானால் பாகிஸ்தான் தீவிரவாதிகள் இந்தியப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராளுமன்றத்திற்குள் புகுந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்த பொழுது, அவரது தேசப்பற்று எங்கே போய் ஒளிந்து கொண்டது. அந்தத் தீவிரவாதிகளைப் பிடிப்பதற்கு ஜெயலலிதா இந்திய இராணுவத்தைப் பாகிஸ்தானுக்கு அனுப்பும் படி மத்திய அரசை ஏன் கேட்கவில்லை?

இவரது தேசப்பற்று இவ்விடயத்தில் எங்கே போய்விட்டது. காஷ்மீர், கார்கில் என்ற இடத்தில் பாகிஸ்தானிய தீவிரவாதிகள் எட்டு மாத காலமாக இந்திய எல்லையை ஊடறுத்து வன்முறையில் ஈடுபட்டார்கள். ஜெயலலிதா ஏன் இந்த விடயத்திலும் தனது தேசப்பற்றை வெளிப்படுத்தவில்லை. புலிகளின் விடயத்தில் மட்டும் தான் இவருக்கு தேசப்பற்று பீறிட்டு வருகிறது போலும்.

## ஜெயலலிதாவும் மனிதநேயமும்

ஜெயலலிதா தனது மனச்சாட்சியை அடகு வைத்து விட்டார். அத்துடன் "மனித நேயத்தையும்" தூக்கி எறிந்துவிட்டார் என்பதே எனது வாதம். அவர் எதிர்க்கட்சித் தலைவியாக இருந்த பொழுதும், அநேக வருடங்களாக முதன் மந்திரியாக இருந்த பொழுதிலும் கூட அவர் தமது மனிதநேயத்தை வெளிப்படுத்தி வன்னியில் போஷாக்கின்மையால் வாழும் தமிழ்க் குழந்தைகளுக்கு ஒரு போத்தல் பாலைத்தானும் கொடுத்துதவினாரா? எனக் கேட்கிறோம். வன்னி மக்கள் முதியோர், குழந்தைகள் யாவரும் அனுபவித்து வரும் துன்பங்களை வார்த்தைகளால் விபரிக்க முடியாது. இவர்கள் நினைத்திருந்தால் மத்திய அரசை இந்த விடயத்தில் "மனிதாபிமான உதவி" வழங்கும் படி நிர்ப்பந்தித்திருக்கலாம். ஆனால் அப்படிச் செய்ய அவருக்கு மனித நேய உணர்வோ, தேசப்பற்றோ இல்லை என்றே கூற வேண்டும். ஆகவே அவரிடம் இருப்பது "இரண்டு பற்றுகள்" மாத்திரமே. ஒன்று பிராமணியத்துவப்பற்றும் ஆதிக்க வெறியும் மற்றது தகாத முறையில் கோடிக்கணக்கான சொத்துச் சேர்ப்பதுமாகும். இந்த இரண்டாவது பற்றின் காரணமாக ஜெயலலிதா தமிழ்நாட்டில் அநேக வழக்குகளைச் சந்தித்து வருகிறார்.

இந்தியப் பிரதமர் மனிதாபிமான முறையில் பிரபாகரனின் ஆலோசகரான அன்ரன் பாலசிங்கத்திற்கு மருத்துவ உதவி அளிப்பது பற்றி இந்திய மததி யஅரசு பரிசீலிக்கும் என அழுத்தமாகத் தெரிவித்திருந்தார். ஆனால், இந்த மனிதாபிமான உதவியைக் கூட செய்யக் கூடாது என்று ஜெயலலிதா நிராகரித்துவிட்டார். இதிலிருந்து யாம் அறிவது யாரெனில் ஜெயலலிதா "மனித இனத்தைச்" சேர்ந்தவர்தானா? என்ற சந்தேகம் எழுகிறது. விலங்குகள், பறவைகள்



கூட தங்கள் இனத்திற்கு துன்பம் நேரும்போது அனுதாபத்தைக் காட்டும். இலங்கைத் தமிழர்களுக்கும் சமாதானத்திற்கும் முதல் எதிரியாக இருந்தோர் இந்தியாவிற்கு சென்று வைத்திய சிகிச்சை பெற்றனர். சர்வதேச தமிழ் சமுதாயத்தையும் இலங்கைத் தமிழர்களையும் விரோதித்தவருக்கு இந்திய அரசு நன்கு பாதுகாப்புடன் புதுடெல்லியில் வைத்திய சிகிச்சை அளித்தது. இதைத் தமிழ் மக்களோ அல்லது விடுதலைப் புலிகளோ எதிர்க்கவில்லை. இது ஒரு மனிதாபிமான செயலாகும். ஆனால், அதே நபர் அநேக தடவைகளில் மனித நேயத்தை காட்டவேண்டிய சநதர்ப்பம் ஏற்பட்டும் காட்டவில்லை. அன்ரன் பாலசிங்கம் நோர்வே நாட்டில் வைத்திய சிகிச்சை பெறும்பொருட்டு அனுமதி கேட்டபொழுது அப்போதைய வெளிவிவகார அமைச்சராக இருந்த கதிர்காமர் பல நிபந்தனைகள் விதித்தார். திருமதி பண்டாரநாயக்காவிற்கு தென் இந்தியாவினல் வைத்திய சிகிச்சை அளிக்கப்பட்டபோது தமிழ் மக்களோ அல்லது விடுதலைப் புலிகளோ இது பற்றி குறை சொல்லவில்லை. ஏனெனில் இது ஒரு "மனிதாபிமான செயல்". ஆனால் ஜெயலலிதா இந்தியாவில் அன்ரன் பாலசிங்கம் வைத்திய சிகிச்சை பெறுவதற்கு இடமளிக்கப்படக் கூடாது என அழுத்தமாகக் கூறிவிட்டார். இது "மனித குலத்தின் பண்பாடு அல்ல" அரக்க குலத்தின் குணாம்சம் என்றே மிகவும் துயரத்துடன் வெளிப்படுத்துகிறோம்.

ஜெயலலிதா பிரபாகரனை கைது செய்வதற்கு இந்திய இராணுவத்தை வன்னிக்கு அனுப்பவேண்டுமெனக் கூறினார். பதினைந்து வருடங்களுக்கு முன்பு விடுதலைப் புலிகள் மிகவும் பலவீனப்பட்ட நிலையில் இருந்தார்கள். அந்தச் சமயத்தில் இலங்கையின் தமிழர் பிரதேசங்களில் நிலைகொண்டிருந்த சுமார் 11/4 இலட்சம் இந்திய இராணுவத்தினரால் பிரபாகரனைப் பிடிக்க முடியவில்லை. ஆனால் இன்று விடுதலைப் புலிகளின் பலம நூறுமடங்கு அதிகரித்துள்ளது. உதாரணத்திற்கு, ஆணையிறவு இராணுவ முகாம் கைப்பற்றப்பட்ட விதம் அறிந்ததே. இந்தச் சூழ்நிலையில் பிரபாகரனைப் பிடிப்பதற்கு இந்தியாவின் மொத்த இராணுவத் தொகையில் அரைவாசி இராணுவம் (5 இலட்சம்) வன்னிக்குள் பிரவேசித்தாலும் கூட பிரபாகரனைப் பிடிக்க முடியாது என்பதே எமது நிலைப்பாடாகும். பிரபாகரனின் இராணுவ பலத்தை அறியாமல் ஜெயலலிதா ஓலமிடுகிறார். இநதிய இராணுவம் பிபாகரனைப் பிடிப்பதற்கு தலையீடு செய்தால் இலங்கைத் தமிழர் மட்டுமல்ல சர்வதேச தமிழ் சமுதாயமும் சர்வதேச சமூகமும் இந்தியாவிற்கெதிராக கண்டனக்குரல் எழுப்பும். இந்த விபரீதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட்டால் நிச்சயம் காலப்போக்கில் தமிழ் நாடு பிரிந்து போவதற்கு ஜெயலலிதாவே காரணமாக விளங்குவார்.

ஜெயலலிதா இந்த விதமான நிலைப்பாடு எடுப்பதற்கான காரணம் என்ன என்பது பற்றிச சிந்திப்பது அவசியம்.

காலப்போக்கில் ஆளுங்கட்சியான பாரதிய ஜனதாக் கட்சி ஆட்சியில் தொடர்ந்து இருக்க முடியாமல் கவிழ்ந்து போனால் அதைத் தொடர்ந்து வரும் பொதுத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி அரசமைக்கும் பட்சத்தில் ஜெயலலிதா காங்கிரஸுடன் கூட்டுச் சேர்வதற்கு யோசிக்கிறார். இதன் காரணமாக பிரபாகரன் நாடுகடத்தப்படும் பிரச்சினையைக் கிளபபினால் சோனியா காந்தியை மகிழச்சிப்படுத்தலாம் என எண்ணுகிறார் போலும். எனவே, இவர், தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளை மதிக்காமலும், இலங்கைத் தமிழ் மக்களின் உணர்வுகளை மதிக்காமலும், இலங்கைத் தமிழ் மக்களின் உணர்வுகளை உதாசீனம் செய்தும், சர்வதேச தமிழ் சமுதாயத்தினுடைய உணர்வுகளுக்கு மதிப்பளிக்காமலும், பிரமாணியத்துவக் கொள்கையை வெளிப்படுத்துவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளார். எனினும் ஜெயலலிதாவின் இந்த விடயத்தில் அவரின் எண்ணம் நிறைவேறப்போவதில்லை என்பது திண்ணம். அத்துடன், தமிழ் நாட்டில் மீண்டும் 'திராவிட உணர்வுகள்' புத்துயிர் பெறப்போகின்றன என்பதுதான் எமது எண்ணம்.

இந்திய இராணுவத்தை இலங்கைக்கு அனுப்ப வேண்டும் என்ற ஜெயலலிதாவின் நிலைப்பாட்டை அரசியல் சாணக்கியமுள்ள இந்திய அரசு ஏற்காது. கண்மூடித்தனமான இந்தச் செயலில் இறங்கமாட்டாது என்பதே எமது நிலைப்பாடு.

சர்வதேச உணர்வுகளுக்கு எதிராக சமாதானத்தை முறியடிப்பதற்கு இந்திய மத்திய அரசு ஒரு பொழுதும் இலங்கைப் பிரச்சினையில் இராணுவ ரீதியாகத் தலையிடமாட்டாது என்பதே எமது நிலைப்பாடு. அரசியல் ரீதியாக ஜெயலலிதா காங்கிரஸுடன் கூட்டுச் சேர்வதற்கு அவருடைய நிலைப்பாடு வசதியாக இருக்கலாம். ஆனால் தமிழ் நாட்டில் அவர் பல சிக்கல்களுக்கு முகம் கொடுக்க வேண்டி வரும்.



# 3

# நிரந்தர சமாதானம் ஏற்படும் வரை தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புவது குறித்து மேற்குலகு சிந்திக்கக் கூடாது.

**1983** ஆம் ஆண்டிற்குப் பின்பு தமிழ்ப் பிரதேசங்களிலிருந்து ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் பிற நாடுகளுக்குப் புலம் பெயர்ந்தார்கள். இவர்கள் புலம்பெயர்ந்து சென்றதின் முக்கிய காரணம் இலங்கை இராணுவத்தினால் கட்டவிழ்த்துவிடப்பட்ட தமிழ் மக்கள் மீதான அராஜகரமாகும். இதன் ஓர் அங்கமாக தமிழ் மக்கள் செறிந்து வாழும் குடியிருப்புகள் மீது நடத்தப்பட்ட தொடர்ச்சியான விமானக் குண்டு வீச்சுக்களும், பீரங்கித் தாக்குதல்களுமே தமிழ் மக்களைக் கிலிகொள்ளச் செய்து வேறு நாடுகளுக்குப் புலம் பெயரச் செய்தது. 1983 இல் நடந்தேறிய இனப்படுகொலைக்கு முன்பே தமிழ் மக்கள் மீது பாரபட்சம் காட்டப்பட்டதன் காரணமாக பல துறைகளிலும் உயர் பதவிகள் வகித்த அநேக புத்திஜீவிகள் ஐரோப்பிய நாடுகளுக்குப் புலம்பெயர்ந்து சென்று நல்ல பதவிகள் வகிக்கிறார்கள். இவர்கள் அரசியல் காரணங்களினால் வெளியேறினாலும், இவர்களை அகதிகள் என்ற வரையறைக்குள் உட்புகுத்த முடியாது. ஆனால் இலங்கையில் தங்கள் 'உயிருக்கு உத்தரவாதமில்லை' என்ற காரணத்தினால் வீடு வாசல்கள், சொத்து சுகங்களை இழந்து பல தமிழ் மக்கள் அகதிகளாக வேறு நாடுகளுக்குச் சென்றனர். உலகில் அநேக நாடுகளைச் சேர்ந்தவர்கள் இங்கிலாந்திற்கும், ஐரோப்பிய நாடுகளுக்கும் அகதிகளாகச் செல்கிறார்கள். இதில் துருக்கி, ஈராக், எகிப்து, மொரோக்கோ, சோமாலியா ஆகிய நாடுகளிலிருந்து சென்றவர்கள் அகதி அந்தஸ்தைப் பெறுகிறார்கள். ஆனால், உலக நாடுகளின் சனத்தொகை விகிதத்தில் பார்க்கும் போது ஐரோப்பிய நாடுகளுக்கும், இங்கிலாந்திற்கும் செல்லும் அகதிகளின் இலங்கைத் தமிழ் அகதிகள் தொகையே ஆகக் கூடுதல் எனக் கருதப்படுகிறது. இந்தியாவிலும் 67,000 இலங்கைத் தமிழ் மக்கள் அகதி அந்தஸ்தைப் பெற்றுள்ளார்கள். ஆகவே, 'விகித அடிப்படையில்' அகதி அந்தஸ்தைப் பெற்ற கூடிய தொகையினர் இலங்கைத் தமிழர்களேயாகும். தமிழ் மக்கள் தங்கள் சொந்த இடங்களை விட்டு வேறு நாடுகளுக்கு அகதிகளாகச் செல்றதன் முழுப்பொறுப்பையும் இலங்கை அரசே ஏற்க வேண்டும். இலங்கை அகதிகளைப் பொறுத்தவரை இரு வகைப்படும். இவ்விதம் உலகில் வேறு நாடுகளில் தென்படுவதில்லை. ஏனெனில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறநாடுகளில் அரசியல் காரணங்களினால் பாதிக்கப்பட்டவர்கள் அகதிகளாக புலம்பெயர்ந்து வேறு நாடுகளுக்குச் செல்கிறார்கள். ஆனால், இலங்கையைப் பொறுத்த மட்டில் தங்களைக் காப்பாற்றும் பொருட்டு உள்நாட்டு அகதிகளாகவும், வெளிநாட்டு அகதிகளாகவும் தமிழ் இனம் அல்லாடுகிறது. வெளிநாட்டிலும். உள்நாட்டிலும் அகதிகளாக வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ் மக்களின் எண்ணிக்கை 11 இலட்சத்தைத் தாண்டியுள்ளது என ஒரு புள்ளி விபரம் கூறுகிறது. இலங்கையில் உள் நாட்டு அகதிகள் சராசரியாக பதின்மூன்று தடவைகளுக்கு மேல் இடத்திற்கிடம் மாறி மிகுந்த துயரத்துடன் அகதி வாழ்க்கை வாழந்து கொண்டிருக்கிறார்களெனவும் மதிப்பீடு ஒன்று கூறுகிறது. அதாவது பூனை தன் குட்டிகளைப் பாதுகாப்பதற்காக எவ்வாறு இடத்திற்கிடம் தூக்கிச் செல்கிறதோ, அதே நிலை தான் இலங்கையில் வாழும் உள்நாட்டுத் தமிழ் அகதிகள் நிலையும். ஆனால் வெளிநாடுகளில் வாழும் அகதிகள் இவ்விதமான கஷ்டங்களை அனுபவப்பதில்லை.

இன்றும் அநேகமான தமிழ் இளைஞர்கள் இங்கு வாழ முடியாத நிலையில் பெருந்தொகையான பணத்தைக் கொடுத்து கொள் கலன்களுக்குள் அடைக்கப்பட்டு மூச்சுத் திணறி இறந்த சம்பவங்கள் பற்றி அறியும் பொழுது, நெஞ்சு பதைபதைக்கிறது. அவர்கள் இலங்கையில் வாழ்வதிலும் பார்க்க உயிர் தப்புவதற்காக எந்தக் கஷ்டங்களையும் உணராமல் வெளிநாட்டிற்குத் தப்பிச் சென்றுவிட வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காகத்தான் இவ்விதம் சென்று தங்களை மாய்த்துக் கொள்கிறார்கள். இவ்திதம் அகதி அந்தஸ்து பெற்றவர்களை ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும், இங்கிலாந்தும் நிரந்தர வதிவிட அனுமதி பெறாமல் இருப்பவர்கள் என்ற காரணத்தினால் மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்புவதற்கு முனைகின்றன. இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. இவர்கள் 'வெள்ளை இனத்தை' ச் சேர்ந்தவர்கள், அத்துடன், ஐரோப்பிய நாடுகளில் நிலவும் நிறத்துவேச மனப்பான்மை. இந்த நிறத்துவேச மனப்பான்மை பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய நாடுகளில் தீவிரமாக உள்ளது. அத்துடன், இங்கிலாந்திலும் இந்தத் துவேச மனப்பான்மை பரவத் தொடங்கியுள்ளதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. ஆகவே நாடுகளில் அகதிகளாக வாழும் இவர்களைத் திருப்பி அனுப்ப வேண்டும் என்ற நிலைப்பாடு அரசியலாக மாறுகிறது. இரண்டாவதாக ஆசிய ஆபிரிக்க அகதிகள் மீது 'பயங்கரவாத வெறுப்புணர்ச்சி ஏற்பட்டு விட்டது. இந்த அகதிகள் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடுவார்களோ என்ற சந்தேகம் அவர்களுக்கு ஏற்பட்டு விட்டது. இது இன்று ஐரோப்பிய நாடுகளில்



நடைபெறும் யதார்த்த நிலை. இது ஒரு பொது மதிப்பீடு. இந்தப் பொது மதிப்பீடு இலங்கைத் தமிழா் விடயத்தில் வேறு விதமாக மதிப்பீடு செய்தல் வேண்டும்.

## ஐரோப்பிய ஒன்றியத்துடனான உடன்படிக்கையின் பின்னணியில் இருக்கும் இரகசிய நோக்கம்!

ஏனைய நாடுகளிலிருந்து புலம்பெயர்ந்து சென்றவர்கள் உள்நாட்டு யுத்தம் காரணமாக புலம்பெயரவில்லை. ஆனால், இலங்கையைப் பொறுத்தமட்டில் இருபது வருடகால யுத்தம் காரணமாக 11 இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் உள்நாட்டு, வெளிநாட்டு அகதிகளாக மாறிவிட்டார்கள். இது இலங்கைத் தமிழர் சனத்தொகையில் 1/3 பங்காகும். இலங்கையில் நிரந்தர சமாதானம் ஏற்படுவதற்கு முன்னர் ஐரோப்பிய நாடுகள் அங்குள்ள அகதிகளைக் கட்டம் கட்டமாகத் திருப்பி அனுப்புவதற்கு இலங்கை அரசுடன் ஓர் ஒப்பந்தம் செய்துள்ளது. இந்த ஒப்பந்தமானது உண்மைக்கும், நேர்மைக்கும் அப்பாற்பட்டதென்பதே எமது வாதம். என்ன காரணத்திற்காக தமிழ்மக்கள் நாட்டைவிட்டு வெளியேறினார்களோ, அதே காரணங்கள் இன்றும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. இலங்கையில் நிரந்தர சமாதானம் ஏற்பட்டால் தமிழ் அகதிகள் தாங்களாகவே தங்கள் தாயகத்திற்குத் திரும்புவார்கள். ஆனால், நிரந்தர சமாதானம் ஏற்படுவதற்கு முன்பு ஐரோப்பிய நாடுகள் வலுக்கட்டாயமாக இலங்கை அரசுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்புவது உண்மைக்கும் நேர்மைக்கும், யதார்த்த நிலைக்கும் எதிரான செயலென்றே சொல்ல வேண்டும். கோழியிறைச்சிக் கடைக்காரனிடமிருந்து சில கோழிகள் தப்பிப் பறந்து இன்னொரு வீட்டில் தஞ்சமடைந்த பொழுது அந்த வீட்டுக்காரன் அக்கோழியைப் பிடித்து கோழிக் கடைக்காரனிடம் கொடுத்த கதையாகத்தான் இலங்கைத் தமிழ் அகதிகளின் நிலையும். அகதிகளைத் திருப்பி அனுப்புவது சம்பந்தமாக இலங்கை அரசு செய்து கொண்ட ஒப்பந்தத்திற்கான காரணங்கள் பற்றி சிந்திப்பது அவசியமாகிறது. புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டதன் பின்பு திருமலை எண்ணெய்க் குதங்களை இந்தியாவிற்குத்தாரை வார்த்ததும் இலங்கைத் துறைமுகங்களையும், விமானத் தளங்களையும் பாவிப்பதற்கு அமெரிக்காவுடன் செய்து கொண்ட உடன் படிக்கையும் தமிழ் அகதிகளைப் பலவந்தமாக திருப்பி அனுப்புவதற்கு ஐரோப்பிய ஒன்றியத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தமும் ஒரு சங்கிலித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடராகவுள்ளது. விடுதலைப் புலிகளின் பலத்தைக் குறைப்பதற்கு இந்த மூன்று தந்திரோபாயங்கள் நடைபெற்றுள்ளன. திருமலை எண்ணெய்க் குதங்கள் பற்றியும், அமெரிக்க உடன்படிக்கை பற்றியும் சென்ற வாரக் கட்டுரையில் விரிவாகக் குறிப்பிட்டிருந்தேன். தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்புதல் சம்பந்தமாக ஐரோப்பிய ஒன்றியத்துடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை மிகவும் பாரதூரமானது. இதன் உள் நோக்கம் இரண்டு வகைப்படும். சமாதானம் மலர்ந்து விட்டதென உலகப் பிரசாத்திற்கு அமைய தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்பினால் அவர்களின் மீள் குடியேற்றத்திற்கென காரணம் காட்டி ஐரோப்பிய ஒன்றியத்திடம் பெருந்தொகையான நிதியைப் பெற்றுக்கொள்ளலாம். ஆனால், பெறப்படும் இந்நிதி அகதிகளின் மறு வாழ்விற்குப் பயன்படுத்தப்படுமா என்பது சந்தேகம். இதற்குப் பதிலாக இலங்கை அரசின் பொருளாதா சிக்கலைத் தீர்பதற்கு இந்த நிதி உதவலாம். இரண்டாவதாக, இந்த அகதிகள் விடுதலைப் புலிகளுக்குப் பண உதவி செய்து வருகிறார்கள் என்பது அரசின் ஐயப்பாடு. ஆகவே, அவர்களைத் திருப்பி அனுப்பிவிட்டால் விடுதலைப்புலிகளுக்குக் கிடைக்கும் நிதி உதவிகளின் அளவு குறைந்துவிடும் என்பதும் ஒரு நம்பிக்கை.

தமிழ் மக்களைப் பொறுத்தரையில் முதலில் உள்நாட்டு அகதிகளை அவர்களின் சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்துவதற்கு வசதிகள் செய்யப்பட வேண்டும். யாழ் குடா நாட்டில் வலிவடக்குப் பகுதியில் ‘சிவந்த மண்’ அதி உயர் பாதுகாப்பு வலயமென அங்கு வாழ்ந்த ஆயிரக்கணக்கான குடும்பங்களை விரட்டிவிட்டார்கள். இதன் காரணமாக பலாலி, வசாவிளான், மயிலிட்டி, ஊறணி, காங்கேசன்துறை, தையிட்டி, மாவிட்டபுரம் ஆகிய கிராமங்களில் காலம் காலமாக வாழ்ந்த மக்கள் விரட்டியடிக்கப்பட்டு பல இடங்களிலும் அகதி வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இக்கிராமங்கள் உயர் பாதுகாப்பு வலயத்துள் சங்கமமாகி விட்டது. விடுதலைப் புலிகள் 25 மைல் தூரம் பாயவல்ல பீரங்கிகளைக் கொள்வனவு செய்யும் சந்தர்ப்பத்தில் பலாலி விமானத்தளம், காங்கேசன் துறை துறைமுகம் ஆகியவற்றின் பாதுகாப்புக் கருதி சுன்னாகம், கோப்பாய், நல்லூர் ஆகிய இடங்களிலிருந்தும் மக்கள் வெளியேற்றப்படுவார்கள். எனவே, அரசாங்கத்தின் முதற் கடமை அகதிகளை மீள் குடியேற வசதிகள் செய்து கொடுக்க வேண்டும். இந்த உள்நாட்டு அகதிகளை மீண்டும் அவர்களின் சொந்தக் கிராமங்களில் குடியேறச் செய்ய முடியாத அரசாங்கம், எப்படி புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் அகதிகளை இங்கு அழைத்து அவர்களுக்குப்



புனர்வாழ்வு அளிக்கப் போகிறது? இது விடயத்தில் தமிழர் கூட்டமைப்பும், விடுதலைப்புலிகளும் சர்வதேச சமூகத்திற்கும், விஷேசமாக ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் மிகவும் ஆணித்தரமாகவும், அழுத்தமாகவும் எடுத்துக் கூற வேண்டியது. அவர்களின் முக்கிய கடமையாகும்.

புனருத்தாரணம், புனர்நிர்மாண அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்தனா தமிழகத்தில் இருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகளைத் திரும்பப் பெறுவதற்கு தமிழக அரசுடன் ஆலோசனை செய்யவிருப்பதாக அறிகிறோம். தமிழகத்தி லிருக்கும் 67 ஆயிரம் தமிழ் அகதிகளைத் திரும்பப் பெறுவதற்கு முன்னதாக, அமைச்சர் உள்நாட்டு அகதிகள் விடயத்தில் தமக்குள்ள கடமைகளை முதலில் செய்யட்டும் என நாங்கள் கேட்கிறோம். இந்தியாவிடமிருந்தும் நிதி உதவி பெறுவதற்கான ஒரு தந்திரோபாயமெனவே நாம் இதைக் கருத வேண்டியுள்ளது. உலகளாவிய ரீதியில் தமிழ் அகதிகளது பிரச்சினை ஏனைய நாடுகளிலுள்ள அகதிகள் பிரச்சினையிலிருந்தும் வேறுபட்டது. இந்த வேறுபாடுகளை உணர்ந்து சர்வதேச சமூகம் அதற்கு உகந்த நடைமுறைக்கு மாற்றத் திட்டங்களைத் திரும்ப அனுப்புவதற்கு மாற்றுத் திட்டங்களை சிந்திக்க வேண்டிய கடப்பாடு உள்ளது. இந்த விடயத்தில் ‘ஐ.நா. வின் அகதிகள் அமைப்பினரின்’’ ஆலோசனைகளை ஐரோப்பிய ஒன்றியம் கேட்டு அவர்களது சிபார்சின்படி செயற்படுவது மிகவும் அவசியம். அகதிகள் எவ்வாறு நடத்தப்படவேண்டுமென ஐ.நா அகதிகள் கோட்பாடுகள் உள்ளன. அகதிகளை எப்படித் திரும்ப அனுப்ப வேண்டுமெனவும் கோட்பாட்டில் கூறப்பட்டுள்ளது. ஐ.நா. அமைப்பை அலட்சியம் செய்து தங்கள் அரசியல் நலன்களுக்காக ஐரோப்பிய ஒன்றியம் பலவந்தமாக தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்பினால், அது ‘மனித உரிமைகளை. மீறும் செயலாகக் கருதப்படும்.

ஐ.நா. அமைப்பு இலங்கையில் உள்ள யதார்த்த நிலைமைகளை நன்கு உணர்ந்த ஸ்தாபனமாகும். அவர்களது ஆலோசனைகளை அலட்சியம் செய்து தமிழ் அகதிகளை மீண்டும் அனுப்பினால் ‘நிகழப்போகும் விபரீதங்களுக்கு’ ஐ.நா.வும் ஐரோப்பிய ஒன்றியமும், இந்தியாவும், தார்மீக ரீதியில் பொறுப்பேற்க வேண்டும். விடுதலைப் புலிகளை பல வழிகளாலும் முடக்குவதற்கும், மடக்கு வதற்கும் நன்கு ‘திட்டமிட்ட தந்திரோபாயங்களில்’ இதுவும் ஒன்றென விடுதலைப்புலிகளும், தமிழர் கூட்டமைப்பும் உணர வேண்டும். தமிழ் மக்களது அபிலாஷைகள் நிறைவேற்றப்பட்டால் நிச்சயம் தமிழ் அகதிகள் இலங்கைக்குத் திரும்பி விடுவார்கள். எனவே, இந்தியாவும், ஐரோப்பிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றியமும், அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகள் ஒன்றிணைந்து தமிழ்மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். புரிந்துணர்வு ஒப்பந்தத்தை நிறைவேற்ற வேண்டிய கடமை இலங்கை அரசைச் சார்ந்தது. புரிந்துணர்வு உடன்படிக்கைக்கெதிரான இலங்கை அரசினுடைய செயற்பாடுகளின் தீய உள்நோக்கம் காலப் போக்கில் தெரியவரும். ஆகவே, வெள்ளம் வருமுன் அணை கட்டுவது போல இந்த ஆபத்துகள் பற்றி விடுதலைப்புலிகளும், தமிழர் கூட்டமைப்பும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கும், இந்தியாவிற்கும், இலங்கையில் நிரந்தர சமாதானம் ஏற்படும் வரை தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்பக் கூடாது என வற்புறுத்துவது அவர்களின் தலையாய கடமையாகும்.



# 4

## சாவகச்சேரி, திரியாய் அழிவுகளுக்கு காரணமானவர்களுக்கு எதிராக சர்வதேச நீதிமன்றில் வழக்குத் தொடர வேண்டும்.

1956ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சிங்கள மொழிச்சட்டத்தைத் தொடர்ந்து தான் தமிழ்ச் சமுதாயத்தை சிங்கள சமுதாயம் அடக்கி ஒடுக்கி ஆரம்பித்தது என சிலர் எண்ணக்கூடும். ஆனால், உண்மை அதுவல்ல. சிங்கள சமுதாயத்தின் பிதா என வர்ணிக்கப்படும் டீ.எஸ் சேனாநாயக்கா காலந்தொட்டே தமிழ் மக்களின் தாயக பூமி சிங்கள குடியேற்றத் திட்டத்தினால் படிப்படியாக பறிக்கப்பட்டது. இதுவே சரித்திர உண்மையாகும்.

கிழக்கு மாகாணத்தில் அரச செலவில் திட்டமிடப்பட்ட சிங்கள குடியேற்றத்தினால் தமிழர் தாயகம் பறிக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாகத்தான் சிங்களம் மட்டும் மொழிச்சட்டம், அரசாங்க வேலைவாய்ப்பு விடயத்தில் பாரபட்சம், தமிழ் மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதி தரப்படுத்தல் ஆகியவை நடந்தேறின.

இது மட்டுமல்ல 1956ஆம் ஆண்டு தொடக்கம் 1983ஆம் ஆண்டு வரை தமிழ் மக்களின் பொருளாதாரத்தைச் சிதைக்கும் வகையில் திட்டமிடப்பட்ட தமிழருக்கு எதிரான இனக்கலவரங்கள் அரசாங்கத்தின் ஒத்தாசையுடன் அடிக்கடி நடந்தேறின. பட்டப்பகலில் ஆயிரக்கணக்கில் தமிழ் மக்களின் வீடுகள், வியாபார நிலையங்கள் கொள்ளையிடப்பட்டு எரித்து நாசமாக்கப்பட்டன. ஆயிரக்கணக்கில் தமிழர்களை உயிரோடு எரித்தார்கள். இந்தக் கொடூரச் செயல்களை அண்டை நாடான இந்தியா உட்பட அநேக நாடுகள் தமிழ் மக்களுக்கு 'விசா' இல்லாமல் தங்கள் நாடுகளில் அகதி அந்தஸ்து கொடுத்தன. 1952ஆம் ஆண்டு தொடக்கம் 1983ஆம் ஆண்டு வரை நடத்தப்பட்ட தமிழருக்கெதிரான கொடூரங்களை சர்வதேச சமூகம் அறிந்து கொண்டது.

மறைந்த தமிழ்த் தேசிய தலைவர்களான தந்தை செல்வநாயம், ஜீ.ஜீ. பொன்னம்பலம், பேராசிரியர் ஸி.சுந்தரலிங்கம் ஆகியோர் பாராளுமன்றத்திலும் தேசிய சட்டசபையிலும் தமிழ் மக்களுக்கு எதிராக சிங்கள சமுதாயம் தொடர்ந்தும் வன்முறைகளில் ஈடுபடுமேயானால் தமிழ் மக்கள் பிரிந்து போவதற்கு சிங்கள மக்களே காரணமாவார்கள் என கடும் எச்சரிக்கை செய்தார்கள்.

இதனடிப்படையில் தான் 1976ஆம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணியினால் முக்கியத்துவம் பெற்ற "வட்டுக்கோட்டைத் தீர்மானம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவேற்றப்பட்டது. ஆனால், இத்தீர்மானம் பல காரணங்களினால், தீர்மானத்தை நிறைவேற்றியவர்களால் அமுல்படுத்த முடியாது போய்விட்டது. காரணம் அவர்கள் காந்திய வழியைப் பின்பற்றினார்கள்.

ஆனால், நமது இளைஞர்கள் தொடர்ந்து ஏமாற்றப்பட்டதன் காரணமாக காந்திய வழியில் நம்பிக்கை இழந்த துப்பாக்கி ஏந்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். 1983 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை துப்பாக்கி ஏந்திய கெரில்லா யுத்தம் மரபு வழி யுத்தமாக மாறி இரு தேசங்களுக்கிடையில் நடை பெற்று வருகிறது.

அன்று தமிழர், சிங்களவர் பிரச்சினை தேசியப் பிரச்சினையாகத் தோற்றமளித்தது. இன்று இப்பிரச்சினை ஒரு சர்வதேசப பிரச்சினையாக வியாபித்துவிட்டது.

யுத்தம் இரு தேசங்களுக்கிடையில் நடைபெற்றுக் கொண்டிருப்பதால் இது வெல்ல முடியாத யுத்தமெனக் கருதி ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் நாட்டில் சமாதானத்தைக் கொண்டுவர வேண்டுமென உணர்ந்து விடுதலைப் புலிகளுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தைக் கைச்சாதிட்டு அதன் பலனாக "தற்காலிக யுத்த நிறுத்தமும்" ஏற்பட்டுள்ளது. ஆனால், அரசாங்கம் இச்சந்தர்ப்பத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஒரு புறத்தில் வைத்துக்கொண்டு விடுதலைப் புலிகளை அடக்கி ஒடுக்குவதற்குப் பல தந்திரோபாயங்களை கையாண்டு வருகிறது.

இலங்கைத் தமிழரது சனத்தொகை அரசாங்கக் கணக்கின்படி 12.5 சதவீதம் ஆகும். வடகிழக்கு பிராந்தியங்களில் வாழும், தமழ் மக்களை "பூண்டோடு அழிப்பதற்கு" கொள்கையளவில் இராணுவ, அரசியல், பொருளாதார வழிகளூடாக முயற்சி செய்கிறது. சிங்கள மக்களின் சனத்தொகை 74 சதவீதம் ஆகும். இந்த 74 சதவீதம் உள்ள சிங்கள சமுதாயம் 12.5 சதவீதம் உள்ள ஒரு தமிழ்ச் சமூகத்தை அழிப்பதற்கு உலகின் அதிமுக்கிய வல்லரசான அமெரிக்காவினுடைய ஆதரவைப் பெற்றுள்ளது.

இத்தகைய ஆதரவானது அரசியல், இராணுவ, பொருளாதார வழிகளில் செயற்படுத்தப்படுகிறது. அத்துடன் ஆசியாவில் அதிமுக்கிய வல்லரசுகளான இந்தியா, சீனா ஆகிய நாடுகளின் ஆதரவையும் ஸ்ரீலங்கா அரசு பெற்றுள்ளது. அமெரிக்காவின் ஆதரவைவிட இந்தியாவினுடைய ஆதரவு வெளிப்படை யாகவும், மறைமுகமாகவும் அரசியல், இராணுவ பொருளாதாரத் துறைகளினூடாகக் கிடைக்கிறது.

திருகோணமலை எண்ணெய்க்குதங்கள் இந்தியாவிடம் கையளிக்கப் பட்டுள்ளன. இதன் காரணமாக இந்தியாவிற்கும் விடுதலைப்



புலிகளுக்கும் மோதல்கள் ஏற்படுவதற்கு அதிக சந்தர்ப்பங்கள் உண்டு. அத்துடன் இந்தியாவினுடைய எதிரியான சீனாவின் உதவியும் இலங்கை அரசிற்குக் கிடைத்துள்ளது. இலங்கையில் அமெரிக்காவின் ஆதிக்கத்தை விரும்பாத இந்தியாவிற்கு அரசியல், பொருளாதார, இராணுவ துறைகளில் அதிக ஆதிக்கம் செலுத்துவதற்கு நேரடியாக ஆதரவு கொடுக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவும், இநதியாவும் சீனாவின் இந்து சமுத்திர ஆதிக்கத்தை வெறுப்பவர்கள். அப்படி இருந்தும் சீனாவின் இராணுவ உதவி தமிழ்ப் பிராந்தியக் கடலில் ஆதிக்கம் செலுத்துவதற்கு கடல் பிராந்திய இராணுவ உதவி வழிவகுத்துவிட்டது. நேரடியாகக் கூறவதானால் விடுதலைப் புலிகளுக்கு கடல் மார்க்கமாக எந்தவித உதவியும் கிடைப்பதைத் தடை செய்வதற்கு சீனாவில் கடற்படைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக சிங்கள அரசாங்கம் தனது "தூர நோக்கற்ற தன்மையினால்" சீனாவிற்கும் இந்தியாவிற்கும் இடையில் தமிழர் பிராந்தித்தில் மோதல்கள் ஏற்படக் கூடிய சூழலை ஏற்படுத்திவிட்டது.

1621 ஆம் ஆண்டு வரையில் தமழ்ச் சமுதாயம் சுதந்திரமாக வாழ்ந்து வந்தது. ஆனால், இன்று நடைபெறும் யுத்தம் இழந்த சுதந்திரத்தை மீண்டும் பெற்றுக் கொள்வதற்குரிய போராட்டமாகும். தமிழ்ச் சமுதாயம் இவ்விடயத்தில் நான்கு பலம் பொருந்திய எதிரிகளை ஒரே நேரத்தில் எதிர்கொள்கிறது. ஒன்று சிங்கள சமுதாயம், இரண்டு இந்திய ஏகாதிபத்தியம், மூன்றாவது அமெரிக்கா, நாலாவது சீனா ஆகும்.

1983 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை நடந்த யுத்தத்தினால் ஏற்பட்டுள்ள அழிவுகளைப் பற்றி சிந்திப்பது அவசியமாகிறது. சிங்கள, தமிழ்ச சமுதாயத்தினருக்கு இடையில் ஏற்பட்ட யுத்தத்தினால் 11 இலட்சத்துக்கு மேல் தமிழ் மக்கள் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அகதிகளாக இடம் பெயர்ந்துள்ளார்கள்.

ஐக்கிய நாடுகள் சபை புள்ளிவிபரங்களின் படி இத்தொகை 13 இலட் சத்திற்கும் மேற்பட்டதாகும். அனால் இதில் சிங்களவர்களும் முஸ்லிம்களும் அடங்குகிறார்கள். ஆகவே தமிழர்களின் தொகை 11 இலட்சத்திற்கு மேற்பட்டு விட்டதாகும். தமிழ்ப் பிராந்தியங்களில் இலட்சக் கணக்கான வீடுகள் அழிக்கப்படும், பாடசாலைகள், கோயில்கள், தேவாலயங்கள் சேதமாக்கப்பட்டும் எஞ்சிய பாடசாலைகள், கோயில்கள், தேவாலயங்கள் இராணுவ முகாம்களாக மாற்றப்பட்டும் விட்டன. கேந்திர நிலைகளில் பாதுகாப்புக்கருதி அருகிலிருந்த தமழ் குடும்பங்கள் விரட்டியடிக்கப்பட்டன. தமிழ்ப் பிராந்தியங்களில் இருந்த சகல பொருளாதார வளங்களும் தரைமட்டமாக்கப்பட்டு விட்டன. இதுதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய யதார்த்த நிலை.

சிங்கள இராணுவம் யுத்தத்தின் போது தமிழ் மக்களின் பொருளாதார வளங்களை எரித்து சாம்பலாக்கும் கொள்கையைக் கடைப்பிடிக்கிறது. இது பற்றி சர்வதேச சமூகமோ, சிங்களத் தேசமோ உணருவதில்லை. சமீபத்தில் நடந்த யுத்தத்தினால் சாவகச்சேரி நகரம் முற்றாக அழக்கப்பட்டு விட்டது. இந்த அழிவை அமெரிக்க தூதுவர் வடபகுதிக்குச் சென்றிருந்த பொழுது பார்ப்பதற்குக் கூட அவருக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. அதேபோன்று கிழக்கு மாகாணத்தில் திரியாய் என்ற கிராமத்தில் ஆயிரக்கணக்கான வீடுகள் இருந்த இடமே தெரியாமல் அழிக்கப்பட்டுள்ளன. கோயில்கள், பாடசாலைகள், தபால் அலுவலகங்கள் யாவுமே முற்றாக இடம் தெரியாமல் அழிக்கப்பட்டு விட்டன. அண்மையில் இக்கிராமத்தைப் பார்வையிடச் சென்ற மக்களும் கோயில் பூசகரும் அக்கிராமத்தின் கோலத்தைப் பார்த்து கண்ணீர் விட்டு அழுதனர்.

விடுதலைப் புலிகளுக்கும், சிங்கள அரசாங்கத்திற்கும் இடையில் ஏற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் சரிவர நிறைவேற்றப்படாவிட்டால் மீண்டும் யுத்தம் வெடிக்கும். யுத்தம் வெடிக்கலாம் என்ற காரணத்தினால் தான் அமெரிக்கா, இந்தியா, சீனா ஆகிய நாடுகளின் இராணுவ உதவியை சிங்கள அரசு நாடியுள்ளது. அத்துடன் சிங்கள இராணுவம் விடுதலைப் புலிகளும் புதிதாக ஆட்சேர்ப்பில் மும்முரமாக ஈடுபடுகின்றார்கள். இரு பகுதியினரும் தங்களைப் பலப்படுத்துவதில் அதிக அக்கறை கொண்டுள்ளதை அண்மைக்கால நிகழ்வுகள் வெளிக் காட்டுகின்றன. எனவே, மீண்டும் ஓர் போர் வெடிக்குமானால் மிகவும் ''உக்கிரமான போர் நிகழக்கூசுடும்'' இதுவே கடைசி யுத்தமாகவும் இருக்கலாம்.

சாவகச்சேரி நகரம் அழிக்கப்பட்டது. திரியாய் எரிக்கப்பட்டது. நாளை தமிழர் தாயகத்தில் பிரபல பாடசாலைகள்,கோயில்கள், எஞ்சிய வீடுகள் எரிக்கப்படலாம். பிரசித்திபெற்ற புனித ஸ்தலங்களான நல்லூர் கந்தசுவாமி கோயில், மாவிட்ட புரம் கந்தசுவாமி கோயில், திருமலை கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், நகுலேஸ்வரம் ஆகிய ஸ்தலங்கள் இருந்த இடமே தெரியாமல் தரை மட்டமாக்கப்படலாம். அதேபோல் கிழக்கு மாகாணத்திலும் பிரசித்தி பெற்ற ஆலயங்கள், பிரபல பாடசாலைகள் இருந்த இடமே தெரியாமல் சாம்பல் ஆக்கப்பட்டன.

இவ்விடத்தில் ''எல்லாம் கெட்டது'' என்ற மனப்பான்மையை நாம் உருவாக்க விரும்பவில்லை. ஆனால் இனி வரப்போகும் கொடூர யுத்தத்தினால் சாவகச்சேரிக்கும் திரியாய்க்கும் ஏற்பட்ட கதி ஏனைய நகரங்களுக்கு நடைபெறாது என்பதற்கு உத்தரவாதமில்லை.



இந்த யுத்தம் காரணமாக வடகிழக்கு பிராந்தியத்திலும் மலையத்திலும் கொழும்பு மாவட்டத்திலும் குறைந்தது மூன்று இலட்சம் ''அப்பாவித் தமிழ் மக்கள் அதிகளவில் உயிரோடு எரிக்கப்டுவார்கள்.'' அல்லது கொல்லப்படுவார்கள். அதுபோல் திருகோணமலை வெலிஓயா, பதவியா, அம்பாறை மாவட்டங்களில் வசிக்கும் சிங்கள அப்பாவி மக்களும் பெருமளவில் உயிரிழக்க நேரிடும். இந்தக் கணிப்பானது தற்போதைய இராணுவ யதார்த்த நிலையை கருத்திற்கொண்டு கணிக்கப்பட்டதாகும்.

ஏனெனில் சிங்கள சமுதாயத்தில் ''இராணுவ ஆதிக்கம்'' சிங்கள அரசிலும் பார்க்க அதிகளவில் செயல்படுகின்றது. யுத்தம் வெடிக்கும் சந்தர்ப்பத்தில் இராணுவத்தினர் சும்மா கைகட்டிக் கொண்டிருக்க மாட்டார்கள். அப்பாவி மக்களில் தான் கைவரிசை காட்டுவார்கள். இதற்கு முன்னுதாரணமாக பர்மா, தாய்லாந்து, இந்தோனேசியா ஆகிய நாடுகளைக் குறிப்பிடலாம். இந்நாடுகளிலும் அரசாங்கத்திலும் பார்க்க இராணுவ அமைப்புக்கள் அதிக சக்தி பெற்று ஆதிக்கம் செலுத்துகின்றன.

நேர்வே அரசின் அனுசரணையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டதன் பின்பு அவற்றை அமுல்படுத்துவதற்கு அரசாங்கம் தயக்கம் காட்டுகிறது. சிங்கள இராணுவம் அரசியல் ரீரியாகவும், இராணுவ ரீதியாகவும் இதற்கு முட்டுக்கட்டை யாக இருப்பதே இதன் காரணமாகும். இந்த விடயத்தில் சிங்கள இராணுவமா? அல்லது சிங்கள அரசா? அதிகசக்தி உள்ளது என்ற கேள்வி எழுகிறது.

38 வருடங்களுக்கு முன்பு யோகர் சுவாமிகள் ''பொல்லாப்பு எதுவுமில்லை'' 'எல்லாம் எப்பவோ முடிந்த காரியம்' கிளிநொச்சியில் தான் தமிழரது அரசியல் ஸ்தாபனம் திரும்ப உண்டாகும் என்று கூறிய தீர்க்க தரிசனம் ஞாபகத்திற்கு வருகிறது.

சாவகச்சேரியை திட்டமிட்டு அழித்தவர்களுக்கும திரியாய் கிராமத்தை எரித்தவர்களுக்கும் எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடருவதற்கு தமிழர் கூட்டமைப்பு அனுசரணையுடன் லண்டனில் இயங்கும் விடுதலைப் புலிகள் அமைப்பு வழக்குத் தொடரவேண்டும். இந்த நாசகார அழப்புக்களுக்கு பொறுப்பான இராணுவ, கடற்படை தளபதிகளை கைதுசெய்ய வேண்டுமென்று சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு விடுதலைப் புலிகள் தகுந்த ஆதாரங்களுடன் முறையீடு செய்தல் வேண்டும். லண்டனில் இயங்கும் புலிகள் அமைப்பு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு இப்பிரச்சினையைக் கொண்டு செல்வதன் மூலம் இதை சர்வதேச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினையாக மாற்றி இலங்கை அரசாங்கம் பிந்துனுவெவவில் நடந்த படுகொலைக்குப் பொறுப்பானவர்களைக் கைது சட்டத்தின் முன் நிறுத்தியது போல இவர்களையும் கைது சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கவேண்டும். கைது செய்யப்பட்ட வர்கள் இலங்கை நீதிமன்றத்தில் விசாரிக்கப்படாமல் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் தகுந்த ஆதாரங்களுடன் விசாரிக்கப்பட்டு அவர்களுக்கு தகுந்த தண்டனை கொடுக்கப்பட வேண்டும்.

தமிழ்ப் பகுதிகளில் உள்ள எஞ்சிய வீடுகள், பாடசாலைகள், கோயில்கள் இலங்கை இராணுவத்தினரின் தாக்குதல்களிலிருந்து காப்பாற்றுவதற்கு தமிழ் கூட்டமைப்பினரின் அனுசரணையுடன் விடுதலைப் புலிகள் அமைப்பு பாரிஸ் நகரில் இயங்கும் ஐ.நா. கலாச்சார கல்வி அமைப்பிற்கு (UNESCO) முறையீடு செய்ய வேண்டியது தார்மீகக் கடமையாகும். மீண்டும் யுத்தம் வெடித்தால் மூன்று இலட்சத்திற்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழர்கள் சிங்கள இராணுவத்தால் கொல்லப்படுவார்கள் என்ற அச்சம் கருதி ஐக்கிய நாட்டு செயலாளர் நாயகத்திற்கும, பாதுகாப்புச் சபை அங்கத்தவர்களுக்கும் ஓா மகஜர் அனுப்புவது தமிழர் கூட்டமைப்பின் தலையாய கடமையாகும்.

ஆனால் சில வருடங்களுக்கு முன்பு ஆபிரிக்கக் கண்டத்தில் ருவாண்ட நாட்டில் எட்டு இலட்சம் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டார்கள். இப்படு
கொலைகள் குறித்து ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகமோ, பாதுகாப்புச் சபையோ தலையிடவில்லை. ஆனால், தமிழ் மக்கள் விடயத்தில் "சமாதானம்" என்று சொல்லிக்கொண்டு யுத்தத்தை தொடர்பவர்களுக்கு எதிராக மகஜர் சமர்ப்பிப்பது ஒரு தார்மீகக் கடமையாகும். இது ஓர் சர்வதேச பிரச்சினை என்பதாலும், நோர்வே அரசு சமாதான முயற்சிகளில் பங்குபற்றி வருவதாலும் ஐ.நா செயலாளர் நாயகமும், பாதுகாப்புச் சபையும் அப்பாவி மக்களின் பேரழிவைத் தடுப்பதற்கு ஆவன செய்யும் என்பது தமிழர்களின் எதிர்பார்ப்பாகும்.



# 5

## தமிழ் மக்களுக்கு எதிரான பாரபட்சங்களை புள்ளிவிபரங்களுடன் சர்வதேச சமூகத்தின்முன் கொண்டுவருவதே இன்றைய அவசியத் தேவை.

இலங்கையில் தமிழ் மக்கள் அரசில், பொருளாதார, கல்வித் துறைகளில் சிங்கள சமூகத்தினரால் பாரபட்சமாக நடத்தப்படுகிறார் களென்பது யாவருமறிந்த விடயம். இன்றைய சூழ்நிலையில் "இப்பாரபட்சத்தை" சகல விதமான புள்ளிவிபரங்களுடன் சர்வதேச சமூகத்திற்குத் தெளிவான முறையில் எடுத்துரைப்பது மிகவும் அவசியமானது.

விடுதலை இயக்கங்களைப் பயங்கரவாத இயக்கங்களென முத்திரை குத்தும் சூழ்நிலையில் விடுதலைப் புலிகளின் தியாங்களை பயங்கரவாத முத்திரைகுத்தி அழிப்பதற்கு ஐக்கிய தேசியக்கட்சி அரசு அமெரிக்கா, இந்தியா, சீனா ஆகிய மூன்று பிரதான வல்லரசுகளின் உதவியை நாடியுள்ளது.!

கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக இந்நாட்டில் தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்பட்டு வரும் இன அழிப்பின் துயரங்கள், துன்பங்கள், அவலங்கள், பாரபட்சங்கள் ஆகியவற்றைப் புள்ளிவிபரங்களுடன் வெளிப்படுத்துவது தமிழ்ச் சமுதாயத்தின் முக்கிய கடமையாகும்.

அன்றைய சிங்களத் தலைமைகள் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கை
களை வழங்குவதற்குத் தமிழர் தலைவர்களான சேர். பொன்னம்பலம் இராமநாதன், சேர். பொன்னம்பலம் அருணாசலம் ஆகியோருக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாது ஏமாற்றியதுடன், அதற்குப் பின்னர் ஏற்பட்ட பண்டா செல்வா ஒப்பந்தம், டட்லி-செல்வா ஒப்பந்தம ஆகியவையும் காற்றில் பறக்கவிடப்பட்டன.

அரசியல் சூழ்நிலையில் எவ்விதம் தமிழ்த் தலைவர்கள் ஏமாற்றப்பட்டார்கள் என்பதை முழு உலகமும் அறிய வேண்டும். பொருளாதாரத் துறையில் தமிழர் தாயகம் 1952 இல் இருந்தே பறிக்கப்பட்டு வந்தது. திறமை ஒன்றிற்கே முக்கியத்துவம் கொடுத்து நிர்வாகம் நடைபெற்ற முன்னைய காலத்தில் பல்கலைக்கழக அனுமதியில், விஷேடமாக பொறியியல், மருத்துவத் துறைகளில் 40 வீதத்திற்கு மேற்பட்ட தமிழ் மாணவர்கள் அனுமதிக்கப்பட்டார்கள். அரச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவையில் திறமை அடிப்படையில் ஆட்சேர்ப்புக்கள் நடைபெற்றதால், தமிழரின் விகிதாசாரத்திற்கு மேலாக தமிழ் உத்தியோகத்தர்கள் அரச பதவிகளை வகித்தார்கள். ஆனால், இன்று எல்லாம் தலைகீழாக மாறிவிட்டன.

இது சம்பந்தமாக சகல புள்ளிவிபரங்களையும் ஒன்று சேர்த்து நூல் வடிவில் வெளியிடுவது மிகவும் அவசியமாகும். இதற்குத் தமிழர் கூட்டமைப்பு, பல்கலைக்கழக சமூகத்தினரின் ஒத்துழைப்புடன் நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்த நூல் இலங்கையிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்களுக்கும், ஐரோப்பிய ஒன்றியம், ஐக்கிய நாடுகள் சபை, உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகிய ஸ்தாபனங்களுக்கும், சர்வதேச புகழ்பெற்ற அரசசார்பற்ற நிறுவனங்களுக்கும் சேர்க்கப்படல் வேண்டும்.

இன்றைய சூழ்நிலையில் சர்வதேச சமூகம் பயங்கரவாத மாயைக்குள் சிக்கியுள்ளதன் காரணமாக இங்கு தமிழ் மக்கள் அனுபவித்த, அனுபவிக்கின்ற அவலங்களையும், துயரங்களையும் புள்ளிவிபரச் சான்றுகளுடன் சர்வதேச சமூகத்திற்கு வெளிப்படுத்துவதன் மூலம் எமது உரிமைப்போராட்டத்தை நியாயப் படுத்த முடியும்.

சகல புள்ளிவிபரங்களையும், கடந்தகால வரலாறுகளையும் ஒன்றிணைத்து ஒரு புத்தக வடிவமாக வெளிப்படுத்தினால் அதன் உண்மைகளை சர்வதேச சமூகம் அறிந்து அதன் பலனாக விடுதலைப் புலிகளைப் பயங்கரவாத இயக்கமென முத்திரை குத்தமாட்டாது. அத்துடன், எமது உரிமைப்போராட்டத்தைக் கொள்கை அளவில் ஏற்றுக்கொள்ளவும் அதிகவாய்ப்பு ஏற்படும். இன்றைய காலகட்டத்தில் தமிழ் மக்களின் போராட்டத்திற்கு அரசியல் ரீதியாக சர்வதேச ஆதரவு மிகவும் அவசியமாகின்றது.

1983 இல் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தம் இன்று இடைக்கால யுத்த நிறுத்தமாக மாறியுள்ளது. இந்த யுத்தத்தின் காரணமாகத் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கள், தமிழ்ப் பாடசாலைகள், இந்து ஆலயங்கள், தேவாலயங்கள், பொதுச் சொத்துக்கள், அழிக்கப்பட்டவை சம்பந்தமாகப் புள்ளிவிபரங்களுடன் எடுத்துரைப் பது அவசியம்.

வடமாகாணத்தில் 1321 இந்துக் கோவில்கள் உள்ளன. இவற்றில் 191 கோயில்கள் சேதமாக்கப்பட்டன. வடமாகாணத்தில் உள்ள 12 பௌத்த விகாரைகளில் 2 விகாரைகளே கலவரத்தின் போது



சேதமாக்கப்பட்டன.

வடக்கு, கிழக்கு அபிவிருத்திக்கென சர்வதேச சமூகம் அதிக அளவில் நிதி உதவி செய்து வருகின்றது. ஆனால், இப்பணததின் கணிசமான பகுதி தென்னிலங்கை அபிவிருத்திக்கே செலவிடப்பட்டுள்ளது.

ஒரு காலத்தில் 9 இலட்சம் தமிழ் மக்கள் யாழ் குடாநாட்டில் வாழந்தார்கள். ஆனால், இன்று 5 இலட்சம் மக்களையும் குடாநாட்டிலிருந்து வெளியேற்ற மாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்?

காஷ்மீரில் கடந்த 50 வருடங்களுக்கு மேலாகக் கிளிச்சி நடக்கின்ற போதிலும் இந்திய இராணுவம் காஷ்மீரில் ஒரு வணக்கஸ்தலத்தையோ இராணுவ முகமாக மாற்றவில்லை.

இலங்கை மத்திய அரசுத்துறைகளில் ஒரு வீதம் கூடத் தமிழருக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படவில்லை. இது குறித்தும் முழுமையான விபரங்கள் திரட்டப்பட வேண்டும்.

இவ்விதமான புள்ளி விபரப் புத்தகத்தை வெளியிடுவதன் மூலம் தமிழர் தாயத்திற்குச் சமாதானம் ஏற்பட்டால் சகலதுறைகளிலும் சர்வதேச சமூகம் பொருளாதார அபிவிருத்திக்கு உதவுவதற்கு முன்வரும்.

சிங்கள சமுதாயம் தமிழருக்கு எதிரான பிரசார யுத்தத்தை இலங்கையில் மட்டுமல்ல வெளிநாடுகளிலும் மிகவும் கடுமையாக நடத்திவருகிறது. இதற்குப் பதிலளிக்கும் வகையில் புள்ளி விபரங்களுடன் அதனுடைய உள்நோக்கத்தையும் சற்றுக்குறிப்பிடுவது அவசியம். உதாரணமாக, தென் இலங்கையில் உள்ள றுகுணு பல்கலைக்கழக மாணவனுக்குக் கல்விச் செலவாக எவ்வளவு செலவாகின்றது என்பதும், யாழ், பல்கலைக்கழகத்தில் கல்விபயிலும் மாணவனுக்கு எவ்வளவு செலவாகின்றது என்பது பற்றியும் அறியவேண்டியது அவசியமாகிறது.

தமிழ் மக்களுக்கு எதிரான மிகக்கடுமையான பாரபட்சங்களை எளிதில் விளங்கக் கூடியதாக முக்கிய புள்ளி விபரங்களைத் திரட்டி வெளிப்படுத்துவதுதான் சாலச்சிறந்தது. சுகாதாரம், கல்வி, பொருளாதாரம், தமிழர் தாயக நிலம் பறிமுதல், அரச திணைக்களங்களில் வேலைவாய்ப்பில் பாரபட்சம், சமூக சேவை ஆகிய துறைகளில் உள்ள பாகுபாடுகளை எடுத்துரைப்பது மிகவும் உசிதமானதும், பொருத்தமானதுமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறையும் குறையும்

## ஆசிரியருக்கு...............

### தில்லைக் கூத்தனிடம் இருந்து விநாயகமூர்த்திக்கு........

20 ஆகஸ்ட் 2002 தினக்குரலில் அ. விநாயகமூர்த்தி (தலைவர், அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்) எனும் கோதாவில் வெளியிட்ட அறிக்கையில் நான் பதிலளிக்க வேண்டும் எனும் நிலையினை எனது சுயகௌரவத்தைச் சீண்டி வலிந்திழுத்திருக்கிறார்.

விநாயகமூர்த்தி அவ்வறிக்கையில் "தில்லைக்கூத்தன் நடராஜா தனக்கு ஒரு சிரேஷ்ட உபதலைவர் பதவி வழங்கப்படாததையிட்டு கவலைப்படுகிறார் போலும்." என குறிப்பிட்டிருப்பது தவறான சிந்தனை. இந்த நேரத்தில் மறைந்த மாமனிதர் குமாரின் வரிகளையே இங்கு பதிலாகத் தருகிறேன்." பொருளாதாரப் பட்டதாரியானவர் ஐ.நா.நிறவனப் பொருளாதாரத் திட்டமிடல் பிரிவில் நிபுணத்துவப் பயிற்சி பெற்றார். அதன் பின்னர் ஐ.நா.ஸ்தாபனத்தில் சர்வதேச ஆலோசகராகப் பணிபுரிகையில் 1970 ஆம் ஆண்டில் ஐ.நா.வின் UNCTAD செயலாளர் நாயகம், துறைமுக புள்ளி விபரங்கள் விடயமாக உலகளாவிய ரீதியில் ஆறுபுகழ் பெற்ற நீபுணர்களை நியமித்தார். நடராஜா அவர்கள் இந்த சர்வதேச நிபுணத்துவக் குழுவில் ஆசியாவுக்கும் அவுஸ்திரேலியாவுக்குமான செயலாளர் நாயகத்தின் ஏக பிரதிநிதியாக நியமிக்கப்பட்டமை இலங்கைத்தமிழர் மாத்திரமல்ல, உலகத் தமிழரும் பெருமைப்பட வேண்டிய விடயமாகும். "நடராஜாவின் பேச்சும் மூச்சும் தமிழுணர்வு இருப்பது பாராட்டுக்குரியது" என்ற என் நூலுக்கு முன்னுரை தந்த என் பாசத்திற்கும் மதிப்பிற்கும் உரிய மறத தமிழன் தம்பி குமார் பொன்னம்பலம் அவர்கள் தந்த சான்று போதுமானது.

எனக்கு நான் வகித்த பதவியின் பெருமையே போதுமானது. எனவே நான் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸிற்கு நண்பன் குமாரினாலும் பின்னர் அவர் மனைவியாலும் வலிந்திழுக்கப்பட்டவனேயன்றி நான் காங்கிரஸில பதவி தேடியவன் அல்ல என்பதை விநாயகமூர்த்தி அறிந்திருக்க நியாயமில்லை. காரணம் அந்நாளில் இடம்பெற்ற பல கூட்டங்களில், ஏன் எனது வீட்டில் ஒழுங்கு செய்யப்பட்ட தமிழ்க் கட்சிகளின் கூட்டத்தில் இன்றைய அமைச்சர் சந்திரசேகரன் கூட கலந்து கொண்டார். அதிலும் சரி, பின்னரான பல கூட்டங்களிலும் மா மனிதருடன் கலந்து கொள்பவர் யானறிந்த வரை குமரகுருபரனே. அரசாங்க எழுது விளைஞர் சேவையிலிருந்து இளைப்பாறும் காலத்தில் சட்டத்தரணியான



விநாயகமூர்த்தி குமாரின் சட்ட இளவலாக இருந்ததை அறிவேன். ஆனால், அரசியல் சந்திப்புக்களின் குமார் தனியே கலந்துகொள்வார் அல்லது அனேகமாக குமரகுருபரனுடனேயே வருவார். அது மட்டுமல்ல குமார் வெளிநாட்டு ராஜதந்திரிகளைச் சந்திக்கப் போகும் போதெல்லாம் என்னை மட்டுமே அழைத்துச் சென்றிருக்கின்றாரே தவிர, தற்போதைய தலைமையை அல்ல. காரணம் அவர் எனது தகுதியைப் புரிந்திருந்தமைதான். "கற்றாரைக் கற்றாரே காமுருவர்" என்பது திருவள்ளுவர் வாக்கு. எனது கடந்த நூல் வெளியீட்டில் நான் தான் கட்சியின் சித்தாந்தவாதி எனப் புகழாரம் சூட்டியவர் கஜேந்திரகுமார் அவர்களே.

அடுத்த முக்கிய விடயம், மூத்த காங்கிரஸ் உறுப்பினர்கள் ஓரங்கட்டப்பட்
டார்கள் என்று நான் முதலில் தெரிவித்தது. ஆக இரண்டு வருடங்களின் முன் அவர்களது அழைப்பனி பேரில் ஓர் அரசியல் கட்சியில் சேர்ந்த என்னை அல்ல. ஆனால் நானறிந்த வரை குமாருக்கும் முன்னர் தமிழ்க் காங்கிரஸ் ஆதரவாளனா
யும் பின்னர் காங்கிரஸின் பொருளாராகவும் இருந்த திரைமறைவிற் செயற்படுத்தப்பட்ட, குடும்ப சகதியால் ஓரங்கட்டப்பட்ட திரு.க.துரைராஜா ஆவார். குமாரின் கொள்கையை எப்பொழுதுமே நிலைநாட்டி, கடந்த அரச வரவு செலவுத் திட்டத்தை, ஆதரிக்க விநாயகமூர்த்தி எடுத்த நிலைப்பாட்டையும் என்னுடன் சேர்ந்து எதிர்த்து அதன்பாலாக கஜேந்திரகுமாரும் எமது நிலைப்பாட்டினை எடுக்க வைத்தவரான (இன்று பேசுவார் பலர்) ஏன் இன்று பொதுச் செயலாளரான மகேந்திரராஜா என்பவரே. 2000 ஆம் ஆண்டு பகிரங்கமாக வந்து புலிகளை ஆதரிக்காத போது புலிகள்தான் ஏக பிரதிநிதிகள் என்று தலைவன் வழியில் தலைநகரில் என்னுடன் மேடைமேடையாக துணிந்து கூறிய கட்சிக்கு உயிரூட்டிய இரு தசாப்தங்களாக குமாருக்கு உறுதுணையாக, இருந்த குமரகுருபரனை என்ன தேவைக்காக, பொதுச் செயலாளர் பதவியிலிருந்து சிரேஷ்ட உப தலைவராக்க நேர்ந்தது. கஜேந்திரகுமார் இப்பதவியேற்றிருந்தால் வேறு, 2000 ஆம் ஆண்டு பகிரங்கமாக புலிகளின் நிலைப்பாட்டை ஆதரிக்கப் பயந்து ஓடி ஒளிந்தான் நான் தட்டிக் கேட்க கடமைப்பட்டிருந்தேன்.

தமிழ்க் காங்கிரஸிற்கு பல்பரிமாண தோற்றத்தை பரந்துபட்ட செயற்பாட்டை முன்னெடுத்தவர்கள் யார்? விநாயகமூர்த்தி தின்குரலில் எழுதியது போல் குமரகுருபரன் பொதுச் செயலாளர் பதவியை விட விரேஷ்ட உப தலைவர் பதவியை மகிழ்ச்சியுடன் ஏற்றார் என்பது எவரை ஏமாற்றும் செயல். உலகில் அரசியல் கட்சிகளின் பொதுச் செயலாளர் பதவி தான் மிகமிக அதிகார சக்தி மிக்கது என்பதையும் உலகறியும்.

**இ. நடராஜா**

**முன்னாள் ஐ.நா.சர்வதேச ஆலோசகர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7

# சர்வதேச சமூகத்தின் அங்கீகாரம் பெற்றுள்ள இலங்கையின் சமாதான முயற்சிகள் எவ்வாறு அமைய வேண்டும்?

இலங்கையில் தமிழ் தேசயித்துக்கும் - சிங்களத்தேசியத் துக்கும் இடையில் நடந்த இருபது வருட யுத்தம் இன்று சர்வதேச பிரச்சினையாகத் தோற்றம் பெற்றள்ளது.

இதை உள்நாட்டு யுத்தமென்று வர்ணிக்க முடியாது. ஏனெனில் இது இரு தேசிய இனங்களுக்கும் இடையில் ஏற்பட்ட யுத்தம். இதன் பின்னணி சகலருக்கும் தெரிந்ததொன்று. இராவணன் தொடக்கம் 1621 வரை, இலங்கைத் தமிழர்கள் சுதந்திரமாக தங்கள் சொந்தத் தாயகத்தில் சர்வதேச தொடர்புகளுடன் சுபிட்சமாக வாழ்ந்தார்கள். துரதிர்ஷ்டமாக தமிழர் தாயகம் மேற்கத்தைய நாடான போர்த்துக்கேயரின் ஆக்கிரமிப்பினாலும், அதைத்தொடர்ந்து ஒல்லாந்தர், ஆங்கிலேயரின் தொடர் ஆக்கிரமிப்பினாலும் அடிமைப்படுத்தப்பட்டது.

ஆங்கிலேயர் 1948 ஆம் ஆண்டு இலங்கையை விட்டு அகன்ற பின்பு, தங்கள் முழு ஆட்சியையும் சிங்களவர் கையில் ஒப்படைத்தனர். இதனால், தமிழ்த் தாயகம் சிங்கள சமுதாயத்திற்கு அடி பணிய நேரிட்டது. அத்துடன், தமிழ்த் தாயகப் பூமியின் கிழக்கு மாகாணத்தில் கணிசமான அளவு சிங்களக் குடியேற்றம் மேற் கொள்ளப்பட்டது. தமிழர்கள் சகல துறைகளிலும் ஓரங்கட்டப்பட்டனர். இந்தப் பாரபட்சத்தைப் பொறுக்க முடியாத காரணத்தால் மறைந்த தமிழ்த் தலைவர்களான ஜீ.ஜீ பொன்னம்பலம், எஸ்.ஜே.வி. செல்வநாயகம் போன்றோர் கடும் எதிர்ப்பைக் காட்டினர். அத்துடன், சதவீதப் போரிலும் ஈடுபட்டனர்.

இக் காலகட்டங்களில் தமிழருக்கு எதிராக சிங்கள அரசு ஆதரவுடன் அடிக்கடி இனக்கலவரங்களும் நடைபெற்றன. 1983 இல் மிகக் கொடிய இனப்படு
கொலை நடைபெற்றதைத் தொடர்ந்து தமிழ் இளைஞர்கள் தங்கள் தாகம், சுசந்திர தமிழீழம் ஒன்று தான் என்று பிரபாகரன் தலைமையில் ஆயுதப் போராட்டத்தை நடத்தினார்கள்.

இந்தப் போராட்டம் ஆரம்பத்தில் கெரில்லாப் போராகவும் பின்பு உலகப் பிரசித்தி பெற்ற மரபு வழி இராணுவமாக அது மலர்ந்தது.



பிரபாகரனைப் பொறுத்தவரையில் தமிழீழம் ஒன்றுதான் தங்கள் குறிக் கோள் என்று சர்வதேச சமுதாயத்துக்கு தெளிவான முறையில் அறிவித்துவிட்டார்.

அதே நேரத்தில் கடந்த நான்கு வருட காலமாக தமிழீழத்திற்குப் பதிலாக மாற்று யோசனையிருந்தால் அதையும் பரிசீலிக்க விருப்பம் கொண்டுள்ளார். இந்த நிலையில் சமாதானம் எவ்விதம் அமைய வேண்டுமென்பதை நாம் சிந்திக்க வேண்டும்.

சர்வதேச சமுதாயத்தைப் பொறுத்தவரையில் இலங்கை தமிழருடைய வரலாறு நன்கு அறிந்திருக்கப்படவில்லை என்பதே எமது கணிப்பு. அத்துடன், ஆயிரமாயிரம் ஆண்டுகளாக தங்கள் மண்ணில் சுதந்திரத்தை அனுபவித்த சமுதாயத்தின் இந்தப் பின்னணியை சர்வதேச சமுதாயம் ஆழ்ந்து சிந்திக்கவில்லை.

ஒவ்வொரு நாடும் தங்களுடைய அனுபவத்தையும், சரித்திரத்தையும் மனதில் கொண்டுதான் அந்தப் பின்னணியில் தங்கள் ஆலோசனைகளை வழங்குகிறார்கள். உலகில் அதி முக்கியமான வல்லரசான அமெரிக்கா சமஷ்டி ஆட்சி முறையைப் பின்பற்றுவதால் அதுவே சாலச்சிறந்தது என்று ஆலோசனை கூறுகின்றது. இதே கொள்கையைத் தான் கனடாவும் பின்பற்றுகிறது. ஏனெனில் கனடாவில் சமஷ்டி ஆட்சி முறை பின்பற்றப்படுகிறது.

அநேக ஐரோப்பிய நாடுகளும் இலங்கை இனப்பிரச்சினைக்கு சமஷ்டி ஆட்சி முறை சாலச் சிறந்தது எனக் கருதுகின்றனர். ஆனால் இங்கிலாந்து ஒற்றையாட்சி முறையை கடைபிடிப்பதனால் இலங்கையும் ஒற்றையாட்சியின் கீழ் தமிழருடைய அபிலாஷைகளை நிறைவேற்ற வேண்டுமென்று ஆலோசனை கூறுகிறார்கள்.

எமது அயல் நாடான இந்தியா அநேக காரணங்களுக்காக தமிழருக்கு எதிரான கொள்கையைக் கடைப்பிடிக்கின்றது. அதேவிதமான கொள்கையைத் தான் 13ஆவது திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ராஜீவ் காந்தியின் கொலைக்குப் பின்பு இந்தியாவின் கொள்கை தமிழருக்கு விரோதமாகவும் சிங்களவருக்கு சார்பானதாகவும் மாறியது.

இந்திரா காந்தி காலத்தில் தமிழருடைய அபிலாஷைகளை நிறைவேற்ற வேண்டுமென்று குரல் கொடுத்தார். ஆனால், ராஜீவின் கொலைக்குப் பின்பு இந்தியா மத்திய அரசு இலங்கையில் எல்லா இனங்களுடைய அபிலாஷைகளையும் கவனத்தில் கொள்ள வேண்டுமென்கிறது.

இதற்கு மூல காரணம், மத்திய அரசிலும் சரி தமிழ் நாட்டிலும் சரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராமாணிய ஆதிக்கம் மிக ஓங்கி நிற்கிறது. ராஜீவ் காந்தி பிராமண இனத்தைச் சேர்ந்தவர். அவர் படுகொலையால் முழுப் பிராமண வர்க்கமும் இலங்கைத் தமிழருக்கு விரோதமாகிவிட்டது. இந்தச் சூழ்நிலையில் தற்போதைய இந்தியப் பிரதமரும், தமிழ் நாட்டு முதல் மந்திரியும் பிராமண வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. விடுதலைப் புலிகளைத் தடை செய்த நாடுகளான அமெரிக்கா, பிரிட்டன், இந்தத் தடை நீக்கத்தை வரவேற்கின்றன.

ஆனால், தமிழ் நாட்டில் பிராமண சார்புப் பத்திரிகையான இந்து, இந்தத் தடை நீக்கத்தைக் கடுமையாக ஆதரித்தது. இதிலிருந்து நாம் இந்தியாவினுடைய உள்நோக்கத்தை அறிய முடிகின்றது.

சமாதானப் பேச்சு நடைபெறும் இக்கால கட்டத்தில் பிரபாகரனை நாடு கடத்தப்பட வேண்டுமென்று குரல் கொடுக்கப்பட்டுள்ளது. இந்தக் கோரிக்கை சமாதானத்துக்கு உதவுமா அல்லது இலங்கைத் தமிழரைப் பூண்டோடு அழிக்க உதவுமா என்ற கேள்வி எழுகிறது.

போபால் நகரில் யூனியன் கார்பைட் நச்சு வாயுக்கசிவு ஏற்பட்டதினால் 3500 க்கும் மேற்பட்ட அப்பாவிப் பிராமணர் அல்லாத இந்தியர்கள் கொல்லப்பட்டனர். ஆனால் இந்தக் கம்பனியின் தலைவரான லொரன் அன்டாசன் என்ற அமெரிக்கரை நாடு கடத்த இந்திய நீதிமன்றம் கட்டளையிட்டது. இந்தக் கட்டளையை இந்திய அரசாங்கம் நிறைவேற்றத் தயங்கியது.

ஆனால் இலங்கையில் சமாதானம் மலரும் தறுவாயில் இப் பிரச்சினைக்கு முக்கிய கதாநாயகனாகிய பிரபாகரனை நாடு கடத்த வேண்டுமென்று குரல் கொடுக்கின்றது. இது தான் பிராமணத்துவ நீதியா?

இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரை ஆயிரமாயிரம் ஆண்டுகளாகத் தங்கள் சொந்த மண்ணில் சுதந்திரமாக வாழ்ந்த படியினால் சுதந்திர தமிழர் தாயகம் ஒன்று தான் தமிழர்களின் அபிலாஷைகளை திருப்திப்படுத்த முடியும். இதற்கு சான்றுகளாக அயர்லாந்து, பிரிட்டிஷ் ஆதிக்கத்தில் இருந்து பிரிந்து போய் சுதந்திர மாக செயற்படுகின்றது. அதே போல் எரித்திரியா, எத்தியோப்பியாவில் இருந்து பிரிந்து சென்றது. கிழக்குத் தீமோர் இந்தோனேஷியாவில் இருந்து பிரிந்து சென்றது. இதே உரிமையை தமிழர் தாயகம் பெறக் கூடாதா என்று சர்வதேச சமுதாயத்தைக் கேட்க விரும்புகின்றோம்.

ஆனால், இன்றைய சர்வதேச சூழ் நிலைக் கேற்ப சுதந்திர தமிழர் தாயகத்திற்குப் பதிலாக பிரபாகரன் அடிக்கடி சொன்னது போல் மாற்று யோசனையைச் சிறிது சந்திப்போம். ஒரு காலத்தில் சமஷ்டி போன்றதொரு அமைப்பைக் கேட்டார்கள் தமிழர் தலைவர்கள். ஆனால்



இன்று அந்தக் கோரிக்கையை மானமுள்ள எந்த தமிழனும் ஏற்றுக் கொள்ள மாட்டான். இதை சர்வதேச சமுதாயம் நன்கு உணர வேண்டும். ஆனால் அதற்குப் பதிலாக அதிசக்தியுள்ள கூட்டாட்சி முறையைப் பரிசீலிக்கலாம்.

உலகின் சில தேசங்களில் கூட்டாட்சி அரசியல் அமைப்பு முறை நடை

முறையில் இருக்கிறது. ஆனால் அவற்றை நாம் பின்பற்றத் தேவையில்லை. அதற்குப் பதிலாக விடுதலைப்புலிகள் செய்த தியாகத்திற்கும், தமிழர்களின் அபிலாஷைகளுக்கும் அவர்களின் கடந்த கால சரித்திரத்தை மனதிற்கொண்டும், இன்றை யதார்த்த நிலைக்கேற்ப ஓர் பலம் பொருந்திய கூட்டாட்சி முறையை உருவாக்கலாம்.

இந்தப் பலம் பொருந்திய கூட்டாட்சி முறையை விடுதலைப்புலிகள் சமாதானப் பேச்சு வார்த்தையில் குரல் கொடுப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

வருங்கால இலங்கை மத்திய அரசின் ஆட்சியில் அந்நிய நாட்டு உறவு, நாணயம் இந்த இரண்டு துறைக்கு மட்டுமே அவர்கள் பொறுப்பாக இருக்க வேண்டும்.

அதி முக்கிய விடயமாக பாதுகாப்பு இரண்டு பிராந்தியங்களுக்கும் தனித்தனியே வைத்திருக்கலாம். இதன்படி விடுதலைப்புலிகளின் இராணுவம் எந்தச் சந்தர்ப்பத்திலும் எந்தச் சூழ்நிலையிலும் கலைக்கப்படலாகாது. சிங்கள இராணுவத்துடன் சேர்க்கப்படலாகாது. அதற்குப் பதிலாக தமிழர் பிராந்தியம் தனது பாதுகாப்பை நவீனமயமாக்கி வலுப்படுத்த வேண்டும்.

அத்துடன் தமிழ்ப் பிராந்தியத்தில் துறைமுகங்கள், விமானத்தளங்கள், தங்கள் அதிகாரத்தின் கீழ் இயங்க வேண்டும். இதன்படி திருகோணமலை, காங்கேசன்துறை, பருத்தித்துறை, ஊர்காவற்றுறை, ஒலுவில் ஆகிய துறைமுகங்கள் எல்லாம் தமிழ்ப் பிராந்திய நிர்வாகத்தின் கீழ், அமைய வேண்டும். வெளிநாடுகளில் முதலீடுகளை வரவழைப்பதற்கு அதிகாரம் வேண்டும். இதற்கு எவ்விதத் தடையும் இருக்கக் கூடாது.

பலாலி காங்கேசன்துறை, காரைநகர், திருக்கோணமலை, மட்டக்களப்பு போன்றவற்றிலிருந்து இராணுவம் வெளியேற்றப்படவேண்டும்.

கல்வி, கமத்தொழில், காணி அபிவிருததி, கைத்தொழில் சுங்கப் பகுதி என்பன பிராந்தியங்களுக்க உட்பட்டதாக இருக்க வேண்டும்.

இவ்விதமாக கூட்டாட்சி முறையை சமாதானப் பேச்சில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலைப்புலிகள் கோரிக்கை விடுவார்கள் என்பதில் ஐயமில்லை. இந்தக் கோரிக்கைகள் பிரபாகரனின் மாற்று யோசனைகளாக அமைய வேண்டும்.

மேலே குறிப்பிட்ட விஷயங்கள் சமாதானத் தீர்வுக்கு உகந்ததாக அமைகிறது. சுதந்திரமாகப் பிரிந்து போவதற்குப் பதிலாக ஒரு நாடாக அமையலாம். அதே சமயத்தில் சிங்கள சமுதாயத்தின் அபிலாஷைகளையும், தமிழருடைய அபிலாஷைகளையும் திருப்திப்படுத்துவதற்கு ஒரு வழி முறையாக அமைகின்றது. இம்முறையை சர்வதேச சமுதாயம் வரவேற்கும் என்பதில் ஐயமில்லை.

இந்த வழிமுறையினால் நாடு பிளவுபடாது. இரு இனங்களும் தங்கள் அபிலாஷைகளுக்கு ஏற்ப சுதந்திரமாக செயற்பட முடியும்.



# 8

## இலங்கை தொடர்பாக இந்தியாவின் கரிசனை அரசியல் பூகோள நலன்களுக்கப்பால் வேறு ஒன்றும் இல்லை.

இலங்கையின் இனப் பிரச்சனையைச் சர்வதேச சமூகம் கடந்த இருபது வருட காலமாகத் தான் அறிந்து வைத்துள்ளது. வரலாற்று ரீதியாகப் பார்க்குமிடத்து இது எண்பது வருடங்களுக்கும் மேற்பட்ட ஓர் பிரச்சனையாகும்.

1956 இலிருந்து தமிழர் மற்றும் சிங்களவர்களுக்கிடையிலான இனப்பிரச்சினை மற்றும் தமிழர்களுக்கெதிரான இனப்பிரச்சினை மற்றும் தமிழர்களுக்கெதிரான வன்முறைகள் அரசாங்க ஆதரவுடன் நடைபெற்றன. 1983 இல் நடைபெற்ற இனப்பிரச்சினை மிகக் கொடூரமான வகையில் தமிழ் இனப்படுகொலையாக முடிவடைந்தது. இதனை அவதானித்த சர்வதேச சமூகம் அதிர்ச்சியடைந்தது. நமது அண்டை நாடான இந்தியாவும் மிகுந்த கவலைகொண்டு அதிக அக்கறை எடுத்தது. தமிழர் பிரச்சினை தொடர்பாக நன்கு அறிந்திருந்த அன்றைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார், இலங்கை ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதிக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் கடும் எச்சரிக்கை விடுத்திருந்தார்.

தமிழர்களின் துயரங்கள்ளையும் அலவங்களையும் சிந்தித்த இந்திராகாந்தி தமிழர் தம் அபிலாசைகளை நிறைவேற்றும் பொருட்டு சர்வதேச ஆதரவைத் திரட்டும் நோக்குடன் இலங்கை அரசின் அக்கிரமத்தையும் கொடூரத்தையும் நன்கு விளங்கிக்கொள்வதற்காக இப்பிரச்சினையை ஐ.நா.வுக்கு முறையீடு செய்தார். அதுமட்டுமல்லாது இப்பிரச்சினையை நேரடியாக விவாதிப்பதற்காக தமிழ்நாட்டு அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரனையும் அனுப்பி வைத்தபெருமை அவரைச் சார்ந்ததாகும். ஆனால், அவரின் அகால மரணத்தைத் தொடர்ந்து இந்தியாவின் கொள்கைகள் தலைகீழாக மாறத் தொடங்கின.

இந்திராகாந்தியின் மகனான ராஜீவ் காந்தியின் கபலத்தில் இப்பிரச்சினை இந்திராவின் கொள்கையிலிருந்து முரண்பட்டு விளங்கியது. தமிழர்களின் நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்த வெளிவிவகாரச் செயலாளர் ஏ.பீ. வெங்கடேஷ்வரனும் ஓரங்கட்டப்பட்டார். இந்திராகாந்தியின் ஆலோசகரான ஜீ. பார்த்தசாரதி கூட ஓரங்கட்டப்பட்டார். அதன் பயனாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்களுடைய அபிலாஷைகளைத் திருப்திப்படுத்தாத- அரசியல் தீர்வொன்று தமிழர்கள் மீது திணிக்கப்பட்டது.

இந்தியாவின் கோரிக்கைக்கு இணங்காமையால், தமிழர்களின் தலைவராகிய பிரபாகரன் அசோகா ஹொட்டலின் 55ஆம் அறையில் தடுத்து வைக்கப்பட்டார். ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதியின் வேண்டுகோளுக்கிணங்க இந்திய அமைதி காக்கும் படை என்ற பெயரில் இந்திய இராணுவம் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இலங்கையின் வட-கீழ் பிராந்தியத்தில் ஒரு இலட்சத்து இருபத்தையாயிரத்துக்கும் மேற்பட்ட இந்திய அமைதி காக்கும் படையினர் நிலைகொண்டனர். துரதிர்ஷ்டவசமாக இந்திய அமைதி காக்கும் படைக்கும விடுதலைப் புலிகளுக்கும் இடையில் யுத்தம் மூண்டது. இந்த யுத்தத்தில் 6521 அப்பாவித் தமிழ் மக்களை இந்திய இராணுவம் கொன்று குவித்தது. உலக வரலாற்றில் எங்கும் கேள்விப்படாத மிக மோசமான சம்பவமொன்று 1987 நவம்பர் மாதத்தில் யாழ். மண்ணில் நடைபெற்றது. அதுதான் புலிகளைத் தேடவதென்ற போர்வையில், யாழ்ப்பாண அரசினர் மருத்துவ மனையினுட் புகுந்த இந்திய இராணுவம், அங்கிருந்த நோயாளிகள் உட்பட தாதிமார்களையும், டாக்டர்களையும் கொன்று குவித்தது. இவ்விதமானதொரு கொடிய காட்டுமிராண்டித்தனத்தை உலகில் எந்தவொரு இராணுவமும், செய்யவில்லை. சர்வதேச சமூகம் மௌனம் அனுஷ்டித்தது.

ஈற்றில் தமிழக அரசின் அழுத்தத்தையும்ஜனாதிபதி பிரேமதாசாவின் கோரிக்கையையும். விடுதலைப் புலிகளின் இராணுவ ரீதியிலான தாக்குதல்களையும் கவனத்திற்கொண்டு இந்திய இராணுவத்தை இந்திய அரசாங்கம் திருப்பி அழைத்துக் கொண்டது.

தமிழ் நாட்டின் ஊடகத் துறைகளிலுள்ள பிராமண வர்க்கத்தினர், இலங்கைத் தமிழர்கள் மீதான எதிர்ப்புணர்ச்சிக்கு உரமூட்டி வருகின்றனர். சமீபத்தில் லண்டனில் நடைபெற்ற மறைந்த அமிர்தலிங்கத்தின் 75ஆவது பிறந்த தினவிழாவின் போது பிராமணவர்க்கத்தைச் சேர்ந்த ஊடகவியாளர் ஒருவர் கடுமையான சொற் பிரயோகத்தை மேற்கொண்டிருந்தார். அதாவது எதிர்காலத்தில் தமிழக அரசோ அன்றேல் இந்திய மத்திய அரசோ இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாகச் செயற்படப் போவதில்லையென ஆணித்தரமாகக் கூறியிருந்தார். இந்தப் பிராமணப் பிரமுகரின் நிலைப்பாட்டுக்கும் இந்திய மத்திய அரசு மற்றும் தமிழக அரசின் நிலைப்பாடுகளுக்கும் இடையில் வித்தியாசம் எதுவுமில்லை.

கடந்த 2 வருடங்களுக்கு மேலாக நோர்வே அரசு இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சியில் மிகக் கடுமையாக உழைத்து வருகின்றது. இம்முயற்சிக்கு மேற்கத்திய நாடுகள் அமோக ஆதரவையும், ஒத்துழைப்பையும் வழங்கின. ஆனால், இந்தியா பகிரங்கமாக எதனையும் செய்யவில்ரல. ஏனெனில் இந்தியாவின் உத்தியோக வர்க்கத்தினரின் பெருமளவானோர் பிராமண வர்க்கத்தினரின் பெருமளவானோர் பிராமண வர்க்கத்தினர். அவர்கள் சமாதானத்தை விரும்பவில்லை.

மனிதாபிமான ரீதியில் மேற்குலகம் வட-கீழ் பிராந்தியத்துக்கு விசேடமாக யாழ்ப்பாணம் மற்றும் வன்னி மக்களுக்குப் பல உதவிகளைச் செய்திருக்கிறது. ஐ.நா. வைச் சேர்ந்த நிறுவனங்களும் உதவியுள்ளன. ஆனால், இந்தியா வன்னி மக்களுக்கென வன்னியின் குழந்தைகளுக்காயினும் ஒரு போத்தல் பாலைக்கூட அனுப்பி வைக்கவில்லை. இதுவரையில் யாழ்ப்பாணக்குடா நாட்டில் மட்டும் 4000 தொன் அரிசியும், யாழ்ப்பாணத்தின் காலநிலைக்கு ஒத்துவராத 734 தொன் அருமினியத் தகடுகளும் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.சீமேந்து அனுப்பியிருந்தனர். அவை பருத்தித்துறைக்கோ அன்றேல் காங்கேசன்துறைக்கோ அனுப்பி வைக்காமல் கொழும்புத்துறைமுகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டமையால் அந்தச் சீமேந்து யாழ்ப்பாணம் போய்ச் சேரவில்லை. 6000 மைல்களுக்கு அப்பாலுள்ள மேற்குலக நாடுகள் தமிழர்களுக்கு உதவுகின்றன.

இராணுவம் மற்றும் பொருளாதாரக் காரணங்களுக்காக இலங்கை அரசாங்கம் விடுதலைப் புலிகள் மீது விதித்த தடையை அகற்றியுள்ளது. சமத்துவ அடிப்படையிலேயே சமாதானப் பேச்சுவார்த்தையிற் பங்குபற்றுவோம் என விடுதலைப்புலிகள் அறியக் கொடுத்தமையால் இத்தடை நீக்கம் மேற்கொள்ளப்பட்டது. இத்தடை நீக்கத்தை அகில உலகமும் மிக மகிழச்சியுடன் வரவேற்றது. விடுதலைப் புலிகளைத் தடை செய்திருந்த அமெரிக்காவும், பிரித்தானியாவும் கூட இத்தடை நீக்கத்தினை வரவேற்றுள்ளன. ஆனால், உலகில் ஒரேயொரு நாடு மட்டும் மௌனம் சாதித்து வருகின்றது. அதுதான் இந்திய அரசாங்கம் . தமிழ் நாட்டின் பிராமண வர்க்கத்தினரின் இந்து பத்திரிகை இத்தடை நீக்கத்திற்கெதிராகத் தலையங்கம் எழுதியிருந்தது. பிராமணத்துவ மனிதாபிமானத்தை இது எடுத்துக் காட்டுகின்றது.

இம்மாதம் 16ஆம் திகதியிலிருந்து 18ஆம் திகதி வரையில் விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் அடையில் இராணுவ ரீதியில் மாத்திரமல்லாது, இராஜதந்திர ரீதியிலும் தங்கள் திறமையை சர்வதேச சமூகத்தினருக்கு வெளிப்படுத்தியுள்ளனர் என்ற பாராட்டுகள் குவிந்த வண்ணமுள்ளன. சென்னையிற் பிரசுரிக்கப்படும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து பத்திரிகை விடுதலைப் புலிகளை நம்ப முடியாதென எச்சரித்திருந்தது. அது மட்டுமல்லாது விடுதலைப் புலிகளின் கோரிக்கையான தமிழர் தாயகக் கோட்பாட்டையும் கடுமையாக விமர்சித்திருந்தது. அதேவேளையில் இந்தியாவின் ஒவ்வொரு மாகாணமும் மொழிரீதியாகவே அடையாளங் காணப்படுகின்றது என்பது இந்து பத்திரிகைக்குத் தெரியாதுபோலும். இவ்வேளையில் சமாதானப் பேச்சு வார்த்தை தென் இந்தியாவில் நடைபெற வேண்டுமென்ற விடுதலைப்புலிகளின் கோரிக்கையையும் இந்தியா அலட்சியம் செய்துள்ளது. சுகவீனமான விடுதலைப் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் இந்தியா ஊடாகப் பயணம் செய்வதற்கும் அனுமதி வழங்கப்படவில்லை. ஆமற்ரேஜ் கூறியவற்றிலிருந்து இலங்கையிற் சமாதானம் மலரவேண்டுமென்பதற்கு இந்தியா ஆதரவு வழங்குகின்றதா?

இலங்கைப் பிரதமர் மற்றும் நோர்வே பிரமுகர்கள் அடிக்கடி இந்தியா சென்று சமாதானப் பேச்சுவார்த்தையின் முன்னேற்றம் தொடர்பாகவும் சமாதானத் திட்டங்கள் தொடர்பாகவும் வளங்கி வருகின்றனர். உங்களின் உதவி இல்லாவிட்டாலம் உங்களால் உபத்திரவம் இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் இவர்கள் அடிக்கடி இந்தியா செல்கின்றனரோ தெரியவில்லை.

இந்தியா இந்து சமுத்திரத்தில் ஒரு வல்லரசாகத் திகழ்வதனாலும், இலங்கையின் ஒரேயொரு அண்டை நாடாக இந்தியா விளங்குவதினாலும், இலங்கையில் என்ன நடக்கிறது என்பதை மறைமுகமாக அறிந்துகொள்வதில் இந்தியா ஆர்வமாயிருக்கின்றது. இலங்கைத் தமிழர் பிரச்சனை ஒரு சர்வதேச பிரச்சனையாக மாறிவிட்டது என்பது இந்தியாவுக்கும் தெரியும். சமாதானப் பேச்சுவார்த்தை தோல்வியடைந்து அதன் பலனாக வேறு நாடுகள் இராணுவ ரீதியாகச் செயற்பட்டால், அது இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக விளங்கும் என்ற காரணத்தினால், இலங்கை சர்வதேச இராணுவத்தளமொன்றாக மாற்றமடையக்கூடாது என இந்தியா எண்ணலாம். உலகின் அதிமுக்கிய வல்லரசான அமெரிக்காவுக்கு அருகிலிருக்கும் கியூபா சுதந்திரக் கொள்கையை அனுஷ்டிக்கிறது என்பதையும் மறந்துவிட முடியாது.



9

# இனப்பிரச்சினையில் சம்பந்தப்பட்ட நான்கு கதாபாத்திரங்கள்

தமிழ்த் தேசியத்துக்கும், சிங்களத் தேசியத்துக்கு மிடையில் 20 வருட காலமாக நடைபெற்று வந்த யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்த அந்த யுத்தத்துக்கு காரணமாகவிருந்த இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக விடுதலைப் புலிகளுக்கும் அரசதரப்பிற்குமிடையிலான பேச்சுவார்த்தை செப்டெம்பர் 16-18 இல் தாய்லாந்தில் நடைபெற்றது. இலங்கையின் இனப்பிரச்சினையை தீர்த்து வைப்பதற்கு சர்வதேச சமூகம் அதிக அக்கறை எடுத்ததன் காரணமாக நோர்வேயின் அனுசரணையுடன் இப்பேச்சுவார்த்தை நடந்தேறியது. தமிழ்ச் சமூகத்தின் ஏகப் பிரதிநிதிகளாக விடுதலைப் புலிகள் பங்குபற்றினர். இவர்களின் முக்கிய பேச்சாளராக அன்ரன் பாலசிங்கம் விளங்கினார். அரசுதரப்பின் கூன்று முக்கிய அமைச்சர்களும், சமாதானச் செயலகத் தலைவரும் பங்குபற்றினர்.

இந்த முதற் சுற்றுப் பேச்சவார்த்தை வெற்றிகரமாக நடந்தேறியதாக இரு தரப்பினரும் சர்வதேச சமூகத்துக்குத் தெரியப்படுத்தினர். மூன்று நாட்களாக நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் முழுவிபரங்களும் பொதுமக்களுக்குத் தெரியாவிட்டாலும் அரச மற்றும் புலிகள் தரப்பினரால் வெளியிடப்பட்ட கருத்துக்களை உற்றுநோக்குகையில் இப்பேச்சுவார்த்தை சமாதானத்திற்கான முக்கிய அடிக்கல்லாக மாறியுள்ளது என்பது சகலரும் அறிந்த ஒன்றாகும்.

அரசாங்கத் தரப்பில் அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் அதிகாரப்பரவல் வழங்கப்பட வேண்டுமெனக் கூறியுள்ளார். விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் சுதந்திரமான தமிழீழத்துக்குப் பதிலாக மாற்று யோசனைகள் முன் வைக்கப்படின் அவற்றைப் பரிசீலிக்கலாமெனக் கூறியுள்ளனர்.

அன்ரன் பாலசிங்கம் நாட்டைப் பிரிப்பதற்கு தாங்கள் முயற்சிக்கவில்லையென்றும், அதற்கோட்பாடு, சுயநிர்ணய உரிமை போன்ற விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதாகவும் கூறியிருந்தாா. இதற்கு மேலாக இருசாராரும் இணைந்து 20 வருட யுத்தத்தினால் பெருமழிவிற்குள்ளான வட, கீழ் பிராந்தியத்தின் புனர்நிர்மான-புனரமைப்புப் பணிகளுக்காக சர்வதேச பொருளாதார உதவிகளைக் கோரியிருந்தனர். இதன் பிரகாரம் அரசியல் அமைப்புத் தொடர்பாக ஆழமான, அகலாமான, விரிவான பேச்சுவார்த்தையில் இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறாவிட்டாலும் முதற்சுற்றுப் பேச்சுவார்த்தை சுமுகமாகவும் வெற்றிகரமாகவும் நடைபெற்றுள்ளதென்பதனை உணர்ந்து கொள்ள முடியும். இதனால் இப்பேச்சுவார்த்தையின் வெற்றியை பக்கச்சார்பற்ற முறையில் ஆராயவேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. இவ்வாறான மதிப்பீட்டின் மூலம் சில உள்நோக்கங்களையும், யதார்த்த நிலைமைகளையும் அறிந்து கொள்ள முடியுமானதாகவிருக்கும்.

இவ்வாறான பக்கச்சாரபற்ற மதிப்பீடு பல்வேறு கோணங்களிலிருந்தும் ஆராயப்பட வேண்டியது அவசியமானதாகும். இப்பிரச்சினையில் மிக முக்கிய கதாபாத்திரங்கள் உள்ளன. முதலாவதாகத் தமிழ்ச்சமுதாயம், இரண்டாவதாக சிங்களச் சமுதாயம், மூன்றாவதாக இந்தியா தவிர்ந்த சர்வதேச சமுதாயம் , நான்காவதாக இந்தியா. இப்பேச்சவார்த்தை தொடர்பான மதிப்பீடை மேற்கொள்வதானால் இந்நான்கு கதாபாத்திரங்களும் பல்வேறு கோணங்களிலுமிருந்து ஆராயப்படுதல் வேண்டும். இதன் மூலமே முறையான மதிப்பீட்டை மேற்கொள்ள முடியும்.

## தமிழர் சமுதாயம்

தமிழ்ச் சமூகம் தங்களுடைய இறையாண்மையையும், சுதந்திரத்தையும் பறிகொடுத்து, சிங்கள ஆதிக்கத்துக்குள் அகப்பட்டு அடிக்கடி வகுப்புக் கலவரங்களுக்கு ஆட்பட்டு 1983 இல் இனப்படுகொலைக்கு ஆளாகிச் சகல துறைகளிலும் ஓரம்கட்டப்பட்டது. இழந்த தங்கள் சுதந்திரத்தை மீளப்பெற்றுக்கொள்வதற்கான யுத்தத்தில் அவர்களின் தாயகம் பேரழிவுக்குள்ளானது என்பது பக்கச் சார்பற்ற சரித்திர உண்மை. இந்தவகையில் சிங்களச் சமுதாயத்தை எஜமானர்களாகக் கருதாது, இரண்டு தேசியங்களுக்குமிடையிலான முரண்பாட்டை பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்த்துக் கொள்வதெனக் கருதி அதற்குச் சர்வதேச சமூகத்தின் மூலம் நீதியானதும், நேர்மையானதுமான தீர்வுக்காகப் பிராத்திக்கின்றனர். சிங்களத் தலைவர்களுடன் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கைகள் கிழித்தெறியப்பட்டதன் பின்னர் பல்லாண்டு காலமாக சாத்வீக ரீதியாக தமது பல்லாண்டு காலமாக சாத்வீக ரீதியாக தமது உரிமைகளைப் பெற்றுக்கொள்ள மேற்கொண்ட முயற்சிகள் வெற்றியளிக்காமையினால் துப்பாக்கியேந்தியே விடுதலை பெறவேண்டுமென்ற நோக்கிற்கு தமிழ் இளைஞர்கள் தள்ளப்பட்டனர். இதன் பலனாக தமிழ் இளைஞர்கள் அதிகளவில் தியாகம் செய்தனர். விடுதலைப் புலிகளின் தியாகமும், சுதந்திரத் தாகமும், அவர்களின் இராணுவச் சக்தியுமே இப்பேச்சு



வார்த்தையின் வெற்றிக்கு வழிவகுத்தன என்று தமிழ்ச் சமுதாயம் நம்புகின்றது.

## சிங்களச் சமுதாயம்

சிங்களச் சமூகத்தினர் ஒரே தேசம், ஒரே அரசு என்ற கொள்கையைக் கடந்த 85 வருடங்களாக நம்பியிருந்தனர். இந்த நம்பிக்கையின் பலனாகவே பண்டாரநாயக்க- செல்வநாயகம் உடன்படிக்கை, டட்லி- செல்வநாயகம் உடன்படிக்கை யாவும் படுதோல்வியில் முடிவடைந்தன. அதே நம்பிக்கையில்தான் சேர்.பொன். இராமநாதன், சேர்.பீ.அருணாசலம் பொன்ற தலைவர்கள் ஓரங்கட்டப்பட்டனர். அதே நம்பிக்கையிலேயே அரசாங்க ஆதரவுடன் அடிக்கடி தமிழ் மக்களுக்கு எதிரான வகுப்புக் கலவரங்களும், தமிழ் மக்கயுக்கெதிரான இனப் படுகொலைகளும் நடைபெற்றன. இம்மாதிரியான கொடூரமான படுகொலைகளைப் புரிந்தபோதிலும், இராணுவரீதியாக விடுதலைப் புலிகளை நசுக்க முடியாமல் போனமையை எண்ணிப் பேரினவாதிகள் கவலை கொண்டனர். 67,000 வரையினதான அப்பாவித் தமிழ் மக்களையும் 17,000 வரையினதான ஆயுதம் தரித்த விடுதலைப் புலிகளையும் கொன்று குவித்த போதிலும், வட, கீழ் பிராந்தியப் பொருளாதாரத்தை சீர்குலைத்த பின்னரும் கூட விடுதலைப் புலிகளின் உணர்ச்சியை நசுக்கமுடியாமல் போனதை நினைத்து பேரினவாத சக்தி கவலைகொண்டுள்ளது. அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் இந்தியா போன்ற நாடுகளிற் பயிற்றுவிக்கப்பட்ட தமது இராணுவத்தை வெளிநாடுகளில் பயிற்சிபெறாத விடுதலைப்புலிகள் எவ்வண்ணம் வெற்றிகொள்கின்றனர் என்று எண்ணி மனம் கலங்குகின்றது.

இந்த யுத்தத்தால் சிங்கள சமுதாயம் பொருளாதார ரீதியில் படுமோசமான நிலைக்கு ஆளானது. உதாரணமாக, சுற்றுலாப் பயணிகளின் வருகையிலான வீழ்ச்சி, வெளிநாட்டு முதலீடுகள் குறைவடைந்தமை மற்றும் இளைஞர்கள் மத்தியில் நிலவிய வேலையில்லாப் பிரச்சினைகளைக் குறிப்பிடலாம். சர்வதேச ரீதியிலான அரசியல் அழுத்தங்களும் சிங்கள சமுதாயம் பேச்சுவாாத்தைக்குச் செல்ல வேண்ய நிர்ப்பந்தங்களை ஏற்படுத்தியது. இந்நிலையில் வேறுவழியில்லாமல் சர்வதேச உதவியுடன் விடுதலைப் புலிகளுடன் பேசி இயன்றளவு சிங்கள சமுதாயம் ஏற்கக்கூடிய அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்காக பேச்சுவார்த்தைக்கு உடன்பட்டனர். புலிகளுடன் பேசுவதற்கு இணங்காதுவிடின், சர்வதேச உதவியை எதிர்பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாது என்பதாலும், தமது சமூகத்தின் பாதுகாப்பு நலன் கருதியுமே பேச்சுவார்த்தைக்கு உடன்பட்டனர்.

இந்தியா தவிர்ந்த சர்வதேச சமூகம் இலங்கையை ஒரு முக்கிய நாடாகக் கருதவில்லை. சர்வதேச அரசியலில் ஒரு கேந்திர நாடாகவும் இலங்கை கருதப்படவில்லை. ஏனெனில், இதுவொரு சிறிய நாடாகும். இந்த வகையில் தமிழர் என்ற இனமொன்று இலங்கையில் வாழ்கின்றது என்பதும் சர்வதேச சமுதாயத்துக்குத் தெரியாது. மன்னன் இராவணன் காலத்திலிருந்தே 1621 ஆம் ஆண்டு வரையான ஆயிரமாயிரம் ஆண்டுகளாகத் தமிழர்கள் தமது பிரதேசத்தை சர்வதேச தொடர்புகளுடன் சுதந்திர இராச்சியமாக நடத்தி வந்தமையும், சர்வதேச சமூகத்ததுக்குத் தெரியாது. 1983 இல் நடைபெற்ற தமிழ் இனப்படுகொலைகளுக்கு பின்னர் தான் இலங்கையில் தமிழர்கள் என்ற ஓர் இனமுண்டு என்பது உலகிற்குத் தெரியவந்தது. அதன் பின்னரே விடுதலைப் புலிகளின் தியாகங்களையும், இராணுவத் திறமையையும், இராணுவ மதிநுட்பத்தையும் நன்கு அறிந்துகொண்டனர். இதன் விளைவாகவே, சர்வதேச சமூகம் பக்கச்சார்பற்ற யதார்த்த நிலைக்கு ஏற்ற பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கு முயற்சி செய்தது. மேற்குலக நாடுகளின் ஆலோசனைப்படி நோர்வே இப்பணியில் இறங்கியது. தாய்லாந்தில் நடைபெற்ற இப்பேச்சுவார்த்தைக்கு நோர்வே அரசு மக்கி காரணியாக விளங்கியது.

இந்தியா 1983 இலங்கையில் நடைபெற்ற இனப்படு கொலையையடுத்து தமிழர்களுக்குச் சார்பாகவும், சிங்கள சமுதாயத் துக்கு எதிராகவும் செயற்பட்டது. ஆனால், இந்திராகாந்தியம்மையாரின் மறைவின் பின்னர், அரசியல் முதிர்ச்சியடையாத அனுபவமில்லாத ராஜீவ் காந்தி, தனது தாயாரின் கொள்கைகளை உதாசீனம் செய்து பிராமண அழுத்தங்கள் காரணமாக தமிழர்களால் ஏற்றுக்கொள்ள முடியாத தீர்வொன்றினைத் தமிழர்கள் மீது திணித்தார். இது தோல்வியடைந்தது. இலங்கை அரசின் அழைப்பின் பேரில் இந்தியா 1,25,000 துருப்பினரைக் கொண்ட இராணுவத்தினரை தமிழர் தாயகத்துக்கு அனுப்பி விடுதலைப் புலிகளுடன் யுத்தத்தில் இறங்கியது. அதன் பலனாக 6,521 அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். 1987 நவம்பர் மாதத்தில் யாழ்ப்பாண அரசினர் மருத்துவமனைக்குட் புகுந்த இந்திய இராணுவம், அப்பாவி நோயாளிகள் உட்பட தாதிமார்களையும், டாக்டர்களையும் கொன்று குவித்தது. சமாதானத்தை நிலைநாட்ட வந்த இந்திய இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட இந்த மனித உரிமை மீறலுக்கு எதிராக வெளிநாடுகளில் வதியும் தமிழ்ச்சட்டத்தரணிகளால் இன்று வரையில்



சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கு ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை. ஆனால் பொஸ்னியாவில், யூகோஸ்லாவியாத் தலைவர் மிலோசெவிக் முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொண்ட மனித உரிமை மீறல்களுக்காக கைது செய்யப்பட்டு வழக்கை எதிர்கொள்கின்றார். இந்தப் பின்னணியில் இந்தியா தமிழ் மக்களின் சமாதானத்துக்கு உதவப் போகின்றதா என்பதுதான் கேள்வி.

இந்திய மத்திய அரசு, பிராமண ஆதிக்கம் கொண்ட ஊடகத்துறையினர் மற்றும் உத்தியோக வர்க்கத்தினர் தாய்லாந்துப் பேச்சுவார்த்தை தொடர்பாக மௌனம் சாதித்தனர். விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு இந்தியா மிகக் கடுமையாக எதிர்ப்புக் காட்டி வருகின்றது. இதுதான் இன்றைய யதார்த்த நிலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உண்ணாவிரதமிருக்கும் தமிழ்க் கைதிகளுக்கு விடிவு எப்போது?

பயங்கரவாதத் தடைச்சட்டம் மற்றும் அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நூற்றுக் கணக்கான தமிழ் யுவதிகளும் இளைஞர்களும் சிறைச்சாலைகளில் வாடுகின்றனர். இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டம் ஓர் சட்டமாகும். இதன் மூலம் ஏனைய சமூகத்தினர் பாதிக்கப்படுவதில்லை. விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக இருந்தார்கள் அல்லது அனுதாபம் காட்டினார்கள் என்று காரணம் காட்டி தமிழ் இளைஞர்களையும் யுவதிகளையும் கைது செய்து, மிகக் கொடிய சித்திரவதைக்கு ஆளாக்கி, அவ்வாறான சித்திரவதைகளைத் தாங்க முடியாது, தான் செய்யாத குற்றங்களைச் செய்ததாக தங்களுக்குப் புரியாத மொழியில், கட்டாயத்தின் பேரில் ஒப்புதல் வாக்குமூலம் வழங்கிக் கையொப்பமிட்டனர். இவ்வாறான பல வழக்குகளை விசாரணை செய்த உப நீதிமன்றம், அவர்களை நிரபராதிகளாகக் கண்டு, அவர்களுக்கு அரசாங்கமும், அவர்களைச் சித்திரவதைக் குள்ளாக்கிய பொலிஸ் அதிகாரிகள் தமது சொந்தப் பணத்திலிருந்து நஷ்ட ஈடு வழங்க வேண்டுமெனத் தீர்ப்பு வழங்கியிருந்ததையும் நாமறிவோம். இவ்வாறான செயற்பாடுகள் மனிதாபிமானமற்ற செயலெனவும் நீதிமன்றங்கள் விபரித்திருந்தன.

பெரும்பாலான தமிழ் யுவதிகளும் இளைஞர்களும் அரசியல் சம்பந்தமாகத்தான் கைது செய்யப்பட்டார்கள். அவர்கள் விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையவர்கள் அல்லது அவர்களுக்கு ஆதரவாகவோ அனுதாபமாகவோ இருந்தவர்கள். அதுவுமில்லாது விடில் விடுதலைப்புலிகளைத் தெரிந்திருந்தும் அது தொடர்பாக அரசாங்கத்துக்கு அறியக் கொடுக்கத் தவறியவர்கள் என்ற வகையில் குற்றச்சாட்டுக்கள் மீது வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. அநேகமான இளைஞர்களுக்கெதிராக வருடக்கணக்காக வழக்குகள் தாக்கல் செய்யப் படாதிருந்தன.

இவ்விதம் களுத்துறை, வெலிக்கடை, நீர்கொழும்பு மற்றும் மட்டக்களப்பு முதலிய இடங்களிலுள்ள சிறைச்சாலைகளில் எமது தமிழ் யுவதிகளையும் இளைஞர்களையும் அடைத்து வைத்துள்ளனர். தங்கள் மீது வழக்குத் தொடரப்பட வேண்டும். அல்லது தங்களை விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை இவர்கள் அடிக்கடி விடுத்தனர். சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகளும் தமிழ் அரசியல் கட்சிகளின்



பாராளுமன்ற உறுப்பினர்களும் களுத்துறைச் சிறைச்சாலையில் உண்ணாவிரதம் இருந்த இளைஞர்களுக்கு அவர்களது விடுதலை தொடர்பாக உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஆகையால் உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறும் பல சந்தர்ப்பங்களில் வாக்குறுதி வழங்கியிருந்தனர். ஆனால் கொடுத்த வாக்குறுதிகள் யாவும் காற்றிற் பறந் விட்டன. இதுவே இன்றைய யதார்த்த நிலை.

இந்த இளைஞர்கள் தமது விடுதலை கோரி மீண்டும் உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளனர். அவர்களிற் பலர் மயக்கமுற்ற நிலையிலும், நோய்வாய்ப்பட்டும் இருக்கின்றனர். இவர்கள் மனரீதியாக கடும் விரக்தி அடைந்துள்ளமையால், தமிழ் அரசியல் கட்சிகள் மீது முற்றாக நம்பிக்கை இழந்துவிட்டனர். அதனால்தான் உண்ணாவிரதமிருப்போர் தமிழ் அரசியல் கட்சித் தலைவர்களைச் சந்திக்கத் தயாராகவில்லை எனவும் அறியக் கிடைக்கின்றது.

இவர்களின் நிலை மிகவும் பரிதாபமானது. இந்த அவல நிலையை மனிதாபிமான முறையில் தான் நோக்க வேண்டும். இந்தப் பிரச்சினையைச் சட்டப் பிரச்சினையாகப் பார்ப்பது உசிதமானதல்ல. அது யதார்த்த நிலைக்கு ஏற்றதும் இல்லை. இது ஓர் அரசியற் பிரச்சினை. அரசியல் சம்பந்தப்பட்ட விடயங்கள் காரணமாகத் தான் இவர்கள் சிறைகளில் வாடுகின்றனர். இதற்கான தீர்வு அரசியல் ரீதியாகவே காணப்படுதல் வேண்டும்.

### சம்பந்தப்பட்டோர் உடனடியாக நடவடிக்கை எடுப்பது அவசியம்

ஒரு தமிழ் யுவதியோ அல்லது ஒரு தமிழ் இளைஞனோ சிங்கள சமூகத்தைச் சேர்ந்த ஒருவருக்கெதிராக தனிப்பட்ட குரோதம் காரணமாக வன்முறையில் ஈடுபட்டிருந்தால், அவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்வது எவ்வித பாதிப்பினையும் ஏற்படுத்தாது. அவ்விதமான தவறுகளுக்காக சாதாரண சட்டத்தின் கீழ் வழக்குத் தொடரப்படும். ஆனால் தற்போது சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகள் அவசர காலச் சட்டத்தின் கீழும், பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழும் தான் சிறை வைக்கப்பட்டிருக்கின்றார்கள். இவர்கள் அரசியல் காரணத்துக்காகத் தான் கைது செய்யப்பட்டார்கள். எனவே இந்தப் பிரச்சினை அரசியல் கண்ணோட்டத்தில் தான் நோக்கப்பட வேண்டுமென்பதில் சந்தேகமெதுவு மில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபது வருட யுத்தத்திற்குப் பின்னர் இன்று விடுதலைப் புலிகளும் இலங்கை அரசாங்கமும் சமாதானப் பாதையை நோக்கிச் செல்கின்றார்கள். சமாதான சூழ்நிலை ஏற்பட்டு விட்டது. சமாதானப் பேச்சுக்களும் ஆரம்பித்து விட்டன. இந்தச் சமாதாச் சூழ்நிலைக்கும் பேச்சுக்கும் முக்கிய கதாபாத்திரமாக நோர்வே அரசு விளங்குகின்றது. அவர்கள் இரு பகுதியினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றையும் தயார் செய்து இரு சாராரின் கையொப்பங்களையும் பெற்றுள்ளனர். இது நடைமுறையிலும் இருக்கிறது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு வழக்குத் தொடரப்படாது சிறையில் அடைத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் எவ்வித நிபந்தனையுமின்றி இரண்டு வார கால அவகாசத்தில் விடுதலை செய்யப்பட வேண்டும் என்ற ஷரத்தொன்றினையும் உள்ளடக்கியிருக்கலாம். நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டவர்கள் தொடர்பாக, சட்டமா அதிபர் திணைக்களம் ஒரு மாக காலத்திற்குள் அந்த வழக்குகளை வாபஸ் பெற்றுக்கொள்ளுதல் வேண்டுமென்ற ஷரத்தொன்றினையும், பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு குற்றவாளிகள் என நீதிமன்றங்களாற் தீர்ப்பளிக்கப்பட்டு சிறைத் தண்டனையை அனுபவித்து வருபவர்கள் தொடர்பாக ஜனாதிபதி மூலம் பொது மன்னிப்பொன்றினை வழங்கி அவர்களை விடுதலை செய்வதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற் கொள்ளுதல் வேண்டுமென்ற ஷரத்தொன்றையும் உட்படுத்தியிருக்கலாம். புரிந்துணர்வு ஒப்பந்தம் தயார் செய்யப்பட்ட வேளையில் இவ்விதமான ஷரத்துக்களையும் அவற்றில் உட்புகுத்தியிருந்திருந்தால் இன்றைய அவல நிலை தோன்றுவதற்கான வாய்ப்பு இருந்திருக்காது என்பது எமது கணிப்பு.

1987 ஜூலை மாதம் 29 ஆம் திகதி இலங்கை-இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தானதைத் தொடர்ந்து ஆயிரக் கணக்கான தமிழ்க் கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர். அதேபோல் இலங்கை அரசாங்கத்துக்கும் ஜே.வி.பி க்கும் இடையில் ஒப்பந்தம் ஏற்பட்ட போதும் சிறையிலிருந்த ஜே.வி.பி. யைச் சேர்ந்தவர்களை அரசாங்கம் விடுதலை செய்தது. இன்றும் விடுதலைப்புலிகளால் சிறைப்பிடிக்கப்பட்ட இராணுவத்தினரை விடுதலைப் புலிகள் விடுதலை செய்தனர். அதற்குப் பதிலாக அரசாங்கமும் அரசாங்கமும் தங்கள் சிறையில் அடைத்து வைத்திருந்த விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்களிற் சிலரையும் விடுதலை செய்துள்ளது. இதே அடிப்படையில் தமிழ் அரசியல் கைதிகளும்



விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதே எமது கருத்து. சர்வதேச ரீதியில் அநேக நாடுகளில் இவ்வாறு சிறைக் கைதிகள் பரிமாற்றம் செய்யப்படுவதும் இதற்குச் சான்றாகும். எனவே, இந்தப் பிரச்சினை தொடர்பாக சட்ட நுணுக்கங்களை அதிகமாக ஆராயாது சமாதான சூழ்நிலைக்கேற்ப, சமாதானத் தீர்வையும் மனதிற் கொண்டு நாட்டின் எதிர்கால நலன் கருதி, சகல தமிழி அரசியல் கைதிகளும் ஒரு வார காலத்தினுள் விடுதலை செய்யப்பட வேண்டுமென பிரதம மந்திரி சட்டமா அதிபருக்கு பணிப்புரை விடுப்பது அவசியம் என கருதுகிறோம். நீதிமன்ற தண்டனை அனுபவிப்பவர்களுக்கும் ஜனாதிபதி மூலம் பொது மன்னிப்பு வழங்கப்படுவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

இது தொடர்பாக தமிழ்க் கட்சிகள் யாவும் உடனடியாக ஒன்றிணைந்து ஒரு செயல் திட்டத்தில் இறங்குதல் வேண்டும். முதலாவதாக வட கிழக்கு மற்று மலையகம் ஆகிய இரண்டு பிராந்தியங்களிலும், இரண்டொரு வாரங்களுக்குள் ஒரு குறிப்பிட்ட தினத்தில் சரித்திரம் காணாத வகையில் மக்கள் சக்தியை ஒன்றிணைந்து மாபெரும் ஹர்த்தால் ஒன்றினை ஒழுங்கு செய்வது மிக முக்கியமானதாகும். இதன் மூலம் தமிழ் மக்களின் அபிலாஷைகளை அரசாங்கம் அறிந்து கொள்வதோடு, சர்வதேச சமூகத்திற்கும் அறியக் கொடுப்பதாக அமையும்.

இரண்டாவதாக, மலையகத் தமிழ்ப் பிரதிநிதிகளும் வட-கிழக்கு தமிழ்க் கூட்டமைப்பும் ஏனைய தமிழ்க் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒரே குரலில் 19 ஆவது திருத்தப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிப்ப தானால், அதற்கு முன்னர் தமிழ் அரசியல் கைதிகள் யாவரும் நிபந்தனை எதுவுமின்றி விடுதலை செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைப்பது அவசியமாகின்றது. இந்தக் கோரிக்கைக்கு இணங்காத தமிழ் அரசியல் கட்சிகளை இனங்கண்டு தமிழ் மக்கள் வரப்போகும் தேர்தல்களில் அவர்களை ஒரங்கட்டுவதற்கான நிலை ஏற்படுத்தப்படுதல் வேண்டும்.

அதிகமாக வெளிநாட்டு உதவிகளுடன் செயற்படும் அரச சார்பற்ற நிறுவனங்கள் அந்நிதியில் 42% ஐ தங்கள் செலவுக்கே பயன்பத்துகின்றன. எனினும் தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் மனிதாபிமான முறையில் இதுவரையில் எதுவித நடவடிக்கையும் அவர்களால் எடுக்கப்படவில்லை என்பதை அறிந்து மனம் வருந்துகின்றோம்.

அகில இலங்கை இந்து மாமன்றம் தவிர்ந்த ஏனைய சமய ஸ்தாபனங்கள் மௌனம் அனுஷ்டிக்கின்றன. தமிழ் யுவதிகள் பலர் சிறைக்குள் தள்ளபட்டுள்ள போதிலும், கொழும்பில் இயங்கும் தமிழ்ப் பெண்கள் அமைப்புக்களும் மௌனம் சாதித்தே வருகின்றன. வட கிழக்கில் இயங்கும் பாடசாலை அதிபர்களும் இவ் விடயம் தொடர்பாக அக்கறை காட்டவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11

# சமாதான சூழலில் அதி உயர்பாதுகாப்பு வலயங்கள் அவசியமற்றவை.

வட, கிழக்குப் பிராந்தியத்தில் யுத்தம் வெடித்து இராணுவம் நிலை கொண்டதன் பின்னர் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இராணுவ முகாம்களை உள்ளடக்கி இராணுவத்தினரின் பாதுகாப்புக் கருதி, அதி உயர் பாதுகாப்பு வலயம் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது. இவ்விதமான பிரகடனங்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்திலும் பொ.ஐ.மு அரசின் ஆட்சிக் காலத்திலும் மேற்கொள்ளப்பட்டன. இவ்விதமான அதிஉயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பாக ஆழமாகவும் விரிவாகவும் சிந்திப்பது அவசியமாகின்றது.

முதலில் இவ்வாறான பாதுகாப்பு வலயங்கள் மக்களுக்குப் பாதுகாப்பளிப்பதற்காகவா அல்லது இராணுவத்திற்குப் பாதுகாப்பு வழங்குவதற்காகவா ஏற்படுத்தப்பட்டன என்பதைச் சிந்தித்தல் வேண்டும். ஏனெனில், இவ்வாறான விடயம் உலகின் பல பாகங்களிலும் ஒரு விதமாகவும் இலங்கையில் வேறு ஒரு விசித்திரமான விதமாகவும் நடைபெறுகின்றது. உதாரணமாக அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளிலுள்ள பாதுகாப்பு வலயங்கள், அணுசக்தி உற்பத்தி நிலையங்களின் பாதுகாப்புக் கருதியும் அதனை அண்டியுள்ள மக்களின் பாதுகாப்புக் கருதியும் அமைக்கப்படுகின்றன. அதே மாதிரியாக இராணுவத் தளங்கள் அமைந்துள்ள நிலப் பரப்புகளிலும் பாதுகாப்பு வலயங்கள் அமைந்திருப்பதனைக் காண்கின்றோம். பிற நாடுகளில் இவ்வாறான பாதுகாப்பு வலயங்களை அமைக்கும் போது அப்பகுதியில் வாழும் மக்களை அங்கிருந்து வெளியேறும்படி வற்புறுத்துவதுமில்லை, அவர்களை விரட்டி அடிப்பதும் இல்லை. அவர்களுடைய வீடு வாசல்களைத் தரை மட்டமாக்குவதுமில்லை. அப்பிரதேசத்திலுள்ள பயன்தரும் மரங்களை அழிப்பதுமில்லை. ஆனால், இலங்கையின் தமிழர் வதியும் வட, கீழ் பிரதேசங்களில் நடந்தவை-நடப்பவையெல்லாம். மேற்கூறியதற்கு முற்றிலும் முரணானவகையில்-மாறுபட்ட வகையில் அமைவதனைக் காண்கின்றோம். இங்கு இராணுவ முகாம்களின் பாதுகாப்புக் கருதி பல மைல் தூரத்திற்குள் உள்ள வீடுகளையும், மரங்களையும் தரை மட்டமாக்கி, இலட்சக்கணக்கான மக்களுக்கு எவ்வித நட்டஈடும் செலுத்தாது அவர்களை உள்நாட்டிலேயெ அகதிகளாக்கிய கொடூரச் சம்பவங்கள் இடம்பெற்றன. இராணுவம் தமிழர் பிரதேசங்களில் இவ்வாறான கொடுமைகளைச் செய்தது.

இந்தக் கொடூரத்தை ஒரு வகையான இனச்சுத்திகரிப்பு என்றும் வர்ணிக்கலாம். இனச்சுத்திகரிப்பானது ஐ.நா. மனிதாபிமான விதிமுறைகளுக்கும் சர்வதேச சட்டதிட்டங்களுக்கும் முரணானதாகும். தமிழர் பிரதேசங்களிலான இராணுவ முகாம்கள், மக்கள் பாதுகாப்புக்காக அல்லாது இராணுவத்தினரின் பாதுகாப்புக்காகவே அமைக்கப்பட்டன. தண்ணீர் நிலப்பரப்பைத் தவிர்த்து 975 சதுர மைல் நிலப்பரப்பை மட்டும் கொண்ட யாழ் குடாநாட்டில் 35 வீத நிலப்பரப்பு அதிஉயர் பாதுகாப்பு வலயமாக இராணுவத்தால் பிரகடனபடுத்தப்பட்டுள்ளது. இந்த வலயங்களினுள் விசேடமாக காரைநகர் கடற்படைத்தளம், பலாலி விமானத்தளம், காங்கேசன்துறை துறைமுகம் மற்றும் பருத்தித்துறை துறைமுகப்பிரதேசம் போன்றவை உள்ளடக்கப்பட்டுள்ளன. இங்கெல்லாம் இராணுவம் குவிக்கப்பட்டுள்ளது.

இந்த இராணுவத்தினரின் பாதுகாப்புக் கருதியே வலிகாமம் வடக்கு போன்ற இடங்களில் வாழ்ந்த இலட்சக்கணக்கான மக்கள் கட்டாயமாக வெளியேற வேண்டுமென நிர்ப்பந்திக்கப்பட்டனர். அவர்களின் வீடு வாசல்கள் தரை மட்டமாக்கப்பட்டன. பளன்தரும் மரங்களான மா-பலா-வாழை எல்லாம் அழிக்கப்பட்டன. கண்ணுக்கு எட்டாத தூரம் வரையினதான பிரதேசம் தரைமட்டமாக்கப்பட்டது. ஐ.நா.விதிகளுக்கும் சர்வதேச சட்டதிட்டங்களுக்கும் முரணான இச்செயற்பாடுகள் தொடர்பாக தமிழ்ச் சட்டத்தரணிகள் சர்வதெச குற்றவியல் நீதிமன்றில் இதுவரை முறையீடு எதனையும் மேற்கொள்ளவில்லை என்பதை நினைக்க வருத்தமாக இருக்கிறது.

இவ்வாறான கொடிய செயற்பாடுகளுக்கான காரணம் என்னவென்பதை அலசிப் பார்த்தால், விடுதலைப் புலிகள் ஊடுருவல் தாக்குதல்களை மேற்கொண்டு இராணுவத்தினரின் முகாம்களை நிர்மூலமாக்கிவிடுவார்கள் என்ற பீதியே இதற்கான காரணமாகும். முகாம்களுக்கு அண்மித்த பிரதெசங்களில் வீடுகள், கட்டிடங்கள், மரங்கள் போன்றவை இருந்தால், விடுதலைப்புலிகள் அவற்றுக்குள் மறைந்திருந்து ஏவுகணை மூலம் அல்லது பீரங்கி மூலம் தாக்குதல்களை மேற்கொள்ளலாம் என்பது இராணுவத்தினரின் கணிப்பு. இந்நோக்கத்திற்காகவே அப்பிரதேசங்களில் தமிழ் மக்களை இராணுவத்தினர் விரட்டி அடித்துவிட்டு, கண்ணுக்கெட்டாத தூரம் வரையிலான கட்டிடங்களையும், மரங்களையும் அழித்துவிட்டுத் தரிசு நிலமாக வைத்துள்ளனர். இதனால் , அங்கு வாழ்தவர்களின் கைத்தொழில் , கமத்தொழில் மற்றும் மீன்பிடித்தொழில்கள் யாவும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைவிடப்பட்டதோடு, அங்கிருந்த பாடசாலைகள் மற்றும் மத வழிபாட்டுத் தலங்களும் பாதிக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணக் குடா நாட்டில் மட்டும் இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆயிரக் கணக்கான வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. இலட்சக்கணக்கான பனை, தென்னை, பலா, வாழை மரங்கள் நிர்மூலமாக்கப்பட்டன. இதேமாதிரியான சோகக் கதைதான் திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு பிராந்தியங்களிலும் நடைபெற்றது.

இன்றைய சமாதான சூழ்நிலையில் இவ்வாறான அதிஉயர் பாதுகாப்பு வலயங்கள் அவசியமற்றவைஎன்பதே எமது ஆணித்தரமான கொள்கையாகும். புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் கொழும்பு ஊடாக வன்னிக்குச் செல்வதற்கு இராணுவம் பாதுகாப்பு வழங்குகின்றது. பெண்புலிகள் சிங்கள இராணுவத்தின் பாதுகாப்புடன் மட்டக்களப்பிலிருந்து வன்னிக்குச் செல்கின்றனர். இவ்வாறு மாற்றமடைந்துள்ள சூழ்நிலையிலும் அதிஉயர் பாதுகாப்பு வலயம் அவசியமானதா?

அடுத்ததாக விடுதலைப் புலிகளும் இலங்கை அரசாங்கமும் ஒன்றுசேர்ந்து, தமிழர் தாயகத்தில் பேரழிவுகளுக்கு உட்பட்ட பகுதிகளைப் புனர்நிர்மாணம் செய்வதற்கு சர்வதேச சமூகத்தினரின் உதவிகளை நாடிநிற்கின்றனர். புனர்வாழ்வு -புனரமைப்பு- புனர்நிர்மாணம் மேற்கொள்வதானால் அதிஉயர்பாதுகாப்பு வலயப் பிரதேசங்களிலிருந்து விரட்டப்பட்ட மக்கள் அங்கு மீள்குடியேறுவதற்கு வழிவகை செய்யப்படுதல் வேண்டும். தரைமட்டமாக்கப்பட்ட வீடுகள் புனர்நிர்மாணம் செய்யப்படுதல் வேண்டும். அப்படிச் செய்யாதுவிடில், அதனைப் புனர்நிர்மாணம் எனக் கூறமுடியாது.

புனர்நிர்மாணமும், அதிஉயர் பாதுகாப்பு வலயமும் ஒன்றுக்கொன்று முரணானவையாகும்.புனர்நிர்மானம் தொடர்பாக ஆலோசிப்பதற்கு முன்னரே அதியுயர் பாதுகாப்பு வலயம் நீக்கப்படுதல் வேண்டும். குறுகியஇராணுவ நலன்களை எண்ணி, அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்படாதுவிடில் அல்லது அதுமேலும் விஸ்தரிக்கப்படுமானால் புனர்வாழ்வு - புனரமைப்பு - புனர்நிர்வாகம் தொடர்பாகச் சிந்திக்காமலிருப்பதே உசிதமானதாகும். பிறநாடுகளில் யுத்தம் நிரந்தரமாக ஓய்ந்ததன் பின்னர்தான் புனர்நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படுகின்றன. யுத்த காலங்களில் இவற்றைச் செய்யமுடியாது. இலங்கையின் தமிழ் மக்களும், சிங்கள மக்களும் யுத்தத்தைக் கடுமையாக வெறுத்து கடந்த பத்துமாத தற்காலிக யுத்தநிறுத்தமொன்றில் ஈடுபட்டுள்ளனர். புரிந்துணர்வு ஒப்பந்த



நடைமுறைகளையும் கடைப்பிடித்து வருகின்றனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் படையினர் பாடசாலைகள், பொதுக்கட்டடங்கள் மற்றும் மத வழிபாட்டுத் தலங்களிலிருந்து குறித்த கால வரையொன்றுக்குள் வெளியேற்றப்பட வேண்டும் என்பதும் ஓர் நிபந்தனையாகும். புரிந்துணர்வு ஒப்பந்தத்தை தயார் செய்தவர்கள் அதியுயர் பாதுகாப்பு வலயங்களினுள்ளே பாடசாலைகள், மற்றும் மத வழிபாட்டுத் தலங்கள் அமைந்துள்ளதனை மறந்து விட்டார்கள். புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் குறிப்பிட்ட கட்டிடங்களிலிருந்து இராணுவம் வெளியேறினாலும் , அப்பிரதேசம் அதியுயர் பாதுகாப்பு வலயமாக விளங்குவதனால் பொதுமக்கள் சுதந்திரமாக நடமாட முடியாதவர்களாகவுள்ளனர். எனவே, புரிந்துணர்வு ஒப்பந்தமும், அதியுயர் பாதுகாப்பு வலயமும் ஒன்றுக்கொன்று முரணானவை என்பதையும் புரிந்துகொள்ள முடியும். எனவே இன்றைய சூழ்நிலைக்கேற்ப, இப்பிரச்சினையை எக்கோணத்திலிருந்து பாரத்தாலும் சமாதான நலன் கருதியும் தமிழ் மக்களின் பாதுகாப்புக் கருதியும் தமிழர் பிரதேசங்களில் அமுலிலுள்ள அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்பட வேண்டியது காலத்தின் தேவையாகும்.

அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்பட்டால் அந்த முகாம்களிலுள்ள படையினரின் பாதுகாப்புத் தொடர்பான கேள்வி எழலாம். யுத்த நிறுத்தம் நடைமுறையிலுள்ளமையால் புலிகள் தரப்பினர் தாக்குதல்களை மேற்கொள்வதற்கான சாத்தியம் இல்லை. அவர்கள் கடந்த பத்துமாத காலமாக யுத்த நிறுத்தத்தைச் செவ்வனே கடைப்பிடித்து வருகின்றர் பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக நடைபெற்று வருகின்றன. சர்வதேச சமூகம் இப்பேச்சுவார்த்தைகளை மிகவும் மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றது. தமிழ்ச் சமூகமும் சர்வதேச சமூகமும் நிதந்தர சமாதானத்தை எதிர்நோக்கியிருக்கின்றன. இவ்வாறானதோர் சூழ்நிலையில் விடுதலைப் புலிகள் தகுந்த காரணம் எதுவுமில்லாமல் தன்னிச்சையாக ஏவுகணைகள் மூலம் இம்முகாம்களைத் தாக்குவார்களா?

இராணுவத்தினர் புலிகளை நம்பமுடியாதெனக் கூறி அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்தால் கண்காணிப்புக் குழுக்களின் மூலம் நோர்வே, சுவீடன் மற்றும் டென்மார்க் நாடுகளைச் சேர்ந்தவர்களின் உதவியுடன் அதியுயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றிவிட்டு இந்த முகாம்களுக்கு அவர்களைக் கொண்டே பாதுகாப்பு வழங்க முடியும்.

உதாரணமாக நோர்வே நாட்டைச் சேர்ந்த 50 இராணுவத்தினரைப் பாதுகாப்பு வழங்குவதானால், அதியுயர் பாதுகாப்பு வலயம் நிரந்தரமாக அகற்றப்பட வேண்டியது அவசியமாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் அபிலாஷைகளையும், அவலங்களையும் சர்வதே , பெரும்பான்மை சமூகங்கள் புரிந்து கொண்டனவா?

இலங்கைத் தமிழர்களின் அபிலாஷைகளையும், அவலங்களையும் சர்வதேச சமூகமும் தெளிவாகப் புரிந்து கொண்டனவா?

இந்த விடயத்தில் நான்கு விஷேட அம்சங்கள் தொடர்பாகச சிந்திக்க வேண்டியுள்ளது. முதலாவது தமிழ் மக்களின் அபிலாஷைகள், இரண்டாவது அவர்கள் அனுபவித்த - அனுபவிக்கின்ற அவலங்கள், மூன்றாவதாக சர்வதேச சமூகத்தின் நிலைப்பாடு. நான்காவது எமது சிங்களச் சகோதர சமூகத்தின் சிந்தனைகள்.

தமிழர் வரலாறு தொடர்பாக அதிக முரண்பாடுகள் நிலவுகின்றன. ரஷ்ய பூமி அமைப்புச் சாஸ்திர விஞ்ஞானிகளின் ஆராய்வின் பிரகாரம், தற்போதைய இந்து சமுத்திர பிராந்தியத்தில் ஐம்பதினாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஈழமுரியா என்ற ஓர் கண்டம் இருந்தது. அங்கு தமிழர்கள் வாழ்ந்தார்கள் என்பதும் வெளியாகி யுள்ளது. எங்கள் சார்பாக இக்கூற்றினை நாம் எடுக்காவிட்டாலும், இலங்கையை முதல் தமிழ் மன்னன் இராவணன் ஆட்சி புரிந்தான் என்பது நாமனைவரும் அறிந்த விடயம். சைவக் கோவிலான திருக்கேதீஸ்வரத்தில் இன்றும் இராவணன் வழிபட்ட சிவலிங்கத்தைக் காணக்கூடியதாவுள்ளது. தமிழ் வேந்தன் இராவணன் முழு இலங்கையையும் ஆட்சி புரிந்தான். பின்னைய காலத்தில் எல்லாளனுடைய ஆட்சிக் காலத்தில் வடக்கு, கிழக்கு மற்றும் வடமத்திய பிராந்தியங்கள் எல்லாளனுடைய ஆட்சியின் கீழ் இருந்தன. அண்மித்த சரித்திரத்தில் அதாவது சுமார் 380 வருடங்களுக்கு முன்பு வட கீழ்ப் பிராந்தியம் சங்கிலியனின் ஆட்சியின் கீழிருந்தது. யாழ்ப்பாண இராச்சியம் பாணந்துறை வரையில் கடலாதிக்கத்தையும் கம்பளை வரையிலான நிலப்பரப்பையும் கொண்டிருக்காத இபன் பதூதா என்ற மொறோக்கோ தேசத்துப் பயணி 14 ஆம் நூற்றாண்டிற் கூறியிருந்தார்.

இன்றைய தமிழ்ச் சமூகம் இராவணனைப் போலவோ, எல்லாளனைப் போலவோ அல்லது சோழ இராச்சியத்தைப் போலவோ ஆட்சி நடத்த ஆசைப்பட வில்லை. தமிழர் தம் தாயகமாகிய வட, கிழக்குப் பிராந்தியத்தில் தமிழர் சுதந்திர ஆட்சி நிலவ வேண்டும் என்பதே அவர்களது அபிலாஷை



இந்த அபிலாஷையை நிறைவேற்றும் பொருட்டு, 17,000 வரையினதான தமிழ் இளைஞர்கள் தமது இன்னுயிரைத் தியாகம் செய்து, உலகில் பிரசித்தி பெற்றதோர் இராணுவ அமைப்பாக வளர்ச்சி கண்டுள்ளனர். கடும் விரக்தியின் பின்னர் இந்த அபிலாஷையை எய்தும் பொருட்டு தமிழர் கூட்டணி 1976 ஆம் வருட வட்டுக் கோட்டைப் பிரகடனத்தில் திரும்பவும் சுதந்திர தமிழ் ஈழத்தை மலர வைக்க வேண்டுமென வீர முழக்கம் செய்தது. அவர்களின் போராட்டம் சாத்வீக முறையில் அமைந்திருந்தமையால் அவர்களது தீர்மானத்தை அவர்களால் நடைமுறைப் படுத்த முடியவில்லை. அத்துடன், அது தொடர்பான சர்வதேச அழுத்தங்கள் இருந்ததாகவும் தெரியவில்லை.

சாத்வீக போராட்டம் தோல்வியில் முடிந்தமையால், சுதந்திரத் தாகம் கொண்ட நமது தமிழ் இளைஞர்கள் பிரபாகரன் தலைமையில் துப்பாக்கி ஏந்தி இராணுவத்திற்கு எதிராகப் பல சமர்களை புரிந்து வெற்றிகளையும் ஈட்டியுள்ளனர். அதன் விளைவாக வட கீழ்ப் பிராந்தித்தின் கணிசமான பகுதி விடுதலைப்புலிகளின் ஆட்சியின் கீழ் உள்ளது. அவர்களிடம் நிலப்பரப்பு, இராணுவம், கடற்படை, காவல்துறை, நீதித்துறை மற்றும் வங்கித்துறை ஆகியனவும் திறம்படச் செயற்பட்டு வருகின்றன. இதனாலேயே இலங்கைத் தமிழர்களுக்கு மாத்திரமல்லாது எட்டுக் கோடி உலகத் தமிழர் சமூகத்துக்கே விடிவெள்ளியாகத் திகழும் பிரபாகரன் சர்வதேச மட்டத்தில் பிரகாசித்துக் கொண்டிருக்கிறார்.

தமிழ் மக்களின் அவலங்கள், தமிழ் மக்களின் அபிலாஷைகளை வென்றெடுப்பதற்காகப் புலிகள் செய்த தியாகத்தில் 17,000 தியாகிகள் வீர மரணம் எய்தியதோடு 67,000 க்கு மேற்பட்ட அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். சமாதானம் ஏற்படுத்த வந்த இந்திய இராணுவத்தால் 6,500 அப்பாவித் தமிழ் மக்கள் கொலை செய்யப்பட்டனர். வட, கிழக்குப் பொருளாதாரம் சீர் குலைக்கப்பட்டது. இலட்சக் கணக்கான வீடுகள் அழிக்கப்பட்டன. 11 இலட்சத்துக்கு மேற்பட்ட அப்பாவித் தமிழ் மக்கள் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் அகதிகளாகத் தஞ்சம் புகுந்தனர். பாடசாலைகள், மத வழிபாட்டுத் தலங்கள் அழிக்கப்பட்டும் சேதமாக்கப்பட்டுமுள்ளன. கைத்தொழில், கமத்தொழில் மற்றும் மீன்பிடித் தொழில் யாவும் கடுமையான பாதிப்புக்குட்பட்டன. வட கீழ்ப் பிராந்தியத்தில் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ்ப பெண்கள் விதவைகளாக்கப் பட்டனர். பல பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டனர். இவ்உரிமை மீறல்களும் தமிழர் தாயகத்தில் நடைபெற்றது போல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் வேறெங்கும் நடந்ததாகத் தெரியவில்லை.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஓமந்தையிலிருந்து யாழ்பாணம் வரையில் ஒரு நகரத்தையும் காணவில்லையென்றும் அவை எல்லாம் அழிக்கப்பட்டு விட்டன என்றும் கூறியிருந்தார். இதுவே முதல் தடவையாக ஒரு சிங்களப் பிரமுகர் தமிழர் தாயகத்தில் நிகழ்ந்த பேரழிவுகள் தொர்பாக மேற்கொண்ட பகிரங்க வெளிப்படுத்த லாகும்.

சர்வதேசத்தின் நிலைப்பாடு-இலங்கையில் தமிழர் என்று ஒரு இனம் உண்டு. அவர்களுக்கோர் தனித்துவம் உண்டு என்பதைச் சர்வதேச சமூகம் அறிந்திருக்க வில்லை. என்றாலும் ஓர் குறுகிய சர்வதேச வட்டம் இரு பிரதான தமிழ்த் தலைவர்களை அறிந்திருப்பார்கள். ஆனந்த குமாரசாமி பெருமைமிக்கவோர் தமிழர். அவர் தமிழர்களுக்குப் புகழீட்டித் தந்தவர். அவரை அறிந்தவர்கள் ஒரு குறுகிய வட்டமாகிய சர்வதேசக் கலை உலகம். அடுத்தவர் ஆறு முகநாவலர். இலங்கைச் சைவ மக்களுக்கு பெருமையை ஈட்டியவர். அவரைத் தெரிந்தவர்களோ சர்வதேச சைவ உலகம் மாத்திரமே. ஆனால் 1983 ஆடி மாதத்தில் நடைபெற்ற தமிழரின் இனப்படுகொலைக்குப் பின்னரே அகில உலகமும் அதிர்ச்சிக்காளாகியது. இலங்கையில் தமிழர் என்ற ஓர் இனம் உண்டு. அவர்களைப் பூண்டோடு அழிக்கும் கொள்கையில் பேரினவாதச் சக்திகள் ஈடுபடுகின்றன என்பதை சர்வதேச சமூகம் நன்கு தெளிவாக உணர்ந்து கொண்டது.

தமிழர்கள் இழந்த சுதந்திரத்தை மீண்டும் பெற்றுக் கொள்வதற்காக துப்பாக்கி ஏந்தி விடுதலை யுத்தத்தில் இறங்கியுள்ளனர் என்பதைச் சர்வதேச சமூகம் நன்கு தெரிந்து கொண்டது. இந்த விடயம் ஐ.நா.சபையிலும் ஒலித்து விட்டது. ஐரோப்பிய நாடுகளின் மன்றங்களிலும் இது தொடர்பாக அலசப்பட்டது. பல வருடங்களாக ஐ.நா. மனித உரிமைக் கூட்டத் தொடர்களில், இலங்கைத் தமிழர்களுக்கெதிராக நடைபெற்ற நடைபெறுகின்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விவாதிக்கப்பட்டது. ஒரு கட்டத்தில் சர்வதேச புகழ்பெற்ற 70 அரச சார்பற்ற மனித உரிமை நிறுவனங்கள் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராகப் பாரிய குற்றச்சாட்டுகளைச் சுமத்தின. இலங்கை அரசாங்கப் பிரதிநிதி அவற்றுக்குப் பதில் கூற முடியாமல் திணறியிருந்தார்.

தமிழர்களின் விடுதலை யுத்தம் பிரபாகரனின் தலைமையில் நடைபெற்று வருவதையும், இராணுவ ரீதியில் அவர்கள் வெற்றிக்கு மேல் வெற்றிகளைக் குவித்துள்ளார்கள் என்பதையும், அவர்களது விடுதலை யுத்தத்துக்குத் தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவு உண்டு



என்பதனையும் சர்வதேச சமூகம் நன்கு தெரிந்து கொண்டது. இதனால் தான் இலங்கை அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள வேண்டுமென சர்வதேச சமூகம் கடுமையான அழுத்தங்களைக் கொடுத்து வருகின்றன. அதன்பலனாகவே நோர்வேயின் உதவியுடன் இலங்கை அரசாங்கம் விடுதலைப் புலிகளுடனான பேச்சுவாத்தையில் ஈடுபட்டுள்ளது.

அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் ஒன்றிணைந்து விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைக்கு இணங்காவிடில் பொருளாதாரக் கடன் உதவிகள் கிடைக்காதென மறைமுகமாக எச்சரித்து விட்டன. இதனாலேயே இன்று வன்னியில் ஆட்சிபுரியும் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை செஞ்சீனாவின் பிரதிநிதி சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தியிருந்தார். அதுபோலவே பல நாடுகளின் தூவர்கள் வன்னிக்குச் செல்கின்றனர். இதன் மூலம் அவர்கள் விடுதலைப் புலிக்ள இயக்கத்தைப் பயங்கரவாத இயக்கம் எனக் கருதாது விடுதலைத் தியாகிகள் எனக் கருதியே அவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்துகின்றார்கள் என்பது புரிகின்றது. இவ்விதமான சர்வதேச நிலைப்பாடு, முன்னாள் வெளிவிவகார அமைச்சர் கதிர்காமரின் பிரசாரத்துக்குச் சாவுமணி அடித்தது போல விளங்குகிறது. இலங்கையில் சமாதானப் பணிகள் முன்னெடுக்கப்படுவதற்கான பிரதான காரணம் சர்வதேச சமூகத்தின் மனமாற்றமும் அதன் பலனாக அவர்கள் இலங்கை அரசுக்குக கொடுக்கும் அழுத்தமும்தான். இந்த அழுத்தங்களின் காரணமாக சமாதான முயற்சிகள் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகள் உள்ளன என்பதே எமது நிலைப்பாடு.

பெரும்பான்மைச் சமூகத்தின் நிலைப்பாடு சேர்.பீ. இராமநாதன் காலம் தொடக்கம் அமிர்தலிங்கம் காலம் வரை தமிழ் மக்களை சிங்கள அரசியல் சமூகம் ஓரம் கட்டி வந்தது. இலங்கையில் இரு பெரும்பான்மைச் சமூகங்கள் இருப்பதாக ஒரு காலத்தில் வர்ணிக்கப்பட்டாலும், காலப்போக்கில் அந்நிலை மாறி தமிழ்ச் சமூகத்தை சிங்கள அரசியல் சமூகம் ஒரு சிறுபான்மைச் சமூகமாகக் கருதமுற்பட்டது.

1956 ஆம் ஆண்டுக்குப் பின்பு சிங்கள அரசியல் சமூகம் தமிழ்ச் சமூகத்தை விரும்பபடாத ஓர் சமூகமாகவே கருதி வந்தது. இந்நிலை உக்கிரமடைந்து அடிக்கடி இன்கலவரங்கள் நடைபெற்றன. 1983 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தமிழ்ச் சமூகம் பூண்டோடு அழிக்கப்பட வேண்டியதொன்றென்ற கொள்கையை சிங்கள அரசியல் சமூகம் கடைப்பிடித்தது. இதன் பலனாக ஆயிரக்கணக்கான அப்பாவித்தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் கொல்லப்பட்டனர். கொன்றவர்களுக்கெதிராக வழக்குகள் தொடரப்பட வில்லை. கொல்லப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு நஷ்டஈடுதானும் வழங்கப்பட
வில்லை.

இதன் விளைவாக ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் இணைந்து இராணுவத்துக்கெதிராக விடுதலை யுத்தம் புரிந்தார்கள். இதனால், சிங்கள அரசியல் சமூகம் தமிழ் சமூகம் மீது மோசமான கசப்புணர்வை உண்டுபண்ணி அதன் மூலம் 67,00 வரையான அப்பாவித் தமிழ் மக்கள் கொலை செய்யப்பட்டனர். வடகீழ் பிராந்தியம் அழிக்கப்பட்டது. இராணுவத்தால் வடகீழ் பிராந்தியத்தில் ஏற்படுத்தப்பட்ட பேரழிவுகள் தொடர்பாக சிங்களப் புத்திஜீவிகள் மதிப்பீடு எதனையும் மேற்கொள்ள வில்லை. தமிழ்ப் பெண்களுக்கு எதிராக நடைபெற்ற பாலியல் வல்லுறவுகள் தொடர்பான செய்திகளை சிங்கள- ஆங்கிலப பத்திரிகைகள் வெளியிடவில்லை. இராணுவத்தின் நலன் கருதி தமிழர் தாயகத்தில் அதி உயர் பாதுகாப்பு வலயங்கள் அமைக்கப்பட்டதன் பலனாக, இலட்சக் கணக்கான தமழ் மக்கள் அவர்களது வீடுகள் தரைமட்ட மாக்கப்பட்டது தொடர்பாகவோ அன்றேல் அநேக மதவழிபாட்டுத தலங்கள் அழிக்கப்பட்டது தொடர்பாகவோ, எந்தவொரு சிங்களப் பத்திரிகையோ ஆங்கிலப் பத்திரிகையோ கண்டனம் தெரிவிக்கவில்லை. இந்த அநீதி தொடர்பாக பெரும்பாலான சிங்களப் புத்திஜீவிகள்தானும் கண்டனம் தெரிவிக்கவில்லை.

எனினும், காலப்போக்கில் விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியில் ஈட்டிய வெற்றிக்கு மேலான வெற்றிகளைச் சகித்துக்கொள்ள முடியாவிட்டாலும்,தமது இராணுவத்தோல்விகளையும், கட்டுநாயக்கா விமானத் தளத்தில் ஏற்பட்ட கடும் சேதத்தையும், யுத்தத்தின் விளைவினாலான பொருளாதாரத் தாக்கத்தையும், மேற்கத்திய நாடுகளின் அரசியல் அழுத்தங்களையும், எல்லாவற்றுக்கும் மேலாக விடுதலைப் புலிகளை யுத்தத்தில் வெல்ல முடியாது என்ற யதார்த்தத்தைப் புரிந்தாலுமே, விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை களை மேற்கொள்ள சிங்கள அரசியல் சமூகம் விருப்பம் தெரிவித்தது. இது உண்மையான, நீதியான, நேர்மையான மனமாற்றமல்ல. தங்களது சுயலாபம் கருதியும், தமது பாதுகாப்பைக் கருதியும், சர்வதேச அழுத்தங்களின் நிர்ப்பந்தத்தினாலும் ஏற்பட்ட தேவைக்கேற்ற மனமாற்றமென்றே கருத வேண்டும்.



13

# தமிழ் இனத்தை புண்டோடு அழிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் சில வெளிநாட்டு சக்திகள்

இலங்கையில் கடந்த 20 வருட காலமாக நடைபெற்று வந்த யுத்தத்திற்கான மூல காரணம் என்னவென்பது யாவரும் அறிந்த விடயம். சுதந்திரமாக வாழ்ந்த தமிழ் இனத்தின் அபிலாஷைகளைப் புறக்கணித்து, அவர்களை நீதி, நேர்மையாக நடாத்தாமையும், அவர்களுக்கு அரசியல், பொருளாதாரம், உத்தியோகம் மற்றும் கல்வித் துறைகளில் பாரபட்சம் காட்டப்பட்டமையும், அவர்களது தாயக பூமியில் அரசாங்கத்தினால் சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டமையும் தமிழ் இனம் கொதித்தெழுந்து சாத்வீகப் போராட்டத்தில் ஈடுபட வைத்தது.

சாத்வீகப் போராட்டம் படுதோல்வியைத் தழுவியமையால் தமிழ் இளைஞர்கள் பிரபாகரன் தலைமையில் 1974ஆம் வருடத்தில் கொரில்லா அமைப்பை ஏற்படுத்தி மோதலில் ஈடுபட்டனர். காலப்போக்கில் இந்தக் கொரில்லா அமைப்பு மரபு வழி இராணுவமாக வளர்ச்சியடைந்து 1983 இல் இருந்து 2001 ஆம் ஆண்டின் இறுதிக் காலம் வரை சிங்கள இராணுவத்துடன் கடும்மோதலில் ஈடுபட்டு வந்தது. அக்கால வரையில் அமைதி காக்கும் படையினரான இந்திய இராணுவத்துடன் மோதலில் ஈடுபட்டது. விடுதலைப்புலிகளின் இராணுவ அமைப்பு இன்று உலகப் பிரசித்தி பெற்று விளங்குகின்றது. சிறிய தொகையினரான விடுதலைப்புலிகளின் இராணுவம் அதிக எண்ணிக்கை கொண்ட இராணுவத்தை பல களங்களில் எதிர்கொண்டு வெற்றிகளை ஈட்டியமையே அவர்களின் புகழுக்கான காரணமாகும்.

உதாரணமாக முல்லைத்தீவுப் பிரதேசத்தில் ஆயிரக்கணக்கான இராணுவம் கொல்லப்பட்டமையும், ஆனையிறவு இராணுவத் தளத்தில் நிலைகொண்டிருந்த 17,000இற்கு மேற்பட்ட இராணுவம் 2000ஆயிரத்துக்கும் குறைந்த அளவினதான விடுதலைப்புலிகளின் இராணுவத்துடனான போரில் தோல்வியைத் தழுவியது. விடுதலைப்புலிகளின் போர்த்திறனும், இராணுவ வியூகங்களுமே இவ் வெற்றிக்கான காரணமாகும். ஆனையிறவில் இராணுவத்துடனான போரில் தோல்வியைத் தழுவியது. விடுதலைப் புலிகளின் இராணுவத்துக்கு ஏற்பட்ட தோல்வி, யாழ்ப்பாணக்குடா நாட்டில் நிலை கொண்டிருந்த 35,000 இற்கும் மேற்பட்ட இராணுவத்தின் இருப்பினை கேள்விக்குறியாக்கியது. இந்தியாவின் மறைமுகமான மற்றும் நேரடியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுத்தங்களினால் குடாநாட்டில் இருந்த இராணுவத்தின் அநர்த்தம் தவிர்க்கப்பட்டது.

இந்த யுத்தத்தில் வட கீழ் பிராந்தியம் பேரழிவை எதிர்கொண்டது. அநேகமான பாடசாலைகள், இலட்சக்கணக்கான வீடுகள் மற்றும் மதவழிபாட்டுத் தலங்கள், ஒன்றில் அழிக்கப்பட்டன அல்லது சேதமாக்கப்பட்டன. 67,000 வரையினதான அப்பாவித்தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். 13 இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் அகதிகளாகினர். 17,500இற்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் தாயகம் காக்கும் போரில் வீர மரணத்தை அரவணைத்துக் கொண்டனர்.

இந்த யுத்தத்தில் தோல்விகளைச் சந்தித்த இராணுவத்தினரும் ஆயிரக்கணக்கில் இறந்தனர். சிங்கள மக்களின் பொருளாதாரமும் படு மோசமாகப் பாதிப்படைந்தது.

யுத்தத்தின் மூலம் தீர்வு கிட்டுவதற்கான சாத்தியம் இல்லை என்பதைச் சர்வதேச சமூகம் தெளிவாக விளக்கியதைத் தொடர்ந்து மத்தியஸ்தம் செய்யவும் முன்வந்தது. அதன் அடிப்படையில் நோர்வே அரசாங்கத்தின் உதவியுடன் முதற்சுற்று மற்றும் இரண்டாம் சுற்றுப் பேச்சு வார்த்தைகள் சுமுகமான வகையில் வெற்றி கண்டுள்ளன. இந்த வெற்றிகளுக்கான மூல காரணம், கடந்த டிசம்பர் 24ஆம் திகதி விடுதலைப் புலிகள் ஒரு தலைப்பட்சமாக யுத்த நிறுத்தத்தைப் பிரகடனப்படுத்தியமையும், அதனைத் தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சியும் யுத்த நிறத்தத்தைக் கடைப்பிடித்தமையும், அதனைத் தொடர்ந்து நோர்வே அரசாங்கத்தின் உதவியுடன் புரிந்துணர்வ ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்ட மையும், அது இன்று வரை தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வருவதுமேயாகும்.

இரண்டு சுற்று பேச்சுவார்த்தைகளும் வெற்றிகரமாக நடந்து முடிந்தமை நிரந்தரமான சமாதானம் ஏற்படுவதற்கான ஓர் படிக்கல்லாக அமையும் என்பதே அனைவரினதும் எதிர்பார்ப்பாகும். சர்வதேச சமூகம் குறிப்பாக மேற்குலகம் இலங்கையில் சமாதானத்தை மலரச் செய்யும் நோக்குடன் இலங்கை அரசுக்கும் அவ்வண்ணமே விடுதலைப்புலிகளுக்கும் அழுத்தங்களைக் கொடுத்து வருகின்றன. மேற்குலகம் விடுதலைப்புலிக்கும் அழுத்தங்களை ஓர் பயங்கரவாத அமைப்பாகக்க கருதாது, அதற்கு மாறாக, தங்கள் இனத்தின் விடுதலைக்காக தமது இன்னுயிரை தியாகம் செய்யும் தியாகிகளாகவே கருதுகின்றனர். இந்த உயர் இலட்சியத துக்காகவே, இலங்கை அரசாங்கம் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தையை மேற்கொண்டு நிரந்தர



சமாதானத்தைக் காண வேண்டும் என மேற்குலகம் வற்புறுத்தி வருகின்றது.

இப்படியான சமாதானச் சூழ்நிலையில் சிங்கள சமூகத்தில் இருந்து சில எதிர்ப்புக்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. இவ்விதமான உணர்வலைகள் சமாதானத்தை அடித்துச் செல்வதற்கு வழி வகுக்கலாம். இதனை ஆரம்பத்திலேயே இனங்கண்டு முளையிலேயே கிள்ளிவிட தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாது விடில் யுத்தம் திரும்பவும் வெடித்து நாடே அழிந்துவிடும். தமிழ்ச் சமூகத்திலிருந்து இதுவரையில் எவருமே சமாதானத்துக்கு எதிராகக் குரல் கொடுக்கவில்லை. அரசியல் ரீதியாக விடுதலைப்புலிகளுக்கு எதிரான உணர்வலைகளைக் கொண்டவர்கள் கூட சமாதானம் மலர வேண்டும் என்றும், விடுதலைப்புலிகளுடன் அரசாங்கம் பேச்சுவாரத்தை நடாத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டையே கொண்டுள்ளனர்.

முஸ்லிம்களைப் பொறுத்தவரையில், பரந்த அளவில் இலங்கையில் பல பாகங்களிலும் வாழ்ந்து வருகின்றனர். வட கீழ்ப் பிராந்தியத்தின் கிழக்கு மாகாணத்தில் விசேடமாக தென்கிழக்கில் பெரும்பான்மையாக வாழ்ந்து வருகின்றனர். கிழக்கு மாகாணச் சனத் தொகையில் ஏறத்தாழ 33 சத வீதம் முஸ்லிம்களாவர். அரசியல் ரீதியில் வடகீழ்ப் பிராந்தியம் ஒரே அலகாகக் கருதப்பட்டால் மொத்தச் சனத்தொகையில் முஸ்லிம்கள் 17 சத வீதம் அல்லது 18 வீதமாகக் குறைந்து விடுவர். இந்த அச்சம் காரணமாகவே, வடகீழ்ப் பிராந்தியம் சட்ட ரீதியாக புலிகளின் ஆட்சியின் கீழ் வருமேயாகில், முஸ்லிம் மக்களின் உரிமைகள் மற்றும் பாதுகாப்பு தொடர்பாக அவர்கள் அச்சம் கொண்டுள்ளனர்.

இவ்வாறான அச்சம் தேவையற்றது ஒன்று என்பதே எமது நிலைப்பாடு. முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் வன்னி சென்று முஸ்லிம் பிரச்சனைகள் தொடர்பாக பிரபாகரனுடன் பேச்சு வாத்தை நடத்தியுள்ளாா. அந்தப் பேச்சு வாத்தை பயனுள்ளதாக அமைந்திருந்தது. அந்தப் பேச்சவாத்தைகளின் பின்னர் பத்திரிகையாளர்களுக்கு வெளியிட்ட அறிக்கையில் ரவூப் ஹக்கீம் தாம் எதிர்பாத்ததை விட அதிகளவு உரிமைகள் கிடைக்கப் பெற்றதாகப் பகிரங்கமாக வெளியிட்டிருந்தாா. இவ்வாறான ஓர் நிலைப்பாடு உலகில் வேறெந்த நாடுகளிலும் நடைபெறவில்லை.

இன்நிகழ்வின் மூலம் ரவூப் ஹக்கீம், அவருடைய பெருந்தன்மையையும், அரசியல் முதிர்ச்சியையும் நன்கு வெளிப்படுத்தியிருந்தார். பிரபாகரன் இன்னும் ஒரு படி முன்னேறிச் சென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது பெருந்தன்மையை வெளிப்படுத்தியதோடு, மட்டுமல்லாது அரசியலில் விட்டுக் கொடுக்கும் நாகரிகத்தையும், வெளிப்படுத்தியிருந்தார். முஸ்லிம் சமூகத்தின் அபிலாஷைகளுக்கு மதிப்பளித்து ஏற்றுக்கொண்டார். காலப் போக்கில் நிகழும் பேச்சுவாரத்தைகளும் உடன்படிக்கைகளும் பிரபாகரனின் உறுதிமொழியின் அடிப்படையிலேயே உருவாகலாம். அவ்வாறான சூழலில் முஸ்லிம் மக்களின் எதிர்பாாப்புக்கள் வீண் போகாது. அவர்களின் அச்ச உணர்வு தேவையற்றவை.

இந்த அடிப்படையில் தமிழர்கள் அனுபவிக்கும் அனைத்து உரிமைகளும் சமத்துவமாக முஸ்லிம்களும் அனுபவிக்க வேண்டும். அவர்களது தனித்துவம்-சமயம், கலாச்சாரம் பாதுகாக்கப்பட வேண்டும். தொழில் ரீதியில் பாரபட்சம் காட்டப்படுதலாகாது. திறமையொன்றே அளவு கோலாக இருத்தல் வேண்டும்.

சிங்கள சமூகத்தைப் பொறுத்தவரையில், பேராசிரியர் ஹெட்டிகேயின் ஆராச்சியின்படி மிகக் கூடுதலான சிங்கள மக்கள் சமாதானத்தை விரும்கின்றனர். அவர்கள் யுத்தத்தால் பாதிப்படைந்தவர்கள். பொருளாதாரத் தாக்கத்தை அனுபவிப்பவர்கள் மிகவும் சிறியதோர் தொகையினதான விடுதலைப்புலிகளை யுத்தத்தில் வெல்ல வேண்டுமென விரும்புகின்றனர். இவர்கள் கடும் போக்குடைய இனவாத சக்திகளாகும். பாதுகாப்புப்படையிலுள்ள கடும்போக்குடைய இனவாத சக்திகளும் இவர்களுக்கு உடந்தையாகவுள்ளனர். அரசியலில் செல்வாக்குள்ளவர்கள் இவர்களுக்குத் தார்மீக ரீதியில் உதவி வழங்கக் கூடும். அவர்கள் சிங்கள சமூகத்தின் நன்மைக்காக அல்லது தாம் சார்ந்த கட்சியின் நலனை மட்டும் கருத்திற் கொண்டவர்கள். எனவே சிங்கள சமூகத்திலுள்ள சமாதான விரோதிகளை இனங் கண்டு, அரசியல் ரீதியாகவும் சட்டரீதியாகவும், சமூக ரீதியாகவும் அவசர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய கடமை ஐக்கிய தேசியக் கட்சியைச் சார்ந்ததாகும்.

சமயத்தலைவர்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள், பல்கலைக்கழக ஆசிரியர்கள், புத்திஜீவிகள் மற்றும் சமாதானப் பிரியர்கள் இவ்விடயத்தில் தமது கருத்துக்களை வெளியிட்டு சமாதான விரோதிகளை ஓரங்கட்டுவதே சிங்கள சமூகத்தின் அவசரத் தேவை என்பதெ எமது கருத்து. யுத்தம் தொடருமானால், வடகீழ்ப் பிராந்தியப் பேரழிவு போல் சிங்களப் பிராந்தியங்களும் பேரழிவை எதிர்கொள்ள வேண்டியநிலை ஏற்படலாம். எனவே இந்த விடயத்தில் தற்போதைய அரசாங்கம் தேச நலன் கருதி மிகவும் துணிச்சலுடனும், தூரநோக்குடனும் செயலாற்றும்



என்பதே எமது எதிர்பார்ப்பு.

சமாதானத்தைக் குழப்பும் சக்திகள் இலங்கையில் மட்டுமல்லாது வெளிநாடுகளிலும் இருப்பதற்கு வாய்ப்பு உண்டு. தமிழினத்தைப் பூண்டோடு அழிக்க வேண்டும் என்ற கொள்கையுடைய வெளிநாட்டுச் சக்திகளும் உள்ளன. இவர்கள் சில வேளைகளில். உள்நாட்டுச் சக்திகளுக்கு நிதிஉதவியும் செய்யக்கூடும். இந்த வெளிநாட்டுச் சக்திகளை இனங் கண்டு அவற்றை உன்னிப்பாக அவதானிக்க வேண்டிய கடப்பாடு அரசைச் சாரந்ததாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருமொழி பிராந்தியங்களின் கூட்டாட்சி அமைக்கப்படுவது அவசியம்

இலங்கைத் தமிழர்கள் குறைந்தது 6500 வருடங்களாக சுதந்திரமாக வாழ்ந்து வந்தவர்கள் என்பது சரித்திர உண்மை. இந்த நீண்ட காலம் வரை தமிழ் வேந்தன் இராவணன் காலத்திலிருந்து சங்கிலியன் காலம் வரை உள்ளடக்கிய தாகும். இக்காலவரையறையை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். முதலாவது,இலங்கை முழுவதும் தமிழ் ஆட்சி நடைபெற்ற இராவணன் காலம். இரண்டாவது இலங்கையின் மூன்றில் இரண்டு பகுதியைத் தமிழர் ஆட்சி செய்த எல்லாளன் காலம். மூன்றாவதாக வட,கீழ் பிராந்தியத்தை ஆட்சி புரிந்த யாழ்பாண இராச்சியத்தின் கங்கிலியன் காலம்.

இன்றைய தமிழ் இனம், இராவணனின் காலம் தொடர்பாகவோ, எல்லாளனின் காலம் தொடர்பாகவோ சிந்திக்கவில்லை. அவர்கள் சிந்திப்ப தெல்லலாம் கடைசிக் காலகட்டத்தில் அதாவது, சங்கிலியன் காலத்தில் நாம் அனுபவித்த சுதந்திரம் தொடர்பானதாகும். யாழ்பாணத் தமிழ் இராச்சியம் தனது சுதந்திரத்தை சிங்கள சமூகத்தினரிடம் அடைவு வைக்கவமில்லை. யுத்தத்தில் பறி கொடுக்கவுமில்லை.

அன்றைய மேற்குலக வல்லரசான போர்த்துக்கேயரிடம் 1621 இல் யுத்தத்திற் தோல்வியடைந்தமையாலேயே தனது சுதந்திரத்தை இழந்தது. தமிழர் பிரதேசம் அதனைத் தொடர்ந்து ஒல்லாந்தரினதும், பிரித்தானியரதும் ஆதிக்கத்தின் கீழ் வந்தது. எனினும்,1833 வரை தமிழர் பிரதேசம் ஒரு பிரத்தியேகமான பகுதியாகவே ஒல்லாந்தராலும், பிரித்தானியராலும் அங்கீகரிக்கப்பட்டது.

1956 லிருந்து 1983 வரை இனக்கலவரங்களை எதிர்நோக்கிய தமிழ் இனம், 1983 இலிருந்து 2001 வரை இனப்படுகொலைக்கு முகங்கொடுத்தது. இவ்வாறான கொடுமைகளைச் சகித்துக் கொள்ள முடியாத தமிழ் இளைஞர்கள் சுதந்திரம் ஒன்றே தங்கள் தாகம் எனத் திடசங்கற்பம் பூண்டு 1974 இல் பிரபாகரன் தலைமையில் ஆயுதக் குழுவொன்றினை அமைத்தனர்.

தமிழ் இனப் படுகொலையைத் தொடர்ந்து 1983 இல் தமிழ்-சிங்கள சமூகங்
களிடையே பாரிய யுத்தம் மூண்டது. இந்த யுத்தத்தின் விளைவாக தமிழ்ப் பிரதேசம் பேரழிவுகளை எதிர்கொண்டது. 67,000 வரையினதான அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர். 17,500க்கு மேற்பட்ட விடுதலைப்புலிகள் வீர மரணத்தைத் தழுவினர். அவர்களது அற்புதத் தியாகத்தின் விளைவாகத் தமிழ்த் தாயகத்தில் மிகப்பெரியளவில் சுதந்திரமானதொரு ஆட்சி தோன்றிவிட்டது. அவர்கள் ஈட்டிய இராணுவ வெற்றிகள் உலகப் பிரசித்தி பெற்று விட்டன. இந்த வெற்றிகளை எண்ணி அகில உலகமுமே வியப்படைந்தது. முல்லைத்தீவம், கிளிநொச்சியும், அத்துடன் மன்னாரிலும், மட்டக்களப்பிலும், வவுனியாவிலும், திருகோணமலையிலும் கணிசமான பகுதிகள் அவர்களது இராணுவ ஆதிக்கத்தின கீழ் உள்ளது. எஞ்சிய தமிழ்ப் பகுதிகளில் அவர்களது அரசியல் ஆதிக்கத்தைக் காண முடிகிறது. புலிகளின் இராணுவப் பலம்-இராணுவத்தியாகம்- இராணுவ மதிநுட்பம், இராணுவ வியூகங்கள் உலகைக் கவர்ந்தன.

யுத்தத்தில் தமிழர்களை வெல்ல முடியாது என்ற நிலைப்பாட்டை அவதானித்த சர்வதேச சமூகமும், சிங்கள சமூகமும் சமாதானத் தீர்வு முயற்சி களுக்கு உடன்பட்டுள்ளன. அதற்குப் புலிகளின் ஒத்தாசையும் கிடைத்தது. அதன் பலனாக தற்காலிக யுத்த நிறுத்தம் ஏற்பட்டது. புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றும் கைச்சாத்திடப்பட்டது. நோர்வே அரசின் ஒத்துழைப்புடன் முதற் சுற்றுப் பேச்சுவார்த்தை வெற்றிகரமாக முடிவடைந்ததோடு, அண்மையில் நடைபெற்ற இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தையும் வெற்றி கண்டுள்ளது.

இன்று உலக வங்கி, ஆகிய அபிவிருத்தி வங்கி, அலுவலர்கள் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர்கள், பிரித்தானியா, கனடா, கிரீஸ், செஞ்சீனா, ஜப்பான் முதலிய நாடுகளின் பிரதிநிதிகள் வன்னி சென்று விடுதலைப்புலிகளின் அரசியல் துறைத் தலைவரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்துகின்றனர். இந்தச் சம்பவங்களிலிருந்து ஒரு முக்கிய விடயத்தை அறிந்து கொள்ள முடிகின்றது. அதாவது, சுதந்திரமான அரசாங்கமொன்றுக்குத் தேவையான சகல அம்சங்களு முடனான ஆட்சியொன்று தமிழ்ப் பிரதேசத்தில் திறமையாக நடைபெறுவதனை அவர்கள் கண்டுகொண்டனர்- உணர்ந்துவிட்டனர். இந்த யதார்த்த நிலையை இப்போது சிங்கள சமூகமும் ஏற்றுக் கொண்டு விட்டது. சுருக்கமாகச் சொல்வதானால் தமிழ்ப் பிரதேசத்தில் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பகுதிகளில் சுதந்திரமான தொரு அரசாங்கம் (DE - Facto) government) இயங்குகின்றது.

இந்த அரசாங்கத்துக்குச் சட்ட ரீதியான இராஜதந்திர அடிப்படையிலான சர்வதேச அங்கீகாரமும் இன்னும் வழங்கப்படவில்லை.அதற்கு முக்கியமான சில காரணங்கள் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்ட ரீதியான சர்வதேச அங்கீகாரம் கொடுக்கப்பட்டால், சர்வதேச சமூகம் இலங்கையில் பிரிவினையை ஏற்றுக் கொள்வதாக அமைந்து விடும். அத்துடன், இலங்கையில் இரண்டு சுதந்திரமான அரசாங்கங்கள் இயங்குகின்ற நிலையை ஏற்றுக் கொள்கின்றதாக அமைந்து விடும். சர்வதேச சமூகம் குறிப்பாக மேற்குலக நாடுகள் பிரிவினையை ஏற்றுக்கொள்வதில்லை. மேலும் சட்ட பூர்வமாக இரண்டு சுதந்திர அரசாங்கங்கள் இயங்குவதையும் அவை விரும்ப வில்லை.

சர்வதேச சமூகத்தின் இவ்வாறான நிலைப்பாட்டில் தமிழ் இனம் தனது சுதந்திரத்தாகத்தை எவ்வகையில் நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்ற கேள்வி எழுகின்றது. இரண்டாம் சுற்றுச் சமாதானப் பேச்சுவார்த்தையின் போது மூன்று உபகுழுக்கள் உருவாக்கப்பட்டன. புனர்வாழ்வு, புனரமைப்பு-புனர்நிர்மாணம் தொடர்பான விடயங்களை கவனிப்பதற்கு ஒன்றும், அரசியல் விவகாரம் தொடர்பாக ஒன்றும், இராணுவ விவகாரம் மற்றும் அதியுயர் பாதுகாப்பு வலய விவகாரம் தொடர்பாக ஒன்றுமாகும்.

இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தை என்பதை நாம் நம்பலாம். இதனை அரசியல் மொழியில் "கூட்டு ஆட்சிச் சம்மேளனம்" என்று கூறலாம். இலங்கையில் தமிழ் பேசும் பிராந்தியமும், சிங்களம் பேசும் பிராந்தியமும் ஒன்றிணைந்து ஒரு சகதியற்ற வலுவற்ற மத்திய அரசொன்றை உண்டாக்கலாம். இரண்டு மொழி பேசும் பிராந்தியங்களும் சக்தியுள்ள பூரண நிறைவு பெற்ற அரசாக இயங்க வேண்டும். இது சமஷ்டி முறையல்ல. சமஷ்டி முறையில் எத்தனையோ வகைகள் உள்ளன. நிறைவு பெற்ற சமஷ்டி அங்கங்களும், நிறைவு பெறாத சமஷ்டி அங்கங்களும் உள்ளன. இந்தியாவில் நிறைவு பெறாத சமஷ்டி முறையை அவதானிக்கலாம்.

கனடாவிலும், அமெரிக்காவிலும் ஏறத்தாழ ஒரே விதமான சமஷ்டி முறையைக் காண முடிகின்றது. சுவிஸ்சர்லாந்தில் ஒரு படி முன்னேறிச் சென்று அதிக பட்ச நிறைவு பெற்ற சமஷ்டி முறை இருக்கின்றது. இலங்கையில் தமிழர்களைப் பொறுத்தவரையில் இந்த நாடுகளின் சமஷ்டி முறைகளின் மூலம் தமிழ் இனத்தின் அபிலாஷைகளை அடைய முடியாது. ஏனெனில், தமிழர்களின் பின்னணி முற்றிலும் வேறுபட்டது. வேறுபட்ட அரசியல் அமைப்பு உருவாக வேண்டும். அதனாலேயே பூரண சக்தியுள்ள நிறைவு பெற்ற இரு மொழிப் பிராந்திய கூட்டாட்சி அமைக்கப்படுவது அவசியமானதாகும்.



## பங்களாதேஷ், இந்தியா அனுபவங்கள் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குப் பொருத்தமானதல்ல!

இக்கூட்டாட்சிச் சம்மேளனம் தொடர்பாக சற்று ஆழமாகச் சிந்திப்பது அவசியம். இந்தக் கூட்டாட்சி சம்மேளனத்தில் மத்திய அரசு சக்தி குறைந்ததாக அமைதல் வேண்டும். வெளிவிவகாரத்துறை மற்றும் நாணயத்துறை இரண்டினையும் அதற்கு வழங்கலாம். தமிழரின் பாதுகாப்பு தமிழ்ப் பிராந்தியத்துக்கே உரித்தானது. எனவே, விடுதலைப்புலிகளின் இன்றைய இராணுவத்தை எந்தச் சந்தர்ப்பத்திலும் எந்தச் சூழ்நிலையிலும் கலைத்தலாகாது. தமிழர் பாதுகாப்பு தமிழர் வசமே இருத்தல் வேண்டும். இன்றைய பிரதமரைத் தமிழர் நம்பலாம். ஆனால், நாளைய பிரதமர் எப்படி நடப்பார் என்பதை யார் அறிவார்?

85 வருடங்களாக ஏமாற்றப்பட்டவர்கள் தமிழர் என்பதை மறந்து விடுதலாகாது. அதற்காகவே இன்றைய தமிழர் இராணுவம் தொடர்ந்தும் தமிழர் கைகளில் அநேக வருடங்களுக்கு இருத்தல் வேண்டும். மற்றும் கல்வி, கைத் தொழில், காணி, காணி அபிவிருத்தி,கடற்றொழில், துறைமுகங்கள், விமானத்தளங்கள் யாவும் கூட்டாட்சிப் பிராந்தியங்களுக்கே உரித்தானதாக இருத்தல் வேண்டும்.

பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் புதிய அரசியல் அமைப்பை உருவாக்குவதற்கு இந்தியாவும், கனடாவும் தங்கள் நிபுணத்துவத்தை வழங்கத் தயாராகவுள்ளதாகக் குறிப்பிட்டிருந்தார். தமிழர்களைப் பொறுத்தவரையில் இந்திய நிபுணத்துவம் தேவையற்றது. அவர்கள் தங்கள் நாட்டு அனுபவத்தையே எம் மீதும் திணிக்க முனைவார்கள். இந்திய அரசியல் அமைப்பு நிறைவு பெறாததோர் சமஷ்டி அமைப்பாகும். இலங்கை அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தம் இந்திய நிபுணத்துவத்தின் சிருஷ்டிப்பாகும். அது படுதோல்வியடைந்தது யாவரும் அறிந்ததே. எனவே, இந்திய நிபுணத்துவத்தை நாம் ஏற்றுக் கொள்ளலாம். ஏனெனில், கனடா ஒரு சமஷ்டி நாடாக இருந்தாலும் மக்களின் தீர்ப்புக்குத் தலை வணங்கும் நாடு அது. உதாரணமாக பிரெஞ்சு மொழி பேசும் கனடாக்காரர்களின் பிராந்தியமாகிய குயிபெக் மக்களில் பெரும்பான்மையானோர் பிரிந்து செல்வதற்கு வாக்களிப்பார்களேயாகில், அந்த வாக்களிப்பை மதித்து நிச்சயமாகக் கனடா செயற்படும். அடுத்ததாக கனடாவில் சமஷ்டி முறை இருப்பதனால் பாதுகாப்பு மத்திய அரசின் கீழேயே உள்ளது. மாகாணங்களைச் சார்ந்ததல்ல. இந்த நிலைப் பாட இங்கு முரண்பாடானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மக்களின் பாதுகாப்பு முக்கிய இடத்தை வகிப்பதனால் இராணுவத் துறை தமிழர் கையிலேயே இருத்தல் வேண்டும். அடுத்து, எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் சட்டம், ஒழுங்கு காரணமாகவோ பிராந்திய சட்ட சபைகளை கலைக்கும் அதிகாரத்தினை மத்திய அரசாங்கத்திற்கு இல்லாமற் செய்தல் வேண்டும். எவ்வித விவகாரங்களிலும் தலையிடாக் கொள்கையையே மத்திய அரசாங்கம் கடைப் பிடித்தல் வேண்டும். எனவே கனடாவின் நிபுணத்துவத்தைப் பெற்று தமிழர்கள் விருப்பங்களுக்கு ஏற்ற வகையில் அரசியல் சட்ட நுணுக்கங்களை அவர்கள் தயார் செய்யலாம்.



# 15

## சமாதானத்தை குழப்ப முயற்சிப்போருக்கு கடும் எச்சரிக்கை விடுப்பது சர்வதேச சமூகத்தின் பொறுப்பு

இருபது வருட யுத்தத்தின் விளைவுகளையும் அதன் தாக்கங்களையும் அதன் பிரதிபலிப்பாக சர்வதேச சமூகத்தின் நிலைப்பாடு தொடர்பாகவும் சிந்திக்க வேண்டிய அவசியம் எழுந்துள்ளது. சமாதானத்தைக் குலைக்க எத்தனிப்பவர்கள வெளிப்படுத்தும் குற்றச்சாட்டுக்களை இனங்கண்டு அவற்றின் உண்மை நிலையையும் ஆராய வேண்டியுள்ளது. அக் குற்றச்சாட்டுக்கள் உண்மையற்றவை என்று நிரூபிக்கப்படும் பட்சத்தில் அக் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியவர்கள் மீது எவ்வாறான அழுத்தங்களைச் சர்வதேச சமூகம் கொடுக்க வேண்டும் என்பதனை ஆராய்வது நம் கடமையாகும்.

இரு தேசிய இனங்களுக்கிடையிலான யுத்தம் தமிழ்ப் பிரதேசங்களில் இருபது வருடங்களாக நடைபெற்றது. தென் இலங்கையிலும் சில சமயங்களில் குண்டு வெடிப்புக்கள் நடைபெற்று அப்பாவிப் பொதுமக்கள் மரணமடைந்தும் உள்ளனர். பிந்திய மதிப்பீட்டின் பிரகாரம் எண்பதாயிரம் வரையினதான அப்பாவித் தமிழ் மக்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர். இது இலங்கைத் தமிழர்களின் சனத் தொகையில் மூன்று வீதத்துக்கு மேலானதாகும். இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது வெளிநாட்டு ஆக்கிரமிப்பால் வியட்னாமும் அதே சதவீதமான பொது மக்களை இழந்தது. ஆனால், இலங்கைத் தமிழர் உள்நாட்டு யுத்தத்தில் மூன்று வீதத்திற்கும் மேலான அப்பாவிப் பொதுமக்களை இழந்தனர். யுத்தம் காரணமாக வடகீழ்ப் பிராந்தியத்திலிருந்து வெளிநாடுகளுக்கும் தென் இலங்கைக்கும் அகதிகளாகச் சென்ற தமிழ் மக்களின் தொகையை இலங்கைத் தமிழர் சனத் தொகையிலிருந்து கழித்துப் பார்க்கும் போது இறந்த தமிழ் மக்களின் தொகை ஏழு வீதத்திற்கும் அதிகமானதாகும். இது உலகிலேயே தாயக விடுதலைக்காக உயிர் விடுத்த ஆகக் கூடிய இழப்பாகும். மேற்குறிப்பிட்ட புள்ளி விபரத்தில் தாயக மீட்புக்காக தம்முயிர்நீத்த ஆயுதந் தரித்த விடுதலைப் புலிகளின் தொகை உள் ளடக்கப்படவில்லை. அவர்களின் தொகை 17,643 என மதிப்பிடப் படுகின்றது.

சிங்கள சகோதர சமூகத்தின் இழப்புக்கள் தொடர்பாகச் சிந்திக்கும் போது சிங்களப் பொதுமக்களின் இழப்புப் பங்கான 01% என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் புள்ளி விபரங்களிலிருந்து இரண்டு உண்மைகள் புலனாகின்றன. ஒன்று இராணுவம் தமிழ் இன ஒழிப்புக் கொள்கையை நிறைவேற்றும் பொருட்டு அப்பாவித் தமிழ் மக்களை இலக்காக வைத்துச் செயற்பட்டமை. அடுத்தது, விடுதலைப் புலிகள் சிங்களப் பொதுமக்களை இலக்காக வைத்துச் செயற்படாமையாகும். என்பதாகும். சிங்கள இராணுவத்திலும் 15,000-16,000 வரையானோர் மரணமடைந்தனர்.

தமிழ்ப் பிரதேசங்களில் இந்த யுத்தம் நடைபெற்றமையால் கடும்போக்கான சிங்கள இராணுவம், தமிழ்ப் பொதுமக்களை மாத்திரமல்லாது, வளங்களை அழிப்பதனையும் தமது இலக்காகக் கொண்டிருந்தனர். பொருளாதார வளம் மாத்திரமல்லாது கல்வி, கலாச் சார வளங்களும் அழிக்கப்பட்டன. உலகின் ஏனைய நாடுகளில் நடைபெற்ற யுத்தங்களில் பாடசாலைகள், மத வழிபாட்டுத் தலங்கள் தாக்குதலுக்குள்ளாக்கப்படவில்லை. ஆனால் தமிழர் பிரதேசங்களில் பாடசாலைகள், கோவில்கள், தேவாலயங்கள் போன்ற சகல வளங்களும் சேதத்துக் குள்ளாக்கப்பட்டன. உதாரணமாக யாழ் குடா நாட்டில் மாத்திரம் 17 சத வீதமான பாடசாலைகளும் ஒன்றரை இலட்சம் வீடுகளும் சேதமாக்கப்பட்டன. ஆனால் தென் இலங்கையில் ஒரு வீடோ அல்லது பாடசாலையோ சேதமாக்கப்படவில்லை. குண்டுத் தாக்குதலின் போது மத்திய வங்கியும், கண்டியில் தலதா மாளிகையும் சேதமடைந்தன. இந்த உண்மை நிலையை எனது சிங்கள சகோதரர்களும் சர்வதேச சமூகமும் அறிந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியமானதாகும்.

இந்த யுத்தத்தின் தாக்கத்தை அறிந்து கொண்ட சர்வதேச சமூகம் சமாதானத் தீர்வொன்றுக்கு மத்தியஸ்தம் வகிக்க முன் வந்தமை யாவரும் அறிந்ததே. சமாதான முயற்சிகளில் அனுபவமும், முதிர்ச்சியும் கொண்ட நோர்வே அரசாங்கத்தின் உதவியை ஜனாதிபதி கோரியிருந்தமையால், நோர்வே அரசும் இம் முயற்சிக்கு உதவ முன் வந்தது. நோர்வே, அரசாங்கத்தின் பிரதிநிதியாக எரிக் சொல்ஹெய்ம் இம் முயற்சியில் ஈடுபட்டார். காலப் போக்கில் அவர் விடுதலைப் புலிகளுக்குச் சார்பாகச் செயற்படுகின்றார் என முன்னைய வெளிவிவகார அமைச்சர் கதிர்காமரின் குற்றச்சாட்டின் மூலம் ஓரம் கட்டப்பட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தை அமைத்ததன் பின்னர் நோர்வே மீண்டும் முழு மூச்சுடன் செயற்படத் தொடங்கியது. இந்தப் பணிக்கு நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் தலைமை தாங்கினார். அதன் பலனாக கடந்த டிசம்பர் மாதம் 24 ஆந் திகதி ஒருதலைப்பட்சமாக யுத்த நிறுத்தம் விடுதலைப் புலிகளாற்



பிரகடனப்படுத்தப்பட்டது. அதற்கு ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமும் உடன்பட்டு அரசாங்கமும் யுத்த நிறுத்ததை நோர்வே, டென்மார்க் மற்றும் சுவீடன் நாட்டு உறுப்பினர்கள் பாரபட்சமற்ற முறையிற் கண்காணித்து வருகின்றனர். அதனைத் தொடர்ந்து நோர்வேயால் தயார் செய்யப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்த மொன்றில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் பிரபாகரனும் கையொப்பமிட்டனர். அந்த ஒப்பந்தம் அமுலில் இருந்து வருகின்றது.

சமீபத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த பிரமுகர்களால் பத்திரிகை மாநாடொன்று நடாத்தப்பட்டது.

அம் மாநாட்டில் முக்கிய பங்கு வகித்த முன்னாள் வெளிவிவகார அமைச்சரான கதிர்காமர் ஜனாதிபதியின் கருத்தையே தாம் முழுமையாக வெளிப்ப

டுத்துவதாக ஆரம்பத்திலேயே குறிப்பிட்டார். அவரது, கருத்துக்களை அலசிப் பார்க்கையில் அவர் முதிர்ச்சியடையாத ஒரு அரசியல் அவதானி என்ற நிலைப்பாட்டுக்கு வர வேண்டிய நிர்ப்பந்தம் எமக்கு ஏற்பட்டுள்ளது. அவர் வெளிப்படுத்திய சகல விடயங்களும் உண்மைக்குப் புறம்பானவை என்பதே எமது ஆணித்தரமான கருத்து. நோர்வே சமாதானக் குழு விடுதலைப்புலிகளுக்குச் சார்பாக நடந்து கொள்வதாகவும், அதனால் ஜனாதிபதி விரக்தியடைந்திருப் பதாகவும் கதிர்காமர் குறிப்பிட்டிருந்தார். அது மாத்திரமல்லாது அவர்களாற் தயார் செய்யப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் விடுதலைப்புலிகளுக்கு மிகவும் சார்பாக அமைந்துள்ளதாகவும், அதன் மூலம் இராணுவம் கஷ்டமான நிலைக்கு உள்ளாக்கப்பட்டிருப்பதாகவும் குற்றஞ்சாட்டியிருந்தார். ஆனால் எந்தெந்த விடயங்களில் நோர்வே சமாதானக்குழு விடுதலைப்புலிகளுக்குச் சர்பாகச் செயற்படுகின்றது என்ற விபரங்களை அவர் குறிப்பிடவில்லை. எம்மைப் பொறுத்த வரையில், நோர்வே சமாதானக் குழு இதுவரையில் நடுநிலை பிறழாது செயற் படுகின்றது. பேச்சு வார்த்தை முன்னேற்றங்கள் தொடர்பாக நோர்வேத் தூதுவர் ஜனாதிபதிக்கும், இந்திய அரசுக்கும் விபரமாக எடுத்துக் கூறி வருகின்றார். இதனை விட வேறு என்ன செய்ய வேண்டும்?

## "வட கிழக்கு புனர் நிர்மாணத்தை கதிர்காமர் எதிர்க்கிறாரா?"

நோர்வேயின் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் சில அம்சங்கள் விடுதலைப் புலிகளுக்கும், தமிழ் மக்களுக்கும் கூடப் பாதகமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்துள்ளது என்ற காரணத்திற்காக அவர்கள் மீது குற்றச்சாட்டுக்களைச் சுமத்த நாம் முனையவில்லை. அந்த ஒப்பந்தத்தில் இராணுவத்தினர் பாடசாலைகள், ஆலயங்கள், பொதுக் கட்டிடங்களிலிருந்து விலக்கப்பட வேண்டும் என்றுதான் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், அவ்விதம் விலகிக் கொள்ளும் இராணுவத்தினர் அந்த இடங்களிலிருந்து குறைந்தது ஒரு மைல் எல்லைக்குள் நிலை கொள்ளக் கூடாது எனக் குறிப்பிடப்பட் வில்லை. இதனை ஓர் மாபெரும் தவறாகவே நாம் கருதுகிறோம். பாடசாலைகள், ஆலயங்கள், பொதுக் கட்டிடங்களிலிருந்து விலகிய இராணுவத்தினர் அந்தந்த இடங்களுக்கு முன்னாலேயே நிலைகொண்டு விட்டனர். இது தான் இன்றைய யதார்த்த நிலை. இதனால் பொது மக்களும், மாணவ மாணவிகளும், ஆசிரியர்களும் பழைய கஷ்டங்களையே அனுபவித்து வருகின்றனர். அடுத்ததாக, இராணுவத்தினர் அதியுயர் பாதுகாப்பு வலயங்களின் பரப்பளவு குறைக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிடப்படவில்லை. அப்படிக் குறிப்பிடப்பட்டிருந்தால் இன்று கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்க முடியாது. எனவே, எம்மைப் புலிகளுக்கோ சாதகமானதாக இல்லை. எனவே, கதிர்காமரின் கூற்று உண்மைக்குப் புறம்பானதாகும். இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம், எவ் வகையான கஷ்டங்களை அரச படையினர் எதிர்நோக்குகின்றனர். என்பதையும் அவர் விபரமாகக் குறிப்பிடவில்லை. இவ்வாறான அவரது கூற்றுக்கள் தான் இராணுவத்தினரின் மன நிலையைக் குழப்பும் என்பதே எமது குற்றச்சாட்டு. இவ்வாறான கூற்றுக்கள் சமாதானத்துக்குப் பாரிய அச்சுறுத்தலாக அமையலாம்.

கதிர்காமர் நோர்வே அரசாங்கத்தை மாத்திரமல்லாது அமெரிக்கா, பிரித்தானியா,கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளையும் கடுமையாச் சாடியுள்ளார். இம்மாதம் 25 ஆம் திகதி நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் பேரழிவை எதிர்நோக்கிய வட,கீழ்ப் பிராந்தியத்துக்கான புனர்நிர்மாணம்-புணர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளுக்குத் தேவையான நிதியுதவியை சர்வதேச சமூகத்திடமிருந்து பெற்றுக் கொள்வதற்காக நடைபெறவிருக்கும் மாநாட்டில் இலங்கை அரசாங்கம் மாத்திரமல்லாது விடுதலைப் புலிகளும் இணைந்து விடுதத வேண்டுகோளின் காரணமாக பல மேற்குலக நாடுகளின் உயர் மட்டத் தலைவர்கள் கலந்து கொள்ள ஆர்வமாகவுள்ளனர்.

மேற்குலக நாடுகளின் இவ்வாறான உணர்வைச் சகித்துக் கொள்ள முடியாது போன்று கதிர்காமர் தடை செய்யப்பட்ட பயங்கரவாத இயக்கமான விடுதலைப்புலிகள் அரசாங்கத்துடன் சம அந்தஸ்துப் பெற்று



ஒஸ்லோ மாநாட்டில் தம்மைத் தடை செய்த அரசாங்கங்களின் பிரதிநிதிகளுடன் கைகுலுக்கி எவ்விதம் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடலாமென்ற பாரிய குண்டொன்றையும் போட்டுள்ளார். அவரின் இந்தக் கூற்றின் மூலம் மூலம் உண்மைகள் வெளியாகியுள்ளன. முதலாவது அவரது முதிர்ச்சியின்மை. இரண்டாவது சமாதானத்தையும் வட,கீழ் தமிழ்ப் பிராந்தியம் புனர்நிர்மாணம் செய்யப்டுவதனையும் அவர் எதிர்க்கின்றார் என்பது, மூன்றாவதும் முக்கியமானதும் தான் வெளிவிவகார அமைச்சராகப் பதவி வகித்த கால வரையில் நாடு நாடாகச் சென்று விடுதலைப்புலிகள் அழிக்கப்பட வேண்டும் என்ற குறிக்கோளில் பிரசாரங்களை மேற்கொண்டு, அதன் பிரதிபலிப்பாக விடுதலைப் புலிகளைத் தடை செய்த பிரித்தானியா,அமெரிக்கா, கனடா போன்ற நாடுகள் இன்று உண்மை நிலையை உணர்ந்து விடுதலைப் புலிகள் சமாதானப் பிரியர்கள் என்பதைக் கண்டு அழிவுக்குள்ளான அவர்களது பிரதேசத்தைப் புனர் நிர்மாணம் செய்ய வேண்டுமென்ற நோக்குடன் நிதி உதவி வழங்குவதற்காக ஒஸ்லோ மாநாட்டுக்கு வருகை தரவுள்ளனர். விடுதலைப்புலிகளுடன் சினேகபூர்வமான பேச்சுவார்த்தைகளை நடாத்தவுள்ளனர். இதன் விளைவாக இந்த நாடுகள் புலிகள் மீது தாம் விதித்திருந்த தடைகளை அகற்றவும் கூடும் என்ற அச்சம் காரணமாகவும், ஜதனது பிரச்சாரம் எல்லாம் புஸ்வாணம் ஆகிவிடுமோ என்ற தவிப்பிலும் கதிர்காமர் சொல்வது என்ன என்று தெரியாது திணறுகிறார்.

யுத்தத்தின் மூலம் சமாதானம் காண முடியாது என்ற கொள்கையில் தான் நம்பிக்கை வைத்திருப்பதாகக் கூறும் அவரது செயற்பாடு, யுத்தத்தை நடாத்துவதனையும், புலிகளை அழிப்பதனையுமே குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

இவர் வெளிவிவகார அமைச்சராக இருந்த சமயத்தில் இலங்கை ஆகாயப் படை வட இலங்கையைக் கடுமையாகத் தாக்கியது. அந்தத் தாக்குதல் தொடர்பாக இந்தியத் தூதுவரும் அமெரிக்கத் தூதுவரும் தமது வன்மையான கண்டனங் களைத் தெரிவித்திருந்தனர். அவர்களது கண்டனங்கள், தேவையற்ற கண்டனங்கள் எனக் கதிர்காமர் விமர்சித்தார். தான் ஒரு யுத்தப் பிரியன் என்பதனை அவா மூலம் வெளிப்படுத்தியிருந்தார்.

அரசியல் தீர்வுக்கு சமஷ்டி முறையே சிறந்தது என்றும் கூட்டாட்சி அரசியலமைப்பைத் தாம் கடுமையாக எதிர்ப்பதாகவும் கூறியிருந்தார். ஆனால் அரசியலில் முதிர்ந்தவரான ரொனி டீ மெல், இலங்கை பிளவுபடாமல் இருப்பதற்கு கூட்டாட்சிதான் தேவையெனக் கொள்வோம். அதற்கு ஆதரவாக இருப்போம் என்றும் கூறியிருந்தார். கதிர்காமர் சமஷ்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையை ஆதரிப்பதற்கான காரணம் சமஷ்டி முறையில் இராணுவத்தைத் தமிழ்ப் பகுதிகளில் அதிகளவில் குவிக்க முடியும் என்பது மாத்திரமல்லாது தமிழ்ப் பகுதியில் ஆதிக்கம் செலுத்தவும் முடியும் என்பதே.

கதிர்காமர் எந்தச் சமூகத்தைப் பிரதிநிதித்துவம் செய்கின்றார் என்பது முக்கியமானதோர் கேள்வியாகும். அவரின் பேச்சுக்களும், செயற்பாடுகளும் கடும் போக்குடைய சிங்கள அரசியல் கட்சியொன்றின் போக்கைப் போல அமைந்துள்ளது. இக்கேள்வியைச் சிலர் அவரிடம் கேட்ட போது, தான் தமிழர்களையோ, சிங்களவர் களையோ பிரதிநிதித்துவம் செய்யவில்லையெனவும், இலங்கைச் சமுதாயத்தை மாத்திரமே பிரதிநிதித்துவம் செய்வதாகவும் கூறியிருந்தார். இவ்வாறான உன்னத கொள்கை கொண்டவர் என்ன காரணங்களுக்காக பாதுகாப்புடனாவது வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், மன்னார் போன்ற இடங்களுக்குச் செல்லத் தயங்குகின்றார் என்பது விந்தையாகவுள்ளது. ஆனால், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இன்று பாதுகாப்பு இல்லாது முல்லைத் தீவு-கிளிநொச்சி-யாழ்ப்பாணம் முதலிய இடங்களுக்கும் போய்வரலாம் என்பது எமது கருத்து.

மேற்குறிப்பிடப்பட்ட விடயங்களைச் சர்வதேச சமூகம் அவதானித்து, சமாதானத்தைக் குழப்ப எத்தனிப்பவர்கள் என்ன அந்தஸ்த்தில் இருந்தாலும், அவர்களுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் கடும் எச்சரிக்கை கொடுப்பது மிக மிக அவசியமானதாகும். போர் மீண்டும் வெடிக்குமானால், அதற்குச் சிங்கள சமூகம் காரணமாக இருக்குமானால் இலங்கை அரசாங்கத்துக்குத் தார்மீக ரீதியிலோ, அரசியல் ரீதியிலோ, இராணுவ ரீதியிலோ, பொருளாதார ரீதியிலோ ஆதரவு தர மாட்டோம் என்று ஆணித்தரமாகச் சமாதானப் பிரியர்கள் சர்வதேச சமூகத்திடமி
ருந்து எதிர்பார்க்கின்றனர்.



# தமிழ்ப் பிராந்தியத்துக்கான பாதுகாப்புப் பொறுப்பை தமிழரிடமே விட்டுவிடுவது அவசியத்தேவை

தமிழினத்தையும், தமிழ் மண்ணையும் காப்பாற்றுவதற்கு இன்றைய தமிழர் இராணுவம் தமிழர் வசமே இருப்பது மிகமிக அவசியமாகும். இதைச் சர்வதேச சமூகம் நன்கு உணரவேண்டும்.

இலங்கையில் தமிழர் வரலாறு 6,500 ஆண்டுகளுக்கு மேற்பட்டதாயின் சிங்கள சமூகத்துடன் தொடர்பு ஏற்பட்டது. எல்லாளனுடைய காலமென்று பொதுவாகக் கருதலாம். ஏனெனில் தமிழ் வேந்தனாகிய இராவணன் காலத்தில் சிங்கள சமூகம் இலங்கையில் வேரூன்றவில்லை. ஆனால், எல்லாளன் காலத்தில் 2/3 இலங்கையின் பகுதியை அவன் ஆட்சி புரிந்த காரணத்தினால் தமிழர் ஆட்சியை அகற்ற வேண்டுமென்று துட்டகைமுனு தமிழ் மன்னருடன் போருக்கு ஆயத்தம் செய்து மலையகமூடாக அநுராதபுரம் வந்து சேர்ந்தான். எல்லாளன் அறிவிலும் வயதிலும் முதிர்ச்சியடைந்த காரணத்தினால் தமிழ் இராணுவத்தை சிங்கள இராணுவத்துடன் மேதவிடாமல் தவிர்த்துத் தானும் துட்டகைமுனுவம் மட்டும் நேருக்கு நேர் மோதவேண்டுமென்று போர் புரிந்தான். இப்போரில் வயதில் முதிர்ந்த எல்லாளன் இளைஞனான துட்டகைமுனுவுடன் மோத முடியாமல் தோல்வியுற்றுக் கொல்லப்பட்டான்.

இதுதான் முதற் பதியப்பட்ட சிங்கள-தமிழ் மோதல் என்று வர்ணிக்கலாம். காலப்போக்கில் அநுராதபுரத்தையும் பொலனறுவையையும் தமிழ் மன்னர்கள்(சோழ பாண்டிய இராச்சியம்) கைவிட்ட வடக்கில் யாழ்ப்பாண இராச்சியம் உருவாகியது. இதன் உச்சநிலையில் வடகீழ் பிராந்தியம் மட்டுமல்ல கடலாதிக்கத்தில் பாணந்துறை வரையிலும், தரையாதிக்கத்தில் கம்பளை வரையுமிருந்ததாகச் சொல்கிறார்கள்.

ஆனால், 15ஆம் நூற்றாண்டில் கோட்டே இராச்சியத்தின் மன்னனான புவனேகபாகு காலத்தில் யாழ்ப்பாண இராச்சியம் சிங்கள காலத்தில் அகப்பட்டு விட்டது. ஆனால் சிங்களவருடைய ஆதிக்கம் 6,500 வருட சரித்திரத்தில் 14 வருடங்கள் மாத்திரமே இருந்தது. ஆகவே இதுதான் தமிழருக்கும் சிங்களவருக்கு மேற்பட்ட தொடர்பு. 17ஆம் நூற்றாண்டில் (அதாவது 1621ஆம் ஆண்டு) தமிழர் இராச்சியத்தை போர்த்துக்கேயர் கைப்பற்றினார்கள். ஆகவே, தமிழர்கள் தங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரத்தையும் இறையாண்மையையும் சிங்கள சமூகத்திற்கு அடகு வைக்கவில்லை அல்லது சரணாகதி அடையவில்லை.

போர்த்துக்கேயர் ஆட்சிக்குப் பின்பு ஒல்லாந்தர் ஆட்சியும் பிரித்தானிய ஆட்சியும் தமிழர் பகுதியை ஆண்டன. 1833ஆம் ஆண்டு வரை தமிழ்ப் பிரதேசம் ஒரு பிரத்தியேகமாகவே ஆளப்பட்டது. அதன் பின்பு பிரித்தானிய ஒற்றையாட்சித் திட்டத்தின் கீழ் தமிழினம் சிங்கள இனத்துடன் இணைக்கப்பட்டு ஆளப்பட்டு வந்தது.

ஆகவே, 1621இலிருந்து 1948ஆம் ஆண்டு வரை தமிழினம் அடிமை வாழ்வாகவே வாழ்ந்தது. என்றாலும் மேற்கத்திய அந்நிய ஆட்சியின் காலத்தில் தமிழர்கள் நீதி, நேர்மை, திறமை அடிப்படையில் சகல துறைகளிலும் சிங்களவர்களிலும் பாாக்க முன்னேறியிருந்தார்கள். இந்நிலைமை விசேடமாகக் கல்வித்துறையில் காணப்பட்டது. ஆனால், பிரித்தானியா, இலங்கைக்குச் சுதந்திரம் வழங்கிய பொழுது தமிழ்ப் பிரதேசத்துக்குத் தனியாகச் சுதந்திரம் வழங்கப்படாமல் அதையும் சிங்கள சமூகத்துக்குத் தாரைவார்த்துவிட்டது. இந்த விடயத்தில் தமிழ் மக்களுடைய விருப்பத்தை ஒரு மக்கள் வருப்பு மூலம் அறிந்திருக்க வேண்டும. இது பிரித்தானியா செய்த பெருந்தவறாகும்.

அண்டை நாடான இந்திய உபகண்டத்தில் சரித்திரத்தில் பாக்கிஸ்தான் என்ற நாடு இல்லாதிருந்த போதிலும் பிரித்தானியா முஸ்லிம்களுக்கு ஒரு சுதந்திர பாகிஸ்தானை உருவாக்கியது. ஆனால், இலங்கையில் அநேக ஆயிரமாண்டுகளாக சுதந்திரத்தையும் இறையாண்மையையும் அனுபவித்த தமிழர்களை சிங்களவர்களிடம் அடிமையாக்கிவிட்டது.

## அபிலாஷைகளை நிறைவேற்றக் கூடிய அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும்

இந்த விரும்பத்தகாத செயலினால் 1948ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரையும் தமிழினம் அடிமையாகவே வாழ்கின்றது. கிழக்குத் தமிழ்ப் பிரதேசத்தில் கணிசமான காணி சிங்களவரின் ஆதிக்கத்துக்குட்பட்டுவிட்டது. ஆரம்பத்தில் 2 வீதமாக இருந்த சிங்களவர்கள் அரச நீதியற்ற செயற்பாட்டினால் இன்று 30 வீதத்துக்கு மேல் உயர்ந்துவிட்டது. சகல துறைகளிலும் தமிழர்கள் ஓரங்கட்டப்பட்டு விட்டனர். பாதுகாப்புப் படையினரில் தமிழர்கள் 1/2 வீதம் கூட இல்லை. 1956 ஆம் ஆண்டிலிருந்து 2001 ஆம் ஆண்டு வரை தமிழர்கள் இனக் கலவரங்களை எதிர்கொண்டதுமட்டுமல்லாமல் 1983இலிருந்து 2001ஆம் ஆண்டு வரை இனப்படுகொலைகளையும் எதிர்கொண்டனர்.

1983இல் தமிழ், சிங்கள இனமோதல்கள் ஏற்பட்டு அதன் விளைவாக 7% அப்பாவித்தமிழர்கள் கொல்லப்பட்டனர். இது உலகின் உள்நாட்டு யுத்தங்களில் அதிக உயிர்களைப் பலியெடுத்த ஒரு நிகழ்வாகும். தமிழ்ப் பிரதேசத்தில் சகல வளங்களும் சிங்கள இராணுவத்தினரால் சீரழிக்கப்பட்டும் சேதமாக்கப்பட்டுமுள்ளன. இந்தப் பேரழிவில் பாடசாலைகளும், மதத்தலங்களும் விலக்கப்படவில்லை. இப்படியான கொடூர சம்பவங்களில் உலகில் இலங்கைதான் முதலிடத்தைப் பெற்று நிற்கின்றது.

இவ்விதமான கொடிய சம்பவங்களுக்கெதிராக தமிழ் இளைஞர்கள் தமிழ்ப் பெண்களின் மானத்தைக் காப்பாற்றும் பொருட்டும், தமிழ் மண்ணைக் காப்பதற்கும், தமிழ்ச் சமுதாயத்தை அடிமைச் சங்கிலியிலிருந்து விடுவிப்பதற்காகவுமே துப்பாக்கி ஏந்தி இராணுவத்திற்கு எதிராக ஆரம்பத்தில் கெரில்லா யுத்த அடிப்படையிலும் பற்பகுதியில் முழு உலகமும் வியக்கத்தக்க மரபு வழியான யுத்தத்திலும் வெற்றியீட்டினார்கள். இவ்விதமான ஆக்கபூர்வமான தியாகங்களைச் செய்த விடுதலைப் புலிகளின் தலைவரான பிரபாகரன் இலங்கைத்தமிழர் தலைவர் மட்டுமல்ல, உலகத் தமிழருக்கும் அவர் விடிவெள்ளியாகக் காட்சியளிக்கின்றார். ஆகவே பிரபாகரனின் படை ஒன்றுதான் தமிழர்களையும், தமிழ் மண்ணையும் காப்பாற்ற முடியுமென்ற எங்களால் உறுதி செய்ய முடியும்.

பிரபாகரனின் தியாகத்தின் அடிப்படையில் இன்று ஒரு தமிழ்ப் பிரதேசமாகிய முல்லைத்தீவு , கிளிநொச்சி மற்றைய பகுதிகளின் கணிசமானளவு இடங்களில் சுதந்திரமான தமிழர் ஆட்சி இயங்குகின்றது. சர்வதேச சமூகம் இந்த யதார்த்த நிலையை நன்கு அறிந்தும் உணர்ந்தும் இராணுவம் தோல்வியை எதிர்கொண்டதினாலும் ஒரு சமாதானத் தீர்வுக்கு முயற்சி எடுத்தது. இலங்கையில் தமிழ் இனம் ஒன்று இருக்கின்றதா என்று சர்வதேச சமூகத்துக்குத் தெரியாத நிலையில் 1983ஆம் ஆண்டிற்குப் பின்பு மனித உரிமை மீறல்களில் இலங்கை முதலிடம் பெற்றது சர்வதேச சமூகத்துக்கு நன்கு தெரிந்து விட்டது.

யுத்தத்தில் சிங்கள இராணுவம் படு தோல்விகளையடையும் என்ற பீதியின் காரணத்தினாலும் பொருளாதார வீழ்ச்சியின் காரணத்தினாலும் சிங்கள சமுதாயமும் சமாதானத் தீர்வுக்கு விரும்பியது. இந்த அடிப்படையில் நோர்வே நாட்டின் உதவியுடன் இதுவரை நடந்த பேச்சு வார்த்தைகள் வற்றியளித்தன. முதன்முதலாக இலங்கை பேரழிவுகள் பற்றியும், சமாத்தானம் பற்றியும் சர்வதேச மாநாடு ஒன்று ஒஸ்லோவில்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேற்று திங்கட்கிழமை நடந்தது. இந்தச் சமாதானப் பேச்சுக்கள் வெற்றியடைந்தால் ஒரு புது அரசியலமைப்பு உருவாவது நிச்சயம். தமிழரைப் பொறுத்தவரையில் தாங்கள் நாட்டைப் பிரிக்க விரும்பவில்லை. அதற்கு மாறாகத் தாங்கள் இழந்த சுதந்திரத்தைத் தான் கேட்கிறார்கள். இதில் என்ன தவறு என்ற கேள்வி எழுகின்றது. தமிழ்ப்பிரதேசத்திலும் சிறிய நாடான கிழக்குத் திமோர் பிரிந்து சுதந்திரமாகப் போகவில்லையா? என்ற கேள்வி எழுகின்றது. என்றாலும் பிரபாகரன் சர்வதேச அழுத்தங்களையும் நினைவுகூர்ந்து சர்வதேச அழுத்தங்களையும் மனதிற் கொண்டு சுதந்திரத் தமிழீழத்துக்குப் பதிலாக சுயநிர்ணய அடிப்படையில் மிக வலுவுள்ள, சக்தியுள்ள பூரண சுய ஆட்சியொன்றை அமைத்தல் அவசியமென்று எண்ணக்கூடும். இதைக் கூட்டாச்சி என்றும் அழைக்கலாம். இந்த விடயத்தில் தமிழர்கள் ஆயிரமாயிரமாண்டுகளாகச் சுதந்திரமாகவும் இறையாண்மையுடனும் வாழ்ந்ததை நினைவு கூர்ந்து சிங்கள ஆதிக்கத் தினுள் 14 வருடம் மட்டும் உட்பட்டதை எண்ணியும் சுதந்திரம் அடைந்த பின்பு தமிழ்ச் சமுதாயத்தின் மீது இனப்படுகொலைகள் நடத்தியதையும் மனதிற் கொண்டு தமிழர்களுடைய அபிலாஷைகளுக்கு ஏற்ப ஓர் அரசியலமைப்பு ஏற்படுவதைத் தான் விரும்புவார்கள். ஆனால் சமஷ்டி அரசியலோ அல்லது கூட்டாட்சி அரசியலோ பற்றி அதிகம் சிந்திக்கத் தேவையில்லை. சமஷ்டி அரசியலில் இராணுவம் மத்திய அரசுக்கே சொந்தமானது. ஆகவே தமிழர்களுடைய பாதுகாப்புக்கும் உத்தரவாதம் யாரால் கொடுக்க முடியும் என்ற கேள்வி நிச்சயமாக எழுகின்றது. இந்த உத்தரவாதத்தை சர்வதேச சமூகத்தினால் கொடுக்க முடியாது. ஆகவே தமிழருடைய பாதுகாப்பு தமிழர் கையிலேயே இருக்க வேண்டும்.

இதுதான் நீதியான நேர்மையான அரசியலமைப்பாகும். ஆகவே வலிமை பெற்ற அதிகசக்தியுள்ள பூரணத்துவம் பெற்ற மொழிவாரியான கூட்டாட்சி ஒன்றை ஏற்படுத்தி அதன் பிரகாரம் தமிழ்ப் பிராந்தியத்துக்கு இராணுவப் பொறுப்பை அவர்களிடம் கொடுப்பது மிகமிக அவசியம். இந்த வழி முறைப்படி தமிழ்ப் பிராந்தியத்தில் ஒரு சிங்கள இராணுவத்தினரும் நிலைகொள்ள முடியாமற் செய்ய வேண்டும். அது மட்டுமல்ல பலாலி இராணுவ முகாமையும் பலாலி விமானத் தளத்தையும் தமிழர் இராணுவத்தக்குக் கையளிக்க வேண்டும்.

திருகோணமலைக் கடற்படைத்தளம் தமிழர் கடற்படைக்கு மாற வேண்டும். காரைநகர் கடற்படைத்தளம் தமிழர் கடற்படைக்குக் கொடுக்கப்படல் வேண்டும். இவ்விதமான செயல்முறைகள் அடங்கக்கூடிய அரசியலமைப்பு ஒன்று தான் தமிழர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதாக அமையும்.



உலகிலே அநேக வருடங்களாக ஏமாற்றப்பட்ட சமூகம் தமிழ்ச் சமூகம். உலகிலே அநேக வருடங்களாக எதிர்கொண்ட பாலியல் வன்முறைகளும் தமிழ்ச் சமுதாயத்தை விட வேறு யாரும் எதிர் கொள்ளவில்லை. இந்த உண்மைகளை ஐ.நா. வின் வாதங்களிலிருந்து அறிய முடிகின்றது. ஆகவே, இவ்விதமான கொடூர சம்பவங்கள் இனிமேலும் நடைபெறக்கூடாது என்ற காரணத்தினால் தமிழர் பாதுகாப்புக்குத் தமிழர் இராணுவமே பொருத்தமானது என்பதை அறுதியிட்டுக் கூறுகிறோம். இவ்விடயத்தில் விடுதலைப் புலிகள் மிகவும் உறுதியாகவிருத்தல் அவசியம். சர்வதேச அழுத்தங்களையும் எதிர்கொள்ள ஆயத்தமாயிருத்தல் அவசியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17

## பிரிட்டனிடமிருந்து சுதந்திரம் பெற்ற வரலாற்றை அமெரிக்கா திருப்பிப் பார்ப்பது அவசியம்

**6500** வருடங்களுக்கு மேலாக இறையாண்மையுடனும், சுதந்திரத்துடனும் வாழ்ந்த தமிழ்ச் சமுதாயம், அக்காலத்து உலக வல்லரசான போர்த்துக்கேயரிடமும், அதனைத் தொடர்ந்து ஒல்லாந்தரிடமும் பிரித்தானியர்க ளிடமும் கட்டுண்டு வாழ்ந்தது.

பிரித்தானியர் இலங்கையை விட்டுச் செல்லும் போது தமிழ் பிரதேசம் உட்பட்ட முழு இலங்கையையும் சிங்கள சமூகத்தவரிடம் தாரை வார்த்துக் கொடுத்தனர். அதன் பின்னர் சிங்கள சமூகத்தவரின் இனப் பிரச்சினைகளுக்கும், இனப்படுகொலைகளுக்கும் முகம் கொடுத்த தமிழ் சமூகம் கடந்த 20 வருடங்களாக நடைபெற்ற யுத்தத்தில் 80,000க்கும் மேற்பட்ட உயிர்களைப் பலி கொடுத்தது.

இந்த யுத்தம் தமிழ்ப் பிரதேசங்களின் மாத்திரமே இடம் பெற்றமையால் முழுத் தமிழ் பிரதேசமும் தனது வளங்களை இழந்துவிட்டது.

இப்படியான பேரழிவுகளுக்குக் காரணமாக உள்ளவர்களே புனரமைப்பு, புனர்நிர்மாணப் பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. தமிழ்ப் பகுதி வளங்கள் சிங்களப் படையினரால் அழிக்கப்பட்டமையினாலேயே மேற்கொள்ளப்பட வேண்டியது யதார்த்த பூர்வமானதே.

உதாரணமாக, இரண்டாம் உலக மகாயுத்தத்துக்கு ஜேர்மனியே காரணமாக இருந்த போதிலும் அந்த யுத்தத்தின் பிற்பகுதியில் அமெரிக்கா மற்றும் பிரித்தானி
யரின் குண்டு வீச்சுக்களினால் ஐரோப்பிய கைத்தொழிற் தளங்கள் நாசமாக்கப்பட்டது.

இதே போல, ஜப்பான் மீதும் குண்டு வீச்சுகளையும் அணுகுண்டு வீச்சுக்களையும் மேற்கொண்டமைக்கான அமெரிக்காவின் அதி முக்கிய தளபதியான ஜெனரல் மாக் ஆதரின் மேற்பார்வையின் கீழ் ஜப்பானில் புனர்நிர்மாணப பணிகளை மேற்கொள்வதற்காகப் பெருமளவில் நிதி உதவி வழங்கப்பட்டது.

இவ்வாறு தமிழ்ப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட அழிவுகளை, புனர்நிர்மாணம் செய்வதற்கான சட்ட, தார்மீக ரீதியான பொறுப்புகள் சிங்கள அரசிடம் உண்டு. ஆனால், அதற்குப் போதுமானளவு நிதி



வளமின்மையால் இப் பணிகளை மேற்கொள்வதற்கான நிதியுதவியை விடுதலைப் புலிகளுடன் இணைந்து சர்வதேச சமூகத்தினரிடம் நிற்கின்றனர்.

யுத்தத்தில் ஈடுபட்ட இரு பகுதியினரும் ஒன்றிணைந்து புனரமைப்பு மற்றும் புனர்நிர்மாணப் பணிகளுக்கான நிதியுதவியை சர்வதேச சமூகத்தினரிடம் கோரியமை உலக இராஜதந்திர வரலாற்றில் முதற் தடவையாகும்.

இந்த இரு பகுதியினரும் வேண்டிய திருத்தப் பணிகளுக்கு நிதி உதவி வழங்கும் நோக்கில் 40 இற்கும் மேற்பட்ட உலக நாடுகளின் பிரதிநிதிகள் நவம்பர் 25 ஆம் திகதி நோர்வேயின் தலை நகர் ஒஸ்லோவில் ஒன்று கூடினர்.

ஆரம்ப கட்ட நடவடிக்கைகளுக்காக ஏழு கோடி அமெரிக்க டொலரை உதவியாக வழங்குவதற்கு இந்த 40 நாடுகளும் முன் வந்திருப்பது மகிழ்ச்சிக்குரிய
வோர் விடயமாகும்.

மாநாடு தொடர்பான மதிப்பீட்டினை மூன்று வேறுபட்ட கோணங்களிலிருந்து ஆராய்வு உசிதமானதாகும். முதலாவது தமிழரின் நிலைப்பாடு. இரண்டாவது சிங்கள சமூகத்தினரின் நிலைப்பாடு. மூன்றாவது சர்வதேச சமூகத்தின் நிலைப்பாடு.

### தமிழர் நிலைப்பாடு

இருபது வருட கால யுத்தத்தில் விடுதலைப் புலிகள் சிங்கள இராணுவத்துடனும், இந்திய இராணுவத்துடனும் மோதிக்கொண்டமை யாவரும் அறிந்ததோர் விடயமாகும். கெரில்லாப் படையாக ஆரம்பித்த விடுதலைப் புலிகள் அதிக முன்னேற்றமடைந்து மரபு வழிப் போரில் சிங்கள இராணுவத்தைப் பல சந்தர்ப்பங்களில் தோற்கடித்தமை உலகையே வியப்புக்குள்ளாக்கியது. சிங்கள இராணுவத்தால் விடுதலைப் புலிகளை வெற்றி கொள்ள முடியாது என்பதனை உணர்ந்த சர்வதேச சமூகம் சமாதான முயற்சிகளுக்கு முன் வந்து நோர்வேயின் மத்தியஸ்தத்துடன் தாய்லாந்தில் இரண்டு சுற்றுப் பேச்சுவார்த்தைகளையும் வெற்றி கண்டமையாலும், விடுதலைப் புலிகளின் இராஜதந்திர முதிர்ச்சியினாலும், அவர்களின் கோரிக்கைக்கு இணங்கி ஒஸ்லோவில் நடைபெற்ற மாநாட்டுக்கு சர்வதேச நாடுகள் வருகை தந்தன. சர்வதேச நாடுகளின் வருகை விடுதலைப் புலிகளின் இராஜதந்திரத்துக்கு கிடைத்த வெற்றியாகும்.

விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகள் என்ற மாயைக்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுப்பட்டு அவர்களைத் தடைசெய்த அமெரிக்கா, பிரித்தானியா, கனடா மற்றும் அவுஸ்திரேலியா போன்ற நாடுகள் இராணுவ விற்பன்னர்களான விடுதலைப் புலிகள் சமாதானப் பிரியர்கள் என்பதைக் கண்டு அவர்களோடு கூடிப் பேசி அவர்களின் பிரதேசங்களுக்கு விஜயம் செய்து அவர்களது பிரதேசங்களுக்கு விஜயம் செய்து அவர்களது பிரதேசங்களுக்கு அபிவிருத்தி செய்ய முன் வந்திருப்பது ஓர் வரலாற்று திருப்பமாகும்.

6,500 வருட காலமாக இராவணன் தொடக்கம் சங்கிலியன் வரை இறையாண்மையுடனும், சுதந்திரத்துடனும் அரசோச்சிய தமிழ் சமூகம் மேலே நாட்டினரிடம் தமது இறைமையைப் பறி கொடுத்த போதிலும் இலங்கையின் வட பகுதி 14 வருடங்கள் மாத்திரமே சிங்கள ஆட்சியின் கீழிருந்தது என்ற உண்மையை ஒஸ்லோவில் நடைபெற்ற சர்வதேசப் புகழ் பெற்ற மாநாட்டில் விடுதலைப் புலிகள் வெளிப்படுத்தியிருப்பார்களேயாகில், தமிழ் சமூகம் தொடர்பாக சர்வதேச சமூகத்தினரிடம் மேலும் பரிவும் மரியாதையும் ஏற்பட்டிருக்கும், எனவே, ஜப்பானில் நடைபெறவுள்ள மாநாட்டிலாவது இது தொடர்பாக சிறு விளக்கம் ஒன்றை வழங்குவது வரவேற்றக் தக்கதாகும்.

**<u>சிங்களவர் நிலைப்பாடு</u>**

தமிழர் தொடர்பாகக் கடந்த 50 வருடங்களிலான தமது கொள்கையின் வேர் சாய்ந்து விட்ட நிலைக்கு வந்து விட்டனர். யுத்தின் மூலம் விடுதலைப் புலிகளை வெற்றி கொள்ள முடியாது என்பதை நன்கு விளங்கிக் கொண்டனர். மேலும் யுத்தம் தொடருமானால் தென் இலங்கை படு மோசமான பொருளாதாரச் சீரழிவுக்கு ஆளாகும் என்பதையும் புரிந்து கொண்டனர்.

சிங்கள இராணுவம் தோல்வியைத் தழுவுமேயாகில் தென் இலங்கையிலும் தமிழர் ஆதிக்கம் தோன்றி விடும் என்ற அச்சமும் தோன்றியுள்ளது. மிகவும் குறைந்த அளவினரான கடும் போக்காளர்களே யுத்தம் தொடரப்படவேண்டுமென விரும்புகிறார்கள். இந்த நிலைப்பாட்டை நன்குணர்ந்துள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நோர்வேயின் உதவியுடன் சமாதானப் பேச்சு வார்த்தைகளில் இறங்கி வெற்றியையும் ஈட்டியுள்ளார். இது அவரது துணிச்சலையும், தூரநோக்கினையும் நன்கு புலப்பத்துகின்றது.

ரணில் விக்கிரமசிங்க விடுதலைப் புலிகளையும் இணைத்து சர்வதேச உதவியை நாடடியமையை முதிர்ச்சி அடைந்தோர் இராஜதந்திர முயற்சியென வர்ணிக்கலாம். பேரழிவை எதிர்நோக்கிய வட, கீழ் பிராந்தியத்தின் புனர்நிர்மாண வேலைகளோடு சேர்த்து பொருளாதார



ரீதியில் பாதிப்படைந்துள்ள தென் இலங்கை யைக் கட்டியெழுப்புவதற்கும் ஒஸ்லோ மாநாட்டின் மூலம் கிடைக்கவிருக்கும் நிதியைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புக்களும் உண்டு. சிங்களச் சமுத்தைப் பொறுத்தவரையில் இலங்கையின் இறையாண்மையைப் பாதிக்காத வகையில் தமிழர்களின் அபிலாஷைகளை நீதியாகவும், நேர்மையாகவும் பூர்த்தி செய்வதாயின் யுத்தம் அவசியமற்றது என் ற நிலை தோன்றிவிடும்.

ஆகவே, சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்புக் கிடைப்பதனால் இந்த ஒஸ்லோ மாநாட்டைச் சிங்கள சமூகமும் நன்கு வரவேற்கும். யுத்தத்தின் மூலம் சிங்கள சமூகம் தோல்விகளைக் காணாமல் விடுவதற்கு வழிசமைப்பதாக இம்மா நாடு அமைந்துள்ளது.

**சர்வதேச சமூகத்தின் நிலைப்பாடு**

இலங்கையில் தமிழினம் என்ற ஓர் இனம் உண்டு என்பதை இதுவரையில் சர்வதேச அரசியல் தலைவர்களே தெரிந்திருந்தனர். எமது பிரச்சினைகள் தொடர்பாக மேற்குலகப் பாமர மக்கள் இருக்கவில்லை. 1983 இல் தமிழர்கள் இனப்டு கொலைக்கு ஆளானமையை தொலைக்காட்சி மூலம் கண்டு கொண்டதன் மூலம் இலங்கையில் தமிழர்கள் எதிர்நோக்கும் தொல்லைகளை மேற்குலகத்தினர் அறிந்து கொண்டனர். இதன் காரணமாகவே, இலங்கைத் தமிழர்களை அகதிகளாக ஏற்றுக் கொள்வதற்கு மேற்குலகம் முன்வந்தது.

இந்த யுத்தத்தின் மூலம் ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டதுடன், கோடிக் கணக்கான உடைமைகள் அழிக்கப்பட்டதும், சூறையாடப்பட்டதும் போக, ஏராளமன மத வழிபாட்டுத் தலங்கள் மற்றும் பாடசாலைகளும் அழிக்கப்பட்டன. இந்த அழிவுகளை ஐ.நா. மனித உரிமை குழுவின் விவாதங்களிலிருந்தும் சர்வதேச சமூகம் அறிந்து கொண்டது.

1994 ஆம் ஆண்டிலிருந்து வெளிவிவகார அமைச்சராக கதிர்காமர் பதவி யேற்றதைத் தொடர்ந்து உள்நாட்டு விவாகரமான விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை வெளிநாடுகளில் பிரசாரம் செய்ததன் மூலம் விடுதலைப் புலிகளைச் சில நாடுகள் தடை செய்திருந்தன.

விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியில் மகத்தான வெற்றிகளை ஈட்டிக் கொண்ட போதிலும் சமாதானத் தீர்வுக்காக நோர்வே நாட்டுடன் ஒத்துழைத்து சமாதானத்தின் மீதான தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியமையினால் மேற்கு உலக நாடுகள் விடுதலைப் புலிகள் தொடர்பான தமது நிலைப்பாட்டினை மாற்றிக கொண்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட இலங்கையில் விடுதலைப் புலிகள் கட்டுக் கோப்பான இராணுவ அமைப்பு-கடற்படை-காவல்துறை-நீதி நிர்வாகம் மற்றும் பொது நிர்வாகக் கட்ட மைப்புக்களை வெற்றிகரமாக மேற்கொண்டு வருவதனை நேரடியாகக் கண்டு கொண்டமையும் மேற்குலகத்தினர் தமது நிலைப்பாட்டினை மாற்றிக் கொள்வதற்கான ஒரு காரணமாகவிருந்தது.

யுத்தம் இடம் பெற்ற காலவரையில் தமிழ்ப் பிராந்தியப் பேரழிவுகளை நிவர்த்தி செய்வதற்கான புனர்நிர்மாணப் பணிகளுக்கு மேற்குலக நாடுகள் உதவ முன் வந்திருப்பது ஒரு நல்ல சகுனமாகும். நோர்வே நாட்டுச் சமாதானக் குழுவின் பணிகளைக் குறைத்தும், திரிபுபடுத்தியும் காட்டிய கதிர்காமரின் கொள்கையை மேற்குலகம் நிராகரித்து விட்டது.

இதன் அடிப்படையில் விடுதலைப் புலிகள் பயங்கரவாதத்துக்காக அலலாது தமது இனத்தின் விடுதலைக்காகவே ஆயுதம் ஏந்தினர் என்ற நிலைப்பாட்டினை மேற்குலகத்தினர் புரிந்து வருகின்றனர். இவ்விடயத்தில் மேற்குலக நாடுகளின் நிலைப்பாட்டில் சிறியதொரு வித்தியாசத்தைக் காண முடிகிறது. அமெரிக்கா தவிர்ந்த எந்தவொரு மேற்குலக நாடும் புலிகளைத் தாக்கியோ அல்லது அவர்களுக்குப் புத்திமதி கூறவோ எத்தனிக்கவில்லை.

அமெரிக்காவின் வெளிவிவகாரப் பிரதியமைச்சர் ஆர்மிரேஜ் சமாதான முயற்சிகளில் விடுதலைப் புலிகள் இது வரை காட்டி வரும் ஆர்வத்தை விட இன்னுமொரு படி முன்னேறி பயங்கரவாதத்தையும், வன்முறைகளையும் கைவிடுமாறு புத்திமதி கூறியிருந்தார். அமெரிக்காவைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளைத் தடை செய்த நாடுகளான பிரித்தானிய மற்றும் கனடா நாட்டு அமைச்சார்கள் எவரும் புலிகளுக்கு எவ்வித புத்திமதிகளையும் கூறவில்லை.

அமெரிக்க வெளிவிவகார பிரதி அமைச்சர் தனது நாட்டின் சரித்திரத்தையே அறியாதவராக இருக்கிறார். ஏனெனில் சாத்வீக ரீதியிலோ, பேச்சுவார்த்தை மூலமோ அமெரிக்கா பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரம் பெற்றுக் கொள்ளவில்லை. அதற்கு நேர் மாறாக அமெரிக்க மக்கள் பிரித்தானியாவுக் கெதிராகத் துப்பாக்கி ஏந்தி வன்முறை மூலம் சுதந்திரம் பெற்றனர். அந்த வன்முறைகளில் பயங்கரவாதமும் கலந்திருக்கலாம் என்பதை பிரதி வெளிவிவகார அமைச்சர் தெரியாதிருக்க முடியாது.



# 18

# இனப்படுகொலை, அடக்குமுறைகள் இடம் பெறாததை உறுதிசெய்யும் சமஷ்டி அமைப்பே தேவையானதொன்று

தமிழ் இளைஞர்களின் தியாகம் தொடர்பாக கருத்த முரண்பாடுகள் எவையும் இல்லை. ஆனாலும் சமஷ்டித் தீர்வு தொடர்பான முரண்பாடுகள் காணப்படுவது தவிர்க்க முடியாத தொன்றாகும். எனவே சிக்கலான இந்தப் பிரச்சினை இரு கோணங்களிலிருந்து பரிசீலிக்கப்படுதல் வேண்டும். அவற்றில் ஒன்று உணர்ச்சிபூர்வமான பரிசீலனை, மற்றையது, உணர்ச்சி வசப்படாத ஆழ்ந்த கருத்துக்களுடனான பரிசீலனை ஆகும்.

## உயர்ச்சிபூர்வமான பரிசீலனை

1949 மற்றும் 1950 காலப் பகுதிகளில் தமிழர்களின் பிரச்சனைக்குச் சமஷ்டி முறையே உகந்த தீர்வெனத் தந்தை செல்வநாயகம் வெளிப்படுத்தியிருந்த போதிலும் இத்திட்டம் தமிழ் மக்களின் ஆதரவைப் பெற்றிருக்கவில்லை. 1956இல் இடம்பெற்ற இனப்பிரச்சினையைத் தொடர்ந்து சமஷ்டி முறையே தமிழ் மக்கள் வரவேற்றபோதிலும் இலங்கை அரசாங்கம் அதுதொடர்பாக எதுவித கரிசனையும் செலுத்தவில்லை.

1976 ஆம் ஆண்டில் மூன்று தமிழ்க் கட்சிகளும் ஒன்று சேர்ந்து சுதந்திரத் தமிழீழம் ஒன்றே தமது ஏகோபித்த குறிக்கோள் என வட்டுக்கோட்டைப் பிரகடனத்தை வெளியிட்டனர். இந்தப் பிரகடனத்தை முன்வைத்த தமிழர் கூட்டணி 1977 பொதத் தேர்தலில் அமோக வெற்றியீட்டியது. அதாவது, சுதந்திர தமிழீழத்தை திரும்பவும் உருவாக்குவதற்கு கூட்டணி ஆயுதபலமோ அன்றேல் வெளிநாட்டு ஆதரவோ இல்லாமையால், தமது குறிக்கோளை அடைய முடியாமற் போனது. பின்னர் வலுவற்றதும், பலமற்றதுமான மாவட்டசபையை அமிர்தலிங்கம் ஏற்றுக்கொண்டார். இதன் மூலம் தமிழுழத்தை எதிர்பார்த்திருந்த தமிழ் இளைஞர்கள் விரக்தியின் விளிம்புக்குச் சென்றதோடு அமிர்தலிங்கம் மேல் கசப்புணர்வையும் கொண்டனர்.

1983இன் இனக்கலவரம் இன ஒழிப்பாக உருமாறியதைத் தொடர்ந்து ஆயிரக் கணக்கான தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் ஆயுதம் ஏந்திய போராட்டத்திற்குள் தம்மை இணைத்துக் கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை மாணவர்கள் தமது கல்வியைக் கைவிட்டு பெற்றோர்களுக்கும் தெரியாது விடுதலை இயக்கத்தில் இணைந்து கொண்டனர்.

தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் தமது பெற்றோர், சகோதரர்களைத் துறந்து, இளவயதினரான அவர்கள் தமது ஆசாபாசங்களை மறந்து சுதந்திரத் தமிழீழம் ஒன்றே தமது ஒரே குறிக்கோள் என நினைத்து அதற்காகத் தம்மை அர்ப்பணிக்கத் தலைப்பட்டனர். இவர்கள் புரிந்த தியாகங்களின் பலனாகவே விடுதலைப் புலிகளின் இராணுவம் இன்று உலகப் புகழ்பெற்ற இராணுவமாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது.

6,500 வருடங்களாகத் தமிழினம் அனுபவித்த சுதந்திரத்தை மீண்டும் அனுபவிக்க வேண்டும் என்பதற்காகவே அவர்கள் தம்மை அர்ப்பணித்தனர்.

புலம்பெயர்ந்த இளைஞர்களின் நிதியுதவியினாலும், இங்கிருந்த இளைஞர்களின் உயிர்த் தியாகங்களினாலும் இராணுவ ரீதியாக இன்று தமிழர்களின் தாயகப் பிரதேசத்தின் எழுபது வீத நிலப்பரப்பு மீட்கப்பட்டுவிட்டது. ஆயுதம் ஏந்திய இளைஞர்களை வழிநடத்திய பெருமை, விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனையும் அவரது தளபதிகளையும் சார்ந்ததாகும். இதன் பலனாக தமிழர் பிராந்தியத்தில் ஒரு அரசு சுதந்திரமாக இயங்குவதோடு அந்த அரசு தனக்கென பலம் வாய்ந்த இராணுவம், கடற்படை, காவல்துறை மற்றும் நீதி பரிபாலனத்தையும் கொண்டுள்ளது.

இவற்றையெல்லாம் அவதானித்த சர்வதேச சமூகம் தமது பிரதிநிதிகளை விடுதலைப் புலிகளின் தலைமை அலுவலகத்துக்கு அனுப்பி பேச்சு வார்த்தைகளை மேற்கொண்டது. இம் மகத்தான வெற்றிகளுக்கான மூல காரணம் ஆயுதமேந்திய இளைஞர்களின் தியாகமேயாகும்.

பேரழிவை மேற்கொண்டு வரும் இந்த யுத்தத்தை நிறுத்ததும் பொருட்டு நோர்வே அரசாங்கத்தின்மத்தியஷ்தத்துடன் சர்வதேச சமூகம் மேற்கொண்டு வரும் பேச்சுவார்த்தைகளின் மூன்று சுற்றுகள் வெற்றிகரமாக முடிவடைந்தன.

**சமஷ்டித் தீர்வு**

இது சிக்கலான விடயமாகையாலும், இதனது வரைவிலக்கணமும் முழு விபரமும் தெரியாத காரணத்தினாலும் இவ்விடயம் தொடர்பாக உயர்ச்சி வசப்படாது ஆழ்ந்து சிந்திப்பது மிகவும் அவசியமானதாகும். இந்தப் பிரச்சினையை ஆராய்வதற்கு முன்னர் சில அடிப்படை



உண்மைகளைத் தெரிந்துகொள்ளுதல் வேண்டும்.

இறையாண்மையுடனும், சுதந்திரத்துடனும் 6,500 வருடங்கள் ஆட்சி புரிந்த தமிழினம் 14 வருடங்கள் மாத்திரமே சிங்கள ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. தமிழ் இராட்சியத்தின் இறையாண்மையும், சுதந்திரமும் மேற்குலக வல்லரசான போர்த்துக்கேயரால் பறிக்கப்பட்டது. 1948 இல் பிரித்தானியர் இலங்கையை விட்டு அகன்ற போது தமிழர் அனுபவித்த சுதந்திரத்தை மீண்டும் தமிழர்களிடமே கொடுக்காமல் சிங்களவர்களுக்கத் தாரைவார்த்தனர்.

மேலே குறிப்பிட்ட விடயங்கள் தொடாபாக சர்வதேச சமூகம் நன்கு உணரவில்லை. இன்றைய சர்வதேச சூழ்நிலையில் தேசிய விடுதலை இயக்கங்கள் பயங்கரவாத இயக்கங்களாகக் கருதப்படுகின்றன. இதுவோர் துர்பாக்கியமான நிலைப்பாடாகும். இந்த உண்மைகளை சகல தமிழ் மக்களும் அறிந்து வைத்திருக்க வேண்டியது மிகவும் அவசியமானதாகும்.

இலங்கை அரசியல் நாடகத்தில் இதுவரையில் மூன்று கதாபாத்திரங்கள் மாத்திரமே மேடையேறின. அதாவது தமிழினம், சிங்கள இனம், மற்றையது இந்தியா. இந்தியா சில சமயங்களில் தமிழர்களுக்குச் சார்பாகவும் சில சமயங்களில் சிங்களவர்களுக்குச் சார்பாகவும் செயற்பட்டு வந்தது. 1991 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இன்று வரை இந்தியா சிங்களச் சமூகம் சார்பாகவே செயற்பட்டு வருகின்றது. இதுவரையில் நிலவிய மூன்று கதாபாத்திரங்களுக்கு மேலாக இன்று இன்னொரு கதாபாத்திரம் முக்கிய பாத்திரமொன்றில் மேடையேறியுள்ளது. அதுதான் உலகின் அதிமுக்கிய ஒரேயொரு வல்லரசான அமெரிக்கா.

அமெரிக்கா தன்னைத் தானே சர்வதேச பொலிஸ்காரன் என்ற நிலையில் வைத்துக் கொண்டு விடுதலைப் புலிகள் மீதும் இலங்கை அரசின் மீதும் பல அழுத்தங்களைக் கொடுத்து வருவதை யாரும் அவதானிக்கலாம். சர்வதேசப் பிரச்சினைகளில் அமெரிக்கா எடுக்கும் தீர்மானங்களை எதிர்க்கும் சக்திகளின் பலம் குறைவாகவே காணப்படுகின்றது. இந்த உண்மையை அவதானித்தல் வேண்டும்.

உதாரணமாக 2000 ஆம் ஆண்டில் ஆனையிறவைக் கைப்பற்றிய விடுதலைப் புலிகள் யாழ். குடாநாட்டையும் கைப்பற்றுவதற்கு எத்தனித்தபோது, அதைத் தடுக்கும் நோக்கில் அமெரிக்காவின் அழுத்தங்களின் பிரகாரம் இந்தியா தனது இராணுவத்தை ஆயத்த நிலையில் வைத்திருந்தது. அமெரிக்காவும் இந்தியாவும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான இந்த நிலைப்பாட்டை எடுத்திருக்காதிருப்பின் யாழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடாநாட்டில் நிலைகொண்டிருந்த 42,000 சிங்கள இராணுவத்தினர் யுத்தக் கைதிகளாக விடுதலைப் புலிகளினால் பிடிக்கப்பட்டிருப்பர்.

சமஷ்டி என்றால் என்ன? இதன் வரைவிலக்கணம் என்ன? எனச் சிந்திக்க வேண்டியுள்ளது. பல்லின மக்களைக் கொண்ட நாடுகளும் பல மதங்களைக் கொண்ட நாடுகளும் தங்களது தனித்துவத்தை விட்டுக் கொடுக்காது, தனது அபிலாஷைகளை நிறைவு செய்வதற்கும், தமது இறையாண்மையை மாத்திரம் விட்டுக்கொடுத்து ஒன்றிணைந்து ஒரு மத்திய அரசை உருவாக்கி தங்களது தனித்துவமான பிரதேசத்தில் அபிவிருத்திக்காக ஏற்படுத்தப்படும் அரசியல் அமைப்பாகும்.

இந்த அரசியல் அமைப்புகள் ஒவ்வொரு நாட்டினதும் பின்னணியை மையமாகக் கொண்டதாகும். ஒரு நாட்டினது பின்னணி இன்னொரு நாட்டின் பின்னணியை விட முற்றிலும் வேறுபட்டதாக இருக்கலாம்.

உலகில் சமஷ்டி முறையில் இயங்கும் நாடுகளில் சுவிற்சாலாந்து, ஜேர்மனி, கனடா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா. ஆஸ்திரியா ஆகியவை முக்கியமான வையாகும். நமது அண்டை நாடான இந்தியாவை மேற்குறிப்பிட்ட நாடுகளுடன் ஒப்பிடுகையில் அதனைப் பூரணமானதோர் சமஷ்டி அமைப்பாகக் கருதமுடியாது. அதாவது, மாகாண அரசாங்கங்களைக் கலைக்கும் அதிகாரத்தை கால்வாசிச் சமஷ்டி முறை என்றே குறிப்பிடமுடியும்.

மேற்குறிப்பிட்ட நாடுகளின் சமஷ்டி முறையை ஆராயும்போது, கனடாவிலுள்ள சமஷ்டி முறையே உள்ளவற்றில் மிகச் சிறந்தது. கனடா இருமொழி பேசுமோர் நாடாகும். கிழக்குப் பகுதியில் பிரெஞ்சு மொழியும், மேற்குப்பகுதியில் ஆங்கில மொழியும் வழக்கிலுள்ளன. கிழக்குப் பகுதியின் கியூபெக் பிராந்தியம் வாக்கெடுப்பில் பெரும்பான்மையான மக்கள் விரும்புமிடத்து பிரிந்து போவதற்கான உரிமை கொண்டதாகும். மேற்குறிப்பிட்ட சமஷ்டி நாடுகள் அனைத்தினதும் பாதுகாப்புத்துறை மத்திய அரசின் கிழேயே இருப்பது கவனிக்கப்பட வேண்டியதொன்றாகும்.

இலங்கை அரசியல் நாடகத்தில், விடுதலைப்புலிகளின் கோரிக்கையான இழந்தை சுதந்திரத்தை மீளப் பெறுவதற்கு அமெரிக்கா கடும் எதிர்ப்பைக் காட்டியுள்ளது. இந்தியாவும் அதே நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது. ஏனைய நாடுகளும் அமெரிக்காவைப் பின்பற்றுவதோடு இந்தியாவின் கொள்கைக்கு மதிப்பளிக்கின்றன. இந்த நிலையில் இராணுவ ரீதியில் சாதனைகள் படைத்த இராஜதந்திர அரசியல் ரீதியில் உலகச் செல்வாக்கைப் பெற்ற விடுதலைப் புலிகள் அமைப்பினால் என்ன செய்ய முடியும்? ஒன்றில் சர்வதேச சமூகத்தின் நிலைப்பாட்டுக்கு எதிராகச் செயற்படுவது அல்லது அவர்களின் கோரிக்கைகளுக்கு இணங்க



நடப்பது. சர்வதேசசமூகத்தின் நிலைப்பாட்டுக்கு எதிராகச் செயற்பட்டால், அரசியல் இராணுவ மற்றும் பொருளாதாரதுறைகளில் சர்வதேச அழுத்தங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும்.

ஏற்கெனவே தடை செய்த நாடுகளுக்கு மேலாக இன்னும் பல நாடுகள் விடுதலைப் புலிகளைத் தடை செய்யும் நிலை தோன்றலாம்.

பொருளாதார ரீதியாக பேரழிவுக்குட்பட்ட தமிழ்ப் பிரதேசத்தின் புனரமைப்புப் புனர்நிர்மாணப் பணிகளுக்குத் தேவையான நிதியுதவி கிடையாமற் போகலாம். இராணுவ ரீதியில் தமிழ்ப் பிராந்திய கடற்பிரதேசத்தை முற்றுகையிடுமாறு அமெரிக்கா இந்தியாவைத் தூண்டலாம், சிங்கள அரசுக்கு அதிகளவிலான இராணுவ மற்றும் நிதியுதவி வழங்கப்படலாம். முக்கியமாக இலங்கை அரசின் விமானப்படைக்கு அதிகளவில் உதவிகள் வழங்கலாம். இவ்விதமான ஆபாத்துக்களை ஆழமாகச் சிந்தித்தமையாலேயே அன்ரன் பாலசிங்கம் ஒஸ்லோ மாநாட்டில் சமஷ்டிக்கு உடன்பட்டார். சமஷ்டியிலிருந்து மேலான சுட்டாட்சியைக் கோரியிருக்கலாம்.

கூட்டாட்சி என்பதற்கு உதாரணமாக மலேசியாவும், சிங்கப்பூரும் ஒன்று சேர்ந்து கூட்டாட்சி அமைத்தார்கள். முறுகல்நிலை தோன்றியவுடன் பிரிந்து சென்றுவிட்டனர். கிழக்கு ஐரோப்பாவில் ஷெக் நாடும், ஸ்லோவாக்கியாவும் கூட்டாட்சி அமைத்திருந்தனர். முறுகல் நிலை தோன்றிய பின்னர் பிரிந்து சென்று விட்டனர்.

தமிழினத்துக்கு உகந்த சமஷ்டி முறை எது? ஒஸ்லோ மாநாட்டில் அமெரிக்காவின் அழுத்தம் காரணமாகவும் ஏனைய மேற்குலகநாடுகளின் அறிவுரைகாரணமாகவும் சுதந்திர தமிழீழத்தை கைவிட்டு சமஷ்டி முறைக்கு பாலசிங்கம் இணங்கியது உண்மை. இதேநேரத்தில் உள்ளக சுயநிர்ணய உரிமையிலும் வெற்றி அடைந்துள்ளோம். ஆனால் எவ்விதமான சமஷ்டி முறை கடைப்பிடிக்கப்படவுள்ளது என்பது தொடர்பாக இன்னமும் தீர்மானம் மேற்கொள்ளப்படவில்லை. தமிழர்களைப் பொறுத்தவரையில் பெயர் முக்கியமானதல்ல, என்னென்ன அதிகாரங்கள் உள்ளன என்பதே முக்கியமானது.

50 வருட காலமாகத் தமிழ் மக்கள் அனுபவித்த துயரங்கள் - அவலங்கள் - பாரபட்சங்களை நினைவு கூர்ந்தும் தமிழர் தம் பூமி சிங்கள அரசுகளால் சூறையாடப்பட்டதை நினைவு கூர்ந்தும் பல இனக் கலவரங்களுக்கும், இனச்சுத்திகரிப்புக்கும் முகங்கொடுத்தமையை மனதிற்கொண்டும், இவ்வாறானவை இனியும் நிகழமுடியாத வகையினதான சமஷ்டி முறை தமிழ் மக்களுக்கு அவசியமானதாகும்.

சமஷ்டி முறையுள்ள அநேக நாடுகளில் பாதுகாப்பு விவகாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்திய அரசின் கீழ் இருந்தாலும், இலங்கையைப் பொறுத்தவரையில் எமது கடந்த காலக் கசப்பான அனுபவங்களைக் கவனத்திற்கொண்டு எமது மண்ணையும் மக்களையும் காக்கும் இராணுவம் தமிழர் பொறுப்பிலேயே இருத்தல் வேண்டும். தீர்மானிக்கப்பட்டிருக்கும் சமஷ்டி முறையில் தமிழ்ப் பிரதேசங்களின் நிலைகொண்டுள்ள சிங்கள இராணுவம் விலக்கப்படுதல் வேண்டும். வெளியகப் பாதுகாப்பும், வெளிவிவகாரமும் நாணயவிடயமும் மத்திய அரசின் கீழிருக்கலாம்.

காணி, காணி அபிவிருத்தி, துறைமுகங்கள், கல்வி, கைத்தொழில் மற்றும் கமத்தொழில் துறைகள் யாவும் தமிழ்ச் சமஷ்டி அலகு தனது பிராந்தியத்தை அபிவிருத்தி செய்வதற்கு வெளிநாடுகளிலிருந்து கடன்பெறும் அதிகாரம் கொண்டதாக இருக்கவேண்டும்.



# தமிழர் விடயத்தில் தலை கீழாக மாறிய இந்தியாவின் நிலைப்பாடு

இந்தியாவின் நிலைப்பாடு தொடர்பாக சிந்திப்பதற்கு முன்னர் சில அடிப்படை விடயங்கள் தொடர்பாகச் சிந்திப்பது அவசியம். இந்தியா இன்று சகல அயல்நாடுகளுடனும் கசப்புணர்வையே கடுமையாக வளர்த்துள்ளது. கடந்த 55 வருடங்களாக மேற்கில் பாகிஸ்தானுடன் பல யுத்தங்களை நடத்தியும் இன்றும் கசப்புணர்வையே வளர்த்து வருகின்றது. வடக்கில் சீனாவுடன் 1962 இன் யுத்தத்திற்குப் பின்னரான கசப்புணர்வு இன்னும் நீடித்து வருகின்றது. உலகின் ஒரேயொரு இந்து தேசமான வட, கிழக்கிலுள்ள நேபாளத்துடன் சிநேகபூர்வமான கொள்கையொன்றினை இந்தியா கடைப்பிடிக்கவில்லை என்பதும் யாவரும் அறிந்ததே.

கிழக்கே வங்களாதேசம் என்ற ஒரு நாட்டினைச் சிருஷ்டித்த இந்தியா அந்த நாட்டுடனும் கூட கசப்புணர்வுடன் நடந்து கொள்வதனை அவதானிக்கலாம். இந்தியா மீது பற்றுடனும் பாசத்துடனும் வாழ்ந்து வந்த இந்தியாவின் தெற்கே அமைந்துள்ள இலங்கையின் தமிழர்களுக்கெதிராக இலங்கைச் சிங்களவர்களுக்கு உதவ வந்து 1987 அக்டோபரில் இலங்கைத் தமிழர்களுடனும் யுத்தம் புரிந்தது. இவை யாவற்றுக்கும் மேலாக எக்காரணத்தினால் இந்திய உபகண்டம் மத ரீதியாகப் பிளவுபட்டது? இத்துன்பகரமான விளைவுகள் யாவற்றுக்குமான காரணம் ஒன்றே ஒன்று தான். இந்திய மத்திய அரசை வழி நடத்தும் உத்தியோக வர்க்கத்துக்கும் இந்திய அரசியல் தலைவர்களுக்கும் நடைமுறைகளுக்கொவ்வாத அழுத்தங்களைக் குறிப்பிட்டதொரு சிறுபான்மை வர்க்கம் வழங்கி வருவதே அதற்கான காரணமாகும்.

அகில இந்தய ரீதியில் இந்த வர்க்கம் 15 சதவீதத்தையும் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் 4 சதவீதத்தையும் கொண்டதாகும். இந்த வர்க்கத்தைச் சேர்ந்த உயர் பதவி வகிக்கும் அலுவலர்களும் அதே வர்க்கத்தைச் சேர்ந்த ஊடகத் துறையினருமே இத்துன்பகரமான விளைவுகளுக்குப் பொறுப்பானவர்கள் என்பதே எனது கணிப்பு.

இலங்கைத் தமிழர்கள் தொடர்பாக இந்தியா கடைப்பிடித்த கொள்கையை இரண்டு கோணங்களிலிருந்து அவதானிக்கலாம். ஒன்று மலையகத் தமிழர் விடயம் மற்றையது பூர்வீகத் தமிழர்கள் தொடர்பானது.

இலங்கை சுதந்திரம் அடையுமுன்னரே மலையகத் தமிழர் தொடர்பாக இந்தியத் தலைவர்களுக்கும் இலங்கையின் சிங்களத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவர்களுக்கும் இடையில் கசப்புணர்வு நிலவி வந்தது யாவரும் அறிந்ததே. 150 வருடங்களுக்கு முன்னர் பிரித்தானியரால் இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட தமிழர்களுக்கு இலங்கையை மாற்றிய பெருமை உரித்தானதாகும். இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் மலையகத் தமிழர்களது பிரஜாவுரிமையும் வாக்குரிமையும் பறிக்கப்பட்டன. இவ்வாறான மனித நேயமற்ற செயல் உலகில் வேறெங்கும் நடைபெறவில்லை. இவ்வாறான அநீதியான செயற்பாட்டினால் 10 இலட்சத்துக்கும் மேற்பட்ட மலையகத் தமிழ் மக்கள் நாடற்றவர் என்ற நிலைக்காளாயினர். அன்றைய இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேரு பேரளவுக்குத் தனது எதிர்ப்பைக் காட்டினாரே தவிர அரசியல் மற்றும் பொருளாதார ரீதியல் அழுத்தங்களைக் கொடுக்க முன் வந்திருக்காதது வருத்தத்திற்குரியதொன்றாகும்.

ஜவஹர்லால் நேருவின் மரணத்தின் பின்னர் பிரதமரான லால் பகதூர் சாஸ்திரியின் காலத்தில் 1964 இல் இந்தியா சென்ற இலங்கைப் பிரதமர் ஸ்ரீமாவோ மண்டாரநாயக்க நாடற்றவர் எனப்படும் அனைவரையும் இந்தியா ஏற்றுக் கொள்ள வேண்டுமென விண்ணப்பித்திருந்தார். ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் இந்தக் கோரிக்கைக்குத் தமிழ் நாட்டிலுள்ள மத்திய அரசு அமைச்சர் கிருஷ்ண மாச்சாரியும், காமராஜரும் கடும் எதிர்ப்புத்தெரிவித்தனர். மத்திய அரசின் உத்தி யோகவர்க்கமும், ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் கோரிக்கைக்கு எதிர்ப்புக் காட்டியது. இதன் விளைவாக பேச்சுவாத்தை தோல்வியுறும் சந்தர்ப்பத்தில் எதிர்ப்புகள் யாவற்றையும் புறந்தள்ளி, தமிழக அரசுடன் கலந்துரையாடாது, பாதிப்பபுக்குள்ளான இலங்கையின் மலையகத் தமிழர்களது தலைவர்களுடனும கலந்துரையாடாது, லால் பகதூர் சாஸ்ரி தன்னிச்சையாக ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க வின் கோரிக்கைக்கு இணங்கி விட்டார். அதாவது இந்தியா 5,25000 மலையக மக்களை ஏற்றுக் கொள்வதாகவும் இலங்கை 3,00,000 மலையத் தமிழ் மக்களுக்குப் பிரஜாவுரிமை வழங்குவதாகவும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. ஒன்றரை இலட்சம் மக்கள் நாடற்றோர் என்ற நிலைக்கு ஆளாயினர். இந்திய அரசாங்கத்தின் இவ்வாறான செய்கையை மலையகத் தமிழர்களின் முதுகில் குததியதாகவே நாம் கருதுகின்றோம். இவ்விடயத்தில் இந்தியா இரட்டை வேடம் போட்டிருப்பதை எங்களால் நிரூபிக்க முடியும்.

சில வருடங்களுக்கு முன்பு பிஜி நாட்டில் வாழ்ந்த இந்திய சமூகத்தினருக்கு இடையூறு ஏற்பட்டதும் இந்திய அரசு உடனடியாகத் தனது இராஜதந்திர உறவு களை முறித்துக் கொண்டது. ஆனால், இலங்கையின் மலையகத் தமிழர்கள் தொடர்பாக இந்தியா கடைப்பிடித்த கொள்கை சிங்கள சமூகத்தினருக்குச் சாதகமாக அமைந்து விட்டது.



இலங்கையின் பூர்வீகத் தமிழர்கள் தொடர்பான இந்திய மத்திய அரசின் கொள்கை, கொழும்பில் ஆட்சியிலுள்ள கட்சியை மையமாகக் கொண்டிருந்தது. ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் இருந்தால் மத்திய அரசு கடும்போக்கைக் கடைப் பிடித்து வருகின்றது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியில் இருந்தால் இந்திய அரசு மென்மையான போக்கைக் கடைப் பிடிக்கின்றது. இந்த உண்மையைப் பல விடயங்களின் மூலம் நிரூபிக்க முடியும். இதற்கான காரணம் பண்டிதர் ஜவஹர்லால் நேரு குடும்பத்துக்கும் பண்டாரநாயக்க குடும்பத்துக்கும் இடையில் நிலவிய குடும்ப உறவேயாகும். அதாவது தமது குடும்ப உறவுக்கமையவே இந்திய மத்திய அரசு இலங்கை தொடர்பான கொள்கைகளை வகுத்துக் கொள்கின்றது. வெளிப்படை யாகச் சொல்வதானால் பண்டாரநாயக்க குடும்பத்தினரின் ஆட்சியின் போது தமிழர்களுக்கு எதிரான இன வன் செயல்களோ, இனப் படுகொலைகளோ நடை பெற்றால் அது தொடர்பாக இந்திய மத்திய அரசு அலட்டிக் கொள்வதில்லை. ஆனால் , ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியிலுள்ள சந்தர்ப்பங்களில் தமிழர் விடயத்தில் அதிக அக்கறை காட்டி வந்துள்ளது.

## இந்திய வெளிவிவகார செயலாளர் பெரும்பான்மையான தமிழ் மக்களின் பிரதிநிகளை சந்திக்காதமை ஜனநாயத்தை கேவலப்படுத்தும் செயல்

1956 மற்றும் 1958 பண்டாரநாயக்க ஆட்சியில் நடந்த இனக்கல வரங்களில் பண்டிதர் ஜவஹர்லால் நேரு மௌனம் அனுஷ்டித்தார். இந்தியக் கடவுச் சீட்டுக்களை வைததிருந்த இந்தியப் பிரஜைகள் கொழும்பில் படுகொலை செய்யப்பட்தன் பின்னர் தமது பிரஜைகளைக் காப்பாற்றுவதற்கு இந்திய இராணுவத்தைக் கொண்டுவர வேண்டியேற்படுமென இந்தியத் தூவர் கூறியதன் விளைவாகவே பண்டாரநாக்க அவசர காலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தினார். இந்திப் பிரச்சினை தொடர்பாக இந்தியப் பாராளுமன்றததில் பேராசிரியர் என்.ஜீ. ரங்கா கேள்வி தொடுத்த வேளையில் இதுவோர் உள்நாட்டுப் பிரச்சினையென ஜவஹர்லால் நேரு குறிப்பிட்டார்.

பாதிக்கப்பட்ட இந்தியப் பிரஜைகளுக்க இலங்கை அரசு நட்டஈடு வழங்கும் எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார். இவற்றிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் அறிந்து கொள்வது யாதெனில், தனது உற்ற நண்பனை கஷ்டத்தில் விட்டு விடுவதற்கு ஜவஹர்லால் நேரு விரும்பவில்லை என்பதேயாகும்.

1983 இல் இனப் படுகொலை இலங்கையில் நடந்த வேளையில ஜயவர்தன ஜனாதிபதியாக ஆட்சி புரிந்தார். சர்வதேச விவகாரங்களில் ஜே.ஆர் . ஜயவர்த்தன வின் கொள்கைக்கும் இந்திரா காந்தி அம்மையாரின் கொள்கைக்கும் இடையில் பாரிய முரண்பாடுகளை அவதானிக்கக் கூடியதாகவிருந்தது. 1983 இன் இனப் படுகொலை அகில உலகத்தினதும் கவனத்தை ஈர்த்துக் கொண்டது. அந்தச் சந்தர்ப்பத்தில் இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தனவின் அழைப்புக்காகக் காத்திராது இந்திரா காந்தி அம்மையார் தனது வெளி விவகார அமைச்சரான நரசிசம்மராவை இலங்கை நிலையை அறிந்து வரும்படி இலங்கைக்கு அனுப்பி யிருந்தார். 1983 சம்பவங்கள் தொடர்பாக ஜே.ஆர்.ஜயவர்த்தனவுக்குக் கடுமையான எச்சரிக்கையும் செய்திருந்தார். இலங்யையில் தமிழர்கள் அனுபவிக்கும் இன்னல்களும் அவலங்களும் தொடர்பாக ஐ.நா. சபையிலும் ஒலிக்கச் செய்தார். இந்திரா காந்தி அம்மையார் இராஜதந்திர மரபுகளையும் மீறி தமிழர் தலைவரான அமிர்தலிங்கததை அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இந்தியாவின் அழுத்தங்களைத் தாங்கிக் கொள்ள முடியாத ஜே.ஆர். ஜயவர்தன அமெரிக்கா மற்றும் பிரித்தானியாவுக்கும் சென்று இராணுவ உதவி கேட்டுப் படு தோல்வியடைந்தார். இதையறிந்த இந்திரா காந்தி அம்மையார் இந்தியா இலங்கையின் இறையாண்மையை மதிக்கின்றது. ஆனால், வெளிநாட்டுச் சக்திகள் இலங்கையில் காலூன்றுவதனை ஒரு போதும் பொறுத்துக் கொள்ள மாட்டாது என்று எச்சரிக்கை விடுத்தார். தமிழர்களின் அபிலாஷைகள் பூரணமாக நிறைவேற்றப்பட வேண்டும் என்பதில் இந்திரா காந்தி அம்மையார் ஆணித்தரமான நிலைப்பாடு கொண்டிருந்தார். தமிழ் அகதிகளையும் இந்தியாவுக்கு வரவேற்றார். அன்னாரின் அகால மரணத்தைத தொடர்ந்து ராஜீவ் காந்தியின் முயற்சியால் திம்புவில் இலங்கை அரசாங்கத்துக்கும், தமிழ்க குழுக்களுக்கும் இடையில் இந்திய அனுசரணையுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது. இந்திய உதிதியோக வர்க்கம் இலங்கைத் தமிழர்களின் அபிலாஷைகளைச் சரியாக உணர்ந்திருக்கலில்லை.

1987 ஜூன் மாதத்தில் பிரபாகரனை இந்திய அரசாங்கம் இராஜ மரியாதையுடன் அழைத்துப் பேச்சுவார்த்தை நடாத்தியது. அவ்வேளையில் இலங்கை- இநதிய நகல் ஒப்பந்தமொன்று பிரபாகரனுக்கு காட்டப்பட்டது. அதனை வாசித்த பிரபாகரன் இவை



தமிழ் மக்களின் நலன்களுக்கு உகந்ததல்ல எனத் தீர்மானித்து தனது எதிர்ப்பை வெளிப்படுத்தினார். இந்திய உத்தியோக வர்க்கம் விடுதலைப் புலிகளை சாதாரணமானதொரு தீவிரவாத இயக்கமென எண்ணி அழுத்தம் கொடுக்க முற்பட்டது. அதன் பிரகாரம் எம்.ஜி.இ. ராமசந்திரன் மற்றும் கருணாநிதி அவர்களையும் அழைத்து அந்த ஒப்பந்தத்துக்கு இணங்க வைக்குமாறு வற்புறுத்தியது. அவர்களின் அழுத்தங்களுக்கும் தளராத பிரபாகரனை இந்திய அரசாங்கம் அசோகா ஹோட்டலில் 555 ஆம் அறையில் ஓர் சிறைக் கைதி போல் வைத்திருந்தது. தமிழ்த் தேசியத் தலைவி கைதியாக நடாத்திய அவமதிப்பான செயல் உலகில் வேறெங்கும் நடைபெறவில்லை. இலங்கைக்குத் திரும்ப வேண்டும் எனவும் இலங்கைத் தமிழ் மக்களின் எதிர்காலம் தொடர்பாகவும் கவனத்திற் கொண்ட பிரபாகரன் அவர்களது கோரிக்கைக்கு இண்க்கம் தெரிவித்தார். இந்த அடிப்படையிலேயே 1987 ஜூலை மாதம் 29 ஆம் திகதி கொழும்பில் ராஜீவ் காந்தியும், ஜே.ஆர். ஜயவர்த்தனவும் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். ஆனால், பிரபாகரன் ஆகஸ்ட் 04 ஆம்திகதி சுதுமலை அம்மன் கோவில் வளவில் மாபெரும் கூட்டமொன்றில் இந்த ஒப்பந்தம் எனக்கு யாழப்பாணத்தில் காட்டப்பட்டிருந்தால் தான் இந்தியா சென்றிருக்க மாட்டேன் என ஆணித்தரமாகக் கூறியிருந்தார். இந்த ஒப்பந்தத்தின் ஒரு ஷரத்தையாவது இலங்கை அரசாங்கம் செயற்படுத்தவில்லை. ஆகவே, அந்த ஒப்பந்தம் தோல்வியில் முடிவடைந்தது. இலங்கைத் தமிழர் தம் வரலாற்றினையும் அவர்களது அபிலாஷைகளையும் இந்திய உத்தியோக வர்க்கம் நன்கு அறிநந்திருக்காமையே இத்தோல்விக்கான காரணமாகும். அதே வேளையில் சிங்கள அரசியல் தலைவர்களின் கடந்த கால ஏமாற்றுப் படலங்ளையும், கபட நாடகங்களையும் கூட இந்திய உத்தியோக வர்க்கம் அறிந்திருக்கவில்லை.

இலங்கை, இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் விடுதலைப் புலிகள் தமது பாதுகாப்புக்காக ஆயுதங்களை வைத்திருக்கலாம். என்றிருந்த போதிலும், இந்தியாவிலிருந்த பாக்கு நீரிணை மூலம் இலங்கை திரும்பிய விடுதலைப் புலிகள் இலங்கைத் தளபதிகளான குமரப்பா மற்றும் புலேந்திரன் உட்பட 17 விடுதலைப் புலிகள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு பலாலியில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். இதனையறிந்த இந்திய இராணுவம் அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கியது. ஆனால் இந்திய மத்திய அரசு அவர்களைக் கொழும்புக்கு அனுப்பவேண்டும் என்ற இலங்கை அரசின் கோரிக்கைக்கு உடன்பட்டது. இதனைத் தொடர்ந்து விடுதலைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலிகளுக்கும், இந்திய இராணுவத்துக்கும் இடையில் யுத்தம் மூண்டது. முதல் வாரத்தில் மாத்திரம் இந்திய அரசாங்கத்தின் 14 டாங்கிகளும் 05 ஹெலிகொப்டர்களும் கெரில்லா இயக்கமான விடுதலைப் புலிகளால் நிர்மூலமாக்கப்பட்டது. அண்டை நாடுகளுடன் நடை பெற்ற யுத்தங்களிற் கூட இவ்வாறான தொரு தோல்வியை இந்தியா எதிர்கொள்ளவில்லை. பாகிஸ்தானுடன் நடைபெற்ற யுத்தத்தில் இந்தியா 1047 வீரர்களை மட்டும் இழந்தது. ஆனால் ஒரு கெரில்லா இயக்கமான விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தில் இந்தியா 1155 வீரர்களை இழந்தது. இவை உத்தியோகபூர்வமான புள்ளி விபரங்கள். உத்தியோகப் பற்றற்றவை இன்னமும் கூடுதலாக இருக்கலாம். 1987 நவம்பர் நடுப்பகுதியில் இந்திய இராணவம் யாழ் மருத்துவமனைக்குள் பிரவேசித்து டாக்டர்கள், தாதிகள் மற்றும் நோயாளர் உட்பட அநேகரைக் கொன்றுகுவித்தது. 5000வருட உலக இராணுவ வரலாற்றில் இவ்வகையான காட்டுமிராண்டித் தனமான செயலொன்று நடை பெறவில்லை என்பதே எமது கணிப்பு. 32 மாதங்களுக்கு மேலாக நடைபெற்ற இந்த யுத்தத்தில் 6,500 இற்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழ் மக்கள் இந்திய இராணுவத்தினால் கொல்லப்பட்டனர். இது தொடர்பாக இதுவரையில் இந்தியப பிரதமர் ஒருவரோ இந்திய அமைச்சர் ஒருவரோ இலங்கைத் தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கேட்கவில்லை.

நோர்வே நாட்டின் அனுசரனையுடன் இலங்கை அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தாய்லாந்தில் இரண்டு சுற்றுப் பேச்சுவார்த்தை நடைபெற்றது உலகறிந்த விடயம். இப்பேச்சவார்ததையில் இந்தியவின் பங்களிப்பு எப்படியானது என்பதைனச் சர்வதேச சமூகம் நன்கு உணர்ந்துவிட்டது. கடந்த மாதம் ஒஸ்லோவில் நடைபெற்ற சேதமுற்ற வட கிழக்குப் பிராந்தியத்துக்கு உதவி வழங்கும் மாநாட்டில் இந்தியாவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதிலும் இந்தியா பங்குபற்ற மறுத்துவிட்டது. இதன்மூலம் இந்தியாவின் உள்நோக்கத்தைச் சர்வதேச சமூகம் நன்கு அறிந்து கொண்டது. ஆனால் சிங்கள சமூகத்துக்கு குறைந்த வட்டி வீதத்தில் 20 கோடி அமெ. டொலர் இந்தியாவால் கடனாக வழங்கப் பட்டுள்ளது.

இந்திய மத்திய அரசு இலங்கைத் தமிழ் மக்களுக்குப் புரியும் துரோகத்துக்கு இதனைவிட வேறென்ன எடுத்துக்காட்டு இருக்க முடியும்? சமீபத்தில் இலங்கைக்கு விஜயம் செய்த இந்திய வெளிவிவகாரச் செயலர், பெரும்பாலான தமிழ் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட கட்சியின் பிரதி நிதிகளைச் சந்திக்காது பாராளுமன்ற அங்கத்துவமற்ற மற்றும் மொத்தத்தில் மூன்று பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசியமை



ஜனநாயகத்தைக் கேவலப்படுத்துமோர் செயலாகும். மேலும், இலங்கை அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான தீர்வு. பிராந்திய பாதுகாப்பு அச்சுறுத்தலாக அமையக் கூடாதென மறைமுகமான எச்சரிக்கையொன்
றையும் விடுத்திருந்தார். சுருங்கக் கூறுவதானால் இலங்கைத் தமிழர் விடத்தில் இந்தியாவின் கொள்கை வைக்ககற்பட்டடை காவல் நிலை கொள்கையே என்பதை வருத்தத்துடன் தெரிவிக்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20

## அரசியல் நடவடிக்கைகளில் தமிழ் மக்கள் விவேகத்துடன் செயற்படுவது அவசியம்

யாழ்ப்பாண இராச்சியம் 1621 ஆம் வருடத்தில், யுத்தத்தில் போர்த்துக்கேயருக்கு தனது இறையாண்மையையும், சுதந்திரத்தையும் பறி கொடுத்தது. அவர்களது ஆட்சியைத் தொடர்ந்து ஒல்லாந்தர்களும்,அதனைத் தொடர்ந்து 1948 வரையில் பிரித்தானியரும் ஆட்சி செய்தனர். தமிழர்களுக்கான சுதந்திரத்தை அவர்களுக்கே வழங்காத பிரித்தானிய அரசாங்கம் சிங்கள சமுதாயத்திடமே தாரை வார்த்து விட்டுச் சென்று விட்டது. தமிழ்ப பிராந்தியம் 327 வருட காலமாக மேற்குலக நாடுகளின் ஆதிக்கத்திற்குள் கட்டுப் பட்டிருந்தது. கடந்த 54 வருடகாலமாகச் சிங்கள தேசத்தின் ஆதிக்கத்துக்குள் அகப்பட்டுத் தத்தளிக்கின்றது. மேற்குலக நாடுகளின் 327 வருட ஆட்சியை விட சிங்கள தேசத்தின் 54 வருட ஆட்சிக்காலத்தில் தமிழ் மக்கள் எதிர்நோக்கிய பாரிய துயரங்களும், அவலங்களும் உலகறிந்த விடயமாகும். இனக் கலவரங்கள், இனப் படுகொலைகள் மற்றும் இனச் சுத்திகரிப்பு, பாலியல் வல்லுறவுகள் சிங்களப் படையினரால் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறான பாரிய செயற்பாடுகள் உலகில் வேறெங்கும் நடைபெறவில்லை. தமிழர்களைப் பூண்டோடு அழிக்கவேண்டுமென்ற கொள்கையை நடைமுறைப்படுத்தும் நோக்கில், மக்கள் தொகைக்கேற்பப் பார்க்குமிடத்து உலகிலேயே அதிக வீதமான இராணுவத்தைக் கொண்டுள்ள சிங்கள தேசம், தமிழ் மக்கள் செறிந்து வாழும் நிலப்பரப்பில் மிகவும் சிறியதான யாழ். குடா நாட்டில் மாத்திரம் 42,000 படையினரைக் குவித்து வைத்துள்ளது. அதாவது ஒரு சதுர மைலில் 20க்கும் மேலான சிங்களப் படையினர் நிலைகொண்டுள்ளனர். இவ்வாறான விகிதாசாரத்தில் இராணுவம் குவிக்கப்பட்டிருப்பது போல் உலகில் வேறெங்கும் இடம்பெறவில்லை.

### தமிழ் மக்களின் எதிர்ப்புணர்வு

தமிழ் மக்களின் எதிர்ப்புணர்வு தொடர்பாகக் கவலையுடன் குறிப்பிட வேண்டியுள்ளது. தமிழர் தேசம் கடந்த 381 வருடங்களாக அந்நியர்களால் ஆளப்பட்டு வருகின்றது. ஆகவே தமிழர், சிறுபான்மையினர் அல்லர் என்பது நிரூபிக்கப்பட்டு விட்டது. இந்த நிலைப்பாடு தொடர்பாக சேர் பொன்னம்பலம் இராமநாதன் காலம்



தொடக்கம் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் காலம் வரையில் முன்னாள் தேசிய சட்டசபையிலோ, பாராளுமன்றத்திலோ அன்றேல் சர்வதேச சமூகத்தினரிடையிலோ எடுத்துக் கூறப்படாதிருந்தமை கவலைக்குரிய தொன்றாகும்.

தமிழர் அடிமை விலங்கை உடைப்பதற்காக 1974 இல் பிரபாகரன் தலைமையிலான விடுதலைப் புலிகளின் உதயம், இன்று சர்வதேசப் புகழ்பெற்றி ருப்பது மாத்திரமல்லாது, தமிழ்ப் பிராந்தியத்தின் 70 வீதம் வரையினதான நிலப் பரப்பையும் விடுவித்து விட்டனர். தமிழர் தேசத்தின் 30 வீதி நிலப்பரப்பில் மாத்திரமே ஆக்கிரமிப்புப் படையான சிங்கள இராணுவம் நிலை கொண்டுள்ளது.

லண்டன் மாநகரில் இயங்கும் சர்வதேச இராணுவ விடய ஆராய்வு நிறுவனத்தின் ஆய்வின் பிரகாரம், ஒரு சாதாரண கெரில்லா வீரனுக்கு 22 மரபுவழி இராணுவத்தினர் சமன் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த வகையில் உலகப் புகழ் பெற்ற விடுதலைப் புலிகளின் கெரில்லா வீரர் ஒருவருக்கு, 44 மரபு வழி இராணுவத்தினர் சமன் எனவே கருத வேண்டும். ஆயுதந் தரித்த 12,000 வீரர்கள் விடுதலைப் புலிகளில் இருந்தால் சிங்களப் படையில் 5,28,000 வீரர்கள் இருத்தல் வேண்டும். ஆகவே, இன்றைய சூழ்நிலையில் சிங்களப் படைக்கு, 5,28,000 வீரர் களைச் சேர்த்துக் கொள்வது முடியாத காரியம். சிங்களப் படைக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் முயற்சிகள் பலவற்றிலும் தோல்விகளையே தழுவிக் கொண்டனர். மேலும் யுத்த நிறுத்தம் கடைப்பிடிக்கப்படும் கடந்த ஒரு வருட காலத்தில் 4,500 இராணுவத்தினர் இராணுவத்தை விட்டுத் தப்பி ஓடிவிட்டனர் என்ற கூறப்படுகிறது.

### தமிழர் தாயகத்தின் எதிர்காலம்

சுதந்தரம் தமிழர் தாயகம் ஒரு வகையில் மலர்ந்து விட்டாலும், மலராமைக்கான காரணத்தையும் சிந்தித்தல் வேண்டும். இன்றைய சர்வதேச அரசியல் நிலைப்பாட்டை நோக்குமிடத்து எமது சுதந்திரத்தை மீளப் பெறுவதற்கு இடையூறுகள் சில உள்ளனவென்பதை உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். சரித்திரத்தில் பாகிஸ்தான என்ற நாடு இருந்திருக்கவில்லை. ஆனால், முகமட் அலி ஜின்னா, 1942 ஆம் வருடத்தில் அலிகார் முஸ்லிம் பல்கலைக்கழகத்தில் உரையாற்றியபோது இந்திய உபகண்டத்தில் முஸ்லிம்கள் சிறுபான்மையினர் அல்லர். ஆனால், அவர்களுக்கென ஒரு நிலம் இல்லாததே குறைபாடு என்று முழக்கமிட்டார். அதன் பின்னர் அவரின் விடாமுயற்சியினால் பாகிஸ்தான் என்ற தேசம் உருவாகிவிட்டது. ஆனால், தமிழர் சரித்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படியானதல்ல. 6,500 வருடங்களாகச் சுதந்திரத்தைச் சுவாசித்த தேசம் தமிழர் தேசம். 327 வருடங்கள் மேற்கத்திய நாடுகளுக்கும், 54 வருடங்கள் சிங்கள தேசத்திற்கும் அடிமைப்பட்டு விட்டது. ஆகவே, எந்தக் கோணத்திலிருந்து பார்த்தாலும் இழந்த சுதந்திரத்தை மீண்டும் பெறுவதற்கான முழு உரிமையும் தமிழருக்கு உண்டு. எனவே சர்வதேச மாற்றங்களுக்கேற்ப தமிழர் உரிமைகளை அடகு வைக்க முடியாது. யதார்த்த நிலையை நோக்குமிடத்து சர்வதேச நாடுகள் என்ற வகையில் முக்கியமாக அமெரிக்காவையும், மேற்குலக நாடுகளையும் தான் நாம் கவனத்திற்கொள்ள வேண்டும். இலங்கைப் பிரச்சினை ஒரு பயங்கரவாதப் பிரச்சினை அல்ல என்பதனை அமெரிக்காவும்,மேற்குலக நாடுகளும் நன்கு உணர்ந்து கொண்டன.

### இந்தியாவின் நிலைப்பாடு

தமிழர் விடயத்தில் இந்தராகாந்தி அம்மையார் கடைப்பிடித்த கொள்கை போற்றற்குரியது. ஆனால், அவரது புதல்வர் ராஜீவ்காந்தி 1987 ஏப்ரல், மே மாதங்களில் சைப்பிரசில் எவ்விதம் துருக்கி தலையிட்டதோ, அதேவகையில் இலங்கையில் இந்தியா தலையிடுவதற்கான யோசனைகள் இருந்ததாக அறிந்தோம். இந்த யோசனைகள் இருந்ததாக அறிந்தோம். இந்த யோசனைக்கு மாற்றீடாகச் சில அழுத்தங்களின் பிரகாரம் இலங்கையின் இறையாண்மையை மீறி இந்தியா யாழ்ப்பாண மக்களுக்கு 1987 ஜூன் 04ஆம் திகதியன்று ஆகாயமார்க்க மாக உணவுப் பொட்டலங்களைப் போட்டது. அடுத்த நாளான 05ஆம் திகதி இந்திய ஜனாதிபதியான ஷெயில் சிங், இந்தியா, இலங்கையின் இறையாண்மையை மதிக்கின்றது. ஆனால், தமிழர்களின் பாதுகாப்புக்கு இந்தியா பொறுப்பெடுக்கும் என உரையாற்றினார். ஆனால், ஒரு மாதகாலத்தில் இந்தியா தனது நிலைப் பாட்டினை மாற்றி சிங்கள மக்களுக்கு நூற்றுக்கு நூறு வீதம் சார்பான வகையில் இந்திய, இலங்கை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது. தமிழ் மக்களுக்கப் பாதகமாக அமைந்திருந்தமையால் அந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் தமிழ் மக்களை நசுக்குவதற்காக இலங்கை அரசாங்கத்தின் வேண்டுதலின் பிர்காரம் இராணுவம் மற்றும் இராணுவத் தளபாட வசதிகளை வழங்குவதற்கு இந்தியா இணங்கி யிருந்தது. இந்தியாவுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்தத்திற்கு இந்த ஒப்பந்தமே காரணமாகும்.

2000 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஆனையிறவு இராணுவ முகாம் வீழ்ச்சி அடைந்த பின்பு பலாலி இராணுவத் தளத்தையும், காங்கேசன்துறை துறை முகத்தையும் விடுதலைப் புலிகள் கைப்பற்ற



முனைந்த வேளையில், யாழ், குடா நாட்டில் நிலைகொண்டிருந்து 40,000 சிங்களப் படையினரின் கதி என்னவாகுமோ என மனம் கலங்கி, இலங்கை, இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் அரசு, இந்திய அரசிடம் இராணுவ உதவியையும், இராணுவ ஆயுத உதவியையும் கேட்டது. இந்த இரண்டு கோரிக்கைகளையும் கருணா நிதியின் அழுத்தம் காரணமாக இந்திய அரசு மறுத்துவிட்டது. இக்காலகட்டத்தில் இந்திய அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கசப்புணர்வு நிலவியதையும், நினைவுகூறுதல் வேண்டும். தமிழ் நாட்டு மக்களின் உணர்வலைகளை மத்திய அரசு மதிக்கின்றது என்பது இதன் மூலம் புலனாகின்றது. ஆகவே எதிர்காலத்தில் சிங்கள அரசாங்கத்துக்குச் சார்பாக தமிழ் மக்களுக்கு எதிராக அமெரிக்காவோ, பாகிஸ்தானோ அல்லாது சீனாவோ வழங்கக் கூடிய இராணுவ தலையீடுகளை தனது நாடடின் நலன் கருதியாவது இந்தியா பார்த்துக் கொண்டிராது என்பதை கவனத்திற் கொள்ள வேண்டும்.

சர்வதேச நாடுகளின் சதுரங்க விளையாட்டில் இலங்கையும், தமிழ் மக்களும் உட்பட்டிருப்பதால், தமிழ் மக்களுக்கான இராணுவப் பலம் திருப்திகர மானதாக இருந்தாலும், அரசியல் முனைப்புகளில் மிகவும் அவதானமும், மதிநுட்பமாவும் நடந்துகொள்ள வேண்டியது அவசியம்.

இந்தியாவின் விருப்பத்துக்கு மாறாக அமெரிக்க, பாகிஸ்தான் மற்றும் சீன இராணுவ தலையீடு நடைபெறமுடியாது என்பதே எமது நிலைப்பாடு. இலங்கையில் வெளிநாட்டுச் சக்திகள் தலையிடுவதனை இந்தியா ஒருபோதும் பொறுத்துக் கொள்ள மாட்டாது என்பதனை மறைந்த இந்திராகாந்தி அம்மையார் ஆணித்தர மாகக் கூறிவிட்டார். இந்தக் கொள்கைக்கு ஆதரவாக, தெற்காசிய பாதுகாப்பு விடயங்களை இந்தியா பொறுப்பேற்க வேண்டுமென அமெரிக்க முன்னாள் வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ஹென்றி கீஸிங்கர் கருத்துத் தெரிவித்திருந்தார். ஆகவே, தமிழ் மக்களை நசுக்குவதற்காக அரசாங்கம் அமெரிக்க உதவியைக் கோரினாலும் அவர்கள் இராணுவ ரீதியில் தலையிடுவதற்கான சாத்தியமில்லை. இந்த விடயத்தில் இந்திராகாந்தி அம்மையாரின் கொள்கையையே இன்றைய இந்திய அரசும் கடைப்பிடித்து வருகின்றது. எனவே இச்சதுரங்க விளையாட்டுக் களுக்கமைய விடுதலைப் புலிகள் மேற்குலக நாடுகளுடன் இராஜதந்திர ரீதியில் சிநேகபூர்வமான கொள்கையை அனுஷ்டிப்பது அவசியம். அதே வேளையில் சினிமா மோகத்தில் உள்ள தமிழ் நாட்டு மக்களின் கவனத்தை ஈழத் தமிழர் சார்பாகத் திசைதிருப்புவதற்கான வழிவகைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். அது நமக்கோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவலரணாக அமையலாம். இந்திய மத்திய அரசைப் பொறுத்தவரையில் தமிழர்களுக்கு இராணுவ உதவிசெய்யாவிடினும் இலங்கைக்கு இராணுவ உதவியோ, பொருளாதார உதவியோ வழங்காமலிருந்தால் அதுவே போதுமான தாகும்.

மேலுள்ளவற்றுக்கிணங்க, என்ன ரீதியில், எந்த நோக்கிற்காக சிங்கள தேசத்துடன் பேச்சு வார்த்தை நடாத்த வேண்டுமென்றே காரணம் எழுகின்றது. சிங்கள தேசத்தின் ஆக்கிரமிப்புக்கு தமிழ்த் தேசம் அகப்பட்டுள்ளது. இதுவே இரு தேசங்களுக்கும் இடையிலுள்ள உறவுகள். எனவே ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்ற வேண்டுமென சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்க வேண்டும். இதனை விடுத்து, கடந்த 800 வருடங்களாக சுதந்திரமாகவும், இறையாண்மை யுடனும் இருந்த மூன்று இராச்சியங்களை ஒன்றிணையுமாறு கேட்பது நீதியுமல்ல, நியாயமுமல். கடந்த 54 வருடகாலமாக சிங்கள தேசம் தமிழ்த் தேசத்தை ஆக்கிர மிப்புச் செய்ததனை இல்லாதொழிக்கவே விடுதலைப் புலிகள் ஆயுதமேந்தினர். இதனை மறந்து, ஆக்கிரமிப்புச் செய்த தேசத்துடன் ஆக்கிரமிப்புக்குள்ளான தமிழ்த் தேசம் சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் சமஷ்டி, கூட்டாட்சி, ஒற்றையாட்சி என்று தீர்மானிக்கும் செயலானது அந்த ஆக்கிரமிப்பை சட்டபூர்வமாக நியாயப்படுத்துவ தாகும்.

இந்தோனேசியா மக்களை ஒல்லாந்தர் ஆக்கிரமித்தனர். ஆனால், அவர்கள் ஆயுதமேந்தி விடுதலை பெற்றனர். வியட்நாம் மக்களை பிரான்ஸ் நாடு ஆக்கிர மித்தது. அதற்கு அமெரிக்காவும் ஆதரவாக உதவி வழங்கியது. ஆனால், வியட்நாம் மக்கள் ஆயுதமேந்தி அமெரிக்கர்களையும் விரட்டியடித்தனர். இதே மாதிரியாக ஆபிரிக்காவிலும் பல நாடுகளில் நடைபெற்று விடுதலை பெற்றார்கள். ஆகவே தமிழ்த் தேசமும் 381 வருடகாலமாக அந்நியரின் ஆதிக்கத்துக்குள்ளாகி இன்று ஆயுதமேந்திப் போராடுவதன் மூலம் இழந்த சுதந்திரத்தை மீளப்பெற முழு உரிமையும் உண்டு என்பதனை சர்வதேச சமூகத்துக்கும், இந்தியாவுக்கும் தெளிவுடக் கூற விரும்புகிறோம்.



21

# மனித உரிமைகள் குறித்துப் பேசுவதற்கு முன்னர் இலங்கை அரசு சற்று பின்னோக்கிப் பார்க்க வேண்டும்

ஜேர்மனியில் நடைபெறவுள்ள ஐந்தாம் கட்டச் சமாதானப் பேச்சு வார்த்தைக்கான நிகழ்ச்சி நிரலில் மனித உரிமைகள் தொடர்பான விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருப்பதாக அறிய வருகிறது. உலகின் பல நாடுகள் மனித உரிமைகள் தொடர்பாக அக்கறை காட்டி வரும் அதேவேளையில், மனித உரிமைகள் தொடர்பாக கதைப்பதற்கான எவ்வித தகைமையும் இலங்கை அரசாங்கத்துக்குக் கிடையாது. மனித உரிமைகள் தொடர்பாக இலங்கை அரசாங்கம் கவனம் செலுத்துவதில்லை என்பதைக் கடந்த 56 வருட கால நிகழ்வுகள் எடுத்துக் காட்டுகின்றன.

1956, 1958, 1977, 1981 மற்றும் 1983 ஆகிய வருடங்களில் அரச ஆதரவுடன் நடைபெற்ற இனக் கலவரங்களில் ஆயிரக் கணக்கான தமிழ் மக்களின் உயிர்கள் பறிக்கப்பட்டன. அவர்களின் வீடுகள், வியாபாரத் தலங்கள் எரிக்கப்பட்டன. அல்லது அழிக்கப்பட்டன. இவ்வாறான இனக் கலவரங்களைப் புரிந்தவர்கள் எவரையாவது அரசாங்கம கைது செய்து விசாரணை நடத்தி தண்டனை வழங்கியதா? இவ்வாறான செயல்கள் மனித உரிமை மீறல் இல்லையா?

1983 இல் நடைபெற்ற அரசாங்க ஆதரவுடனான இனப்படுகொலைகள் உலகையே வியப்பிலாழ்த்தும் வகையில் நடத்தப்பட்டன. 4000 க்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழ் மக்களை வீடுகளில் இருந்து வெளியே இழுத்து வந்து வீதிகளில் வைத்து பெற்றோல் ஊற்றி கொளுத்தினர். அரச சிறைச்சாலைகளில் இருந்த தமிழக் கைதிகளில் 56க்கும் மேலானோர் கொலை செய்யப்பட்டனர்.

உலகமே அதிர்ச்சியடையும் வகையில் இக்கொடுஞ்செயல் களைப் புரிந்தவர்களில் எவராவது இது வரையில் கைது செய்யப்பட வுமில்லை. நீதிமன்றத்தில் நிறுத்தப்படவுமில்லை. இலங்கையில் இவ்வாறான பாரிய மனித உரிமை மீறல் குற்றங்களைப் புரிந்தவர்கள் தண்டிக்கப்பட்டார்களா? குற்றம் புரிந்தவர்களை இனங்கண்டு அவர்களைத் தண்டிப்பது அரசாங்கத்தின் கடமை.

1983 இல் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட உள்நாட்டு யுத்தம் 2001 ஆம் வருடத்தின் பிற்பகுதி வரை நடைபெற்றது. இக்காலகட்டத்தில் 70,000 வரையினதான அப்பாவித் தமிழ் மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொலை செய்யப்பட்டனர். அநேக இடங்களில் தமிழ் இனச் சுத்திகரிப்பு நடைபெற்றது. இலட்சக் கணக்கான தமிழ் மக்களது வீடு வாசல்கள் அழிக்கபட்டன.ஆயிரக்கணக்கான இந்து மற்றும் கத்தோலிக்க, கிறிஸ்தவ மக்களின் வழிபாட்டுத் தலங்கள் அழிக்கப்பட்டன. நூற்றுக் கணக்கான தமிழ்ப் பாடசாலைகள் சேதமாக்கப்பட்டன. இலட்சக் கணக்கான தமிழ் மக்கள் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக வசித்து வந்த இடங்களிலிருந்து விரட்டியடிக்கப்பட்டு அவர்கள் வாழ்ந்த இடங்கள் அதியுயர் பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டன. தமிழ் யுவதிகள் பாலியல் வல்லுறவுக் குட்படுத்தப்பட்டனர். இக்கொடூரமான செயல்களைப் புரிந்தவர்கள் பாதுகாப்புப் படையினர் ஆவர்.

இவ்விதமான நெஞ்சை உருக்கும் வகையிலான செயல்களைப் புரிந்தவர்கள் இப்போது மனித உரிமைகள் தொடர்பாகப் பேச வேண்டுமென்பதை எவ்விதத்தில் நியாயப்படுத்த முடியும்? உலகில் சனத்தொகை ரீதியில் அதிக இராணுவத்தைக் கொண்ட சிங்கள இராணுவமே மேற்கூறிய பாரிய மனித உரிமை மீறல்களை மேற்கொண்டதனை ஆணித்தரமாகக் கூறமுடியும். இந்நிகழ்வுகளில் சிலவற்றை மட்டும் வாசகர்களுக்குத் தருகிறோம்.

கொக்கட்டிச் சோலை, வந்தாறுமூலை, திருகோணமலை மாவட்டம், வல்வெட்டித்துறை, நெடுந்தீவு, பொல்கொடவாவி, பிந்துனுவெவ முகாம், மயிலந்தனை போன்ற கொடிய சம்பவங்கள் உலக கவனத்தை ஈர்த்துவிட்டன. இச் சம்பவங்களில் ஈடுபட்ட எவரும் இதுவரை தண்டிக்கப்படவில்லை. இவற்றை விட நவாலி சென்.பீட்டர்ஸ் தேவாலயக் குண்டுத் தாக்குதல், புதுக்குடியிருப்புக் குண்டுத் தாக்குதல், நாகர் கோவில் பாடசாலை மாணவர்கள் மீதான குண்டுத் தாக்குதல் ஆகியன உலக மனித நேயத்தை அதிர்ச்சிக்குள்ளாக்கிய சம்பவங்க ளாகும். யாழ் குடாநாட்டில் யுத்தம் நடைபெறாத வன்செயல்கள் இடம் பெறாத 1996 ஏப்ரல் மாதத்தில் காணாமற் போன 740 ஆட்கள் தொடர்பாக எதுவும் சொல்ல முடியாது அரசாங்கமும் தவிக்கின்றது.

உலக அபிப்பிராயம் எனும் போது, குறிப்பாக மனித உரிமை மீறல் தொடர்பான ஐ.நா.கூட்டத் தொடர்களில் நடைபெற்ற விவாதங்களை எடுத்துரைப்பது மிகவும் அவசியமாகும்.

1983இல் இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலைகளின் பின்னர் ஐ.நா. கூட்டத் தொடர்களில் இலங்கையின் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக தொடர்ச்சியாகக் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. 1994 ஆம் ஆண்டு நடைபெற்ற மனித உரிமைக் கூட்டத் தொடரில் 19 புகழ் பெற்ற அரச சார்பற்ற நிறுவனங்கள் மனித உரிமை மீறல் தொடர்பாக



இலங்கை அரசாங்கத்திற்குப் பலத்த கண்டனங்களைத் தெரிவித்தன.

1997 ஆம் ஆண்டில் இலங்கையில் பாரதூரமான அளவில் மனித உரிமை மீறல்கள் நடைபெறவில்லை என லக்ஷ்மன் கதிர்காமர் கூறியதன் பின்னர் ஐ.நா.சரித்திரத்தில் கேள்விப்பட்டிராத அளவுக்கு 53 பதிவு செய்யப்பட்ட சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களும் பதிவு செய்யப்படாத 17 சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களும் ஒன்ற சேர்ந்து மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இலங்கை அரசாங்கத்துக்கு எதிராகத் தீர்மானமொன்றினை நிறைவேற்றின.

இந்நிறுவனங்கள் ஐரோப்பா, ஆபிர்க்கா, வட அமெரிக்கா மற்றும் தென் அமெரிக்காவைச் சேர்ந்தவையாகும். அவர்கள் நிறைவேற்றிய தீர்மானத்தின் முக்கிய விடயமாக இலங்கை அரசாங்கம் தனது படைகளைக் கொண்டு இலங்கை யில் தமிழர்களைப் பூண்டோடு அழிக்க முயற்சிப்பது குறிப்பிடப்பட்டிருந்தது.

இத்தீர்மானத்துக்கு மேலும் ஒரு படி மேலே சென்று சிங்களப் படையினர் தமிழர் பிரதேசங்களிலிருந்து நிபந்தனையற்ற வகையில் வெளியேற வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது. இவ்வாறான கண்டனம் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராகவே மேற்கொள்ப்பட்டது.

வெளிநாடுகளிலுள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள் தமிழர் பிரதேசங்களிலிந்து சிங்கள இராணுவம் வெளியேற வேண்டுமெனத் தீர்மானமெடுத்திருக்கையில் இவ்வாறான கோரிக்கையை இலங்கையிலுள்ள எந்தவொரு தமிழ்க் கட்சி கூட இதுரையில் முன்வைக்காமல் இருப்பது வேதனைக்குரிய விடயமாகும்.

தமிழ் நாட்டிலுள்ள சகல கட்சிகளும் ஒன்றிணைந்து சில காலங்களுக்கு முன்னர் இவ்வாறானதொரு கோரிக்கையை முன் வைத்தன. 1998 டிசம்பர் மாதம் அமெரிக்க காங்கிரஸின் பல முக்கியஸ்தரைக் கொண்ட அரசியற் குழுவொன்று இலங்கையின் மனித உரிமை மீறலை வன்மையாகக் கண்டித்திருந்தது. சில வருடங்களுக்கு முன்னர் இலங்கைக்கு வந்த மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஆராய்ந்த தென்னாபிரிக்காவைச் சேர்ந்த குழுவொன்று இலங்கை அரசாங்கத்தைக் கடுமையாக கண்டனம் செய்திருந்தது. இவற்றின் மூலம் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக உலக நாடுகள் இலங்கை அரசாங்கத்தை வன்மையாக கண்டிப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

1998 ஏப்ரல், மே மாத "பாதுகாப்பு உலகம்" என்ற சஞ்சிகையில் இலங்கை இராணுவத்தின் வேண்டுதலின் பிரகாரம் 67 வெவ்வேறு வகையான ஆயுதங்களை வழங்குவதற்கு பிரித்தானிகளுக்கு அனுமதி வழங்கியிருந்ததாக குறிப்பிட்டிருந்தது. வெவ்வேறு வகையினதான இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

67 வகைகளில் இரசாயன ஆயுதம் இரண்டாவது இடத்தைப் பிடித்திருந்தது. பேரழிவை உண்டு பண்ணும் ஆயுதங்களை வைத்திருக்கிறார்கள் என்பதற்காக ஈராக்கிற்கு எதிராக யுத்தம் புரிவதற்கு இன்று அமெரிக்ஃ ாவும் பிரித்தானியாவும் ஆயத்தமாகின்றன. இதே பிரித்தானியா இலங்கையில் தமிழர்களைப் பூண்டோடு அழிப்பதற்காக பேரழிவை உண்டுபண்ணும் இரசாயன ஆயுதங்களை இலங்கைக்கு வழங்குவதற்கு அனுமதி வழங்கியிருந்தது ஏன் என்ற கேள்வி எழுகின்றது. இவ்வாறு தமிழ் இனத்தையே பூண்டோடு அழிக்க வல்ல இரசாயன ஆயுதங்களை தருவிப்பதற்கு முனைந்த அரசியற் தலைமைத்துவத்திற்கும் இராணுவத் தலைமைத்துவத்திற்கும் எதிராக சார்வதேச குற்றவிலய் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யும் உரிமை தமிழ் மக்களுக்கு உண்டு என்பதனை இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிடுதல் வேண்டும்.

ஐந்தாம் சுற்றுச் சமாதானப் பேச்சுவார்த்தைக்கான நிகழ்ச்சி நிரலில் மனித உரிமை தொடர்பான விடயத்தை அரசாங்கம் உட்புகுத்தியிருப்பதற்கான காரணம் மனித உரிமை மீறல் தொடர்பாக விடுதலைப் புலிகள் மீது குற்றம் சாட்டுவதற் கேயாகும்.

விடுதலைப் புலிகள் மீது சுமத்தப்பட்டிருக்கும் பொதுக் குற்றச்சாட்டுக்க ளாவன 18 வயதுக்குக் கீழ்ப்பட்டவர்களைத் தமது இராணுவத்தில் சேர்ப்பதும், கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களிடம் கட்டாயமாக வரி அறவிடுவதுமாகும்.

மனித உரிமை தொடர்பாக யாழ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் இக்குற்றச்சாட்டைச் சுமத்துகின்றனர். இந்த அமைப்புக்கு போஷகர், தலைவர், செயலாளர் என யாராவது இருக்கின்றனரா என்றும் கேள்வி கேட்க விரும்புகிறேன். யாழ் பல்கலைக்கழகம் என்ற தலைப்பைக் கொ‌ண்டுள்ள இந்த அமைப்பில் யாழ் பல்கலைக்கழகத்தைச் சேர்நத எவரும் அங்கம் வகிக்கவில்லை. அவர்களது குற்றச்சாட்டுக்கள் யாவும் விடுதலைப் புலிகளுக்கு எதிரானதாக உள்ளதே தவிர இராணவத்தினரின் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக எதுவும் தெரிவிப்பதில்லை. யாழ் பல்கலைக்கழகப் பதவியணியினரையோ தமிழ் மக்களின் பிரதிநிதிகளையோ கொண்டிராத அமைப்பு என்று கூறப்படும் ஒருவரை அல்லது இருவரைக் கொண்ட இக்குழுவானது தமிழரைப் பூண்டோடு அழிக்கும் முனைப் பிலுள்ள இராணுவத்தின் ஊதுகுழலாகவே கருதப்படுகின்றது. எனினும் அவர்களது குற்றச்சாட்டுத் தொடர்பாகவும் சிந்திப்பது அவசியம்.

இஸ்ரேல் நாட்டின் பிரதமரான பென் குரியன் 14 வயதிலேயே



ஆயுதம் ஏந்தி கெரில்லா இயக்கத்தில் இணைந்தார். இன்றும் உலக வல்லரசுகளில் ஒன்றான பிரித்தானியாவிலும் 18 வயதிற்குக் குறைவானவர்களும் இராணுவத்திற் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். தாய் தந்தையரை இழந்த குழந்தைகளைப் பராமரிப்பதைத் தமது கோட்பாடாக00000க் கொண்ட விடுதலைப் புலிகள் அவ்வாறான பிள்ளைகளைத் தமது பராமரிப்பில் வைத்திருப்பது தவறா? ஐ.நா.வின் சிறுவர்கள் தொடர்பாகக் கவனம் எடுக்காமையால்தான் விடுதலைப் புலிகள் அவர்களைக் கவனித்து வருகின்றனர். கிழக்கு மாகாணத்திலுள்ள இராணுவ உயர் அதிகாரிகள் தங்கள் வீடுகளில் வேலை செய்வதற்கும் மலசல கூடங்களைக் கழுவுவதற்கும் 9-10 வயது நிரம்பிய பிள்ளைகளைப் பயன்படுத்துவதில்லையா? இவ்விதமான மனித உரிமை மீறல்கள் தொடர்பாக தென்னிலங்கைப் புத்திஜீவிகளோ அன்றேல் அரச சார்பற்ற நிறுவனங்களோ எவ்வாகையிலும் குரல் கொடுக்கவில்லை.

கிழக்கு மாகாணத்தில் சிங்களவர்-தமிழர் முஸ்லிம்கள் அல்லது பௌத்தர்கள்- இந்துக்கள் - கிறிஸ்தவர்கள் என்ற அடிப்படையில் வரி அறவிடப்பட
வில்லை. எவரெவர் பண வசதி உள்ளவர்களோ அவர்கள் இன,மத பேதமின்றி வரி செலுத்துவதற்கு தகுதியுடையவராவர். உதாரணமாக வருடமொன்றுக்கு ரூபா பத்து லட்சம் வருமானமுள்ள தமிழ் வர்த்தகரொருவரும் ரூபா பத்து லட்சம் வருமானமுள்ள முஸ்லிம் வர்த்கரொருவரும் ஒரே வகையினதான வரியையே செலுத்துதல் வேண்டும்..

இவ்வாறே வன்னியில் ஏ-9 பாதையினால் பிரவேசிக்கும் போதும் விடுதலைப் புலிகள் இன-மத பாரபட்சமின்றி பொருட்களின் மதிப்பீட்டுக்கிணங்கவே வரி அறிவிடுகின்றனர். விடுதலைப் புலிகளுக்கு எதிராக மனித உரிமை மீறல் தொடர்பாக ஐ.நா.மன்றங்களில் கண்டனம் தெரிவிக்கப்படவில்லை.

சர்வதேச சமூகமும்-தமிழ்ச் சமூகமும்-சிங்களச் சமூகமும் இரண்டு அடிப் படை விடயங்களை மறந்து விட்டன. 20 வருட கால யுத்தத்தின் போதும் விடுதலைப்புலிகள் ஒரு தமிழ்ப் பெண்ணையோ - சிங்களப் பெண்ணையோ-முஸ்லிம் பெண்ணையோ பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாக குற்றச் சாட்டுக்கள் எதுவும் எழவில்லை. 1991 இலிருந்து 1995 இன் பிற்பகுதி வரை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் யாழ் குடாநாடு இருந்த வேளையில் நடுநிசியிலும் யுவியொருத்தி பாதுகாப்பாக வெளியே உலாவும் நிலையிருந்தது. ஆனால் இன்று கொழும்பு மாநகரில் தமிழ் பெண்ணெருத்தி பகல் 12 மணிக்குக் கூட தனியாக வெளியே செல்ல முடியாது. பல விதமான பயங்கள். இவைதான் மனித உரிமை மீறல்களுக்கான எடுத்துக்காட்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களை பூண்டோடு அழிக்க நினைக்கும் சக்திகளுக்கு இந்தியா ஆதரவளிக்கிறதா?

இலங்கை தொடர்பான இந்தியாவின் நிலைப் பாட்டினை பண்டிதர் ஜவஹர்லால் நேரு காலத்தை விடுத்து, இந்திரா அம்மையாரின் காலத்திலிருந்தே ஆராய்வோம். இந்திரா காந்தி அம்மையாா பிரதமரானதிலிருந்து பாகிஸ்தான் விவாகரத்தில் அவர் கடும் போக்கினைக் கடைப் பிடித்தமை சகலரும் அறிந்த விடயம். மேற்குப் பாகிஸ்தானின் படையினர், கிழக்குப் பாகிஸ்தானின் வங்க மக்களை அடக்கி ஒடுக்கியதன் காரணமாக 1970 மார்கழி மாதம் இந்திய இராணுவத்தை கிழக்குப் பாகிஸ்தானுக்கு அனுப்பினார். இதன் பலனாக வங்காள தேசம் உருவாகி, வங்காளப் பிரதமராக ஷேக் முஜீப் ரஃமான் பொறுப்பேற்றுக் கொண்டார். இவ்விடயத்தில் தலையிடுதலாகாதென சோவியத் யூனியன் அமெரிக்காவுக்கும், சீனாவுக்கும் கடும் எச்சரிக்கை கொடுத்திருந்தது.

ஆயினும், அந்நாட்களில் இலங்கையின் பிரதமராக விளங்கிய திருமதி ஸ்ரீமாவோ பண்டார நாயக்கவின் அரசாங்கம் மாத்திரமல்லாது, மேற்குப் பாகிஸ்தான் இராணுவம் கட்டுநாயக்கா மூலம் கிழக்குப் பாகிஸ்தானுக்குச் செல்வதற்கு அனுமதியும் வழங்கியிருந்தது. அது மாத்திரமல்லாது, ஐ.நா.வின் இலங்கைப் பிரதிநிதி இந்தியாவை மிகக் கடுமையாக விமர்சித்தமை சகலரையும் அதிர்ச்சிக் குள்ளாக்கியது. இதற்கும் மேலாக, இந்தியாவால் சிருஷ்டிக்கப்பட்ட சுதந்திர வங்காள தேசத்தை அங்கீகரித்த கடைசி ஆசிய நாடு இலங்கையாகும். இலங்கையின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம் சர்வதேச ரீதியில் இந்தியா வுக்கு எதிராகச் செயற்பட்டமையே மேற்கூறியவற்றிலிருந்து அறிந்து கொள்ள முடியும். சுருக்கமாகக் கூறுவதானால், ஸ்ரீமாவோ அரசு பாகிஸ்தானுக்கு ஆதர வாகவும், இந்தியாவுக்கு எதிராகவும் செயற்பட்டது என்பது தெட்டத் தெளிவான தாகும். ஆனால், இன்று இந்திய அரசு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் மிக நெருங்கி உறவை வைத்திருப்பது யாவரும் அறிந்தொன்று. எனவே,நேற்றைய எதிரிகள் இன்றைய உற்ற நண்பர்கள்.

**ஜயவர்தன காலத்திலான இந்திய உறவு**

1977 இல் ஜயவர்தன ஆட்சிபீடமேறிய பின்பு அவர் கடைப்பிடித்த



கொள்கைக்கும், இந்திராகாந்தியின் அரசினது கொள்கைக்கும் இடையில் கடுமையான கசப்புணர்வுகளைக் காண முடிந்தது. இந்து சமுத்திரப் பிராந்தியம் அணிசேராக் கொள்கையைக் கொண்டதாக இருக்க வேண்டுமென இந்திராகாந்தி அம்மையார் செயற்பட்டார். ஆனால், ஜயவர்தன ஆட்சி மேற்குலகைச் சார்ந்திருந்தமை சகலரும் அறிந்த விடயம். ஜயவர்தன தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி தெற்கு இந்திய சமுத்திரப் பிராந்தியத்திலுள்ள "டியோ காஷியா" தீவுகளில் அமெரிக்கா தளம் அமைப்பதை வரவேற்றது. இதனை இந்தியா கடுமையாக எதிர்த்தது. அதன் பின்னர் பிரித்தானியா, தென் அமெரிக்காவிலுள்ள போக்லன்ட் தீவுகள் மீது படையெடுத்தலை சகல அணிசேரா நாடுகளும் கண்டித்த போதிலும் இலங்கை மாத்திரம் பிரித்தானியாவுக்குச் சார்பாக நின்றது. 1983 இல் இலங்கையில் தமிழர்களுக்கெதிராக நடைபெற்ற இனப் படுகொலை தொடர்பாக இந்திரா காந்தி அம்மையார் இலங்கைத் தமிழர்கள் மீது அனுதாபம் கொண்டு ஜயவர்தன அரசாங்கத்துக்கு கடும் எச்சரிக்கை வழங்கியதும் யாவரும் அறிந்த விடயம். இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக இந்திரா காந்தி அம்மையாரின் உத்தரவின் பேரில் ஐ.நா.வில் குரலெழுப்பப்பட்டது.

இலங்கையின் தமிழ் ஆயுதக் குழுக்களுக்கு சகல வகையான ஆதரவையும் இந்தியா வழங்கியது யாவரும் அறியாததொன்றல்ல. இதனை ஜீரணிக்க முடியாத ஜயவர்தன,அமெரிக்கா, பிரித்தானியா ஆகிய நாடுகளிடம் இராணுவ உதவி கோரி படு தோல்வி அடைந்ததும் யாவரும் அறிந்ததே. ஆனால், இன்றைய ஐ.தே.கட்சி அரசாங்கத்தின் தலைவர்கள் அடிக்கடி இந்தியாவுக்கு விஜயம் செய்து இந்தியாவொன்றே தமது மிகவும் நெருக்கமான நாடெனக் குறிப்பிடு கின்றனர். இலங்கையின் பிரதமரான ரணில் விக்ரமசிங்கவும், அமைச்சரான மிலிந்த மொரகொடவும் ஒரு வருடத்திற்குள் நான்கு தடவைகள் இந்தியாவுக்கு விஜயம் செய்து இந்தியத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்துவது போல் வேறெந்த நாடுகளிலும் நடைபெறவில்லை.

## பாரதத்தின் நேற்றைய எதிரிகள் இன்று நண்பர்களாக மாறிய மர்மம்!

இந்த மாற்றத்தை நன்கு அவதானிக்கும் போது, இலங்கை, இந்தியாவின் பின்லாந்தாக மாறிவிட்டதோ என்ற சந்தேகம் எழுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேவேளையில், அன்ற விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு வழங்கிய இந்தியா, இன்று விடுதலைப் புலிகளின் பிரமுகர் அன்ரன் பாலசிங்கத்தின் நிழல கூட இந்தியாவிற் படக்கூடாதென்ற கொள்கையை அனுஷ்டித்து வருகின்றது. இந்திரா காந்தி அம்மையாரின் காலத்தில் இலங்கையில் தமிழர்களின் அபிலாசைகள் பூர்த்தி செய்யப்படாவிடில் சமாதானம் நிலவாதெனக் கூறி வந்த இந்தியா, இன்று இலங்கையில் சகல இன மக்களினதும் அபிலாசைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டுமெனக் கூறிவருகின்றது.

இலங்கைத் தமிழர் விடயத்தில் இந்திரா காந்தியின் கொள்கைக்கு எதிர்மாறான கொள்கையை ராஜீவ் காந்தி அனுஷ்டித்தமை யாவரும் அறிந்த விடயம். இந்திரா காந்தி ஏ.பீ.வெங்கடேஸ்வரன் மற்றும் பார்த்தசாரதி ஆகிய அலுவலர்களை ஓரங்கட்டிய ராஜீவ் காந்தி சிங்களவர்களுக்குச் சார்பான கொள்கையைக் கொண்ட அலுவர்களின் ஆலோசனைகளைக் கேட்கத் தொடங்கினர். இதன் பலனாக இலங்கை, இந்திய ஒப்பந்தத்தில் 1987 யூலை மாதம் 29 ஆம் திகதியன்று இலங்கையில் ஜே.ஆர். ஜயவர்தனவும், ராஜீவ் காந்தியும் கைச்சாத்திட்டனர். இந்த ஒப்பந்தத்தின் முக்கிய அம்சமாக இந்தியாவின் நலனும், சிங்களவர்களின் நலனுமே காணக் கிடைக்கின்றது. அப்படியிருந்த போதிலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், மக்கள் விடுதலை முன்னணியும் இந்த ஒப்பந்தத்தைக் கடுமையாக எதிர்த்தனர். மக்கள் விடுதலை முன்னணியினர், சிங்களப் பிரதேசங்களில் எந்தவொரு இந்தியப் பொருளும் விற்பனை செய்யப்படலாகா தெனப் பிரசாரம் செய்தனர். ஆனால், இன்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி மற்றும் சிஹல உறுமய ஆகியன இந்தியாவின் மிக நெருங்கிய நண்பர்களாக மாறிவிட்டன. கிழக்கு மாகாணத்தில் இந்தியப் படைக்கு எதிராகக் குரல் எழுப்பிய முஸ்லிம்களின் தலைவர்கள் இன்று தங்கள் பிரச்சினை தொடர்பாக இந்தியாவிடம் முறையிடுகின்றனர். அன்று தமிழர்களுக்குச் சார்பாக ஐ.நா.வில் குரல் கொடுத்த இந்தியா இன்று தமிழர்களைப் பூண்டோடு அழிக்க வேண்டும் என்ற கொள்கையுடைய சிங்களக் கடும்போக்காளர்களுக்கு ஆதரவாகச் செயற்படுகின்றது. அரசாங்கத்துக்கு வட்டியில்லாத கடனாக 100 மில்லியன் அமெரிக்க டொலரையும் கொடுத்துள்ளது.

ஆனால் வன்னியில் வாடும் அப்பாவிக் குழந்தைகளுக்கு ஒரு பனடோல் வில்லையையோ, ஒரு போத்தல் பாலையோ வழங்குவதற்கு இந்தியாவின் மனித நேயத்தை வெளிப்படுத்துகின்றது. 1941-1942 இல் நடைபெற்ற வங்காளப் பஞ்சத்தில் இலங்கையில் தமிழர்கள் பணம்



வசூலித்து நிவாரணமக கோடி கோடியாக வழங்கினர். 1941 இல் சுபாஷ் சந்திரபோஸ் இந்திய விடுதலை இராணுவத்தை உருவாக்கிய போது மலேயா, சிங்கப்பூர் மற்றும் போர்னியோவில் வாழ்ந்த இலங்கைத் தமிழர்கள் ஆயிரக் கணக்கில் சேர்ந்து உயிர்த் தியாகமும் செய்தனர். சுபாஷ் சந்திரபோஸின் இந்திய விடுதலை இராணுவத்தில் சிங்களத் தமிழர்கள் ஆயிரக் கணக்கில் சேர்ந்து உயிர்த் தியாகமும் செய்தனர். சுபாஷ் சந்திரபோஸின் இந்திய விடுதலை இராணுவத்தில் சிங்களத் தலைவர் ஒரு வராவது சேர்ந்ததுண்டா? இந்த உண்மையை இந்திய அரசியல் தலைவர்களும், இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவரும் நன்கு உணர வேண்டும். ஆனால், இன்றோ வட, கிழக்கைச் சேர்ந்த தமிழ் இளைஞர்கள் கல்விக்காவோ அன்றேல் மத அனுஷ்டானத்துக்காகவோ இந்தியாவுக்கு விசா பெற்றுச் செல்வது முயற் கொம்பாக உள்ளது. அதே வேளையில், சிங்கள இளைஞர்கள் எவ்விதக் கட்டுப் பாடுமின்றி விசா பெற்றக் கொள்கின்றனர். இவ்விதமான பாரபட்சத்தை எப்படி வர்ணிப்பது? எனவே, அன்றைய எதிரிகள் இன்றைய நண்பர்களாக மாறி விட்டனர். அன்று தமிழ் ஆயுதக் குழுக்களுக்கு உதவிய இந்தியா இன்று இலங்கைக் கடற் படையுடன் சேர்ந்து தமிழ்ப் பிராந்தியக் கடற் பிரதேசத்தை முற்றுகையிடவதில் ஈடுபட்டுள்ளது..

## வட கீழ்ப் பிராந்தியத்தில் பௌத்த புதை பொருள் ஆய்வு

உலக புகழ்பெற்ற பௌத்த சமயம் சிங்களவர்களுக்கு மாத்திரம் சொந்த மானதல்ல. அது ஆசியாவின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பௌத்தர்களுக்கும் சொந்தமானது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். புத்தர் பெருமானின் போதனைகள் குறிப்பிட்ட ஏதேனும் ஓர் இனத்துக்காகவன்றி ஒட்டு மொத்தமாக மனித குலத்தின் மேம்பாட்டுக்காகவே அமைந்திருந்தது. வட கீழ்ப் பிராந்தியத்தில் பௌத்த சமயம், அனுராபுர இராச்சிய மன்னர்களாலோ, கோட்டை இராச்சிய மன்னார்களாலோ அன்றி கண்டி இராச்சிய மன்னர்களாலோ வளர்க்கப்படவில்லை. ஆனால், 18 மைல்களுக்க அப்பால் உள்ள தமிழ் நாட்டிலிருந்துதனர் பௌத்த சமயம் வட கீழ்ப் பிராந்தியத்துக்கு வந்தது என்பதைச் சரித்திர காலத்தில் பௌத்த சமயம் தமிழ் நாட்டில் நன்கு வளர்ந்து வியாபித்து இருந்ததனை நாம் அறிவோம். ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலை நூற்றுக்கு நூறு வீதம் பௌத்த சமயத்தையே தழுவியிருந்து. மணிப்பல்லம் என நயினா தீவே குறிப்பிடப்பட்டிருந்தது. கந்தரோடையிலிருந்த பௌத்த சின்னங்களில் திராவிட சின்னங்களும் இருந்தன. வட கீழ்ப் பிராந்திங்களிலுள்ள பௌத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதை பொருள் ஆய்வுக்கு இந்திய அரசு நிதி உதவியும், நிபுணத்துவ உதவியும் வழங்க இருப்பதாக அறிந்தோம். இது இந்தியாவின் மனிதாபிமானத்தை வெளிப் படுத்துகின்ற வெளிப்படுத்துகின்ற போதிலும், இலங்கை இராணுவத்தால் அழிக்கப் பட்ட ஆயிரக்கணக்கான இந்துக் கோயில்களையும், நூற்றுக் கணக்கான பாடசாலை களையும் புனரமைப்புதற்கு ஒரு செங்கட்டியைத் தானும் வழங்காத இந்தியாவின் மனிதாபிமானம் கேள்விக்குரியதாயுள்ளது. இந்தியாவின் 85 சதவீதமானோர் இந்துக்கள் என்பதையும் நாம் மறந்து விடலாகாது.

இந்திய இராணுவம் இலங்கையின் தமிழ்ப் பிராந்தியங்களிலுள்ள இந்துக் கோயில்களினுள் விடுதலைப் புலிகளைத் தேடுவதென்ற போர்வையில் பாதணி களுடன் புகுந்து புரிந்த அட்டகாசங்கள் இன்னமும் இந்து மக்களின் மனதை விட்டு அகலவில்லை. எனவே, இந்திய அரசும், இந்திய உயர் ஸ்தானிகரும் அழிக்கப்பட்ட இந்துக் கோயில்களின் புனர்நிர்மாணம் தொடர்பாக அதிக அக்கறை எடுப்பார்களென இந்துக்கள் எதிர்பார்க்கின்றனர்.

## சமாதானத் தீர்வும் இந்திய நிலைப்பாடும்

அன்று இந்திரா காந்தி காலத்தில் இலங்கையில் சமாதானம் ஏற்பட வேண்டு மெனவும், தமிழர்களின் அபிலாஷைகள் பூரணமாக நிறைவேற்றப்பட வேண்டு மெனவும் செயற்பட்ட இந்தியா இன்று இலங்கையில் சமாதானம் மலர்வதற்கான அறிகுறிகள் தென்படும் வேளையில் சமாதானத்துக்கெதிரான கடும் போக்காளர் களுக்கச் சார்பாக செயற்படுவதனை எவ்வாறு நியாயப்படுத்த முடியும்? சர்வதேச அழுத்தம் காரணமாக விடுதலைப் புலிகளும், இலங்கை அரசாங்கமும் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளனர். தென்னிந்தியாவில் சமாதானப் பேச்சு வார்த்தையை நடத்துவதற்கான கோரிக்கையை இந்திய அரசாங்கம் முழுமையாக நிராகரித்து விட்டது. விடுதலைப் புலிகளின் பிரமுகர் அன்ரன் பாலசிங்கம் மாலை தீவினூடாக இலங்கைக்கு வந்தமைக்கு மறைமுகமாக வெளிப்படுத்தப்பட்ட எதிர்ப்பின் மூலம் மாலைதீவினூடான பயணம் அதன் பின்னர் நிறுத்தப்பட்டு விட்டது. தாய்லாந்து அரசாங்கத்துக்கும் மறைமுக எதிர்ப்புக்கள் வெளிப்படுத்தப் பட்டதாக பத்திரிகைகள் மூலம் அறிந்தோம். கடந்த நவம்பர் மாதத்தில் 40 நாடுகள் பங்குபற்றிய ஒஸ்லோ மாநாட்டுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதிலும் இந்தியா அதில் பங்கு கொள்ளவில்லை. ஆனால், மேற்குலக நாடுகளும், ஜப்பானும் உயர்நிலைப் பிரமுகர்களை அனுப்பியிருந்தனர்.



இந் நிலைப்பாட்டுக்கு இந்தியா கூறும் காரணம் விடுதலைப் புலிகள் தடை செய்யப்பட்வர்களாகையால் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்த முடியாதென் பதாகும். ஆனால், விடுதலைப் புலிகளைத் தடை செய்த பல மேற்குலக நாடுகள் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்துகின்றன. இந்திய அரசின் கடும் போக்கான இந்த நிலைப்பாட்டுக்கு இந்தியாவிலேயே எதிர்ப்புக் கிளம்பிவிட்டது. தமிழ் நாட்டின் முன்னாள் அமைச்சரும் பல்கலைக்கழக உபவேந்தருமான பேராசிரியர் விஸ்வநாதன், இந்திய அரசு தமிழர் தொடர்பான கொள்கையில் மாற்றஞ் செய்ய வேண்டுமென வற்புறுத்தியுள்ளார். முன்னாள் இந்தியப் பிரதமரான குஜ்ரால் இந்தியாவின் கொள்கையைக் கடுமையாகக் கண்டனம் செய்துள்ளார். ஜப்பான் இலங்கைக்கு நிதி உதவி செய்தால் போதும். சமாதானம் மற்றும் அரசியல் விடயங்களில் தலையிட வேண்டியதில்லை என்ற இந்தியாவின் நிலைப்பாட்டை ஜப்பான் நிராகரித்து விட்டது. இவ்விதமான நிலைப்பாட்டினால் இந்தியா சர்வதேச அரங்கில் தனிமைப் படுத்தப்படும் என்பது எமது எண்ணம் . இவ்விதமான முதிர்ச்சி யற்ற குறுகிய நோக்கினால் சர்வதேச அரங்கில் தனிமைப்படுத்தப்படுவது மாத்திரமல்லாது ஐ.நா.பாதுகாப்புச் சபையில் அங்கத்துவம் பெறுவதற்கான வாய்ப்பும் கைநழுவிப் போவதற்கு இடமுண்டு.

ஆப்கானித்தானிலிருந்து இந்தோனேசியா வரை இந்து சமயம் பரவியிருந்தமைக்கான சரித்திர சான்றுகளும் புராதன சின்னங்களும் உள்ளன. ஆனால் முதிர்ச்சியடையாத குறுகிய நோக்குடைய பிராமணித்துவக் கொள்கை யால் இந்திய உபகண்டத்தில் பாகிஸ்தான் உருவாகிவிட்டது. மதரீதியாக இந்தியா மற்றும் பாகிஸ்தான் என்ற நாடுகள் உருவாகிய போதிலும் காஷ்மீர் விவகாரத்தில் இந்தியா அழுங்குப் பிடிக்கொள்கையைக் கடைப்பிடிக்கின்றது. அதே அழுங்குப் பிடிக் கொள்கையையே இந்தப் பிராமணித்துவம் இலங்கைத் தமிழர் விடயத்திலும் விடுதலைப் புலிகளின் விடயத்திலும் கடைப்பிடிக்கிறது. இதற்குச் சான்றாக சமீபத்தில் பிராமணித்துவத்தைக் கடுமையாகக் கடைப்பிடிக்கும் பிரமுகர் ஒருவர் இங்கிலாந்தில் நடை பெற்ற தமிழர் கூட்டமொன்றில் மிகவும் ஆணித்தரமாக தமிழர்களுக்கு இந்திய மத்திய அரசோ அன்றேல் தமிழக அரசோ இனி உதவி செய்யாதெனக் கூறிவிட்டார். இவருடைய கூற்றுக்கும் இன்று இந்தியா கடைப்பிடிக்கும் கொள்கைக்கும் உள்ள ஒற்றுமையை நம்மால் காண முடிகின்றது. ஆகவே, தமிழர்களைப் பூண்டோடு அழிக்கும் கொள்கையுள்ள இனவாத சக்திகளுக்கு இந்தியா அதிக ஆதரவு வழங்குகின்றது என்பதே எமது கருத்து. எனவே அன்றைய எதிரிகள் இன்று நண்பர்களாகிவிட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23

# புரிந்துணர்வு உடன்படிக்கையில் தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை குறித்து குறிப்பிடாதமை பாரிய தவறு

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பான மதிப்பீடொன்றினை மேற்கொள்வது அவசியமானதெனக் கருதுகின்றோம். இந்த ஒப்பந்தத்தில் அமுலாக்கம் தொடர்பாகப் பல்வேறு பகுதியினர் முரண்பாடான கருத்துக்கள் பலவற்றை வெளிப்படுத்தியுள்ளனர். எனவே, இந்த ஒப்பந்தத்தின் வெற்றி தோல்வி தொடர்பான மதிப்பீட்டினை ஆறு கோணங்களிலிருந்து அலசுவது அவசியமாகின்றது. இந்த ஆறு கோணங்களாவன பரந்த நோக்கு, குறுகிய நோக்கு, தமிழர்கள், சர்வதேச நிலைப்பாடு மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை தயார் செய்கையில் விடப்பட்ட மாபெரும் தவறுகள் என்பனவாகும்.

**பரந்த நோக்கு**

புரிந்துணர்வு ஒப்பந்தம் அரசாங்கத்துக்கும் புலிகளுக்கும் இடையிலான ஒப்பந்தமாகவிருப்பினும் பரந்தளவில் இதனை நோக்குமிடத்து இது சிங்கள சமூகத்துக்கும் தமிழ்ச் சமூகத்துக்கும் இடையிலான ஒப்பந்தமாகும். துரதிர்ஷ்டவசமாக இரு சமூகத்தினருக்கும் இடையில் இருபது வருட காலமாக நடைபெற்ற யுத்தத்தின் விளைவாக இரு சமூகத்தினருக்கும் இடையில் நிலவிய கசப்புணர்வையும் இனவாத நோக்கினையும மறந்து அதற்கப்பாலும் சென்று ஐம்பது வருட காலமாக நிலவிய பகைமையை நீக்கும் புதியதோர் பரந்த நோக்கிலான ஒப்பந்தமாகவே இதனை நாம் கருதுகின்றோம். இந்த நோக்கு அடையப் பெற்றதா என்பதனை அலசிப் பார்த்தால் இந்நோக்கம் வெற்றி பெறவில்லை என்பதே எமது கருத்தாகவுள்ளது. தமிழ் மக்களிடையே காணப்பட்ட விரக்தி நிலை இன்னமும் அகன்றதாக இல்லை. சிங்களக் கடும்போக்காளர்கள் அதாவது ஜே.வி..பி. சிஹல உறுமய மற்றும் அநேக புத்திஜீவிகள் இந்த ஒப்பந்தத்துக்கு எதிராகப் பகிரங்கமாகச் செயற்படுகின்றனர். இந்த ஒப்பந்தம் உருவாகுவதற்குக் காரணமாகவிருந்த நோர்வேயின் தூதுவர் நாட்டை விட்டு வெளியேற்றப்பட வேண்டுமென ஜே.வி.பி. பகிரங்கமாக அறிவித்திருந்தது.

இவ்வாறான சூழ்நிலையில் அண்மையில் நடைபெற்ற அரசாங்கப் பாடசாலைகளுக்கான முதலாம் தர அதிபர்கள் தெரிவின் போது திறமை



அடிப்படையைக் கைவிட்டாலும் இன ரீதியிலான அடிப்படையிலாகுதல் தமிழர் களுக்கும் முஸ்லிம்களுக்கும் 26 சதவீதமான பதவிகள் வழங்கியிருக்கப்பட வேண்டியிருந்த போதிலும் தெரிவ செய்யப்பட்ட 500 முதலாந்தர அதிபர்களில் தமிழர் ஒருவரும் முஸ்லிம் ஒருவரும் மாத்திரமே தெரிவு செய்யப்பட்டிருப்பது பரந்த நோக்குக்குக் கிடைத்த சாவு மணியாகும். அதிலும் விசேடமாகக் கல்வித துறையிலான இவ்வாறான அப்பட்டமான புறக்கணிப்புகள், புரிந்துணர்வு ஒப்பந்தம் வெற்றி பெறுவதற்கு எந்த வகையிலும் உதவியாக இருக்க மாட்டாது என்பது குறிப்பிடப்பட வேண்டியதாகும். எனவே, இவ்வாறான புறக்கணிப்புக்குப் பொறுப்பான அலுவலர்களை இனம் கண்டு அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க அரசாங்கம் தவறம் பட்சத்தில் தமிழ், முஸ்லிம் சமூகத்தினரின் நம்பிக்கையை இழக்க வேண்டிய நிலைமை அரசுக்கு ஏற்படலாம்.

**குறுகிய நோக்கு:**

நோர்வே அரசாங்கத்தினால் தயார் செய்யப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் குறித்துரைக்கப்பட்ட விடயங்களை மாத்திரமே நாம் கவனததிற் கொள்ள வேண்டும். சட்ட வரம்புகளின் உள்ளேயுள்ள விடயங்களை ஆராயும் போது இந்த ஒப்பந்தம் வெற்றி பெறவுமில்லை. தோல்வியடையவுமில்லை. எனக் கருதலாம். ஒப்பந்தத்தில் குறித்துரைக்கப்பட்ட விடயங்களில் இரு பகுதியி னராலும் பாரியளவில் மீறல்கள் மேற்கொள்ளப்படாமையால் இந்த ஒப்பந்தம் தோல்வியடைந்ததாகக் கூற முடியாது.

**தமிழர் உணர்வுகள்:**

இந்த ஒப்பந்தம் தொடர்பாகத் தமிழ் மக்கள் விரக்தி அடைந்துள்ளனர். குண்டு வீச்சுக்களும், பீரங்கித் தாக்குதல்களும் இல்லாவிட்டாலும் இயல்புநிலை தமிழ்ப் பிராந்தியங்களில் தோன்றவில்லை. இராணுவக் கெடுபிடிகள் அதிகரித்து வருகின்றன. புதிய இராணுவக் காவல் அரண்கள் அமைக்கப்படுகின்றன. புனர் நிர்மாணம் மேற்கொள்ளப்படாவிட்டாலும் கடந்த ஓராண்டு காலத்தில் புனர் வாழ்வாவது மேற்கொண்டிருக்கலாம். அதியுயர் பாதுகாப்பு வலயங்களிலிருந்து விரட்டி அடிக்கப்பட்ட இலட்சக் கணக்கான தமிழ் மக்களில் ஒருவராவது மீண்டும் அதே இடத்துக்குச் சென்று வாழ முடியாத நிலையுள்ளது. இராணுவத்தினரால் விதைக்கப்பட்ட கண்ணி வெடிகள் இன்னமும் அகற்றப்படவில்லை. இலட்சக் கணக்கான தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் அகதி வாழ்க்கையை நடத்தி வருகின்றனர். மீனவர்கள் மீன் பிடிப்பதற்கு இருந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்படவில்லை. சாதராண தமிழ் மகன் ஒருவனைப் பொறுத்தவரையில் இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் அமுலிலுள்ள வேளையிலும் கூட இயல்பு நிலையில்லை. அதி உயர் பாதுகாப்பு வலயங்கள் உடனடியாக அகற்றப் பட்டு தாங்கள் தங்கள் சொந்த இடங்களுக்கச் சென்று வாழ்வதே மிக அவசியமானதென சாதாரண தமிழ் மக்கள் கருதுகின்றனர். பொருளாதார ரீதியில் கூட எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை. சிங்கள மக்கள் தரை வழிப் பாதையாக யாழ்ப்பாணம் சென்று நாகவிகாரையில தரிசனம் செய்து யாழ் குடாநாட்டைச் சுற்றிப் பார்த்துத் திரும்பி வருகின்றனர். யாழ் மக்களைப பொறுத்தவரையில் அவர்கள் குண்டு வீச்சும் பீரங்கித் தாக்குதலும் இல்லாமல் இருக்கின்றார்களே தவிர மற்றவையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் அமுலில் உள்ள போதிலும் தமிழ் மக்களின் வாழ்க்கை இருள் சூழ்ந்ததாகவே உள்ளதென்பதை சிங்கள மக்களும் கண்டு கொண்டுள்ளனர். எனவே, தமிழ் மக்கள் அனுபவிக்கும் துயரங்களுக்கும் அவலங்களுக்கும் தம்மால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும், விடுதலைப் புலிகளும், அரசாங்கமும் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென எதிர்பார்க்கின்றனர். தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் தமிழ்ப் பிரதேசங்களிலிருந்து இராணுவம் அகற்றப்பட்டால் மாத்திரமே அவர்களது விரக்தி தணியும் என்பது எமது கருத்தாகும்.

## ஆண்டு ஒன்று முடிவடைந்த ஒப்பந்தம் தொடர்பான மதிப்பீடு

**சிங்களவர்களின் அபிப்பிராயங்கள் :**

சிங்கள சமூகத்திலுள்ள கடும் போக்காளர்கள் இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தைக் கடுமையாக விமர்சிக்கின்றனர். விடுதலைப் புலிகள் யுத்தத்தில் அடைந்த வெற்றிகளை விட இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் விடுதலைப் புலிகளுக்கு சர்வதேச அங்கீகாரம் நன்கு கிடைத்து விட்டதெனக் கவலைப்படு கின்றனர். புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் ஆயுதம் தரிக்காத விடுதலைப் புலிகள் ராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் எங்கும் சென்று அரசியல் பிரசாரம் செய்யலாம் என்பதனை அவர்களினால் ஜீரணிக்க முடியவில்லை. அவர்களின் கூற்றிலும் சில உண்மைகள் இருக்கத்தான் செய்கின்றது. புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் முன்னர் ஆயுதந் தரித்தோ தரிக்காமலோ இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுட் செல்ல முடியாத விடுதலைப் புலிகள் இந்த ஒப்பந்தத்தின் பின்னர் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள்ளும் தமது ஆதிக்கத்தை நிலை நாட்டுவதனை சாதாரண பொதுமக்களாலும் காணக்கூடியதாகவுள்ளது. தென் இலங்கையிலும் கொழும்பிலும் சோதனைச் சாவடிகள் அகற்றப்பட்டதனைச் சிங்கள மக்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் விளைவால் தென் இலங்கையில் பொருளாதார நிலை விருத்தியடைவதனையும் மக்கள் இந்த விடயத்தில் பிளவு பட்டிருப்பதனைக் காண முடிகின்றது.

**சர்வதேச நிலைப்பாடு:**

1983 இல் இலங்கையில் நடைபெற்ற இனப் படுகொலைகளுக்குப் பின்பே இலங்கை விடயத்தில் சர்வதேச சமூகம் அக்கறை எடுத்தது யாவரும் அறிந்த விடயம். தமிழர்களின் சுதந்திர வரலாற்றை அவர்கள் நன்கு அறிந்து வைத்திருக்க வில்லை. தமிழர்களின் சுதந்திரத் தாகம் தொடர்பாகவும் அறிந்திருக்க வாய்ப் பிருக்கவில்லை. பேச்சுவார்த்தையின் மூலம் இலங்கையின் இனப் பிரச்சினையைத தீர்த்து வைக்கலாம் என அவர்கள் திடகாத்திரமாக நம்புகிறார்கள். யுத்தத்தினால் போரழிவுக்கான வட கீழ் பிராந்தியத்தின் புணர்வாழ்வுப் புனர்நிர்மாண உதவிகளை வழங்குவதற்கு முன்னிற்கும் சர்வதேச சமூகத்தினர் கடந்த ஒரு வருட காலமாகத் தொடர்ந்து வரும் யுத்த நிறுத்தம் காரணமாகத் தொடர்ந்து சமாதானம் முன்னெடுக் கப்படுமென நம்பி வருகின்றனர். தொடர்ந்து வரும் பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் ஏற்பட்டாலே வட-கிழக்கு மாத்திரமல்லாது தென் பகுதிக்கும் பொருளாதார உதவிகளை வழங்க முன்வருவார்கள். இந்த நிலைப்பாடு சிங்கள சமூகத்தினரின் கடும் போக்கைக் கீழிறக்க வழி வகுக்கும் எனக் கருதப்படுகின்றது. இந்தச் சர்வதேச நிலைப்பாட்டுக்கு எதிராக சிங்கள சமூகமோ, அரசோ செயற்ட்டால் அதன் விளைவுகளுக்கு முகங் கொடுக்க வேண்டிய நிலை அவர்களுக்கு ஏற்படலாம். வெளியாகக் கூறுவதனால் தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதற்கு சிங்கள சமூகமும் அரசும் பின் நிற்கும் நிலையால் யுத்தம் மீண்டும் வெடிக்குமேயானால் சர்வதேச சமூகம் தமிழ் மக்கள் சார்பாக நிற்குமென்பதில் எவ்வித ஐயமுமில்லை. இந்த அடிப்படையில் தான் சமீபத்தில் அமெரிக்கப் பிரதி வெளி விவகார அமைச்சர் ஆர்மிரேஜ் இன்னுமொரு படி மேலே சென்று விடுதலைப் புலிகள் மேலும் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடாமல் இருப்பார்களேயாகில் பயங்கரவாதப் பட்டியலிலிருந்து விடுதலைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலிகளை நீக்கி விடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனக் கூறியிருந்தமை கவனிக்கப்பட வேண்டிய தாகும். சுருக்கமாகக் கூறுவதானால் சிங்கள அரசியல் தலைமைப் பீடங்கள் தங்கள் கடும் போக்கைக் கைவிட்டு தமிழர்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வ தற்குத் தவறுவதன் மூலம் மீண்டும் யுத்தம் மூளுமேயானால் சர்வதேச சமூகம் தமிழ் மக்கள் சார்பாகச் செயற்படும் என்பதில் சந்தேகம் எதுவுமில்லை. இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் விடுதலைப் புலிகளுக்கு சர்வதேச ரீதியிலான மதிப்பும், கௌரவமும் பெருமளவில் அதிகரித்துள்ளது என்பது பக்கச் சார்பற்ற உண்மையாகும். பல்வேறு வெளிநாட்டுத் தூதர்கள் கிளிநொச்சிக்குச் சென்று பேச்சு வார்த்தை நடாத்தி வருவது இதற்குச் சான்றாகும்.

**புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் காணப்படும் தவறுகள்:**

சிங்கள சமூகத்தை விட தமிழ்ச் சமூகமே இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் தவறுகளினால் அதிகமாகப் பாதிக்கப்படுகிறார்கள் என்பது மறுக்கவோ, மறைக்க வோ முடியாத உண்மை. தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள பாடசாலைகள், மதவழி பாட்டுத் தலங்கள் மற்றும் பொதுக் கட்டிடங்களிலிருந்து இராணுவம் வெளியேறி இருக்க வேண்டும் இது நடைபெறவில்லை. இதுவோர் பெருந்தவறு. இத்தவறினால் இந்த ஒப்பந்தம் தோல்வியைத் தழுவும் என்றதோர் அச்சமும் நிலவியது. அதி உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக ஒரு சொல்லாவது இப்புரிந்துணர்வு ஒப்பந் தத்திற் காணப்படவில்லை. புரிந்துணர்வு ஒப்பந்தமும் அதி உயர் பாதுகாப்பு வலயமும் ஒரே சமயத்தில் இயங்க முடியாது. ஏனெனில், புரிந்துணர்வு ஒப்பந்தம் சமாதானத்துக்கு வழிவகுக்கும். அதி உயர் பாதுகாப்பு வலயம் சமாதானத்துக்கு எதிராக யுத்தத்துக்கும் பேரழிவுக்கும் வழி வகுக்கும். வியட்நாம் யுத்தத்தில் அதிகாரியாக இருந்த அமெரிக்க உதவி அமைச்சர் ஆர்மிரேஜ், யுத்தம் தொடர்பாகநன்கு அறிந்திருந்தமையாலேயே அதி உயர் பாதுகாப்பு வலயத்தினுள் வாழ்ந்த மக்கள் மீண்டும் அங்கு சென்று வாழும் உரித்துடையவர்கள் என்று கூறியிருந்தார். அதிஉயர் பாதுகாப்பு வலயம் மனித நேயத்தை உள்ளடக்கிய அரசியல் பிரச்சினையென்ற ரீதியில் அணுக வேண்டிய கடமை புரிந்துணர்வு ஒப்பந்தத்தைத் தயாரித்தவர்களுக்கு உண்டு. இந்த விடயத்தில் நோர்வே மாபெரும் தவறொன்றைப் புரிந்து விட்டதாகவே கருதும் நிலையில் நாமுள்ளோம்.

அரசாங்கம் அதி உயர் பாதுகாப்பு வலயத்தினுள் இருந்த மக்களை அவர்களது சொந்த வீடுகளில் சென்று வாழ்வதற்கு அனுமதியாது.



இன்னொரு நாட்டவரின் ஆலோசனையை இது தொடர்பாக வேண்டி நிற்பது மிகவும் கேலிக்குரியவோர் விடயமாகும். இந்த விடயம் தொடர்பாக இந்திய முன்னாள் இராணுவ அதிகாரி சதீஸ் நம்பியாரின் ஆரம்ப அறிக்கைக்கு எதிராகத் தமிழர் கூட்டமைப்பு ஏன் பாராளுமன்றத்திலும் வெளியிலும் கண்டனம் தெரிவிக்கவில்லை என எண்ணி நாம் மனவருத்தமடைகிறோம். தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகப் பாராளுமன்றம் சென்ற தமிழ் கூட்டமைப்பு உறுப்பினர்கள் தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினையான அதி உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக மௌனிகளாக இருப்பதேன்? நம்பியாரின் ஆரம்பச் சிபார்சுக்கெதிராக சுயமரியாதையுள்ள எந்தவொரு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினரும் கண்டனம் தெரிவித்திருக்க வேண்டும். அப்படிச் செய்யத் தவறியதன் மூலம் சகல தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் தம்து கடமையைச் செய்யத் தவறிவிட்டன என்பதே எனது நிலைப்பாடு. நம்பியாரின் இறுதிச் சிபார்சுகள் தமிழ் மக்களுக்கு பாதகமாகவும் சிங்களக் கடும் போக்காளர்களுக்குச் சாதகமாகவும் அமையு மென்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. அச்சந்தர்ப்பத்திலாவது தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களும் விடுதலைப் புலிகளும் கடும் எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டுமென்பதே தமிழ் மக்களின் அவாவாகும். இந்த உதி உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக நோர்வே அரசாங்கம் ஒப்பந்தத்திற் குறிப்பிட்டிருந்தால் தற்போதைய இழுபறி நிலை தோன்றியிருக்காது என்பதே எனது கருத்தாகும்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இராணுவத்தினர் விடுதலைப் புலிகளின் கட்டுப் பாட்டிலுள்ள பிரதேசங்களுக்குள் பிரவேசித்தலாகாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வாறே ஆயுதம் தரித்த விடுதலைப் புலிகளும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் பிரவேசித்தலாகாது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் விடுதலைப் புலிகளனி கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் சுதந்திரமான ஆட்சியொன்று நடாத்தப்படுவது அங்கீகரிக்கப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளின் பிரதேசத்தினுள் இராணுவம் பிரவேசித்தலாகாது என்று குறிப்பிட்ட நோர்வே அரசாங்கம் விடுதலைப் புலிகளின் நிலப்பரப்பைச் சார்ந்துள்ள கடற் பரப்பிலும் இராணுவம் பிரவேசித்தலாகாது என்று ஏன் குறிப்பிடவில்லையெனக் கேள்வி எழுகின்றது. அது மாத்திரமல்லாது விடுதலைப் புலிகளின் கட்டுப் பாட்டிலுள்ள பிரதேசங்களின் வான் பரப்புக்குக் கூட ஏன் இந்தக் கட்டுப்பாடு விதிக்கப்படவில்லை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசத்தின் வான் பரப்பிலும் வேவு விமானங்களோ, யுத்த விமானங்களோ பறப்பது தடை செய்யப் பட்டிருக்க வேண்டும். சுருக்கமாகக் கூறுவதானால் இராணுவத்துக்கு விதிக்கப்பட்ட தடைகள் இலங்கையின் கடற்படைக்கும், விமானப் படைக்கும் கூட விதிக்கப் பட்டிருத்தல் வேண்டும். இவை குறிப்பிடப்பட்டிருந்தால் பல முறுகல் நிலைகளைத் தவிர்த்திருக்கலாம்.

யுத்தத்தின் விளைவினால் பல தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் பல வருடங்களாகச் சிறையில் உள்ளனர். வேறு பல நாடுகளில் நடைபெறுவதைப் போல் அரசியல் கைதிகளான இவர்கள் அனைவரையும் விடுதலை செய்வது தொடர்பாகவும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படாமையும் ஓர் தவறாகவே கருதப்படுதல் வேண்டும்.



# 24

## இலங்கைக் கடற்படையின் இரட்டை வேடம்

இலங்கைக் கடற்படையின் அண்மைக்கால நடடிவடிக்கைகள் சமாதானத்துக்கு விரோதமாகவுள்ளன. அவர்களது இரட்டை வேடம் தொடர்பாக அலச வேண்டியது மிகவும் அவசியமாகும். தமிழ்ப் பிராந்தியக் கடற்பரப்பில் இநதிய மீனவர்கள் அத்துமீறி மீன் பிடிக்கின்ற விடயமும், இந்து சமுத்திரச் சர்வதேசக் கடற்பிராந்தியத்தில் விடுதலைப் புலிகளின் சரக்குக் கப்பல் தாக்கப்பட்ட விடயமும் சிந்திக்கப்பட வேண்டியவையாகும்.

இந்திய மததிய அரசு இலங்கைத் தமிழர்கள் மீது அக்கறை கொண்டு அவர்களுக்க அனுசரணையாகச் செயற்பட்ட கால கட்டத்தில் இலங்கைக கடற்படையினர் நமது கடற்பிரதேசத்துக்கு அப்பாற் சென்று இந்திய மீனவர்களைத் தாக்கினார்கள். அவர்களுக்கு எதிராகக் கடுமையான வன்முறைகளைக் கடைப் பிடித்தார்கள். அதன் மூலம் நூற்றுக் கணக்கான இந்திய மீனவர்கள் கொலை செய்யப்பட்டனர்.

ஆனால், இன்று நிலைமை மாறி இந்திய மத்திய அரசு இலங்கைத் தமிழர்கள் மீது கசப்புணர்வு கொண்டுள்ளது. இதனால், இந்திய மீனவர்கள் இலங்கைத் தமிழ்ப் பிராந்தியக் கடற்பிரதேசத்துக்குள் அத்துமீறி பிரவேசித்து மீன் பிடிக்கின்றனர். இவ்வாறான செயற்பாட்டினால் இலங்கைத் தமிழ் மீனவர்களுக்குப் பெரும்பாதிப்பு ஏற்பட்டு அவர்கள் பட்டினிச் சாவை எதிர் கொள்ள வேண்டிய நிக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

யாழ் குடாநாட்டுக்கு அருகேயுள்ள எழுவை தீவு, அனலைத்தீவு மற்றும் நயினாதீவு ஆகியவற்றின் அரை மைல் கடற்பிராந்தியத்திற்குள்ளும் இந்திய மீனவர்கள் அத்துமீறிப் பிரவேசித்து மீன் பிடிக்கின்றனர். இலங்கைக் கடற்படையினர் வட பிராந்தியத்தில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள போது தான் நூற்றுக் கணக்கான இந்தியப் படகுகள் அத்துமீறி பேசாலைக் கடற்பரப்பில் மீன் பிடிக்கின்றனர். ஏன் இதை இந்தியா தடுக்கவில்லை என்ற கேள்வி நிச்சயமாக எழச் செய்கின்றது.

இவ்வாறான அத்துமீறல்கள் அடிக்கடி நிகழ்வதனாலும், இலங்கை கடற்படையினர் பாராமுகமாக இருப்பதனால் இந்திய-இலங்கை மீனவர்களுக்கிடையில் பல மோதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இந்திய மீவர்களின் அத்துமீறல்கள் இலங்கைத் தமிழ் மக்களின் பொருளாதாரத்தை மோசமாகப் பாதிக்கின்ற போதிலும், பாதுகாப்பு அமைச்சரோ, கடற்படையினரோ, அரசாங்கமோ எதுவித நடவடிக்கையும



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொள்ளாதிருப்பது மிகவும் வருத்தத் துக்குரியதாகும்.

இதற்கு மாறாக, தென் இலங்கையிலுள்ள சிங்கள மற்றும் ஆங்கிலப் பத்திரிகைகள் இந்த அத்துமீறல்களை நியாயப்படுத்தும் வகையில் செய்திகளைப் பிரசுரிக்கின்றன. தமிழ் மக்களின் பொருளாதாரத்தைப் பாதிக்கும் வகையில் எவர் செயற்பட்டாலும் சிங்கள சமூகம் அதனை வரவேற்கும் என்பதற்கு இதுவோர் உதாரணமாகும்.

அண்மையில் இலங்கைப் பொலிசாரினால் கைது செய்யப்பட்ட நூற்றுக் கணக்கான இந்திய மீனவர்கள் நீதிமன்றத் தீர்ப்பு வழங்கப்டுவதற்கு முன்னதாகவே சில அழுத்தங்களின் பேரால் உடனடியாக விடுதலை செய்யப்பட்டு அவர்களது நாட்டுக்குத் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டனர். இலங்கையின் கடற்பிராந்திய இறையாண்மையைக் காகக் வேண்டிய பொறுப்பு இலங்கைக் கடற்படையினருக்கு உள்ளது. இந்திய மீனவர்களின் அத்துமீறலை நிறுத்துவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள இலங்கைக் கடற்படை தவறும் பட்சத்தில், தமிழ்ப் பிராந்தியத்தில் பாரதூரமான விளைவுகள் ஏற்படும் என்பது கணிப்பாகும்.

கடந்த ஞாயிற்றுக் கிழமை ஒன்பதாம் திகதி காலையில் இரகசியத் தகவலொன்றின் அடிப்படையில் இலங்கைக் கடற்படையினர் 200 கடல் மைல்களுக்கு அப்பால் உள்ள கப்பலொன்றினைத் தாக்கி அழித்தமை அதிர்ச்சியூட்டும் சம்பவ மாகும். இந்த நிகழ்வின் அடிப்படை உண்மைகளைச் சட்டபூர்வமாக அலச வேண்டியது நமது கடமையாகும்.

சில பத்திரிகைகள் தெரிவிப்பதும் போல இச்சம்பவம் திருகோணமலைக்கு அப்பாலோ அன்றேல், முல்லைத் தீவுக்கு அப்பாலோ நடைபெறவில்லை.

அதிகளவு சரக்குக் கப்பல்கள் விடுதலைப் புலிகளினால் சர்வதேச கடற் போக்குவரத்தில் ஈடுபடுத்தப்பட்டிருப்பது யாவரும் அறிந்த உண்மை. இக்கப்பல்கள் ஏதோ ஓர் நாட்டில் பதிவு செய்யப்பட்டதன் பின்னரே சட்ட பூர்வமான சர்வதேச கடற்போக்குவரத்தில் ஈடுபடமுடியும். கப்பல் ஒன்று பதிவு செய்யப்படுவதற்கான முக்கிய நிபந்தனைகளாவன, பதிவு செய்யப்படும் நாட்டின் கொடி கப்பலில் எந்த நேரமும் பறந்து கொண்டிருக்க வேண்டும். தாம் அழித்த கப்பலில் கொடி பறக்க விடப்பட்டிருக்கவில்லை என்றும், பெயரும் பொறிக்கப்பட்டிருக்கவில்லை என்றும் கடற்படையினர் கூறுவது உண்மைக்குப் புறம்பானது.

கடற் பிராந்திய சட்டப் பிரச்சினைகள்

கடற் பிராந்திய சர்வதேச சட்டத்தின் பிரகாரம் எந்தவொரு நாடும்



தனது நாட்டின் கரையோரத்திலிருந்து 12 மைல்களுக்கே தனது இறையாண்மையைக் கொண்டிருக்க முடியும். குறிப்பிட்ட அந்த 12 மைல்களுக்குள் எந்தவொரு நாட்டின் கப்பலாவது அனுமதியின்றி பிரவேசிக்குமேயானால், அதைத் தடுத்து நிறுத்தும் அதிகாரம் சம்பந்தப்பட்ட நாட்டுக்கு உண்டு. சட்ட ரீதியாக 12 மைல் தூரம் வரையான கடற்பிரதேசம் சம்பந்தப்பட்ட நாட்டுக்கே சொந்தமானது. அங்கு அவர்கள் தமது இறையாண்மையைக் கையாளலாம்.

சில ஆண்டுகளுக்கு முன்பு ஐ.நா. ஸ்தாபனம் கடற் பிராந்தியம் தொடர்பான சட்டங்களை மறு பரிசீலனை செய்தது. இந்த மறு பரிசீலனைக் குழுவுக்கு ஐ.நா.வின் இலங்கைப் பிரதிநிதியான எச்.எஸ். அமரசிங்க தலைமை தாங்கினார். வருடக் கணக்கான ஆய்வுகளின் பின்னர் கடற்பிராந்திய, சட்டத்தில் புது விடயங்களை இக்குழு உள்ளடக்கியது. இக்குழுவின் முக்கிய தீர்மானமாவது, ஒரு நாட்டின் கரை யோரத்திலிருந்து 200 மைல் வரை பொருளாதார வலயமொன்றினை உருவாக்கலாம். இதன் பிரகாரம் கடலின் அடியிலுள்ள பொருளாதார வளங்கள் அந்த நாட்டுக்கே சொந்தமாகும்.

உதாரணமாக காலித் துறைமுகததிலிருந்து 200 மைல்களுக்குள் எண்ணெய் வாய்ப்பிருப்பின் அதனை அபிவிருத்தி செய்வதற்கான அதிகாரம் இலங்கை நாட்டுக்கே உண்டு. எந்தவொரு நாட்டினதும் கரையோரத்தின் 13ஆவது மைலிலிருந்து 200 ஆவது மைல் வரை எந்த நாட்டுக் கப்பல்களும் சர்வதேச வியாபாரத்தில் ஈடுபடலாம் என்பதே சர்வதேச சட்டமாகும். இந்தச் சட்ட விதிகளுக்கு இலங்கையும் கையொப்பமிட்டுள்ளது.

இலங்கைக் கடற்படையின் கூற்றுப்படி, விடுதலைப் புலிகளின் கப்பலை பொருளாதார வலயத்துக்குள்ளேயே தாக்கி அழித்ததாகக் கூறப்படுகின்றது. ஆனால், 220 மைல்களுக்கு அப்பால் சர்வதேச கடற்பரப்பில் கப்பல் நின்றிருந்த போதே தாக்கி அழித்ததாக விடுதலைப் புலிகள் கூறுகின்றனர்.

சர்வதேச கடற் பிராந்தியத்தின் 13 ஆவது மைலுக்கு அப்பால் விடுதலைப் புலிகளின் கப்பல் நிற்குமேயானால் அதனைத் தாக்குவதற்கோ, அழிப்பதற்கோ கடற் படைக்கு எந்தவிதமான அதிராகரமும் கிடையாது.

எனவே, கடற்படையினர் இலங்கைச் சட்ட திட்டங்களை மாத்திரமல்ல, சர்வதேசக் கடற்பிராந்தியச் சட்ட திட்டத்தினையும் மீறி விட்டனர். இதன் அடிப்படையில் கடற்படையினரின் செயற்பாட்டுக்கு எதிராக இலங்கையிலும் சர்வதேச நீதிமன்றத்திலும் வழக்குத் தொடர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். இலங்கைக் கடற் படையினரின் செயலுக்கு எதிராக சர்வதேச கடற்பிராந்திய ஆணையாளருக்கு முறையீடு செய்யப்பட்டனர். •

இந்த விவகாரம் இந்தியாவின் ஆந்திரப் பிரதேச உயர் நீதிமன்றத்துக்குச்
வேளையில் இந்திய நீதிபதி, இந்திய கடற்படைக்கு எதிராகக் கடுமையான கண்டனத்தைத் தெரிவித்திருந்தார். அவருடைய கண்டனத்தின் பிரகாரம் சட்டத்தை மீறியது மாத்திரமல்லாது சர்வதேச கடற்பிராந்திய சட்டத்தையும் மீறிவிட்டதாக ஆணித்தரமாகக் குறிப்பிட்டிருந்தார். இந்தியக் கடற்படையின் சகல விவாதங்களையும் அவர் நிராகரித்து விட்டார்.

இத்தீர்ப்பினால் இந்திய மத்திய அரசு கடுமையான எதிர்விளைவுகளை எதிர் கொண்டது. எனவே, இந்திய உயர் நீதிமன்றத்தின் அந்தத் தீர்ப்பு மேற்படி இலங்கை விவகாரத்துக்கும் மிகவும் பொருத்தமானதாகும். எனவே, கடற்படை யினரின் இவ்வாறான செயற்பாடு, சர்வதேச கடற்பிராந்திய சட்டதிட்டங்களுக்கு மாத்திரமல்லாது சர்வதேச வர்த்தகக் கடற் போக்குவரத்துக்கும் குந்தகம் விளை விக்கும்.

இச் செயற்பாட்டில் ஈடுபட்ட கடற்படை அதிகாரிகளை இனம் கண்டு அவர்களுக்கு எதிராக இலங்கை அரசாங்கம் சட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இந்த விவகாரத்தில் விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைக்குக் குந்தகம் ஏற்படாத வகையில் மிகவும் கடும் போக்கைக் கடைப்பிடிக்க வேண்டு மெனத் தமிழினம் எதிர்பார்க்கின்றது.

சம்பந்தப்பட்ட கப்பலில் விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கொண்டு வந்ததாகச் சிலர் குற்றஞ்சாட்டுகின்றனர். அதற்கு என்ன ஆதாரம் உண்டு?

முப்படைகளில் கடற்படை ஒன்று தான் சமாதானத்துக்கு எதிராகச் செயற்படுவதனை ஆதாரங்களுடன் எடுத்துக் கூற முடியும். நெடுந்தீவு விவகாரத்தை சர்வதேச சமூகத்துக்கு எடுத்துரைப்பது மிக மிக அவசியம்.



## 25

# தமிழ்த் தேசிய விடுதலைக்கு புத்திஜீவிகளின் பங்களிப்பு?

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்து ஆசிய-ஆபிரிக்க நாடுகளின் மேலைத் தேய ஏகாதிபத்தியத்திலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ளும் பொருட்டு பல விடுதலை இயக்கங்கள் தோன்றின. இந்த விடுதலை இயக்கங்களை வழி நடத்தியவர்கள் சம்பந்தப்பட்ட நாடுகளைச் சேர்ந்த புத்திஜீவிகளாவர். இந்தியாவைத் தவிர்ந்த ஏனைய ஆசிய, ஆபிரிக்க நாடுகளின் விடுதலை இயகங்கள் ஆயுதம் ஏந்தியே சுதந்திரத்தைத் தழுவின.

இந்தியாவைப் பொறுத்தவரையில் மகாத்மா காந்தி மற்றும் ஜவஹர்லால் நேரு தலைமையில் அஹிம்சை வழியில் போராட்டங்கள் நடத்தப்பட்ட போதிலும், 1942 ஆம் ஆண்டில் இந்தியக் கடற்படை பிரித்தானிய ஏகாதிபத்தியத்துக்கு எதிராக ஆயுதமேந்திப் போராடியது. இலங்கையில் பதினாறாம் நூற்றாண்டில் மேற்குலக ஏகாதிபத்தியம் கால் வைத்த போது இங்கு மூன்று சுதந்திர இராச்சியங்கள் இருந்தன. வடகீழ் பிரதேசத்தில் ஈழ இராச்சியமும், தென் மேல் பகுதியில் கோட்டை இராச்சியமும், போர்த்துக்கேயரால் கைப்பற்றப்பட்டு இறுதியாகக் கண்டி இராச்சியம் பிரித்தானியரால் கைப்பற்றப்பட்டது.

இந்தோனேசியா சுதந்திரமடைவதற்கு புத்திஜீவியான கலாநிதி சுகர்ணோ, கலாநிதி முஹமட் ஹற்றா மற்றும் கலாநிதி சரீர் ஆகியோர் தலைமை தாங்கினர் . வியட்நாம் விடுதலை பெறுவதற்கு புத்திஜீவிகளான கலாநிதி ஹோசிமின் தலைமை தாங்கினார். அவருக்கு உறுதுணையாக தியப் இராணுவத் துறையில் புத்திஜீவியாகத் திகழ்ந்தார். பர்மாவில் சர்வதேச புகழ் பெற்ற புத்திஜீவியான அங்சான் விடுதலைக்குக் காரணமாக விளங்கினார். இந்திய உப கண்டத்தைப் பொறுத்தவரையில் மகாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு, வல்லபாய் பட்டேல், தமிழ் நாட்டின் இராஜகோபாலாச்சாரி ஆகியோர் சாத்வீக முறையில் இந்திய மக்களுக்குச் சுதந்திரம் பெற்றுக் கொடுத்த புத்திஜீவிகளாவார்.

இலங்கையில் மூன்று இராச்சியங்களைப் பொறுத்த வரையில் தாங்கள் இழந்த சுதந்திரத்தை மீண்டும் பெறுவதற்காக சாத்வீக ரீதியிலோ அன்றேல், வன்முறை ரீதியிலோ மக்கள் இயக்கமாக வெளிப்படவில்லை. சிங்கள இராச்சியங்ளைக் கைவிட்டுப் பார்க்கையில் ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் வீசிய சுதந்திரக் காற்று ஈழ இராச்சியத்தில் ஏன் வீசவில்லை எனபதே நாம் பரிசீலிக்க வேண்டிய விடயமாகும். சகல ஆசிய, ஆபிரிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகளும் மேற்குலக ஏகாதிபத்தியத்தின் கீழ் அடிமைப்பட்டிருந்தது போலவே தமிழ் இராச்சியமும் அடிமைப்பட்டிருந்தது.

தமிழ் இராச்சியத்தைப் பொறுத்தவரையில் பாரிய வித்தியாசமொன்றினைக் காண முடிகிறது. தமிழ் இராச்சியம் 327 வருடங்களாக மேற்குலக ஏகாதிபத்தி யத்துக்கு அடிமையாகவிருந்து கடந்த 55 வருடங்களாக சிங்கள இராச்சியத்துக்கு அடிமையாக உள்ளது. இது சரித்திரம் காட்டும் உண்மை. தமிழ்ப் புத்திஜீவிகள் மேற்குலக ஏகாதிபத்தியத்துக்கு எதிராகவோ சிங்கள இராச்சியத்துக்கு எதிராகவோ குரல் கொடுக்காமல் இருப்பது கவலைக்குரியதோர் விடயமாகும்.

327 வருடகால மேற்குலக ஏகாதிபத்தியத்தை விட 55 வருட சிங்கள ஏகாதிபத்தியத்தின் கீழேயே தமிழ் மக்கள் சொல்லொணா துன்பங்களையும், அவலங்களையும் அனுபவித்தனர் என்பதைப் புள்ளிவிபரங்கள் மூலம் உறுதிப்படுத்த முடியும்.

ஈழப் புத்திஜீவிகளின் பங்களிப்பு மேற்குலக ஏகாதிபத்தியத்தின் கீழ் எப்படி இருந்தது? சிங்கள ஏகாதிபத்தியத்தின் கீழ் எப்படி இருக்கிறது? என்பதைப் பகுப்பாய்வு செய்தல் வேண்டும்.

## பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் தமிழ் புத்திஜீவிகளின் சுதந்திர உணர்வு

பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தின் பிற்பகுதியில் இந்து மத உணர்வு மேலோங்கி இருந்தமையை அறிய முடிகிறது. இந்து மத புத்திஜீவியான ஆறுமுகநாவலர் தமிழ் இராச்சியத்தில் இந்து மதம் மீண்டும் புத்துயிர் பெறுவதற் காகக் கடுமையாகச் செயற்பட்டார். இதன் விளைவாக தமிழ் இராச்சியத்தின் பல இடங்களில் இந்துப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆயினும், அரசியல் ரீதியாக தமிழ் இராச்சியம் திரும்பவும் புத்துயிர் பெற வேண்டுமென எவரும் குரல் கொடுக்காமலிருந்தனர். இது ஓர் துர்ப்பாக்கிய நிகழ்வாகும்.

அன்று புகழ்பெற்று விளங்கிய அரசியல்வாதியான சேர். பொன்னம்பலம் இராமநாதனும் அவரது சகோதரனும் இலங்கை மூன்று தேசங்களாக இருந்ததை மறந்து, தமிழ் இராச்சியம் ஆயிரமாயிரம் வருடங்களாக இறையாண்மையுள்ள சுதந்திர இராச்சியமாக விளங்கியதனையும் மறந்து இலங்கை ஒரே தேசம் எனக் கருதி இலங்கைத் தேசத்தின் நலனுக்காகச் செயற்பட்டார்கள். இறையாண்மை யுடன் சுதந்திரமாக விளங்கிய தமிழ் இராச்சியம் மீண்டும் புத்துயிர் பெற வேண்டுமென அவர்கள் நினைத்ததுமில்லை. சட்ட சபையிலோ அதற்கு



வெளியிலோ அது தொடர்பாக ஒரு சொல்லலைக் கூட வெளியிட்டதில்லை. அதற்கு மாறாக சேர்.பீ. இராமநாதன், பௌத்தர்கள் அனுபவிக்கும் துயரங்கள் தொடர்பாகவும், அவர்களின் வெசாக் பௌர்ணமி தினம் பொது விடுமுறையாகப் பிரகடனப்படுத் தப்பட வேண்டுமெனவும், சிங்கள விவசாயிகள் தானிய வரியைத் தாங்க முடியாமல் இருப்பது தொர்பாகவும் சட்ட சபையின் குரல் கொடுத்தார்.

சேர்.பீ.இராமநாதனுக்கு பின்னைய காலத்தில் யாழ்ப்பாணத்தில் வெளி வந்த மூன்று பத்திரிகைகளான ஈழநாடு, கேசரி மற்றும் மோர்னிங் ஸ்டார் போன்றவற்றில் ஏதாவதொன்றிலாகுதல் இழந்த தமிழ் இராச்சியம் மீண்டும் பெற்றுக் கொள்ளப்பட வேண்டுமென்றோ அன்றேல், அந்த உணர்வினை மக்கள் மனதில் விதைக்கும் வகையிலாவது ஏதாவது எழுதப்பட்டது உண்டா? இலங்கை ஒரு தேசம். அதற்கு அரசியல் சீர்திருத்தம் வேண்டுமென சிங்களவர்களை விட ஓங்கிக் குரல் கொடுத்தவர்கள் யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் ஆகும்.

அண்டை நாடான இந்தியாவில் சுதந்திர தீபம் சுடர் விட்டெழுந்த போது, கதர் தேசிய உடை இயக்கம் தமிழ் இராச்சியத்திலும் வீசத் தொடங்கியது. அதன் பலனாக தமிழ்ப் புத்திஜீவிகள் கதர் உடையை அணிய ஆரம்பித்தனர். உதாரணமாக, இலங்கையில் புகழ்பெற்ற கல்விமான்களாகிய ஹன்டி பேரின்ப நாயகம், நேசையா, தம்பர் கலைப்புலவர் நவரத்தினம் மற்றும் ஈழநாடு பொன்னையா ஆகியோர் தேசிய உடையை அணிந்தது மாத்திரமல்லாது இந்தித் தலைவர்கள் மீது பக்தியும், விசுவாசமும் கொண்டிருந்தார்கள். இந்தக் கல்விமான்களில் எவரொருவராவது தமிழ் இராச்சியம் மீண்டும் மலர வேண்டுமென ஒரு தடவையாவது கூறியதில்லை.

இந்தியத் தலைவர்களான மகாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு மற்றும் சுபாஷ் சந்திபோஸ் ஆகியோரது படங்கள் யாழ்பபாணத்தில் ஒவ்வொருவரது வீடு களிலும் காணப்பட்டன. ஆனால், சங்கிலியன் போன்ற ஈழத் தமிழ் இராசதானியின் அரசர்கள் எவர்களது படங்களாயினும் எங்கும் காணப்படவில்லை. சங்கிலியன் என்பவன் யார் எனக் கேட்கப்பட்ட காலமது. வன்னி இராச்சியத்தின் மன்னனான பண்டாரவன்னியன் தொடர்பாக ஏதும் கற்பிக்கப்படுவதில்லை.

எனவே, எமது முன்னைய புத்தி ஜீவிகள் ஈழ இராச்சிய சுதந்திர உணர்வை ஏற்படுத்தத் தவறி விட்டார்கள்.

பொன்னம்பலத்தின் காலம்

முந்நூறு வருடங்களுக்கு மேலாக மங்கியிருந்த தமிழ் உணர்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் அரசியல் பிரவேசத்தின் பின்னரே முளைவிடத் தொடங்கியது. குற்றவியல் சட்டத்தில் தென் ஆசியாவின் மேதையாக அவரை உலகம் போற்றியது. தமிழ் தேசிய உணர்வை முதன் முதலாக விதைத்தமையால் அவரைத் தமிழ்த் தேசியத்தின் பிதா எனக் கூற வேண்டியது எனது கடமையாகும் ''தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா'' என்ற அவரது வார்த்தையின் அர்த்தம் இன்று நன்கு விளங்குகின்றது. தலை நிமிர்ந்து நில்லடா என்பது தமிழன் சுதந்திரமாக வாழ வேண்டும் என்பதைக் குறிக்கிறது. தமிழ்த் தேசிய உணர்வை தமிழ்ப் பகுதியில் ஜீ.ஜீ.பொன்னம்பலம் விதைத்த வேளையில் 1939ஆம் வருடத்தில் யாழ்ப்பாண வாலிப காங்கிரஸ் பிரமுகரான ஹன்டி பேரின்பநாயகம் ஜீ.ஜீ. பொன்னம்பலம் தமிழ் வகுப்புவாதியெனவும் தாங்கள் தேசியவாதிகளெனவும் சாட்டப்பட்டிருந்தது. தமிழ் வகுப்புவாதத்துக்கும், தமிழ்த் தேசியத்துக்கும் இடையிலான முரண்பாடுகளை ஹன்டி பேரின்பநாயகம் உணர்ந்திருக்கவில்லை. அந்த முரண்பாட்டை இன்று சகல தமிழர்களும் உணர்ந்து விட்டனர்.

துரதிர்ஷ்டவசமாக ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் சிந்தனைகளும் அரசியல் பங்களிப்பும் பாரபட்சமற்ற முறையில் மதிப்பீடு செய்யப்படவில்லை. இக்குறையை எதிர்காலத்திலாகுதல் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் நிறைவு செய்யமென தமிழ் இனம் எதிர்பார்க்கின்றது. சரித்திரத்தில் பாகிஸ்தான் என்ற நாடு இல்லா விட்டாலும் முஹமட் அலி ஜின்னா, முஸ்லிம்கள் ஒரு தேசிய இனம். அவர்களுக்கு ஒரு நாடு வேண்டுமெனக் கேட்டு அதில் வெற்றியுமடைந்தார். ஆனால், ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக சுதந்திர இராச்சியமாக விளங்கிய ஈழ இராச்சியம் மீண்டும் சுதந்திரமாக விளங்க வேண்டுமெனக் கேட்கத் தவறியமை நமது புத்திஜீவிகளின் மாபெரும் தவறாகும்.

**1948 இற்குப் பிற்பட்ட காலம்**

இக்காலப் பகுதியில்தான் தமிழ் இராச்சியம் சிங்கள ஏகாதிபத்தியத்துக்கு அடிமையாக்கப்பட்டது. 55 வருட கொடுமையான கால கட்டத்திற் கூட சுதந்திர தாகத்தை வளர்ப்பதற்கு நமது புத்திஜீவிகள் தவறிவிட்டனர். பேராதனைப் பல்கலைக்கழகம், கொழும்பு பல்கலைக்கழகம், யாழ்பபாணப் பல்கலைக்கழகம், கிழக்குப் பல்கலைக்கழகங்களிலுள்ள சரித்திரப் பேராசிரியர்கள் அல்லது தமிழ்த் துறைப் பேராசிரியர்கள் அல்லது அரசியல் துறைப் பேராசிரியர்கள் எவராவது இழந்த சுதந்திரம் திரும்பவும் பெறப்பட்ட வேண்டுமெனக்



குரல் கொடுத்தனரா? அல்லது அது தொடர்பாக கட்டுரைகளையாவது எழுதினரா? அல்லது மாணவர் மத்தியிலாவது சுதந்திர உணர்வை விதைத்தார்களா? என்ற கேள்வி நிச்சயமாக எழுகின்றது.?

தமிழர்களின் சரித்திரத்தைத் திரிபுபடுத்தும் போது எமது பேராசிரியர்கள் மௌனம் சாதிப்பது மன்னிக்க முடியாத குற்றமாகும். நளின் சில்வா மற்றும் இர் திரபால போன்ற சிங்கள புத்திஜீவிகள் சரித்திரத்தைத் திரிபுபடுத்தும் போது எங்கள் பேராசிரியர்கள் மௌனம் சாதிக்கின்றனர். மாதோட்டத்தின் பெருமை தொடர்பாகவாவது எவராவதொரு தமிழ் புத்திஜீவி எடுத்துக் கூறியுள்ளாரா? வெளிநாடுகளில் பேராசிரியர்களாகப் பதவி வகிப்பவர்கள் கூட இழந்த சுதந்தி ரத்தை மீண்டும் பெறும் உரிமை தமிழர்களுக் உண்டு என ஏன் குரல் கொடுக்க வில்லை? அதற்கு மாறாக தமிழர்கள் சிறபாண்மையினர் எனக் கட்டுரை வரை கின்றனர்.

தமிழர்கள் சிறுபான்மையினர் அல்லர். அவர்கள் இறையாண்மையுடன் சுதந்திரத் தேசத்தில் வாழந்தவர்கள் என்பது சரித்திர உண்மை. எனவே, 1621 க்கு முன்னர் சுதந்திரமாக அவர்கள் வாழ்ந்ததைப் போல் மீண்டும் வாழ்வதற்கு புத்தி ஜீவிகள் சகல துறைகளிலும் உதவுதல் வேண்டும். கொழும்பு வாழ் தமிழ்ப் புத்திஜீவிகள் பத்திரிகைகளை விட ஆங்கிலப் பத்திரிகைகளையே வாசிக் கின்றார்கள். தமிழ் ஈழ இராச்சியத்தில் நடைபெறுபவை நடுநிலைமையாக ஆங்கிலப் பத்திரிகையில் வெளிப்படுத்தப்படுவதில்லை. 1976 இல் வங்காளதேசம் சுதந்திர மடைந்தமைக்கான காரணம் டாக்கா பல்கலைக்கழக ஆசிரியர்களும் மாணவர்களும் செய்த தியாகமேயாகும். கொழும்பிலுள்ள தமிழ்ப் புத்திஜீவிகள் எவராவது இழந்த தமிழ் இராச்சியம் மீண்டும் பெறப்படவேண்டுமென குரல் எழுப்பாமை கலைக்குரிய விடயமா தம். இதுவரை ஈழ இராச்சியம் அடைந்த துயரங்கள்-அவலங்கள்-இழட கள் தொடர்பாக எந்தவொரு பல்கலைக்கழகமாவது புத்தக வடிவில் பிரசுரித்ததா? அப்படிப் பிரசுரித்தால் சர்வதேச சமூகம் உண்மையை அறிந்து கொள்ள முடியும்.

# 26

# வட, கிழக்கின் புனர்நிர்மாணப் பணியில் உதவி வழங்கும் நாடுகளின் கண்காணிப்பு அவசியம் தேவை

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஒரு வருடத்துக்கும் மேலாக நடைமுறையிலிருக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் வெற்றிக்கான காரணம் விடுதலைப் புலிகள் தன்னிச்சையாக மேற்கொண்ட யுத்த நிறுத்தமேயாகும். இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் மூன்று சிறப்புக் கோட்பாடுகள் நேரடியாகவும் மறைமுகமாகவும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அவையாவன, சம அந்தஸ்து, சமநிலை மற்றும் சம பங்களிப்பாகும். இம் மூன்று கோட்பாடுகளும் இலங்கை அரசாங்கத்தினால் மாத்திரமல்லாது சர்வதேச சமூகத்தினராலும் அங்கீகரிக்கப்பட்டு செயற்படுத்தப்படுகின்றது.

## சம அந்தஸ்து

நோர்வே அரசாங்கத்தினால் தயாரிக்கப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் சம அந்தஸ்தில் வைக்கப்பட்டுள்ளனர். இது வரையில் நடைபெற்ற பேச்சு வார்த்தையின் போதும் இரு சாராரும் சம அந்தஸ்திலேயே பங்குபற்றினர். இலங்கை அரசாங்கத்தை அங்கீகரித்துள்ள பல வெளிநாடுகளின் அரசியற் பிரமுகர்கள் கிளிநொச்சி சென்று விடுதலைப் புலிகளின் அரசியற் பீடத்தினருடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டமை விடுதலைப் புலிகளையும் சம அந்தஸ்திற் கருதியமையாலாகும். பேரழிவுக்கு ஆட்பட்ட வட கீழ்ப் பிராந்தியத்தின் புனர்வாழ்வுக்கு, புனரமைப்பு மற்றும் புனர்நிர்மாண அபிவிருத்திக்காக வெளிநாடுகளிலிருந்து கிடைக்கப் பெறும் நிதியுதவியை சட்ட பூர்வ அரசாங்கமான இலங்கை அரசாங்கத்திடம் கொடுக்காமல் அந்நிதியை உலக வங்கி தனது பராமரிப்பில் வைத்து அபிவிருத்திப் பணிகளுக்கு உதவுவதன் மூலம் சம அந்தஸ்து நிலை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறான நிலைப்பாடு இலங்கை அரசாங்கத்தாலும், சர்வதேச சமூகத்தாலும் எற்றுக் கொள்ளப்பட்டமை விடுதலைப் புலிகளின் இராஜதந்திரத்துக்கு கிடைத்த வெற்றியாகும்.

## சமநிலை

சமநிலை என்ற கொள்கை ஏற்கப்பட்ட போதிலும், விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் சமநிலை கிடைக்கவில்லை என்றே



கருதவேண்டியுள்ளது. விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் போர் மூண்ட 1983ஆம் வருடத்திலிருந்து புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் பின்னரும் கூட இராணுவ ரீதியான ஆட்பலத்திலும் ஆயுதப் பலத்திலும் விடுதலைப் புலிகளை விட அரசாங்கம் மிகவும் உச்ச நிலையில் உள்ளது. சம நிலை எனும் விடயத்தை இரண்டு பகுதிகளாகச் சிந்தித்தல் வேண்டும். 1983 ஜூலையிலிருந்து இன்று வரை மறு பகுதியாகவும் அதன் பின்னர் அதாவது 2002 ஜூலையிலிருந்து 2002 பெப்ரவரி வரை ஒரு பகுதியாகவும் கருத வேண்டும். முதற் பகுதிக் காலவரையில் தமிழ்ப் பகுதிகளின் சகல வளங்களும் நிர்மூலமாக்கப்பட்டு 15 இலட்சத்துக்கும் மேலான தமிழ் மக்கள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அகதிகளாக வாழும் நிர்ப்பந்தத்துக்கு ஆளாகினர். சிங்களப் பிரதேசங்கள் பேரழிவுகளை எதிர்நோக்கவுமில்லை. சிங்கள மக்கள் உள்நாட்டிலோ, வெளிநாடுகளிலோ அகதிகளாகவுமில்லை. எனவே, பேரழிவு விடயத்தில் சமநிலை காணப்படவில்லை. என்பது வெளிப்படையாகத் தெரிகின்றது. இராணுவ ரீதியில் ஆட் பலத்தை ஒப்பிடுகையில் அரசாங்க தரப்புப் பலம் 20 மடங்கு கூடுதலானது என்பது ஓர் மதிப்பீடாகும். ஆயுத பலத்தைப் 20-25 மடங்கு கூடுதலானதாகும். விடுதலைப் புலிகளிடம் விமானப் படையோ அன்றேல் பாரிய அளவினதான யுத்தக் கப்பல்களோ இல்லையென்பது குறிப்பிடப்பட வேண்டியதாகும். இவ்விடயத்தில் சமநிலை காணப்படாமையாலேயே தமிழ்ப் பிராந்தியம் பேரழிவை எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டது. தமிழ் மக்களின் துன்பகர விளைவுகளுக்கும் அவலங்களுக்குமான பொறுப்பினை சர்வதேச சமூகமே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதே எனது நிலைப்பாடு. 1983 லிருந்து இன்றுவரை உலக வங்கி உட்பட்ட சர்வதேச சமூகம் இலங்கை அரசாங் கத்துக்கு பொருளாதார உதவி வழங்கிய வண்ணமே உள்ளது. சர்வதேச சமூகத்தின் நிதியுதவியை தனது பொருளாதாரத்துக்குப் பயன்படுத்திக் கொண்டு இலங்கை அரசாங்கம் தனது வருவாயை யுத்தத்துக்குச் செலவிட்டது புள்ளிவிபர உண்மை. யுத்தம் நடைபெற்ற வேளையில் சர்வதேச சமூகம் நிதி உதவி வழங்காமல் இருந்திருப்பின், பொருளாதாரச் செலவையும் யுத்தச் செலவையும் இலங்கை அரசாங்கத்தால் சுமக்க முடியாமல் இரண்டு மூன்று வருடங்களில் யுத்தம் நின்றிருக்கும்.

யுத்தம் நடைபெறும் நாடுகளுக்கு நிதியுதவி வழங்குவதில்லை என்ற கொள்கையைக் கொண்ட பிரித்தானியா இலங்கையைப் பொறுத்தவரையில் தனது கொள்கையைக் கைவிட்டிருந்தது. தமிழ்ப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேசங்களிலான ஆக்கிரமிப்பு யுத்தம் முடிவுறும் வரையிலும் தமிழ் மக்களின் அபிலாசைகள் நிறைவேற்றப்படும் வரையிலும் சர்வதேச சமூகமும் உலக வங்கியும் இலங்கை அரசாங்கத்துக்கு நிதி உதவி வழங்குதலாகாது என தமிழர் விடுதலைக் கூட்டிணியைச் சேர்ந்த அமரர் சிவசிதம்பரம் உட்பட்ட பல தமிழ்த் தலைவர்கள் கோரிக்கை விடுத்திருந்த போதிலும் அது செவிசாய்க்கப்படவில்லை. அதற்கு மாறாக இந்தியா, பாகிஸ்தான், இஸ்ரேல், பிரித்தானியா மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகள் இலங்கை அரசாங்கத்துக்கு இராணுவப் பயிற்சி வழங்கின. பல நாடுகள் தமது வாத்தக நலன் கருதி பயங்கர ஆயுதங்களை இலங்கை அரசாங்கத்துக்கு கடனாகவும் கூடக் கொடுத்துதவின. இவ்வாறான நிலைப்பாடுகளினாலேயே தமிழ்ச் சமூகம் பேரழிவை எதிர்கொண்டது. எனவே, புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாததிடப்படும் வரையில் அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இராணுவ ரீதியில் சம நிலை காணப்படவில்லை.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னரான இராணுவ சம நிலையைக் கவனத்திற்கெடுக்கையில் பல குறைபாடுகளைக் காண முடியும். புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட வேளையில் அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் ஒரேயளவு தொகையான இராணுவத்தையும் ஒரேயளவான ஆயுதங்களையும் வைத்திருக்க வேண்டும் என்று கருதப்படவில்லை. அதற்கு மாறாக, கைச்சாத்தி டப்பட்ட வேளையில் இராணுவமும் விடுதலைப் புலிகளும் வைத்திருந்த இராணுவத் தொகையையும் ஆயுதங்களையும் அவ்வாறே வைத்திருக்க வேண்டும் என்பதே புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் நிலைப்பாடாகவிருந்தது. எனினும், ஒரு வருடத்துக்கும் மேலாக புரிந்துணர்வு ஒப்பந்தம் நடைமுறையிலுள்ள காலவரையில். இந் நிலைப்பாடு கடைப்பிடிக்கப்படாதா என்ற கேள்வி நிச்சயமாக எழுகின்றது. சமாதானத்தை முன்னெடுக்கும் நோக்கில் பாதுகாப்புச் செலவைக் குறைக்க வேண்டியது அரசாங்கத்தின் தார்மீகக் கடமையாக இருந்த போதிலும், பாதுகாப்புச் செலவினம் முன்பிருந்தது போலவே இருக்கின்றது. தற்கால யுத்தத்தரத்துக்கேற்ப இராணுவத்தை நவீனமயப்படுத்தும் கைங்கரியத்தில் அரசாங்கம் இறங்கியுள்ளது. நவீன யுத்த விமானங்கள் மற்றும் நவீன யுத்த தளபாடங்கள் இலங்கை அரசாங்கத்தால் தருவிக்கப்பட்டிருக்கின்றது. நவீன யுத்த தளபாடங்கள் பிற நாடுகளிலிருந்து வணிகக் கப்பல் மூலமே கொண்டுவரப்படுகின்றது. விடுதலைப் புலிகளின் வணிகக் கப்பலொன்று சர்வதேசக் கடற் பிராந்தியத்தில் வைத்து இலங்கைக் கடற்படையால் தாக்கி அழிக்கப்பட்டதற்குப் பயன்படுத்தப்பட்ட யுத்தக் கப்பல் இந்தியர்வால்



வழங்கப்பட்டதாகும். இந்திய அரசாங்கம் இலங்கை அரசாங்கத்துக்கு யுத்த தளபாடங்களை விற்பனை செய்வதற்கு இணங்கி யுள்ளதாகப் பத்திரிகைகள் மூலம் அறியக் கிடைத்தது. அமெரிக்காவும் பெரிய யுத்தக் கப்பலொன்றினை இலங்கைக்கு வழங்கவுள்ளதாகவும் அறியக் கிடைத்தது. இவற்றுக்கு மேலாக இலங்கை அரசாங்கம் இராணுவத்திற்கு ஆட்திரட்டும் பணியிலும் ஈடுபட்டுள்ளது. இவ்வாறு இராணுவப் பலத்தையும், ஆயுதப் பலத்தையும் உயர்த்துவது அண்டை நாடுகளோடு யுத்தம் புரிவதற்காகவல்ல இங்குள்ள தமிழ் மக்களைக் கொன்று குவிப்பதற்காகவே என்பது எமது நிலைப்பாடாகும். இவ்வாறான செயற்பாடுகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்திற் காணப்படும் சமநிலைக் கோட்பாட்டை அப்பட்டமாக மீறும் செயற்பாடுகளாகவே கருதப்படுதல் வேண்டும்.

யாழ், குடாநாட்டிலிருந்து இடம் பெயர்ந்த தமிழ் மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியேறி இயல்பு நிலையில் வாழ விடுத்த கோரிக்கைக்கு முரணாக உயர் பாதுகாப்பு வலயம் நீக்கப்பட மாட்டாதென மிலிந்த மொரகொட தெரிவித்திருப்பது மனித நேயமற்றதொன்றாகும். மிலிந்த மொரகொடவின் நிலைப் பாடு சமாதான முன்னெடுப்புக்கு முரணானது என்பதே எனது நிலைப்பாடு. நெற்றி வியர்வை சிந்தி உழைத்து தமக்கென வீடுகளைக் கட்டிக் கொண்ட தமிழ் மக்கள் அவற்றை விட்டுவிட்டு வேறு இடங்களில் குடியேறலாமே என்ற மிலிந்த மொரகொடவின் நிலைப்பாடு வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதாக உள்ளது. இந் நிலைப்பாட்டின் உள் நோக்கம் யாழ் குடா நாட்டை இராணுவ மற்றும் சிங்கள மக்களின் குடியேற்ற பூமியாக்குவதற்கோ என்ற சந்தேகம் எம்முள் தோன்றுகின்றது.

உதாரணமாக மொரட்டுவை, பாணந்துறை மற்றும் களுத்துறை போன்ற பகுதிகள் சிங்கள இராணுவ நலனுக்குத் தேவையானவை எனக்கருதப்பட்டு அப்பகுதிகள் உயர் பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டு அங்குள்ள மக்களை அம்பாந்தோட்டை போன்ற பிரதேசங்களுக்குச் சென்று குடியேறுமாறு சிங்கள இராணுவம் கேட்குமானால், அங்கு வாழும் சிங்கள மக்களின் உணர்வு எப்படி இருக்கும் என்பதை நினைத்துப் பார்த்தல் வேண்டும். யாழ் குடா நாட்டில் அதி உயர் பாதுகாப்பு வலயங்களின் உள்ளேயுள்ள தமிழ் மக்களை வேறு இடங்களில் சென்று குடியேறுமாறு இராணுவம் கோரும். போது அந்தத் தமிழ் மக்களின் உணர்வலைகள் எப்படி இருக்கும்?

இதன் மூலம் சமநிலை நிலைப்பாட்டை அரசாங்கம் உதறித் தள்ளிவிட்டது என்பது தெளிவாகத் தெரிகிறது. புரிந்துணர்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்பந்தத்துக்குப் பின்னரான இவ்வாறான செயற்பாடுகளை விடுதலைப்புலிகள் சர்வதேச சமூகத்துக்கு விசேடமாக ஜப்பானுக்கும் அமெரிக்காவுக்கும் எடுத்துரைக்க வேண்டுமென தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர். இவ்வாறான செயற்பாடுகளில் அரசாங்கம் ஈடுபட்டிருக்கும் அதேவேளையில், தென் இலங்கையிலுள்ள கடும் போக்காளர்கள் விடுதலைப் புலிகள் ஆயுதங்களைச் சேகரிக்கின்றார்கள். சிறுவர்களைப் படையில் சேர்க்கின்றார்கள் என்றெல்லாம் பிரசாரம் செய்கின்றனர். சட்ட ரீதியாக ஆயுதங்களைக் கொள்வனவு செய்யும் அரசாங்கம் விடுதலைப் புலிகள் ஆயுதக் கொள்வனவை மேற்கொள்ளத் தடை விதித்திருப்பது சமநிலையான செயலாகுமா?

சமநிலைக் கோட்பாட்டிற்கேற்ற, கடற்பிராந்தியத்தில் அசம்பாவிதங்களைத் தவிர்க்கும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தத்திற் சில திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமென அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் இணங்கியுள்ள போதிலும் கடற்படையினர் அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதாகப் பத்திரிகைகள் வாயிலாக அறியக் கிடைத்தது. மக்களால் தெரிவு செய்யப்பட்ட அராங்கமொன்றின் கீழுள்ள கடற்படையானது என்ன ரீதியில் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை எதிர்க்க முடியும்? இதற்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிட்டால், புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு அரசாங்கம் மதிப்பளிக்கிறது என்று எவ்வாறு கூற முடியும்? அரசாங்கத்துக்கு எதிராக அரச படைகளின் நிலைப்பாட்டுக்கு கட்டுப்பாடு விதிக்க வேண்டும் என கோருவது சர்வதேச கண்காணிப்புக்குழுவினதும், சர்வதேச சமூகத்தினதும் கடமையாகும். கட்டுப்பாடு இல்லாத விடத்து சமநிலைக் கோட்பாடு இல்லாது போகும் என்பதே எமது கருத்து. கொள்கைகளை வகுப்பது அரசாங்கத்தின் கடமை. வகுத்த கொள்கைகளை நடைமுறைப்படுத்துவது அரச படைகளின் கடமையாகும். அரசாங்கத்தின் கொள்கைகளை நடைமுறைப்படுத்தத் தவறுவோருக்கு எதிராக தகுந்த நடவடிக்கை எடுப்பது அரசாங்கத்தின் கடமை.

## சம பங்களிப்பு

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் சமபங்களிப்பு வழங்க வேண்டுமென்பது மறைமுகக் கோட்பாடு. இந்த விடயத்தில் அரச தரப்பு பல தவறுகளை மேற்கொண்டுள்ளது என்பது நன்கு தெரிந்து விட்டது. புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் எழுதப்பட்டுள்ள முக்கிய விடயமான பொதுக் கட்டிடங்கள், மத வழிபாட்டுத் தலங்கள் மற்றும் பாடசாலைகளிலிருந்து இராணுவம்



வெளியேறவேண்டுமென்பது நிறைவேற்றப்பட்டதா? சர்வதேச சமூகமும், சர்வதேச கண்காணிப்புக்குழுவும் இது தொடர்பாக ஏன் அழுத்தம் கொடுக்கவில்லை. அதியுயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக ஒப்பந்தத்திற் குறிப்பிடப்படாதிருந்த போதிலும், இயல்புநிலை ஏற்படுத்தப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் அதியுயர் பாதுகாப்பு வலயம் அகற்றப்பட்டிருத்தல் வேண்டும்.

அதியுயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான அமெரிக்கத் தூதுவரின் நிலைப்பாடு மிக விசித்திரமாகவுள்ளது. சமாதானம் வந்த பின்னர் அதியுயர் பாதுகாப்பு வலயம் தானாகவே அகன்று விடும் என்பது அவரது நிலைப்பாடு. சிங்களப் பேரினவாத சக்திகளின் நிலைப்பாட்டை அவர் இன்னமும் சரிவரப் புரிந்து கொள்ளவில்லை என்பதே எமது நிலைப்பாடு.

தமிழ்ப் பிராந்தியம் மட்டுமே யுத்தத்தின் காரணமாகப் பேரழிவுக்கு உட்பட்டமையால் இந்தப் பேரழிவை உண்டாக்கியவர்களே சட்ட ரீதியாகவும், தார்மீக ரீதியாகவும் புனரமைப்புக்கான முழுச்செலவையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். எனவே, அரசாங்கமே இதனைச் செய்ய வேண்டிய கடப்பாடு உள்ளது. இன்றைய சூழ்நிலையில் இதற்கான சாத்தியம் இல்லாமையால் சர்வதேசத சமுதாயமே நிதியுதவி வழங்க வேண்டும்.

1987 இல் இலங்கை, இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் 50 கோடி அமெரிக்க டொலர் வட, கிழக்கு புனர்வாழ்வு, புனர்நிர்மாணத்திற்காகக் கிடைக்கப் பெற்றது. இத்தொகை அரசாங்கத்திடமே கொடுக்கப்பட்டது. ஆயினும், இத்தொகையில் பெருமளவு யுத்தத்திற்காகவே செலவிடப்பட்டது. வீடில்லாமல் வானமே கூரையாக வாழ்ந்த தமிழ் மக்களுக்கென அனுப்பிவைக்கப்பட்ட கூடாரங்கள் கூட வழங்கப்படவில்லை. ஆகவே, இந்தக் கசப்பான அனுபவத்தைக் கவனத்திற் கொண்டு மக்களுக்கான புனரமைப்பு, புனர்வாழ்வு மற்றும் புனர்நிர்மாணப் பணிகள் இடம் பெற வேண்டும். இவ்வாறான திட்டங்களின் முன்னேற்றங்களை உலக வங்கியும், உதவி வழங்கும் நாடுகளும் தங்கள் உத்தியோகத்தர்கள் மூலம் 3 மாதங்களுக்கொருதடவை அவதானிப்பு முறை யையும் மதிப்பீட்டு முறையையும் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27

# மனித உரிமை தொடர்பாக இரு வேறு நிலைப்பாட்டில் சர்வதேச சமூகம் ?

ஜப்பானில் அண்மையில் நடைபெற்ற ஆறாம் சுற்று சமாதானப் பேச்சுவார்த்தையின் போது நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களின் ஜனநாயக பாரம்பரியம் மற்றும் மனித உரிமை மீறல்கள் அத்துடன் சிறுவர்களைப் படைக்குச் சேர்க்கும் விடயங்களில் முன்னேற்றம் காணப்படாதுவிடில் சர்வதேச சமூகத்தின் நிதி உதவி கிடைக்காமல் போகலாம் என்ற தோரணையில் அன்ரன் பாலசிங்கத்திடம் எச்சரிக்கை ஒன்று விடுத்தப்பட்டதாக அறியக் கிடைத்தது. முன்னால் சர்வதேச அபய ஸ்தாபனத்தின் தலைவரான இயன் மாட்டின் மனித உரிமை மீறல்கள் விடயங்கள் தொடர்பாக அவதானிக்க வேண்டியவை தொடர்பாக எடுத்துரைத்தார். அந்நிலைப்பாட்டுக்கு விடுதலைப்புலிகள் எதிர்ப்புக் காட்டியமையால் சர்வதேச அபய ஸ்தாபனத்தின் கோரிக்கை தோல்வியுற்றது.

1983 இலிருந்து 2001 இறுதிவரை நடைபெற்ற யுத்தத்தில் படுமோசமான வகையில் அரசாங்கம் மனித உரிமை மீறல்களை மேற்கொண்டதென சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் ஐ.நா. சபையில் வெளிப்படுத்தி இருந்தமை யாவரும் அறிந்த விடயமாகும்.

இராணுவத்தினால் மேற்கொள்ளப்பட்ட சட்டத்துக்கு முரணான கொலைகள், சித்திரவதைகள் பாலியல் வல்லுறவுகள், ஆட்கள் கடத்தப்பட்டமை மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் முதலியவை புள்ளி விபர ரீதியாக எடுத்துக் காட்டப்பட்டன. 1995ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இராணுவம் யாழ் குடா நாட்டைக் கைப்பற்றியதன் பின்னர் 746 இளைஞர்களும் யுவதிகளும் காணாமற் போயுள்ளனர். நவாலி சென் பீட்டர்ஸ் தேவாலயத்தில் தங்கியிருந்த அகதிகள் மீது விமானப்படை குண்டு வீசித் தாக்கியதன் மூலம் 126 பொது மக்கள் கொல்லப்பட்டமையும், நாகர்கோவில் பாடசாலையொன்றின் மீது விமானப் படையினர் குண்டு வீசியதால் 42 மாணவர்கள் துடிதுடித்து மரணமாகியமையும் குமரபுரம், மயிலன்தனை, கொக்கட்டிச்சோலை ஆகிய இடங்களில் நடைபெற்ற இனப்படுகொலைகளும், கல்லூரி மாணவியான கிருஷாந்தி குமாரசாமி, ரஞ்சனி வேலாயுதபிள்ளை, கோணேஸ்வரி, சாரதாம்பாள் போன்றோரின் பாலியல் வல்லுறவு கொலையும் போன்ற விடயங்கள் யாவும் படையினராலேயே



மேற்கொள்ளப்பட்டதாக அறியக்கிடைத்தது. இவை யாவும் வெளிச்சத்துக்கு வந்த சில சம்பவங்களாகும். வெளிச்சத்துக்கு வராத சம்பவங்கள் ஆயிரக் கணக்கில் இருக்கலாம். இவ்வாறான படுமோசமான மனித உரிமை மீறல்களுக்கும் ஜனநாயகத்துக்கு விரோதமான செயல்களும் மேற்கொள்ளப்பட்ட போதிலும் கைகட்டி மௌனியாகவிருந்த வெளிநாட்டு அரசாங்கங்கள் அரசாங்கத்துக்கு மேலும் நிதிஉதவிகளை வழங்கியதன் மூலம் யுத்தத்துக்கும் அதன் மூலமாக மனித உரிமை மீறல்களும் தொடருமானால் இலங்கை அரசாங்கத்துக்கான பொருளாதார உதவி நிறுத்தப்படுமென எந்தவொரு வெளிநாட்டு அரசாங்கமாவது எச்சரிக்கை விடுத்ததா? ஆயினும், தமிழ் மக்களுக்கு எதிராக இனப்படுகொலையை மேற்கொள்வதாக புகழ்பெற்ற சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் கடுமையாக சாடியிருந்தன. அப்படியிருந்த போதிலும் எந்தவொரு வெளிநாட்டு அரசாங்கமாவது இலங்கை அரசாங்கத்துக்கு எச்சரிக்கை விடுக்காதிருந்தமை வேதனைக்குரியவோர் விடயமாகும். எனவே, நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் ஒரு தரப்புக்கு மட்டும் எச்சரிக்கை விடுத்திருப்பது நேர்மையற்ற ஒரு செயல் என நாம் கருதுகின்றோம்.

## புலிகள் மீதான குற்றச் சாட்டுகள் நியாயமானவையா?

விடுதலைப்புலிகள் ஜனநாயக மரபைப் பேணுவதில்லை என்பதும் மனித உரிமை மீறல்களை மேற்கொள்கிறார்கள் என்பதும் சிறுவர்களைப் படையிற் சேர்க்கின்றார்கள் என்பதும் வெளிநாடுகளின் பொதுவான குற்றச்சாட்டுகளாகும். இக் குற்றச்சாட்டுக்களுக்குத் தகுந்த பதில் வழங்குவதற்கு முன்னர் புலிகளின் பின்னணி மற்றமு் உலகநாடுகளிலுள்ள ஏனைய விடுதலை இயக்கங்களின் பின்னணி தொடர்பாகவும் சிந்திக்க வேண்டியது அவசியம். விடுதலை இயக்கங்கள் தோன்றியுள்ள நாடுகளில் அவற்றின் உன்னத நோக்கங்கள் வெற்றியடைய வேண்டுமானால், பாராளுமன்ற ஜனநாயக மரபுகளைத் தீவிரமாகக் கடைப்பிடிப்பது மிகவும் கஷ்டமான தொன்றாகும். இச்சரித்திர உண்மையை இருபதாம் நூற்றாண்டில் நாம் உணர்ந்தோம். ஜனநாயகத்தைப் பேணுவதற்கு பாராளுமன்ற ஜனநாயக மரபு முறை நன்கு வேரூன்ற முடியும். அதேவேளையில் மக்களின் ஆதரவின்றி எந்தவொரு விடுதலை இயக்கமும் வெற்றி பெற முடியாதென்பதை வரலாறு காட்டியுள்ளது. இந்த வரலாற்றுக்கு விடுதலைப் புலிகள் இயக்கம் விதிவிலக்காக அமைய முடியாது. ஆகவே விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனும் அவரது தளபதிகளும் தமது மக்களின் கருத்துகளையும் அபிலாஷைகளையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்குணர்ந்து அதற்கேற்பச் செயற்படுகின்றார்கள் என்பதை நன்கு அறிந்துள்ளோம்.

எனவே நோாவேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் இவ்விடயத்தில் நடு நிலைமையைக் கடைப்படிப்பது நல்லதென நாம் உணர்கிறோம்.

இதுவரை ஐ.நா. ஸ்தாபனத்தில் யாராவது மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஏதாவது குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியுள்ளனரா? கடந்த 20 வருட கால யுத்தத்தின் போது, விடுதலைப்புலிகள் ஏதாவது பாலியல் வல்லுறவு சம்பவத்தில் ஈடுபட்டதாக இலங்கை இராணுவமோ விடுதலைப்புலிகளுக்கு எதிரான அமைப்புக்களோ அன்றேல் வெளிநாட்டு ஸ்தாபனங்களோ கூறியதுண்டா? இந்த உண்மையை சர்வதேச அபய ஸ்தாபனத்தின் முன்னாள் தலைவரான இயன் மாட்டினும் நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சரும் அறிந்து கொள்ள வேண்டியது அவசியமென நாம் கருதுகின்றோம். ஆனால் 1995 இல் இராணுவம் யாழ் குடா நாட்டைக் கைப்பற்றிய தன் பின்னர் 13-14 வயதுடைய மாணவர்களும் ஆபாசப் படங்களைப் பார்க்கும் வகையில் கலாச்சாரச் சீரழிவு இடம் பெற்றது.

சிறுவர் விவகாரம் ஓர் மனிதாபிமான விடயமாகக் கருதப்படுதல் வேண்டும். வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களும் சிறுவர் தொடர்பான ஐ.நா. ஸ்தாபனமும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலல்லாது அரசகட்டுப்பாட்டுப் பகுதிகளிலேயே அதிக கவனம் எடுத்து வருகின்றனர் என்பதும் எமது நிலைப்பாடு. 19 வருட காலமான யுத்தம் தமிழ்ப் பிரதேசங்களிலேயே இடம்பெற்றமையால் அப்பிரதேசச் சிறார்களே யுத்தத்தின் மூலம் பாதிக்கப்பட்டனர். தமிழ்ப் பிரதேசத்தின் 70 வீதமான பகுதியை விடுதலைப்புலிகள் தமது கட்டுப்பாட்டுக்குக் கீழ்க் கொண்டு வந்துவிட்டனர். இப்பிரதேசங்களிலேயே அநேக சிறார்கள் இருக்கின்றனர். விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள அநேக சிறுவர்கள் தமது தாயையோ தந்தையையோ அன்றேல் இருவரையுமே இழந்துள்ளனர். அப்படியல்லாத சிறுவர்களிற் பலர் வறுமையின் காரணமாகப் பாடசாலைகளுக்குச் செல்ல முடியாத பிச்சை எடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இவ்வாறான சிறுவாகள் தொடர்பாக ஐ.நா. சிறுவர் பராமரிப்பு ஸ்தாபனம் எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என்பதே எமது கருத்து. சிறுவர் தொடர்பான அரச சார்பற்ற நிறுவனங்களிலும் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதியின் சிறுவர்கள்



தொடர்பாக அதிக அக்கறை எடுக்கவில்லை. எனவே இவ்வாறு பாதிக்கப்பட்ட சிறார்களின் விபரங்களை அறிந்து கொண்ட விடுதலைப்புலிகள் ஓர் மனித நேயப் பணியாக இச் சிறுவர்களைப் பராமரித்து வருகின்றனர். சிறுவர் தொடர்பான ஐ.நா. ஸதாபனம் தனது கடமையையும் பொறுப்பையும் செவ்வனே செய்திருப்பின் இவ்வாறானதொரு நிலைதோன்றியிருக்க வாய்ப்பில்லை. அம்பாந்தோட்டை வரையில் ஆயிரக் கணக்காண சிறார்கள் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்படுவது தொடர்பாக சிறுவர் தொடர்பான ஐ.நா ஸ்தாபனமோ அல்லது சம்பந்தப்பட்ட அரச சார்பற்ற நிறுவனங்களோ அதிக அக்கறை காட்டாதது கேள்விக்குரியதோர் விடயமாகவுள்ளது. எனவே, இயன் மாட்டின் மற்றும் நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சரின் கோரிக்கைகள் மிகவும் பாரபட்சமானவை என்றே நாம் கருதுகிறோம். எனவே இந்த இரு தலைவர்களும் இது தொடர்பான உண்மையான நிலையை வெளியுலகத்துக்கு எடுத்துரைப்பது அவர்களது கண்ணியத்துக்கும் நேர்மைக்கும் உகந்ததாகும்.

மேற்குறிப்பிட்ட இருவரிடமும் மனித உரிமை மீறல்கள் தொடாபான சில அடிப்படைக் கேள்விகளைக் கேட்க விரும்புகின்றோம்.

1. சமீபத்தில் 2001 தேர்தலில் வவுனியாப் பிரதேசத்திலும் மட்டக்களப்பு பிரதேசத்திலும் 55, 000 தமிழ் மக்கள் தமது பிறப்புரிமையான மேற்கொள்ள இராணுவம் தடுத்தமை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட வழக்கில் உச்ச நீதி மன்றம் இராணுவத்துக்கும் தேர்தல் ஆணையாளருக்கும் எதிராகத் தீாப்பளித்து நட்ட ஈடும் வழங்கப்பட்டது. இவ்வாறான விடயங்களே சர்வதேச சமூகத்தினர் தமது கவனத்திற்கு எடுக்க வேண்டியவையாகும். இவ்வாறான அப்பட்டமான மனித உரிமை மீறல் தொடர்பாக தென் இலங்கையின் எந்தவொரு புத்தி ஜீவியும் ஏன் குரல் கொடுக்கவில்லையென சர்வதேச சமூகம் ஏன் கேட்கவில்லை?

2. 1998 ஆம் ஆண்டு பிரித்தானிய அரசாங்கம் இலங்கைக்கு பல்வேறு வகையான ஆயுதங்களை ஏற்றுமதி செய்ய அனுமதி வழங்கியிருந்தது. இந்த ஆயுத ஏற்றுமதியில் இராசயன ஆயுதங்களும் உள்ளமை மிகக் கொடூரமானதாகும். பேரழிவை உண்டாக்கும் இராசாயன ஆயுதங்களை ஈராக் வைத்துள்ளதா, உலக சனத்தொகையில் 99 வீதமானோரின் விருப்பத்துக்கும் மாறாக ஈராக் மீது போர் தொடுக்கும் பிரித்தானியா அன்று இலங்கைக்கு இராசாயன ஆயுதங்களை ஏற்றுமதி செய்வதற்கு அனுமதி வழங்கியிருந்ததனை எவ்வாறு நியாயப்படுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியும்? இயன் மாட்டினின் சர்வதேச அபய ஸ்தாபனத்துக்கும் இவ்விடயம் தெரிந்திருந்தும் அவர்களால் அதற்கெதிராக ஏன் குரல் கொடுக்கவில்லை? மனித நேயத்தை விட தனது வியாபார நலனுக்கே பிரித்தானியா முன்னுரிமை வழங்கும் என்பதற்கு இதுவோர் உதாரணமாகும்.

3. ஜனநாயகமும் மனித உரிமைகளும் பேணப்படுவது அவசியமென நாமும் கருதுகின்றோம். தமிழ்ப் பகுதிகளில் இயல்பு நிலை தோன்றி சமாதானம் மலர வேண்டும். அதற்கு அதிஉயர் பாதுகாப்பு வலயம் தடையாக இருப்பது மனித உரிமை மீறல் அல்லவா? எனவே, இவ்வாறான அநீதிகளுக்கு எதிராக இயன் மாட்டடினும் நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சரும் ஏன் குரல் கொடுக்கவில்லை.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் சமுகநிலை தோன்றி சமாதானம் மலர்ந்து விடுதலைப்புலிகளின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் தோன்றாத போது எதிரணியினரும் அங்கு அரசியல் பங்கு கொள்ள முடியும்.



# 28

## முன்னோடி மாநாட்டை வேறொரு இடத்தில் நடத்தி புலிகளையும் பங்குகொள்ளச் செய்வது அவசியம்

இலங்கையில் வட கீழ் எகுதியினதும் தென்பகுதியினதும் அபிவிருத்திக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாடொன்று எதிர்வரும் ஜூன் மாதத்தில் ஜப்பானில் நடைபெறவிருப்பதற்கு முன்னோடியாக இம்மாதம் (ஏப்ரல்) 14 ஆந் திகதியன்று அமெரிக்காவில் நடைபெறவுள்ள கூட்டத்துக்குப் பல நாடுகள் அழைக்கப்படுகின்ற போதிலும் விடுதலைப் புலிகளுக்கு அழைப்பு விடுக்காது அரசாங்கத்துக்கு மாத்திரம் அழைப்பு விடுக்கப்பட்டிருப்பது யாவரும் அறிந்த விடயம்.

நோர்வே அரசானது இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் சம அந்தஸ்து சம நிலை மற்றும் சம பங்களிப்பு என்ற கோட்பாட்டின் அடிப்படையிலே இதுவரை செற்பட்டு வருகிறது. இந்தக் கோட்பாட்டை மையமாக வைத்தே இலங்கை அரசாங்கத்தையும் விடுதலைப் புலிகளையும் சமநிலையில் கருதவேண்டுமென்று ஜப்பானிய விசேட தூதுவர் செயற்படுவதும் யாவரும் அறிந்ததென்றே. விடுதலைப் புலிகளையும் அரசாங்கத்தையும் சம அந்தஸ்தில் மற்றும் சமநிலையிற் கருதியமையே அநேக உலக நாடுகளின் அரசியற் பிரமுகர்கள் விடுதலைப் புலிகளைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தியமைக்கான காரணமாகும்.

இக் கோட்பாட்டை ஏற்று உலக வங்கியும் ஆசிய அபிவிருத்தி வங்கியும் ஐ.நா.வைச் சேர்ந்த நிறுவனங்களும் செயற்பட்டு வருகின்றன. யுத்த நிறுத்தம் புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் நோர்வேயின் மத்தியஸ்தத்தைத் தொடர்ந்து அமெரிக்கா விடுதலைப் புலிகள் தொடர்பான தமது பழைய நிலைப்பாட்டினை மறந்து சமாதானம் மலர வேண்டுமெனச் செயற்பட்டதனைப் புதியதோர் இராஜ தந்திரமாகக் கருதலாம்.

விடுதலைப் புலிகள் இயக்கம் ஓர் தடை செய்யப்பட்ட இயக்கமாக உள்ளமையினாலேயே அவர்களை அழைக்க முடியாதுள்ளதென அமெரிக்கா கூறியுள்ளது.

ஒஸ்லோ மாநாட்டில் அமெரிக்காத் தலைவர்களும் விடுதலைப் புலிகளின் தலைவர்களும் பங்குபற்றினர். இரு பகுதியினரும் ஒருவரை ஒருவர் அங்கீகரித்துக் கதைத்தனர். ஒஸ்லோ மாநாட்டில் அமெரிக்காப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் கதைத்தது தடைச் சட்டத்துக்கு முரணானதாகவிருந்த போதிலும் அதனை அவர்கள் பொருட்படுத்தவில்லை. ஆரம்பத்தில் இராஜதந்திர ரீதியில் அமெரிக்க செஞ்சீனாவை அங்கீகரிக்காத போதிலும் அமெரிக்கா இராஜதந்திரிகள் செஞ்சீனத் தலைவர்களுடன் இரகசியமான முறையில் பேச்சு வார்த்தைகளை மேற்கொண்டமை யாவரும் அறிந்த விடயம். வியட்நாமிய மக்களுக்கு எதிராக அமெரிக்கா யுத்தத்தை மேற்கொண்ட வேளையிலும் அன்றைய அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஹென்றி கீஸிங்கர் வியட்நாமிய தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தியமையும் யாவரும் அறிந்ததே. இதன் மூலம் இராஜதந்திர நலன்களுக்கு முன்னுரிமை கொடுத்து தடைச் சட்டத்தைப் பராமுகமாக விருப்பது சாலச் சிறந்ததென்பது தெரியவந்துள்ளது. எவ்வாறாயினும், விடுதலைப் புலிகளுக்கு அழைப்பு விடுப்பதற்கு இத்தடைச் சட்டம் தடையாக இருக்குமானால், இம் மாநாட்டில் விடுதலைப் புலிகளும் கலந்து கொள்வதற்கு வாய்ப்பளிக்கும் வகையில், அமெரிக்காவில் அல்லாது ஜெனிவா போன்ற வேறோரிடத்தில் இக் கூட்டத்தை நடாத்துவது உசிதமானதாகவிருக்கும்.

இலங்கையில் வட, கிழக்கின் புனர்வாழ்வு, புனரமைப்பு, புனர்நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி தொடர்பான இந்த மாநாட்டில் மட்டுமல்ல எந்தவொரு மாநாட்டிலும் விடுதலைப் புலிகள் கலந்து கொள்வது கட்டாயமான தொன்றாகும். அவர்கள் கலந்துகொள்ளாத எந்தவோர் மாநாடும் படுதோல்வியடையும் என்பது எமது கணிப்பு. இந்த உண்மையை அமெரிக்கா உட்பட சகல வெளிநாடுகளும் நன்கு உணர்ந்துள்ளன.

### அமெரிக்க தடைச் சட்டத்தின் பின்னணியும், அதன் தாக்கங்களும்

அமெரிக்கா தனது நாட்டின் நலனைக் கவனத்திற் கொண்டு, வெளிநாடுகளில் இயங்கும் சில இயக்கங்களைப் பயங்கரவாத இயக்கங்கள் எனக் கூறி அவற்றைத் தடை செய்தது. இந்தப் பட்டியலில் தமிழர்களின் விடுதலைக்காக போராடும் விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் சேர்த்துக் கொண்டது துரதிஷ்டமாகும். பயங்கரவாத இயக்கங்களென அமெரிக்கா கூறிய போது, பயங்கரவாத இயக்கங்களுக்கும் விடுதலை இயக்கங்களுக்கும் இடையிலான வித்தியாசத்தைத் தெளிவுபடுத்தத் தவறியமை மாபெரும் தவறாகும். இச் சந்தர்ப்பத்தில் அதாவது 1983 லிருந்து 2001 வரையில் நடைபெற்ற



யுத்தத்தில் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள், மிக மோசமான இனப் படுகொலைகள் சகலராலும் கடுமையாகக் கண்டிக்கப்பட்ட அரச பயங்கரவாதம் தொடர்பாக சர்வதேச புகழ்பெற்ற அரச சார்பற்ற நிறுவனங்கள் ஐ.நா.சபையில் எடுத்துரைத்தன. இந்த அடிப்படை உண்மையை அமெரிக்கப் பிரமுகர்களும் நன்கு உணர வேண்டும்.

விடுதலைப் புலிகள் வன்முறையில் ஈடுபடுதலாகாது என அமெரிக்கப் பிரமுகர்கள் கீதா உபதேசம் செய்தனர். இது உண்மைக்குப் புறம்பான விடயம். ஏனெனில் உலகப் புகழ்பெற்ற பிரான்ஸ் மற்றும் ரஷ்யப் புரட்சிகள் வன்முறையாலேயே ஏற்பட்டன. சீனாவில் பொதுவுடைமையும் போராட்டத்தாலேயே ஏற்பட்டது. வியட்நாமிய மக்கள் போராட்டங்களாலே அமெரிக்காவைத் தோற்கடித்தார்கள். அது போல் சகல ஆசிய, ஆபிரிக்க, நாடுகளும் ஏகாதிபத்திலிருந்து விடுபட்டு தமது இறையாண்மையைப் பெற்றுக்கொள்வதற்கு போராட்த்தையே நாடினர். போராட்டம் கூடாதென சகல நாடுகளுக்கும் உபதேசம் செய்யும் அமெரிக்காவும் வன்முறையை அனுஷ்டித்தே சுதந்திரம் பெற்றது. இவை வரலாற்று உண்மையை பின் பற்றியே 327 வருட காலமாக மேலைத் தேய ஏகாதிபத்தியத்தின் கீழும், அவர்களின் தாரை வார்ப்பில் 55 வருட காலமாக இன மேலாதிக்கத்தின் கீழும் சொல்லொண்ணாத் துயரங்களையும் அவலங்களையும் தமிழர்கள் அனுபவிக்கின்றனர். எனவே, இழந்த சுதந்திரத்தையும் இறையாண்மையையும் மீண்டும. பெற்றுக்கொள்வதற்கு தமிழர்கள் போராட்டத்தைப் பிரயோகிக்கும் தார்மீக உரிமையை ஏன் அமெரிக்கா நிராகரிக்கின்றது? தமிழ் ஈழ இராச்சியத்தின் சரித்திரத்தை நன்கு அறிந்திருந்தால் எப்படிப் புத்திமதி கூறமுடியும். தமிழ் இராட்சியம் 6,000 வருடங்களாக சுதந்திரத்துடனும் இறையாண்மையுடனும் இருந்ததை சர்வதேச சமூகமோ அமெரிக்காவோ அறியவில்லையா? 6,000 வருடங்களுக்கு மேலாக சுதந்திரத்துடனும் இறையாண்மையுடனும் வாழ்ந்த நிலையைத் திரும்ப பெற்றுக் கொள்ளும் பொருட்டே போராட்டம் என்பதை அமெரிக்காவுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் கூறவேண்டும். எனவே தமிழ் மக்களின் சரித்திரம், தியாகம் மற்றும் அபிலாஷைகளை மனதிற்கொண்டு, தடைப்பட்டியலில் இருந்து விடுதலைப் புலிகளை நீக்க வேண்டும்.

யுத்த நிறுத்தம் அவசியமெனக் கருதி அதனைக் கொண்டு வந்தது விடுதலைப் புலிகளேயாகும். தன்னிச்சையாகவே விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடித்தனர். அதன் பின்னரே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. யுத்த நிறுத்தமும் புரிந்துணர்வு ஒப்பந்தமும் கடைப்பிடிக்கப் படுகையில் வன்முறைக்கு இடம் இல்லை என்பதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் ஏன் அமெரிக்கா உணரவில்லை? ஒப்பந்தத்தில் சமநிலை கடைப்பிடிக்கப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் ஆயுதக் கொள்வனவில் ஈடுபடக்கூடாதெனக் கூறினால் அதனை நீதியான, நேர்மையான கொள்கையெனக் கருதமுடியும். அதற்கு மாறாக, அமெரிக்கா இலங்கை அரசாங்கத்துக்குப் பாரிய யுத்தக் கப்பலொன்றினை வழங்கவுள்ளதாகவும் பத்திரிகைகள் மூலம் தெரிய வருகிறது. இது சமநிலைக் கோட்பாட்டை மீறும் செயலாகும்.

இப் பின்னணியை எடுத்துக் கூறியமைக்கான காரணம், அமெரிக்காவின் தடைப் பட்டியலில் இருந்து விடுதலைப் புலிகளையும் சேர்த்துக் கொள்வதற்கு எத்தனித்த வேளையில், இலங்கையிலும் வெளிநாடுகளிலுமுள்ள தமிழ்ப் புத்திஜீவிகள் சுதந்திரத்துடனும் இறையாண்மையுடனும் வாழ்ந்த தமிழ் மக்கள் 327 வருட காலமாக மேற்குலக ஏகாதிபத்தியத்தின் கீழ் அடைந்த துயரங்களையும், அதைத் தொடர்ந்து 55 வருட காலமாக அனுபவித்த பேரவலங்களையும் புள்ளிவிபர ரீதியில் அமெரிக்கா, கனடா மற்றும் பிரித்தானியா போன்ற நாடுகளுக்கு எடுத்துரைத்திருந்தால், இந்த அவலநிலை ஏற்பட்டிருக்க முடியாது. எனவே கடந்த காலத் தவறுகளை மீண்டும் சிந்திக்காமல், எமது கடந்தகால சுதந்திர சரித்திரத்தையும், கடந்தகால அடிமை வாழ்வையும் மேற்குலக நாடுகளுக்கு விபரமாக எடுத்து விளக்குவதன் மூலம் அமெரிக்காவின் தடைப் பட்டியலில் இருந்து விடுதலைப் புலிகளை நீக்குவதற்கு இலங்கையிலும் வெளிநாடுகளிலுமுள்ள தமிழ்ப் புத்திஜீவிகள் இனியாவது நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும்.

உலக வங்கியின் அனுசரணையுடன் பரிஸில் பல மாநாடுகள் நடைபெற்ற போதிலும் அது தொடர்பாக முன்னோடி மாநாடுகள் எவையும் நடைபெறவில்லை. ஜப்பானில் நடைபெறவுள்ள மாநாட்டுக்கு மாத்திரம் முன்னோடி மாநாடொன்று அவசியமா? விடுதலைப் புலிகள் கலந்து கொள்ளாத மாநாடொன்று தேவையற்றது. முன்னோடி மாநாடொன்று நடாத்தப்படவேண்டுமானால் அதில் விடுதலைப் புலிகளும் பங்கு பெற வேண்டும். அமெரிக்காவில் மாநாடு நடைபெறுவதில் விடுதலைப் புலிகளுக்கு அழைப்பு விடுக்க முடியாதுவிடின் அந்த மாநாட்டை ஜெனிவா போன்ற இன்னொரு இடத்தில் நடாத்தி விடுதலைப் புலிகளுக்கும் அழைப்பு விடுப்பது உகந்ததாகும்.

விடுதலைப் புலிகள் கலந்து கொள்ளாத எந்த மாநாடும் இராமர் இல்லாத இராமாயணமாக அமையுமென்பதே எமது கருத்து. ஆங்கிலம்



பேசும் நாடுகளில் இதனை மகாகவி சேக்ஷ்பியர் எழுதிய நாடகமான ஹம்லெட் நாடகத்தை அரங்கேற்றியது போன்றிருக்கும். இந்த உண்மையை அறிந்து அமெரிக்கா தகுந்த நடவடிக்கை எடுக்குமென தமிழினம் எதிர்பார்க்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29

# ஜனாதிபதியின் அண்மைய இந்தியாவுக்கான விஜயத்தின் நோக்கமும் பலாபலன்களும்

ராஜீவ் காந்தியின் மரணத்தின் பின்னர், இந்தியா தமிழர்கள் தொடர்பாக அவர்களைப் பூண்டோடு அழிக்க வேண்டும் என்ற கொள்கையையும் நேரடியாகவும் மறைமுகமாகவும் கொண்டுள்ளது. ராஜீவ் காந்தியின் மரணத்துக்கான காரணம் என்ன என்பதை இதுவரையில் எந்தவொரு புத்திஜீவியோ, அரசியல் வாதியோ வெளியிடவில்லை. விடுதலைப் புலிகளே ராஜீவ் காந்தியின் மரணத்துக்குப் பொறுப்பானவர்கள் என்று கூறுகிறார்களே தவிர, மரணமானதற்கான காரணத்தை யாரும் கூறவில்லை. ராஜீவ் காந்தியின் மரணத்தை அடுத்து இந்திய மத்திய அரசு, தமிழர்கள் தொடர்பான தனது கொள்கையை தலைகீழாக மாற்றியமைக்கான சான்றுகள் பலவுள்ளன.

1983 இல் நடை பெற்ற தமிழர்களின் இனப்படுகொலையின் பின்பு அன்றைய இந்தியப் பிரதமரான இந்திராகாந்தி அன்றைய இலங்கையின் ஜனாதிபதியான ஜயவர்தனவுக்கு கடும் எச்சரிக்கை விடுத்ததோடு தமிழர்களின் அபிலாஷைகள் பூர்த்தியாக்கப்படாதவரையில் இலங்கையில் ஒரு போதும் சமாதானம் ஏற்படாதெனக் கூறியிருந்ததை சர்வதேச சமூகம் நன்கறியும். ஆனால் இன்றைய மத்திய அரசு இதற்கு நேர்மாறாக, சமாதானம் ஏற்படுவதற்கு சகல இனத்தவரதும் அபிலாஷைகள் பூர்த்தியாக்கப்பட வேண்டுமெனக் கூறி வருகிறது. இதன் பிரகாரம் 327 வருட காலமாக மேற்குலகின் ஆட்சிக்குக் கீழ்ப்பட்டிருந்த தமிழ் இராச்சியம் அதனைத் தொடர்ந்து சிங்கள ஆக்கிரமிப்பாளரின் கீழ் 55 வருட காலமாக இருந்து வருகின்றது. இன்றும் தமிழ்ப் பகுதிகள் சிங்கள ஆக்கிரமிப்புப் படையினரின் கீழிருந்து வருகின்றது.

தமிழர்களின் விரோதியான ஜயவர்தனவின் வேண்டுகோளுக்கிணங்க ஒன்றேகால் இலட்சம் இந்தியத் துருப்புக்கள் இலங்கை வந்தன. தொடர்ந்தும் தமிழர்களுக்கும் இந்திய இராணுவத்துக்கும் இடையிலான யுத்தத்தில் இந்திய இராணுவம் படுதோல்வியடைந்தமையால் தமிழர் விடயத்தில் தலையிடாக் கொள்கையை இந்தியா கடைப்பிடித்து வருகின்றது. இதன் காரணமாக, சர்வதேச சமூகத்தின் சார்பாக நோர்வேநாடு இலங்கை அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் மத்தியஸ்தம் வகித்து அதன் மூலம் யுத்த நிறுத்தமும், புரிந்துணர்வு ஒப்பந்தமும் மேற்கொள்ளப்பட்டு ஒரு வருடம்



கடந்து விட்டது.

தலையிடாக் கொள்கையைக் கடைப்பிடித்துவரும் இந்திய மத்திய அரசுக்கு இலங்கையில சமாதானம் தோன்றுவதற்காக சர்வதேச சமூகம் வழங்கும் பங்களிப்பினையும், தலையீட்டினையும் ஜீரணிக்க முடியாமலிருப்பதற்கான முக்கிய காரணம் சர்வதேச மட்டத்தில் விடுதலைப் புலிகள் பெற்றுள்ள அங்கீகாரமும் மதிப்புமேயாகும். உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஐ.நா ஸ்தாபனங்கள், ஜப்பான், அவுஸ்திரேலியா மற்றும் மேற்குலக நாடுகளின் பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடமான கிளிநொச்சி சென்று பேச்சுவார்த்தை நடாத்து வதையும் இந்தியாவால் ஜீரணிக்க முடியவில்லை. இவ்வாறாக விடுதலைப் புலிகளுக்கு சர்வதேச அங்கீகாரம் அதிகரித்து வருவதன் மூலம் ஒன்றில் மொழிவாரியாகப் பிரிந்து விடடோ அன்றேல் இந்தியாவில் வழங்கிலுள்ள சமஷ்டி முறையிலும் பார்க்கக் கூடிய பூரணத்துவம் வாய்ந்த சமஷ்டி முறையொன்று விடுதலைப் புலிகளுக்குக் கிட்டிவிடுமென்றோ இந்தியாவுக்குப் பீதியிருப்பதனை ஊகிக்கமுடியும்.

## ஜனாதிபதியின் நிலைப்பாடு

மேற்குறிப்பிட்ட இந்திய நிலைப்பாட்டின் பின்னணியிலேயே ஜனாதிபதியின் இந்திய விஜயம் அமைந்திருந்தது. சமாதானம் மலரவேண்டும் என்ற எண்ணம் ஜனாதிபதிக்கு இருந்தாலும், சர்வதேச சமூகத்தின் தலையீட்டால் விடுதலைப் புலிகள் அரசியல் ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் பலமடைந்து வருவது நாட்டைத் துண்டாட வழியேற்படுத்தி விடுமென்ற பீதியும் உள்ளது. அதன் வெளிப்பாடாகவே அண்மையில் ஜனாதிபதி விடுதலைப் புலிகள் யுத்தங்களில் பெற்ற வெற்றிகளை விட மிகையான வெற்றிகளை புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் பெற்றுள்ளனர் எனக் குறிப்பிட்டிருந்தார். மேற்குலக நாடுகளின் தலையீடும், தாக்கமும் அதிகளவிலுள்ளதென்ற இந்தியாவின் நிலைப்பாட்டையே ஜனாதிபதியும் கொண்டுள்ளார். இப்பீதியின் காரணமாகவே கண்காணிப்பு குழு விடுதலைப் புலிகள் சார்பாகச் செயற்படுவதென்ற குற்றச்சாட்டினையும் மேற் கொண்டிருந்தார்.

மேற்குலக நாடுகள் விடுதலைப்புலிகளுக்குச் சார்பாக நடந்து கொள்வதால் விடுதலைப் புலிகளின் ஆதிக்க வளர்ச்சி காண்பதனைத் தடுக்கும் பொருட்டு, இந்தியா தலையிடாக் கொள்கையைக் கைவிட்டுச் சமாதான முயற்சியில் தலையிடும் கொள்கையைக் கடைப்பிடிப்பதன் மூலம் மேற்குலக நாடுகளின் தலையீட்டைக் குறைத்து அதன் மூலம் விடுதலைப் புலிகளின் ஆதிக்கத்தைக் குறைக்க வேண்டுமென்பதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாதிபதியின் நோக்கம். இச்சமாதான முயற்சியில் ஜப்பானும் சேர்ந்து கொண்டதால் ஜனாதிபதியின் அச்சம் மேலும் ஓங்கியுள்ளது. எனவே, தனது கொள்கையை இந்தியத் தலைவர்களுடன் பகிர்ந்துகொள்வதே ஜனாதிபதியின் இந்திய விஜயத்துக்கான காரணம்.

இந்தக் கொள்கையின் அடிப்படையிலேயே இலங்கையின் ஜனாதிபதி முதல் தடவையாக தமிழ் நாட்டு முதல்வரை உத்தியோக பூர்வமாகச் சந்திக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இதுவரையில் இலங்கையின் எந்தவொரு ஜனாதிபதியும் தமிழக முதலமைச்சரை உத்தியோகபூர்வமாகச் சந்திக்கவில்லையென்பது குறிப்பிடப்பட வேண்டும். அண்ணாத்துரை, எம்.ஜி,இராமச்சந்திரன் மற்றும் கருணாநிதி ஆகியோர் முதலமைச்சர்களாக இருந்த காலவரையில் இலங்கையின் எந்தவொரு ஜனாதிபதியும் அவர்களைக் காண விரும்பியதுமில்லை. சந்தித்தது மில்லை. மேற்கூறிய முதலமைச்சர்கள் மூவரும் தமிழர்கள் மீது பக்தியும், பாசமும் கொண்டிருந்தமையே அதற்கான காரணமாகும்.

ஆனால், தற்போதைய தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தமிழர்கள் மீது பற்றோ பாசமோ இல்லாதவர் மாத்திரமல்லாது. விடுதலைப் புலிகளைப் பூண்டோடு அழிக்க வேண்டுமென்ற கொள்கையையும் கொண்ட வராவார். எனவே, விடுதலைப் புலிகள் தொடர்பாக இலங்கை ஜனாதிபதியும், தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவும் ஒரே நிலைப்பாட்டைக் கொண்டுள்ளவர்கள் என்பது யாவரும் அறிந்த விடயம். புதுடில்லியில் ஜனாதிபதி, பிரதமர், பிரதிப் பிரதமர், வெளிவிவகார அமைச்சர், முன்னாள் பிரதமர் குஜரால் மற்றும் ஏனைய முக்கிய பிரமுகர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார். இதுவரையில் இந்தியத் தலைவர்கள் இலங்கையின் சமாதானப் பேச்சு வார்த்தைகள், அதன் முன்னேற்றங்கள் , அதன் தாக்கங்கள் தொடர்பாக ரணில் விக்கிரமசிங்க, மிலிந்த மொரகொட மற்றும் நோர்வே பிரமுகர்கள் மூலமே அறிந்து கொண்டனர். இந்திய அரசு தனது தூதுவர் மூலமும், புலனாய்வுத் துறையினர் மூலமும் இலங்கையில் நடை பெறவுதனைத் தெட்டத்தெளிவாக அறிந்து கொள்கின்றது.

ஆனால், ஜனாதிபதி உத்தியோகபூர்வமாகச் சென்று பேச்சுவார்த்தைகள் தொடர்பாக இந்தியத் தலைவர்களுக்கு எடுத்து விளக்கியுள்ளார். இது சமாதாப் பேச்சுவார்த்தை தொடர்பான இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாட்டுக்கும், ஜனாதிபதியின் நிலைப்பாட்டுக்குமிடையிலான ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் இந்தியத் தலைவர்கள் அறிந்து கொள்வதற்கு இந்த விஜயம் உதவியாகவிருந்திருக்கும். ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தைப்



பொறுத்த வரையில், இந்தியாவின் வெறுப்பைச் சம்பாதிக்காது சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் நிதியுதவியுடன் சமாதானத்தை மலர வைப்பதையே கொள்கையாகக் கொண்டுள்ளது. ஆனால், ஜனாதிபதியின் நிலைப்பாடு சற்று வேறுபட்டது என்பதை ஊகிக்கலாம். விடுதலைப் புலிகளின் ஆதிக்கத்தைக் குறைப்பதற்கு இந்தியாவின் பங்களிப்பு வேண்டுமென்பதும் மேற்குலகத் தலையீடு தேவைக்கதிகமாக இருத்தலாகாது என்பதுமே ஜனாதிபதியின் நிலைப்பாடு.

ஜனாதிபதியின் விஜயத்தினால் ஏற்பட்ட அழுத்தம் காரணமாக தலை யிடாக் கொள்கையைக் கடைப்பிடித்த இந்தியா சற்றுக் கீழிறங்கி தலையிடும் கொள்கையை அனுஷ்டிக்க இடமுண்டு. ஒஸ்லோ சர்வதேச மாநாட்டில் கலந்து கொள்ளாத இந்தியா, அமெரிக்காவில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் முன்னோடிக் கூட்டத்திற் கலந்துகொண்டது. இது இந்தியாவின் கொள்கை யிலேற்பட்ட கடுமையான மாற்றமாகத் தென்படுகிறது. உண்மையில் விடுதலைப் புலிகள் அழைக்கப்படாமையாலேயே இந்தியா இம்மாநாட்டிற் பங்குபற்றியது வெள்ளிடைமலை. இதன் மூலம் இலங்கை ஜனாதிபதியின் நிலைப்பாட்டுக்கும் இந்திய மத்திய அரசினதும் தமிழக மாநில அரசினதும் நிலைப்பாடுகளுக்கும் அதிக வித்தியாசமில்லை என்பதேயாகும்.

விடுதலைப்புலிகள் விடயத்தில் மேற்குலகும், ஜப்பானும் மென்போக்கைக் கடைப்பிடித்தாலும் இந்தியா தனது கடும்போக்கைத் தளர்த்துவதற்கான வாய்ப்புகள் இல்லையென்றே கூறமுடியும். அதற்கு மாறாக, விடுதலைப் புலிகளை அரசியல் ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் ஓரம்கட்டுவதற்கான ஜனாதிபதியின் நிலைப்பாட்டுக்கு இந்தியா உதவி வழங்க எத்தனிக்கும்.

இலங்கையில் இந்த வருடத்தில் அரசியல் மாற்றங்கள் ஏற்படும் போது இந்திய அரசின் கொள்கை நிபுணர்களும் ஜனாதிபதியின் கொள்கை நிபுணர்களும் ஒன்றிணைந்து அரசியல் ரீதியாக விடுதலைப்புலிகளுக்கு எதிரான ஓர் பாரிய பத்ம வியூகத்தை அமைக்க அதிக வாய்ப்புண்டு. இந்தப் பத்மவியூக அடிப்படையில் விடுதலைப் புலிகளே தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகள் என்ற கொள்கையை நீக்கி சமாதானப் பேச்சுவார்த்தைகளில் விடுதலைப் புலிகளுடன் ஏனைய தமிழ்க் கட்சிகளும் பங்குபற்றவதற்கு வலியுறுத்தும் வாய்ப்புக்கள் இருக்கலாம். இந்தக் கொள்கை வெற்றி பெற்றால் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆதிக்கம் மட்டுப்பட வாய்ப்புண்டு. எனவே, இவ்விடயத்தில் விடுதலைப் புலிகளும் தமிழர் கூட்டமைப்பும் ஒன்றிணைந்து இதற்கெதிராகக் குரல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்க வேண்டும்.

சில சமயங்களில் கண்காணிப்புக் குழுவில் இந்தியப் பிரதிநிதிகளையும் சேர்த்துக் கொள்வதற்கான கோரிக்கை எழலாம். இவ்வாறான கோரிக்கை முன்வைக்கப்பட்டால் அதனைத் தமிழ் மக்களும், விடுதலைப் புலிகளும் ஒன்றிணைந்து நிராகரிக்க வேண்டும். 1987 க்குப் பின்னர் இந்தியா நடுநிலை வகிக்க வில்லை. எதிர்காலத்தில் நடுநிலைமை வகிக்குமாறு கேள்வி எழுகின்றது.

அரசியல் தீர்வு விடயமாக மேற்குலக நாடுகளிலுள்ள சமஷ்டி முறைகளை விட்டு இந்தியாவில் நடைமுறையிலுள்ள சமஷ்டி முறையைத் திணிப்பதற்கு இந்தியா முயற்சிக்கலாம். அப்படித் தணிக்க முற்பட்டால் விடுதலைப் புலிகளும், தமிழ் மக்களும் ஒன்றிணைந்து அதனை நிராகரிக்க வேண்டும். இந்தியாவில் நடை முறையிலுள்ள சமஷ்டி முறை பூரணத்துவ சமஷ்டி முறையில்லை. அதனை அரைச் சமஷ்டி என்றே கூறுதல் பொருந்தும். ஏதாவதொரு மாகாணத்தில் ஒரு கட்சிக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருந்தாலும் கூட, சட்டம், ஒழுங்கு கடைப் பிடிக்கப்படவில்லை என்ற காரணத்தைக் காட்டி அதனைக் கலைத்துவிட்டு ஆளுநரின் ஆட்சியை அங்கு பிரகடனப்படுத்தலாம். இவ்விதமான சமஷ்டி முறை இலங்கையிலுள்ள தமிழர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கு உதவாது.

இந்தியாவின் எதிர்கால தலையிடும் கொள்கை தமிழ் மக்களுக்குப் பாதகமாவும், சிங்கள மக்களுக்குச் சாதகமாகமே அமையும். கடைப்பிடிக்க விருக்கும் இந்தியத் தலையீட்டக் கொள்கை வெற்றி பெற்றால், அதன் பலனாக அரசியல், பொருளாதர, இராணுவ மற்றும் சமூகத்துறைகளில் இந்திய ஆதிக்கம் வலுப்பெற்று இலங்கைத் தீவு இந்தியாவின் பின்லாந்தாக மாறுமென்பதே நிதர்சனமான உண்மை.



# 30

## ஜனநாயகம் குறித்து அமெரிக்காவின் வரைவிலக்கணம் என்ன?

ஜப்பானில் நடைபெறவுள்ள நிதி உதவி வழங்கும் மாநாட்டுக்கு முன்னோடி மாநாடொன்றாக ஏப்ரல் 14 ஆம் திகதி அமெரிக்காவில் நடைபெற்ற மாநாட்டுக்கு விடுதலைப் புலிகளுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என்பது யாவரும் அறிந்த விடயம். சிங்கள சமுதாயமும் சர்வதேச சமூகமும் புரிந்துணர்வு ஒப்பந்த அடிப்படையில் விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் சமநிலை, சமஅந்தஸ்து, சம பங்களிப்பு என்ற கோட்பாடுகளை அங்கீகரித்தன.அமெரிக்காவில் நடைபெற்ற மாநாட்டில் இக்கோட்பாடு உதாசீனம் செய்யப்பட்டிருந்தது. புலிகள் அவமதிக்கப்பட்டதற்கான குற்றச்சாட்டுக்கள் இலங்கை அரசாங்கத்தின் மீதும் நோர்வே அரசாங்கததின் மீதும் சுமத்தப்பட்டன. புலிகளை ஓரங்கட்ட முயற்சிக்கப்பட்டாலும், அதனை அமெரிக்காவால் முறியடித்திருக்க முடியும். அமெரிக்காவின் சட்டம் விடுதலைப் புலிகள் அமெரிக்கா செல்வதற்குத் தடையாக இருக்குமேயானால் இம்மாநாட்டை ஜெனீவா போன்ற இன்னொரு நாட்டில் வைத்திருக்கலாம். இம்மாநாட்டில் விடுதலைபுலிகள் பங்குபற்றாமையினால் தாமே சமாதானத்திற்குக் கடுமையாக உழைப்பதாகக் காட்டி சர்வதேச சமூகத்தின் நிதி உதவியைப் பெற்றுக் கொள்வதற்கு இலங்கை அரசாங்கத்துக்கு வழி செய்தது.

### மாநாட்டின் முக்கிய கதா பாத்திரங்கள்

உலகின் அதி முக்கிய வல்லரசான அமெரிக்காவின் வெளிவிவகார பிரதி அமைச்சர் ஆமிற்ரேஜ், இலங்கை பொருளாதாரத்துறைக்குப் பொறுப்பான அமைச்சரான மிலிந்த மொரகொட, இந்தியப் பிரதிநிதியான லலித் மான்சிங் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களாக அமைந்திருந்தனர். இவர்களது பங்களிப்பு தொடர்பாகத் தனித்தனியாக எடுத்துக் கூற வேண்டியது மிகவும் அவசியமானதாகும்.

**ஆர்மிரேஜ்:** இவரது பின்னணியை வாசகர்கள் சில சமயங்களில் தெரிந்திருக்க முடியாது. வியட்நாம் யுத்தத்தின் போது, இவர் இராணுவத்துறையில் மிகுந்த ஈடுபாடுடையவர் என்பதை நாம் அறிந்து கொள்ளுதல் வேண்டும். அதன் பின்னர் தென் கிழக்கு ஆசியாவின் அரசியல் விடயங்கள் தொடர்பாக அமெரிக்காவின் பொறுப்பு வாய்ந்த அதிகாரியாகச் செயற்பட்டார். இராணுவத் தறையில் ஈடுபட்டவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராஜதந்திரத் துறையில் ஈடுபடும்போது, பொதுவாக இராணுவரீதியான அணுகு முறைகளையே கடைப்பிடிப்பது சகஜம். இராஜதந்திர ரீதியில் உலகப் புகழ்பெற்ற ஹென்றி கீஸிங்கர் இராணுவத் துறையில் ஈடுபட்டிருக்காமையினால் அவரது சகல இராஜதந்திர முயற்சிகளும் வெற்றி பெற்றன. ஆர்மிரேஜின் அறிக்கைகளையும கூற்றுக்களையும் அலசிப்பார்த்தால் தமிழர்களின் சுதந்திர வரலாறு தொடர்பாகவோ சரித்திரம் தொடர்பாகவோ எதுவும் அறிந்துள்ளவராகத் தெரியவில்லை. 500 ஆண்டுகளுக்கு மேலாக மேற்குலக ஆதிபத்தியத்துக்கு ஆட்பட்டிருந்த ஆசிய, ஆபிரிக்க நாடுகள் தங்கள் சுதந்திரத்திற்காக ஆயுதம் தரித்துப் போராடி வெற்றியும் கண்டன. அதே வேளையில், 327 வருட காலமாக மேற்குலக ஏகாதிபத்தியத்தின் கீழும், கடந்த 55 வருடங்களாக பெருபாண்மையின் ஆக்கிரமிப்பின் கீழும் தமிழ் இராச்சியம் இருந்து வருகின்றது. எனவே, ஏனைய ஆசிய மற்றும் ஆபிரிக்க நாடுகளைப் போல, தாம் இழந்த சுகந்திரத்தை மீண்டும் பெற்றுக் கொள்வதற்காக ஆயுதமேந்திப் போராடுவதற்குத் தமிழ் இராச்சியத்துக்குள்ள உரிமையையும் கடமையையும் ஆர்மிரேஜ் ஏன் நிராகரித்தார்? சிங்கப்புரும் கிழக்குத் திமோரும் சுதந்திர நாடாகத் திகழ முடியுமானால் ஈழ இராட்ச்சியம் ஏன் சுதந்திர நாடாக இருக்க முடியாது என்பதற்குப் பதிலளிப்பாரா? தமிழர்கள் ஈழக் கோரிக்கையை கைவிட வேண்டுமென என்ன ரீதியில் அவர் உபதேசம் செய்வார்? தமிழ் மக்களின் அபிலாஷைகள் சிங்கள அரசியல் பீடத்துடனான பேச்சுவார்த்தைகள் முலம் தீர்க்கப்பட வேண்டுமெனக் கீதோபதேசம் செய்துள்ளார். ஆனால், தழிழ் அரசியல் தலைவர்கள் 80 வருடங்களுக்கு மேலாக சிங்கள அரசியல் தலைவர்களுடன் நடாத்திய பேச்சுவார்த்தைகள் யாவும் தோல்வியிலேயே முடிந்தன. இந்தச் பிரித்திரத்தை ஆர்மிரேஜ் அறிந்திருக்காமையை எண்ணிக் கவலைதான்.

ஆர்மிரேஜ் தமிழர்களின் சரித்திரத்தையும், அவர்களது அபிலாஷைகளையும் தெரிந்திருக்காது விடில் அவரை மன்னிக்கலாம். ஆனால், தனது நாட்டுக் குறுகிய காலச் சரித்திரத்தைக் கூடத் தெரிந்து வைத்திருக்காமையே ஆச்சரியமளிக்கின்றது. வந்தேறு குடிகளான அமெரிக்கர்கள் தமது எஜமானராக்கிய பிரித்தானியரிடமிருந்து பேச்சுவார்த்தை மூலம் சுதந்திரம் பெற்றுக் கொள்ளவில்லை. அதற்கு மாறாக, ஆசிய ஆபிரிக்க நாட்டவர்களைப் போல ஆயுதமேந்தியே அமெரிக்கர்களும் பிரித்தானியரிடமிருந்து சுதந்திரம் பெற்றனர். ஆர்மிரேஜின் முன்னோர்கள் ஆயுதமேந்திப் போராடிப் பிரித்தானிய ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து சுதந்திரம் பெற்றதைப் போல, ஈழத் தமிழர்களும் தாம் இழந்த சுதந்திரத்தை மீண்டும் பெற்றுக் கொள்வதற்காக ஆயுதமேந்திப் போராடுவதை இவர் ஏன் மறுக்கிறார்?



சர்வதேச சூழலுக்கும் மாற்றங்களுக்கும் அமைய தமிழ் ஈழத்துக்கு மாற்றீடான தீர்வை கவனத்திற்கொள்ளும் பொருட்டு விடுதலைப்புலிகள் தன்னிச்சையாக யுத்தநிறுத்தம் மேற்கொள்ளவில்லை என்ற உண்மையினை ஆர்மிரேஜ் அறிவாரா? யுத்த நிறுத்தம் மேற்கொள்ளவது என்பது வன்முறையைக் கைவிடுவது என்பதைச் சகலரும் அறிவர். யுத்தநிறுத்தம் மூலம் வன்முறையைக் கைவிட வேண்டுமென ஆர்மிரேஜ் சொல்லிலும், செயலிலும் வெறிப்படுத்தியதன் உள்நோக்கம் என்ன? இவரின் கீதோபதேசம் விடுதலைப் புலிக்ளுக்குப் பொருந்தாது. கடந்த 20 வருட காலமாக இலங்கையில் நடைபெற்ற இனவன்முறை, இனப்படுகொலை மற்றும் அரச பயங்கரவாதம் மூலம் மிக மோசமான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதெனவும், மனித உரிமை மீறல்கள் தொடர்பாக உலகில் இலங்கை அரசாங்கம் முன்னணியில் நிற்பதாகவும் ஐ.நா. ஸ்தாபனத்தில் மேற்கொள்ளப்பட்ட கண்டனக் குரல்களைத் தானும் ஆர்மிரேஜ் அறிந்திருக்கவில்லை?

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் மத வழிபாட்டுத் தலங்கள் மற்றும் பாடசாலைகளிலிருந்து இராணுவம் விலகி இருக்க வேண்டும். யாழ். குடா நாட்டில் உள்ள 495 பாடசாலைகள் 52 பாடசாலைகளிலிருந்து இன்னும் இராணுவம் விலகவில்லை. மற்றும் நெடுந்தீவுச் சம்பவம், சர்வதேச கடற்பரப்பில் விடுதலைப் புலிகளின் வணிகக் கப்பல் இலங்கைக் கடற்படையினரால் தாக்கி அழிக்கப்பட்டமை போன்ற சம்பவங்கள் வன்முறை இல்லையா? இவற்றுக்கெதிராக ஏன் ஆர்மிரேஜ் அரசாங்கத்துக்கு கண்டனம் தெரிவிக்கவில்லை.

1945 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 9 ஆம் திகதி ஹிரோஷிமா நகரில் அணுகுண்டை வீசி அரை நிமிடத்தில் 80,000 ஜப்பானிய மக்களைக் கொன்று குவித்தது அமெரிக்க அரச பயங்கரவாதம். வியட்நாமில் யுத்தத்தில் வீடுகளையும், காடுகளையும் அழித்து இருபது இலட்சத்துக்கும் மேற்பட்ட பொதுமக்களைக் கொன்று குவித்ததும் அமெரிக்க அரச பயங்கரவாதமே. லெபனான், சோமாலியா, லிபியா, கிரனடா மற்றும் பனாமா போன்ற நாட்டு மக்களுக்கு எதிராக வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டதும் அமெரிக்கா.

ஒரு தனி மனிதனான பின்லெடனை பிடிப்பதற்காக ஆப்கானிஸ்தானிலுள்ள ஏழை மக்களை அழித்தொழித்தது வன்முறையில்லையா? சமீபத்தில் உலக அபிப்பிராயத்திற்கு எதிராகவும், ஐ.நா.வின் ஒப்புதல் இன்றியும் ஈராக் மீது பாரிய குண்டுகளை வீசியது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்க வன்முறை இல்லையா?

இது தொடர்பாக புகழ்பெற்ற இந்திய நூலாசிரியரான அருந்ததி ரோய், ஜனநாயகத்துக்கான அமெரிக்காவின் வரைவிலக்கணமாவது, பாரியளவில் மக்களைப் படுகொலை செய்வதே எனக் குறிப்பிட்டார். இந்திய புதிய வரைவிலக்கணம் அமெரிக்க அரச பயங்கரவாத வன்முறைக்கு நன்கு பொருந்தும் என்பதே எமது கணிப்பு. இவ்விதமான அமெரிக்க சூழலில், விடுதலைப்புலிகள் சொல்லிலும், செயலிலும் வன்முறையைக் கைவிட வேண்டுமெனக் கூறுவதற்கு ஆர்மிரேஜுக்கு என்ன அருகதையுள்ளது?

மிலிந்த மொரகொடவின் உரையில் வட, கிழக்குப் பேரழிவு தொடர்பாக ஒரு சொல்லாவது இடம்பெறவில்லை. யுத்தம் நடைபெற்றதும் பேரழிவு ஏற்பட்டதும் வட, கிழக்கிலேயே என்று குறிப்பிடவில்லை.

அமெரிக்காவில் வைத்து வியட்நாமிய யுத்தத்தில் அமெரிக்கர்கள் இறந்ததைவிட, தனது நாட்டு யுத்தத்திலேயே அதிகளவானோர் இறந்துள்ளதாகக் குறிப்பிட்டிருந்தார்.

இலங்கையில் 20 வருட காலமாக வட, கழக்கு தமிழ்ப் பிரதேசத்தில் நடைபெற்ற யுத்தத்தில் ஒரு மதிப்பீட்டின் பிரகாரம் 70,000 அப்பாவி மக்கள் மரணமாகினர். சிங்களத் தரப்பு மதிப்பீட்டின் பிரகாரம் மரணித்தோர் தொகை 64,000 ஆகும். இராணுவத்தின் இழப்பு 15,000க்கும் 16,000க்கும் இடையிலிருக்கலாம். சனத்தொகையில் குறைந்த விடுதலைப் புலிகள் அணியினரின் இழப்பு 17,000க்கும் அதிகமானதாகும். தமிழர்களின் சன விகிதாசாரம் 12.5 சதவீதம் ஆகவிந்தாலும் 62,000க்கு மேற்பட்ட தமிழ்ப் பொதுமக்கள் மரணமாகியுள்ளனர். இதனைவிட பதினொரு இலட்சத்துக்கு மேற்பட்டோர் உள்நாட்டில் அகதிகளாகவுள்ளனர். 7 இலட்சம் தமிழ் மக்கள் வெளிநாடுகளில் அகதிகளாகவுள்ளனர். தமிழ் பிரதேசத்து அழிவுகள் ஆயிரமாயிரம் கோடி அமெரிக்க டொலர்களுக்கு மேற்பட்டதாகும். இப்புள்ளிவிபரங்களை இன ரீதியாக ஏன் சர்வதேச சமூகத்துக்குக் கூறவில்லை என்றே மிலிந்த மொரகொடவிடம் கேட்க விரும்புகின்றோம். இவ்வாறான இனரீதியான புள்ளிவிபரங்களை வழங்கியிருந்தால் சர்வதேச சமூகம் உண்மை நிலையை அறிந்திருக்க முடியும்.

முன்னோடி மாநாட்டில் அமைச்சர் மிலிந்த மொரகொட நிலைப்பாடொன்றினை வெளியிட்டிருந்தார். இந்த நிலைப்பாட்டை சுயமரியாதையுள்ள எந்தவொரு தமிழனும் ஏற்றுக் கொள்ளமாட்டான். யுத்தத்தினால் ஏற்படும் பேரழிவுகள் தொடர்பாக சர்வதேச நிபுணர்களும் இவரின் கூற்றை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்றே நம்புகின்றோம். இவரது கூற்றாவது யுத்தத்தினால் பேரழிவுக்குள்ளான பிரதேசங்களை புனர்நிர்மாணத்துக்கு மாத்திரம் முன்னுரிமை வழங்கக் கூடாதெப்பது ஒரு மோசமான நிலைப்பாடு. இவ்விடயத்தைச் சற்று ஆழ்ந்து சிந்திக்க வேண்டியது அவசியம். வடகீழ் தமிழ்ப் பிரதேசம் மாத்திரமே யுத்தத்தின் பேரழிவை நிவிர்த்தி செய்வதற்குச் சில விடயங்கள் படிப்படியாக மேற்கொள்ளப்படுதல் வேண்டும். முதலில் வடகீழ் பிராந்தியத்தில் சுமுக நிலை ஏற்படுத்தப்பட வேண்டும். ஆனால், இலங்கை அரசாங்கத்தின் அசமந்தப் போக்கினால் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாதிதாகி ஒரு வருடம் கடந்த நிலையிலும் இச்சுமுக நிலை ஏற்படவில்லை. அடுத்த படியாக புனர்வாழவு. புனர்வாழ்வையும் புனரமைப்பையும் ஒரே நேரத்தில் மேற்கொள்ளவும் முடியும். புனர்வாழ்விலும், புனரமைப்பிலும் நல்ல முன்னேற்றத்தைக் கண்டதன் பின்னரே புனர் நிர்மாணத்தை அழுலாக்கலாம். மேற்கூறிய மூன்று பணிகளும் நல்ல முன்னேற்றமடையும் தறுவாயில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்கு வாய்பபுண்டு. எனவே தமிழ்ப் பிரதேசங்களைப் பொறுத்தவரையில் அபிவிருத்தியைக் கடைசியாக மேற்கொள்வதே யதார்த்தத்திற்கு உகந்ததாகும்.

எனவே, தமிழ் பிரதேசங்களில் சுமுக நிலை, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் புனர்நிர்மாணம் மேற்கொள்ளப்படாதவரை அபிவிருத்தி தொடர்பாகச் சிந்திப்பதே தவறானது என்பதே எமது கருத்து. தென் இலங்கையைப் பொறுத்தவரையில் , பொருளாதாரத் துறையிலும் சில முன்னேற்றங்கள் காணப்படுகின்றன. தென் இலங்கையில் யுத்தம் நடைபெறாமையினாலும் பேரழிவுகள் ஏற்பட்டமையாலும் புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் புனர்நிர்மாணப் பணிகள் தொடர்பான பேச்சுக்கே இடமில்லை. தென் இலங்கைக்குத் தேவைப்படுவது அபிவிருத்தி ஒன்றே. எமது விவாதமாவது சர்வதேசப் பொருளாதார உதவி, பேரழிவை எதிர்கொண்ட தமிழ்ப் பிரதேசத்தின் புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் புனர்நிர்மாணப் பணிகளுக்கே முன்னுரிமை கொடுத்து வழங்கப்பட வேண்டுமென்பதாகும். மிலிந்த மொரகொடவின் கூற்றுப்படி கிடைக்கவிருக்கும் வெளிநாட்டு நிதி உதவியில் பெரும் பகுதியை தென் இலங்கையின் அபிவிருத்திக்கே செலவிடக் கங்கணம் கட்டியுள்ளது போலத் தெரிகிறது.

ஆகவே, எந்தப் பணிகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமென சர்வதேச சமூகத்துக்கு அறியக் கொடுக்கும் பணி விடுதலைப்புலிகளை சார்ந்ததாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1987 ஜூலை 29ஆம் திகதி இலங்கை -இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் வடகீழ் பிராந்தியத்தின் புனர்நிர்மாணப் பணிகளுக்கென மாத்திரம் வழங்கியது. அந்நிதியின் பெரும்பகுதி யுத்தத்தால் பாதிப்படையாத தென் இலங்கைக்கே செலவிடப்பட்டதனை இங்கு ஞாபகப்படுத்த விரும்புகின்றோம்.

**லலித் மான்சிங்**

இவரது நிலைப்பாடு இந்திரா காந்தியின் நிலைப்பாட்டுக்கு மாறுபட்டதாக அமைந்துவிட்டது. தமிழர்களின் அபிலாஷைகள் நிறைவேற்றப்படாத வரையில் இலங்கையில் சமாதானத்துக்கான வாய்ப்பில்லையென இந்நதிராகாந்தி ஆணித்தரமாகக் கூறியிருந்தார். இலரது கருத்து சகல இன மக்களது அபிலாஷைகளைகளும் எப்படி ஒரே மாதிரி இருக்க முடியும் என்பதற்கான பதிலை இந்தியா வழங்குதல் வேண்டும்.

இலங்கையின் சனத் தொகையில் காற் பங்கும் இல்லாத நோர்வே நாடு வடகீழ் தமிழ் பிராந்தியத்தை நோர்வே நாடு வட கீழ் தமிழ் பிராந்தியத்தை மட்டும் புனர்நிர்மாணம் செய்வதற்காக உலக வங்கியின் பாதுகாப்பிலுள்ள நிதியத்திற்குப் பணம் கொடுத்தது. ஆனால், எமது அயல்நாடான இந்தியா சனத் தொகையில் 100 கோடியைத் தாண்டியுள்ள போதிலும் அதிலும் 6-1/2 கோடி தமிழர்கள் இருந்த போதிலும் நோர்வே அரசைப் போல வடகீழ் பிராந்திய புனர்நிர்மாணத்துக்கு மாத்திரம் எனப் புறம்பாக நிதியுதவி வழங்காமல் இலங்கை அரசுக்கு மாத்திரம் பணம் கொடுக்க முன் வந்துள்ளது. வட-கிழக்கின் புனர்நிர்மாணத்திற்கு மாத்திரம் உலக வங்கியின் பாதுகாவலில் நிதியுதவி வழங்க சர்வ தேச சமூகம் முன் வந்துள்ளது. இந்தியாவும் நோர்வேயைப் பின்பற்றி வட-கிழக்கின் புனர் நிர்மாணத்திற்கென நிதியுதவி வழங்கியிருந்தால் தமிழ் மக்கள் பாராட்டியிருப்பார்கள்.



# 31

## வட, கிழக்கில் அபிவிருத்தியை மேற்கொள்ள பாரிய பொருளாதார அமைப்பொன்று அவசியம்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு 14 மாதங்கள் கடந்த நிலையிலும் தமிழ் மக்களின் வாழ்வில் இயல்பு நிலையோ புனரமைப்பு, புனர்வாழ்வு மற்றம் புனர் நிர்மாணப் பணிகளில் முன்னேற்றமோ காணப்படாமையால் விரக்தியுற்ற விடுதலைப் புலிகளும் தமிழ் மக்களும் சமாதானப் பேச்சுவார்த்தைகளிற் கலந்து கொள்வதனை தற்காலிகமாக இடை நிறுத்தியமையால் சர்வதேச சமூகத்தின் மத்தியிலும் அரச தரப்பிலும் ஏற்பட்ட தாக்கங்களைக் கவனத்திற் கொண்டு தமது நிலைப் பாட்டினை சாதகமான முறையில் மீள் பரிசீலனை செய்யவேண்டியநிலை விடுதலைப்புலிகளுக்கு ஏற்பட்டுள்ளது. அமெரிக்காவில் ஏப்ரல் 14 ஆம் திகதி நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளுக்கான முன்னோடிக் கூட்டத்துக்கு விடுதலைப்புலிகள் அழைக்கப்படாமை தொடர்பாக, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மிகுந்த கவலை தெரிவித்து அன்ரன் பாலசிங்கத்துக்குக் கடிதம் எழுதியுள்ளார். மனிதாபிமானப் பணிகளில் தமது வேகம் குறைவாக இருந்தமையை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது. இவ்வாறான தேக்க நிலை எதிர்காலத்தில் ஏற்படாதிருப்பதை உறுதி செய்ய வேண்டுமெனத் தமிழினம் எதிர்பார்க்கின்றது.

இப் பின்னணியில் வட, கீழ் பிராந்தியத்தின் பொருளாதாரத்தை அதி தீவிரமாக கட்டியெழுப்புவதற்கான புதிய யோசனைகள் சில முன்வைக்கப்படுகின்றன.

விடுதலைப்புலிகளும் அரசாங்கமும் இணங்கிக் கொண்டதன் பிரகாரம் அமைக்கப்பட்ட, அவசர மனிதாபிமானப் புனர்வாழ்வு தொடர்பான விடயங்களுக்கான உபகுழு வெளிநாட்டு உதவியின் மூலம் தனது பணிகளை மேற்கொள்ளும். எனினும் நாம் குறிப்பிட விரும்பும் யோசனைகளுக்கும் அப்பணிகளுக்கும் எவ்வித தொடர்புமில்லை. மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட தமிழ்ப் பிரதேசங்களை பொருளாதார ரீதியில் கட்டி யெழுப்புவதற்கு நாம் முன்வைக்கும் யோசனைகளாவன:

விடுதலைப்புலிகளும் அரசாங்கமும் இணங்கிக் கொண்டதன் பிரகாரம் அமைக்கப்பட்ட, அவசர மனிதாபிமானப் புனர்வாழ்வு தொடர்பான விடயங்களுக்கான உப குழு செளிநாட்டு உதவியின் மூலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது பணிகளை மேற்கொள்ளும், எனினும், நாம் பணிகளுக்கும் எவ்வித தொடர்புமில்லை. மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட தமிழ்ப் பிரதேசங்களை பொருளாதார ரீதியில் கட்டியெழுப்புவதற்கு நாம் முன்வைக்கும் யோசனைகளாவன.

1. வட, கீழ் பிராந்தியத்தின் பொதுக் கட்டமைப்புப் பணிகளுக்காகவும் வெளிநாடுகளில் இருந்து உலக வங்கியின் பாதுகாப்பின் கீழ் கிடைக்கப் பெறும் நிதியுதவியைப் பயன்படுத்துவதற்கென அடையாளங்காணப்பட்ட செயற் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு உலகவங்கியும் விடுதலைப்புலிகளும் இலங்கை அரசாங்கமும் ஒன்றிணைந்து செயற்படுதல். இந்நிதியத்திற்கு நோர்வே அரசாங்கம் ஏற்கனவே தனது பங்களிப்பை வழங்கியிருப்பது யாவரும் அறிந்த விடயம்.

2. வட, கீழ் பிராந்தியத்துக்குத் தேவையான பொருனாதார மதிப்பீடுகள் தொடர்பாக இனங்காணப்பட்டுள்ளதாக அறியக் கிடைத்தது. இந்த மதிப்பீட்டின் பிரகாரம் வட, கீழ் பிராந்தியத்தில் யுத்தத்தின் காரணமாகச் சீர்குலைந்து போயுள்ள முக்கியமான கைத்தொழில், கால்நடை வளர்ப்பு, கடல் சார் தொழில்களை மீள அபிவிருத்தி செய்வதற்கு நிதி உதவி, நிபுணத்துவ உதவி மற்றம் தொழில்நுட்ப உதவிகள் வழங்குவதற்கென தனியான நிறுவனமொன்று அமைக்கப்படவேண்டியது அவசியமும் அவசரமுமானதொன்றாகும். இந்நிறுவனம் வட, கீழ் பிராந்திய புனர்நிர்மான வங்கி என அழைக்கப்படலாம். இந்த வங்கிக்கான மூலதனத்தை உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் இலங்கையிலுள்ள அரச மற்றும் தனியார் வங்கிகள் மற்றும் வெளிநாட்டு அரசாங்கங்களால் வழங்கலாம்.

வட, கீழ் பிராந்தியத்தில் அமைக்கப்படவுள்ள அரசியல் அமைப்பும் மூலதனம் இடலாம். இந்த வங்கியின் பணியாளர் சபையில் உலக வங்கியின் பிரதிநிதிகளும் வட, கீழ் பிராந்திய அரசியல் அமைப்பின் பிரதிநிதிகளும், இலங்கை அரசாங்கத்தினதும் தனியார் துறையினதும் பிரதிநிதிகளும் அங்கத்துவம் வகிக்கலாம். கிளிநொச்சியில் தலைமை அலுவலகத்தையும் யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, திருகோணமலை, முல்லைத்தீவு , மட்டக்களப்பு மற்றும் அம்பாறையில் கிளை அலுவலகங்களையும் கொண்ட அமைக்கப்பட வேண்டிய இந்த வங்கி கைத்தாழில், கமத்தொழில் மற்றும் கடற்தொழில் ஊக்குவிக்கும் பொருட்டு குறைந்த வட்டி வீதத்திலும் நீண்ட தவணைக் கடன் மூலமும் தனியாருக்கு உதவுதல் வேண்டும். கைத்தொழிலுக்குப் புத்துயிர் வழங்குவதற்கும் அதனை அபிவிருத்தி செய்வதற்கும் தேவையான



நிபுணத்துவ உதவிகளை வெளிநாடுகளிலிருந்து பெற்றுக்கொள்வதற்கும் இவ்வங்கி உதவுதல் வேண்டும். தனியார் கல்வித்துறையிலும் விசேடமாக கணனி சார் கல்வித்துறைக்கும் தனியார் மருத்துமனைகளை அமைப்பதற்கும் கூட இந்த வங்கி உதவி வழங்குவதற்கும் பின் நிற்கலாகாது. மற்றும் தமிழ்ப் பிரதேச பொருளாதார அபிவிருத்தியில் அக்கறை கொண்ட வெறிநாடுகளிலுள்ள தமிழ்ப் பொருளாதார நிபுணர்கள், பொறியியலாளர்கள் போன்றோரின் சேவைகளை ஒப்பந்த அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கும் உதவலாம்.

1950 இல் நடைபெற்ற யுத்தத்தின் பின்னர் தென் கொரியாவை கைத்தொழில், கமத்தொழில் ரீதியாக அபிவிருத்தி செய்யும் பொருட்டு கொரிய புனர்நிர்மான வங்கி ஒன்று நிறுவப்பட்டது. அவ் வங்கியின் செயற்பாட்டினாலேயே, இன்று கொரியா ஆசியாவில் கைத்தொழில் துறைகளில் அதி முக்கிய இடத்தை வகிக்கின்றது. கொரிய புனர்நிர்மாண வங்கி கடைப் பிடித்த கொள்கைகளையும் செயற்பாட்டினையும் வட, கீழ் பிராந்திய புனர்நிர்மாண வங்கி கடைப்பிடிக்க வேண்டுமென்பதே எமது வேண்டுகோள்.

இவ்வாறானதொரு வங்கி, தமிழ்ப் பிரதேசத்துக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்பதே எமது நிலைப்பாடு. இப் பாரிய பொருளாதார விருத்திக்கு நிதிப் பற்றாக்குறை விளங்குமேயாகில் உலக வங்கியிடமிருந்தும் ஆசிய ஆபிவிருத்தி வங்கியிடமிருந்தும் தனியார் வங்கிகளிடமிருந்தும் உலகப் பணச்சந்தையிலிருந்தும் நிதியைப் பெற்றுக் கொள்ளமுடியும். இந்த வங்கியின் செயற்பாடு, சகல துறைகளிலுமான வளர்ச்சிக்கான ஆணிவேராக அமையும் என்பதை விடுதலைப்புலிகள் நன்கு உணர்ந்து, இவ்வாறான வங்கியொன்றினை உடனடியாக நிறுவுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல் வேண்டும். இந்த வங்கி நல்ல முறையிற் செயற்பட்டால் தமிழ் மக்கள் சர்வதேச சமூகத்தை எதிர் பார்க்காமல் தன் கையே தனக்குதவி என்ற முறையில் வாழ முடியும்.

3. வெளிநாடுகளிலுள்ள தனியார் நிறுவனங்கள் சகல துறைகளிலும் தமிழ்ப் பிரதேசங்களில் முதலீடு செய்வதற்கு ஊக்குவித்தல் வேண்டும். இவ்விடயம் தொடர்பாக கொள்கை தொடர்பாக விடுதலைப்புலிகள் வெளிநாடுகளில் பிரசாரங்கள் மேற்கொள்ளுதல் வேண்டும். வெளிநாட்டு நிறுவனங்கள் மாத்திரமல்லாது, உள்நாட்டிலுள்ள பிரபல்ய நிறுவனங்களும் தமிழ் பிரதேசங்களில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு விடுதலைப்புலிகள் வழிவகுத்துக் கொடுத்தல் வேண்டும். வெளிநாட்டுத் தனியார் நிறுவனங்கள் தொடர்பாக சில சிக்கல்கள் ஏற்படுவதற்கும் இடமுண்டு. விடுதலைப் புலிகளைத் தடைசெய்த நாடுகளைச் சேர்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவனங்களுக்கு இடமளிப்பதா? இல்லையா? என்ற கேள்வி எழச் செய்யும். எம்மைப் பொறுத்த வரையில் இதுவோர் அரசியல் பிரச்சினையாகும். எமது பிரதேசத்தில் வறுமையை நீக்கி பொருளாதாரச் சுபீட்சத்தை ஏற்படுத்துவதற்காகவே வெளிநாட்டு முதலீட்டாளர்களைக் கவர விரும்புகின்றோம். எனவே, இந்த விடயத்தில் அரசியலைப் புறந்தள்ளிவிட்டு தடைசெய்த நாடோ, தடைசெய்யாத நாடோ என்று சிந்திக்காது எமது கோட்பாடுகளுக்கமைய முதலீடு செய்ய முயற்சிப்போரை ஆதரிக்க வேண்டியது எமது கடமையாகும். வட,கீழ் பிராந்திய அரசியல் அமைப்பின் கோட்பாட்டின் பிரகாரமே வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு முதலீட்டாளர்கள் தமது செயற்பாடுகளை மேற்கொள்ளுதல் வேண்டும். பொதுவாக வெளிநாட்டு நிறுவனங்கள் வட, கீழ் பிராந்திய அரசியல் நடவடிக்கைகளில் நேரடியாகவோ மறைமுகமாகவோ ஈடுபடாதிருக்கையில் பிணக்குகள் ஏற்படுவதற்கான சாத்தியமில்லை. வெளிநாடுகளைவிட வட, கீழ் பிராந்தியத்தில் தொழிலாளர்களுக்கான வேதனம் குறைவாக உள்ளமையால் உள்நாட்டுச் சந்தையிலும் வெளிநாட்டுச் சந்தையிலும் தமது பண்டங்களைச் சந்தைப்படுத்தும் நோக்கம் கொண்ட முதலீட்டாளர்கள் நிரந்தர அமைதியான சூழ்நிலை நிலவும் போது இங்கு முதலீடு செய்ய பின் நிற்கமாட்டார்கள். வட, கீழ் பிராந்திய அரசியல் அமைப்பிலுள்ள கைத்தொழில், கமத்தொழில் மற்றும் கடல்சார் திணைக்களங்கள் ஒவ்வொன்றும் மேற்படி துறைகளிலுள்ள முன்னேற்றங்களைக் கண்காணிப்பதங்கும் மதிப்பீடு செய்வதற்குமென புறம்பான பகுதியொன்றினை நிறுவுதல் அவசியம். நிரந்தர சமாதானம் ஏற்படும் சூழலில் தனியார் துறையினருக்கு 15 வருட காலமொன்றுக்கு வரிச்சலுகை வழங்குவதன் மூலம் அதிகளவான முதலீட்டை எதிர்பார்க்க முடியும். ஒட்டு மொத்தமாக அதிகளவு பொருளாதார வளர்ச்சியைக் காண முடியும்.

மேற் குறிப்பிட்ட மூன்று புறம்பான அமைப்புகளும் திறமையான முறையில் துரிதமாகச் செயற்பட்டால் தமிழ் பிரதேசத்தில் பொருளாதார சுபீட்சம் ஏற்படும் என்பதே எமது எதிர்பார்ப்பு. இவை யாவும் நல்ல முறையில் செயற்படுவதற்கு வட, கீழ் பிராந்திய அரசியல் அமைப்பு உறுதியாகவும் சக்தியுள்ளதாகவும், தூரநோக்குக் கொண்டதாகவும் இருக்க வேண்டியது மிகவும் அவசியம். இந்த மூன்று அமைப்புகளும் ஒற்றுமையாகச் செயற்படும் போது அதன் விளைவாக மக்களின் வறுமை நீங்கி அரசியல், பொருளாதார சமூகத்துறைகளில் அதிக முன்னேற்றமேற்படுவதற்கு அதிக வாய்ப்புகள் உண்டு. இதன் காரணமாக,



வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்தோர் திரும்பி வந்து இங்கு தொழிலாற்றுவதற்கான வாய்ப்பும் உண்டு.

மேற்கூறிய பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கு இன்றைய சூழ்நிலை சாதகமாகவுள்ளதா? பொதுவாக எந்த நாட்டிலும் அரசியல் ஸ்திரப்பாடு நிலவினாலேயே பொருளாதார விருத்தி ஏற்படுமென்பது நாமறிந்த விடயம். நாட்டில் அரசியல் கொந்தளிப்பு நடைபெறுகையில் பொருளாதார வளர்ச்சி தலைகீழாக மாறிவிடும். இது நாம் கண்ட உண்மை. இன்றைய சூழ்நிலையில் உறுதியான அரசியல் நிலைப்பாட்டினை விடுதலைப்புலிகளாலேயே ஏற்படுத்த முடியும். அரசியல் விவகாரங்களை தமிழ்ச்செல்வன் பொறுப்பேற்றுத் திறமையாகச் செயற்பட்டு வருகிறார். வெளி விவகார இராஜ தந்திரத் துறையில் அன்டன் பாலசிங்கம் தீர்க்க தரிசனமாகச் செயற்படுகின்றார். அரசியல் துறைக்கு தமிழ்ச்செல்வனும், வெளிவிவகார இராஜதந்திரத்துறைக்கு அன்ரன் பாலசிங்கமும் இருப்பது போல பொருளாதார மேம்பாட்டுக்கும் ஒருவர் இருப்பது அவசியம்.

உலக வங்கியின் பாதுகாப்புடனான வட, கீழ் பிராந்தியப் பொது விடயங்களுக்கான நிதியையும், வட, கீழ் பிராந்திய புனர்நிர்மாணத்துக்கான வங்கியொன்றினையும், வெளிநாட்டுத் தனியார் நிறுவனங்களின் முதலீடுகளை ஊக்குவிப்பதனையும் ஒருங்கிணைத்து பாரிய பொருளாதார அமைப்பொன்றினை அமைக்க வேண்டிய காலம் கனிந்துவிட்டது என்பதே எமது எண்ணம்.

5. நபர்களை கொண்ட குழுவொன்று அமைப்பது அவசியம். இந்தக் குழு உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி அல்லது ஐ.நா. பொருளாதாரத் துறைகளில் சிரேஷ்ட பதவிகள் வகித்த தமிழர்களைக் கொண்டிருத்தல் வேண்டும். இவர்களது நிபுணத்துவமும் அனுபவமும் தமிழ்த் தாயகத்துக்குக் கிடைக்கப் பெறுதல் வேண்டும். இவர்களது வழிகாட்டலின் பிரகாரம் பொருளாதாரத் திட்டங்கள் அமைக்கப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரிந்துணர்வு உடன்படிக்கை மீளாய்வு செய்யப்பட்டு புதிய அம்சங்கள் சேர்த்துக் கொள்ளப்படுவது அவசியம்

இன்று சர்வதேச கண்காணிப்பு குழு கடற்பிராந்திய விடயத்தை முன்வைத்துள்ளது. தமிழ்ச் செல்வன் கடற் பிராந்திய விடயம் தொடர்பாகவும், அதியுயர் பாதுகாப்பு வலய விடயம் தொடர்பாகவும் விவாதிக்க வேண்டுமென அரசாங்கத்துக்கும் சர்வதேச கண்காணிப்புக் குழுவுக்கும் கோரிக்கை விடுத்துள்ளார். புரிந்துணர்வு ஒப்பந்தம் மறுபரிசீலனை செய்யப்பட வேண்டுமெனவும் புதிய விடயங்கள் சில சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமெனவும் அவர் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளார். தமிழ்ச் செல்வனின் கோரிக்கை மிகவும் நியாயமானதாகவேயுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அன்ரன் பாலசிங்கத்துக்கு எழுதிய கடிதத்தில் இராணுவம் மத வழிபாட்டுத் தலங்களிலிருந்தும், பாடசாலைகளிலிருந்தும், பொதுக் கட்டிடங்களிலிருந்தும் விலகிவிட்டதாக குறிப்பிட்டிருந்தார். அதிஉயர் பாதுகாப்பு வலயங்களிலுள்ள பாடசாலைகளிலிருந்தும் பொதுக் கட்டிடங்களிலிருந்தும் தனியார் வீடுகளிலிருந்தும் இன்னமும் இராணுவம் விலகவில்லை என்பதே பிரதமரும் சர்வதேச சமூகமும் அறிந்து கொள்ள வேண்டும். அகில இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கச் செயலாளரின் அறிக்கையின் பிரகாரம் யாழ் குடாநாட்டில் மாத்திரம் இன்னமும் 55 பாடசாலைகளை இராணுவம் ஆக்கிரமித்துள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் விடுதலைப் புலிகளின் தலைவரான வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கும் இடையில் எழுத்துமூலம் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் குறித்துரைக்கப்பட்ட காலவரையறைக்குள் குறிப்பிடப்பட்ட விடயங்கள் அமுல்படுத்தப்படவில்லை. இவ்விதம் அமுல்படுத்தாமை தொடர்பாக சர்வதேச சமூகம் இலங்கை அரசாங்கத்துக்கு ஏன் பகிரங்கமாக அழுத்தம் கொடுக்கவில்லை.?

தமிழ் சமுதாயம் 85 வருடங்களாக ஏமாற்றப்பட்டதோர் சமுதாயம். ஆனால் கடும்போக்காளர்களாலோ தமிழினம் தொடர்ந்தும் ஏமாற்றப்பட ஆயத்தமாகவில்லை. இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதானம் ஏற்பட்டாலும் வழங்கும் வாக்குறுதிகளை அரசாங்கம் அமுல்படுத்துமா என்ற கேள்வி தமிழர் மத்தியில் தோன்றியுள்ளது. இராணுவ ஆதிக்கம் காரணமாகவே புரிந்துணர்வு ஒப்பந்தத்திலுள்ள இராணுவம் சார்ந்த விடயங்கள் அமுல்செய்யப்படவில்லையென்பது யாவரும் அறிந்த விடயம். இந்தப் பின்னணியிலலேயே, புரிந்துணர்வு ஒப்பந்தம் மறு பரிசீலனை செய்யப்படவேண்டும்-புது விடயங்கள் சேர்த்துக் கொள்ளப்படவேண்டுமென்ற தமிழ்ச் செல்வனின் கோரிக்கையை அணுகுதல் வேண்டும்.



புரிந்துணர்வு ஒப்பந்தம் மீள்பரிசீலனை செய்யப்படுகையில் பின்வரும் விடயங்கள் அங்கு உள்ளடக்கப்பட வேண்டும்.

சமாதான முன்னெடுப்புக்கமைய அதி உயர் பாதுகாப்பு வலயங்களை முழுமையாக அகற்றுதல்.

புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள கடற்பிராந்திய ஆதிக்கம்.

புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசத்தின ஆகாய ஆதிக்கம்.

இரு பகுதியினதும் இராணுவ சமநிலையைக் குழப்பாதிருத்தல்.

புலிகளுக்கு உதவி செய்தவர்களெனக் குற்றஞ் சுமத்தப்பட்டு களுத்துறைச் சிறையிலுள்ளோர் விவகாரம்.

உயர் பாதுகாப்பு வலயங்கள் யாழ்.குடாநாடு, மன்னார் மாவட்டம், வவுனியா மாவட்டம், திருகோணமலை மாவட்டம் மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இப்பாதுகாப்பு வலயங்களினால் தமிழ் மக்கள் பொருளாதார ரீதியாகவும் மனோ ரீதியாவும், சமூக ரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ள அதே வேளையில், அதனது தாக்கம் யாழ்.குடாநாடடிலேயே மிகவும் அதிகமாகவுள்ளது. 975 சதுர மைல் நிலப்பரப்பைக் கொண்ட யாழ்.குடாநாட்டில் 30-35 % நிலப்பரப்பு அதி உயர் பாதுகாப்பு வலயப் போர்வையிலுள்ளது.

இதன் பிரகாரம், செழிப்பான மண்வளம் உள்ள பிரதேசங்கள், தனியார் வீடுகள், மதவழிபாட்டுத் தலங்கள், பாடசாலைகள் பல இந்த அதி உயர் பாதுகாப்ப வலயத்திற்குள் சிக்கிவிட்டன. இரண்டு இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் தமது வீடு வாசல்களை இழந்து அகதிகளாக வாழுகின்றனர்.

உதிஉயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினையை மாறுபட்ட மூன்று கோணங்களிலிருந்து ஆராய்தல் வேண்டும். ஒன்று சட்ட ரீதியான ஆராய்வு. இரண்டாவது மனிதாபிமான நோக்கு. மூன்றாவது அரசியல் தாக்கம். தற்போது அவசரமாகச் சட்டம் நடைமுறையில் இல்லாமையால் அச்சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட உயர் பாதுகாப்பு வலயம் சட்ட வலு உள்ளதா என பாதிக்கப்பட்டவர்கள் உச்ச நீதிமன்றத்தில் ஏன் வழக்குத் தொடரக் கூடாது என்ற கேள்வி எழுகின்றது. மனிதாபிமான முறையில் தீர்த்து வைக்கப்பட வேண்டிய விடயம் இது வென்பதைச் சகல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரப்பினரும் நன்கு உணர்ந்துவிட்டனர். இவ்விடயத்தை தீர்க்கதரிசனமான முறையில் அணுகாவிட்டால் சமாதானம் தலைகீழாகிவிடுமென்ற பீதியும் அச்சமும் மக்களிடையே தோன்றியுள்ளது.

யாழ்.கோட்டைக்கு மேற்கே இராணவத்தளம் அமைக்கும் முயற்சியை உடனடியகாக் கைவிட்டு, தமிழ் மக்களின் உணர்வுகளுக்கும் சமாதானப் பேச்சு வார்த்தைக்கும் மதிப்பளித்து ஆகக் குறைந்தது 30,000 இராணவத்தினரையாவது யாழ் குடாநாட்டிலிருந்து விலக்கி, தமிழர் தாயத்தின் அருகேயுள்ள மதவாச்சியில் நிலை கொள்ளச் செய்யலாம். சிங்களக் கடும் போக்கு இராணுவத்தினர் இதற்கும் சம்மதிக்காவிடில், தெற்கு பண்ணைக்கும் மண்கும்பான் பிள்ளையார் கோவிலுக்கும் இடையில் வீதியிலிருந்து இரண்டு மைல் உட்புறமாக நிலைகொள்ளலாம்.

தற்போது நடைமுறையிலுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் புலிகளின் ஆதிக்கதிலுள்ள கடல் பிரதேசத்துக்கும் வீதிகள் அமைக்கப்படுதல் வேண்டும். இவ்விதிமுறைகள் யதார்த்த நிலையில் அங்கீகரிப்பதாக அமையும். இதே விதமாகவே ஆகாயப் பிரதேசத்திற்கும் செயற்படுதல் வேண்டும். ஏனெனில், இலங்கை விமானப் படையில் ஆளில்லா விமானங்கள் வேவு பார்ப்பதற்காக புலிகளின் கட்டுப் பாட்டுப் பிரதேசங்களுக்குச் செல்வது தடை செய்யப்படவேண்டும்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் இராணுவ விவகாரத்தில் இரு பகுதியினரும் சமநிலையைக் கடைப்பிடித்தல் வேண்டும். அதன்படி புலிகள் தமது ஆட்பலத்தையும் ஆயுத பலத்தையும் கூட்டுதலாகாது. அவ்வாறே இராணுவமும தனது கூட்டுதலாகாது. அவ்வாறே இராணுவமும் தனது ஆட்பலத்தையும், ஆயுத பலத்தையும் கூட்டுதலாகாது என்பது ஒரு கோட்பாடு. ஆனால் இலங்கை அரசு புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னரும் கப்பல்கள் மூலம் ஆயுதங்களை வர வழைத்தது சகலரும் அறிந்த விடயம். அதே போல் இராணுவத்திற்கு ஆட்திரட்டுவதும் தீவிரமாக்கப்பட்டது. சமாதானப் பேச்சவார்த்தையை நடாத்திக் கொண்டு இராணுவத்திற்கு ஆட்களையும், ஆயுதங்களையும் சேர்ப்பதன் உள்நோக்கம் தொடர்பாக தமிழ் மக்கள் விசனம் அடைகின்றனர். பேச்சளவில் சர்வதேச சமூகத்துக்குச் சமாதான பூச்சாண்டி காட்டிக்கொண்டு செயலளவில் இறுதி யுத்தத்துக்குத் தயாராகின்றார்கள் என்றே தமிழ் மக்கள் கருதுகின்றனர். வன்முறையையும் பயங்கரவாதத்தையும் விடுதலைப் புலிகள் கைவிட வேண்டுமென் சதா கீதோபதேசம் செய்யும் அமெரிக்கா இலங்கை அரசாங்கத்துக்குப் பாரிய யுத்தக் கப்பலை வழங்கவிருப்பது சமாதானம் மலர வேண்டுமென்பதற்காவா?



இந்த யுத்தக் கப்பல் அமெரிக்கா சென்று பார்த்த மிலிந்த மொரகொட மிக மகிழ்ச்சியடைந்தார். இதன்மூலம் அவரது உள்நோக்கத்தையும் தமிழ் மக்கள் நன்கு புரிந்துவிட்டனர். எனவே, புதிய புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இரு பகுதியினரும் இராணுவத்துக்கான ஆட்பலத்தையோ ஆயுத பலத்தையோ சேர்த்துக் கொள்ளக் கூடாதெனக் கண்டிப்பாக குறிப்பிடப்படவேண்டும். இலங்கை அரசாங்கம் இராணுவத்துக்கான ஆட் பலத்தையும் ஆயுத பலத்தையும் பெருக்கும் அதே வேளையில், விடுதலைப் புலிகள் கைகட்டிய பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமென அமெரிக்காவோ ஏனைய சர்வதேச நாடுகளோ எதிர்பார்த்தால் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பும் அவ்வாறே இருக்க முடியுமா?

## சிறைக் கைதிகள் விவகாரம்

களுத்துறைச் சிறையில் 71 தமிழ்க் கைதிகள் வருடக் கணக்காக சிறைவாசகம் அனுபவித்து வருகிறார்கள். புலிகளுக்கு ஏதோ வகையில் உதவினார்கள் அல்லது உதவி தொடர்பாக தெரிந்திருந்தும் அது தொடர்பாக அறியக்கொடுக்கவில்லை என்ற குற்றச் சாட்டுக்களின் பேரிலேயே இவர்கள் சிறை வைக்கப்பட்டுள்ளனர். பொதுவாக யுத்த நிறுத்தம் அல்லது புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்ட வேளைகளில் இவ்வாறான கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கி அவர்களை விடுதலை செய்வது சர்வதேச சம்பிரதாயமாகும். இவர்கள் தமிழர்கள் என்பதனாலேயே இவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கப்படவில்லை. இவ்விடத்தை புதிய புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் உட்புகுத்துவதற்கு தமிழ்ச் செல்வன் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுவோர் அடிப்படை விடயமாகையால் அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுத்து அதன் மூலம் ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்க வழிவகுத்தல் வேண்டும். சட்ட நடிவடிக்கை மேற்கொள்வதாக இதுவரையில் அரசாங்கம் கூறி வந்த போதிலும் இதுவரையில் அது தொடர்பாக எவ்வித நடவடிக்கையையும் மேற்கொள்ளப்படாமையினால் பொது மன்னிப்பு வழங்குவது அரசாங்த்தின் தார்மீகக் கடமையாகும்.

எழுத்துமூலம் கொடுக்கப்பட்ட உறுதி மொழிகளை இலங்கை அரசாங்கம் ஏன் அமுல்படுத்தவில்லையென அமெரிக்காவும் ஜப்பானும் அழுத்தம் கொடுக்கா மலிருப்பது தொடர்பாக தமிழ் மக்களுக்குச் சந்தேகம் எழுகின்றது. ஜப்பானின் விசேட தூதுவரும் நோர்வேயின் பிரதிவெளிவிவகார அமைச்சரும் என்ன காரணத்திற்காக புதுடில்லிக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரைந்தார்கள் என்பது புரியாத புதிராக உள்ளது. இந்தியாவின் நிலைப்பாட்டுக்கு இலங்கை அரசாங்கம் மதிப்பளித்தாலும் அவர்களின் நிலைப்பாடு விடுதலைப்புலிகளை எவ்வகையிலும் பாதிக்காது.

விடுதலைப்புலிகளும் அரசாங்கமும் பேசித்தீர்க்க வேண்டிய விடயத்தை இந்தியா மற்றும் அமெரிக்கா இராஜதந்திர முயற்சிகள் மூலம் வெற்றிகரமாகத் தீர்த்துவைக்க முடியாது. 14 மாத காலமாக அரசாங்கம் மேற்கொண்ட அரமந்தப் போக்கு தொடருமேயானால் சமாதான முயற்சிகள் தடைப்படுவது மாத்திரமல்லாது சில விபரீதங்களும் ஏற்படலாம். எனவே அமெரிக்கா மற்றும் இந்தியாவின் புத்திமதிகளை நிராகரித்து விட்டு சிங்கள சமூகத்தின் தொலைநோக்கு நன்மை கருதி விடுதலைப் புலிகளுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தைத் தீவிரமாக அமுல் படுத்துவது ரணில் விக்கிரமசிங்கவின் கடமையாகும்.



# 33

## டோக்கியோ மாநாட்டு விவகாரத்தில ஜப்பானும் நோர்வேயும் கடைப்பிடிக்க வேண்டிய அணுகுமுறை

இலங்கைப் பிரச்சினையில் அக்கறை கொண்டுள்ள சர்வதேச சமூகத்தினர் மீது இலங்கைத் தமிழர்கள் துரதிர்ஷ்டவசமாக பல குற்றச் சாட்டுக்களைச் சுமத்த வேண்டிய நிலையிலுள்ளனர். இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மேற்கு உலக நாட்டவரின் ஆக்கிரமிப்புக் குட்பட்டிருந்த ஆசிய மற்றும் ஆபிரிக்க நாடுகள் ஆயுதமேந்திப் போராடிச் சுதந்திரம் பெற்றுக்கொண்டன. அவ்வண்ணமே மூன்று மேற்குலக ஏகாதிபத்திய நாடுகளின் ஆக்கிரமிப்பிலும் அதைத் தொடர்ந்து சிங்கள அரசாங்களின் ஆக்கிரமிப்பன் கீழுமிருந்த தமிழர் தாயகம் இழந்த சுதந்திரத்தை மீண்டும் பெற்றுக் கொள்வதற்காக நடத்தும் ஆயுதப் போராட்டத்துக்கு சர்வதேச சமூகம் குறிப்பாக அமெரிக்கா ஏன் எதிர்ப்புத் தெரிவிக்கின்றது.

சுதந்திர சரித்திரமே இல்லாத இதே அமெரிக்கா பிரித்தானியாவுக்கு எதிராக ஆயுதமேந்திப் போராடியே சுதந்திரம் பெற்றுக் கொண்டது. அப்படியிருந்த போதிலும் அமெரிக்க ராஜாங்க செயலாளரும், ஆர்மிரேஜும், கிறிஸ்ரினா ரொக்கா அம்மையாரும் விடுதலைப் புலிகள் ஆயுதப் போராட்ட வன்முறைகளையும் பிரிந்து செல்லும் செயற்பாடுகளையும் கைவிட வேண்டுமென சதா கீதா உபதேசம் செய்வதேன்? விடுதலைப்புலிகள் பிரிவினை கோரவில்லை. ஆறாயிரம் ஆண்டு காலமாக தமிழ் மக்கள் அனுபவித்த சுதந்திரத்தை மீளப் பெறுவதற்காகவே போராடுகின்றனர்.

நமது மூதாதையர் நடத்திய சுதந்திர ஆட்சியை மீளப் பெறும் பொருட்டே பிரபாகரன் ஆயுதமேந்தி இரு தசாப்பதத்துக்கும் மேலாக சுதந்திரப் போராட்டத்தை நடத்துகிறார். பிரபாகரனின் போராட்டத்தை முகம் கொடுக்க முடியாமற் போன சிங்கள இராணுவம் 65,000 க்கும் மேற்பட்ட அப்பாவி மக்களைக் கொண்று குவித்தும் பத்து இலட்சத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்களை உள்நாட்டு அகதிகளாக்கியும், ஆறு இலட்சம் தமிழ் மக்களை வெளிநாடுகளில் அகதிக ளாக்கியும், இலட்சக்கணக்கான தமழ் மக்களின் வீடுகளைச் சேதமாக்கியும் நூற்றுக் கணக்கான பாடசாலைகளைச் சேதமாக்கியும், ஆயிரத்துக்கு மேற்பட்ட இந்து, கிறிஸ்தவ கோவில்களையும், தேவாலயங்களையும் சேதமாக்கியும் தமிழர் தாயகத்திலுள்ள சகல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார வளங்களையும் அழித்தும் விடுதலைப் புலிகளுடன் நேரடியாகப் போராட முடியாத தமது கையாலாகாத் தனத்தை ஈடு செய்து கொண்டனர். இந்த அவலங்களையும், துயரங்களையும், மனித உரிமை மீறல்களையும் அவதானித்த புகழ்பெற்ற சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் ஐ.நா. வில் குரல் கொடுத்தமையால் சர்வதேச சமூகம் பேரழிவுக்கு உட்பட்ட தமிழர் பிரசேங்களைப் புனர் நிர்மாணம் செய்வதற்கு முன் வந்தன.

புனர்வாழ்வு, புனரமைப்பு, புனர்நிர்மாண அபிவிருத்திப் பணிகளுக்கு உதவுவதற்கு சர்வதேச சமூகம் முன்வந்து அது தொடர்பாக கடந்த நவம்பர் மாதத்தில் ஒஸ்லோவில மாநாடொன்று நடத்தப்பட்டது. புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு 15 மாதங்கள் கடந்த போதிலும் யுத்த நிறுத்தம் ஏற்பட்டு 16 மாதங்கள் கடந்த போதிலும் புனர்வாழ்வு, புனரமைப்பு, புனர்நிர்மாணம் மற்றும் இயல்பு நிலை தொடர்பாக மாணம் மற்றும் இயல்பு நிலை தொடர்பாக இலங்கை அரசாங்கம் ஆக்கபூர்வமான நடவடிக்கை எதனையும் மேற்கொண்டதா? இப்பணிகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு சர்வதேச சமூகம் ஏன் இலங்கை அரசாங்கத்துக்கு பகிரங்க அழுத்தம் கொடுக்கவில்லை? கடந்த நவம்பர் மாதத்தில் ஒஸ்லோவில் நடைபெற்ற மாநாட்டில் தமிழ்ப் பிரதேச அவசரப் புனர்வாழ்வுப் பணிகளுக்கென வழங்கப்பட்ட 7,000 மில்லியன் ரூபாவில் ஒரு சதமாவது இதுவரையில் அவசரப் பணிகளுக்குச் செலவிடப்பட்டதா? இவ்விதம் அசமந்தப் போக்கினைக் கடைப்பிடிப்பதற்கான பொறுப்பினை அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்களும் பிரமரும் ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும். இதற்கு நேர் மாறாக எவ்வித அழிவுக்கும் ஆளாகாத தென்னிலங்கையின் அபிவிருத்திக்கும் சர்வதேச நிதியுதவியில் பெரும்பகுதி வழங்கப்பட வேண்டுமென்ற குரலுக்கும் சர்வதேச சமூகம் இணங்கியுள்ளது.

## தென் இலங்கை அபிவிருத்தி

தென் இலங்கையில் கமத்தொழில், கைத்தொழில், சுற்றுலாத்துறை ஆகியவை அதிக முன்னேற்றமடைந்து வருகின்றன. இதன் விளைவாக பொருளாதார அபிவிருத்தி நல்ல முன்னேற்றமடைந்திருப்பதனை புள்ளி விபர வாயிலாக அறிந்து கெள்ள முடிகின்றது. ஆனால் , தமிழ்ப்ப பிரதேசங்களின் அபிவிருத்தி பாதாளத்தையும் தாண்டி விட்டது. நிலைமை இவ்வாறிருக்கையில் சர்வதேச நிதியுதவியில் பெரும் பகுதி தென் இலங்கைக்கும் கிடைக்க வேண்டு மெனக் கோருவதனை எவ்வாறு நியாயப்படுத்த முடியும்? தென்



இலங்கையின் சுபீட்சத்துக்கு சர்வதேச சமூகம் நிதியுதவி வழங்குவதனை நாம் ஆட்சேபிக்க வில்லை. அது சர்வதேச சமூகத்தின் தாராளப் போக்கையும் அரசாங்கத்தின் கெட்டித்தனத்தையும் பொறுத்ததாகும். ஆனால், சர்வதேச சமூகத்துக்கு தமிழ் மக்களின் அவலங்களையும் துயரங்களையும் அவர்கள் அடைந்த பேரழிவுகளையும் எடுத்துக் காட்டி அதன் மூலம் கிடைக்கப்பெறும் நிதியுதவியை தென் இலங்கையின் அபிவிருத்திக்குச் செலவிடுவதை எந்தவொரு தமிழ் மகனாலும் பொறுத்துக் கொள்ள முடியாது.

தமிழ் மக்கள் அடைந்த துன்ப, துயரங்களுக்கும் பேரழிவுகளுக்கும், இனப் படுகொலைகளுக்கும் காரண கர்த்தாக்களும் பொறுப்பானவர்களும் சிங்கள சமுதாயமே என்பதை சர்வதேச சமூகம் அறிந்திருக்கும் அவர்களது அபிவிருத்திக்கு நிதியுதவி வழங்குவதென அவர்களது கொடூரச் செயல்களுக்கான வெகுமதியாகவே கருத வேண்டியுள்ளது. இந்த நிலைப்பாட்டை எந்தக் கோணத்திலிருந்து பார்த்தாலும் அதனை நியாயப்படுத்த முடியாது. இம்முறையைப் பின்பற்றினால் வியட்நாமில் மேற்கொண்ட பேரழிவுகளுக்காக அமெரிக்காவுக்கும், பிரித்தானியாவுக்கும் சர்வதேச சமூகம் சன்மானம் செலுத்தியிருக்க வேண்டும்.

பேரழிவுக்கான வட கீழ் பிராந்தியத்தை மீளக் கட்டியெழுப்பவதற்குப் பொறுப்புடைய இலங்கை அரசாங்கம் அது தொடர்பாக எவ்வித முயற்சிகளையும் மேற்கொள்ளாது மாற்றாந் தாய் மனப்பான்மையுடன் நடந்து கொள்வதனைக் கண்டிக்கவோ, அதற்கான அழுத்தங்களைக் கொடுப்பதற்கோ சர்வதேச சமூகம் இது வரை முன் வராதிருப்பது தமிழ் மக்கள் மத்தியில் மிகுந்த கவலையை ஏற்ப்படுத்தியுள்ளது.

இலங்கைக்கு உதவி வழங்குவதற்கான டோக்கியோ மாநாட்டிலாவது வட கீழ் பிராந்தியத்தின புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் புனர்நிர்மாணப் பணிகளுக்கெ னப் புறம்பாக நிதியுதவி வழங்கப்பட்டாலும் அந்நிதி வட கீழ் பிரந்தியத்தைச் சென்றடையும் என்தற்கு என்ன உத்தரவாமமுள்ளது? இத்தருணத்தில் இரண்டு விடயங்கள் சர்வதேச சமூகத்தின் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டும்.

**சர்வதேச சமூகம் அரசின் பக்கம் நிற்பதாக தமிழ் மக்கள் கருதும் நிலை உருவாகக் கூடாது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1987 இல் இந்திய-இலங்கை ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டதோடு வட கீழ் பிராந்திய புனர் நிர்மாணத்திற்கென பெருந்தொகைப் பணம் வெளிநாடுகளிலிருந்து கிடைக்கப் பெற்றது. அந்த வட கீழ்ப் பிராந்திய புனர்நிர்மாணத்திற்கான நிதியின் பெரும் பகுதி தென் இலங்கைக்குச் செலவிடப்பட்டது. இது மாத்திரமல்லாது வட கீழ் பிராந்திய அகதிகளின் பாவனைக்கென வெளிநாடுகளிலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட கூடாரங்களில் ஒன்றாவது அந்த அகதிகளுக்குக் கிடைக்கவில்லை. அவை யாவும் இராணுவத்துக்கே பயன்படுத்தப்பட்டது.

அண்மையில் அதியுயர் பாதுகாப்பு வலயமென அழைக்கப்படும் கரையூரில் அழிந்து போயிருந்த ஐஸ் உற்பத்திச் சாலையை புனர்நிர்மாணம் செய்வதற்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் அனுமதி வழங்கியிருந்த போதிலும் யாழ், இராணுவத் தளபதி அதற்கு இடமளிக்கவில்லை. இவ்வாறான இராணுவத் தலையீடுகள் எதிர்காலப் புனர்நிர்மாணப் பணிகளில் ஏற்படாதென எவ்வாறு கருத முடியும்?

வடகீழ் பிராந்தியத்தின் புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் புனர் நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதற்கு இராணுவத் தரப்பினரின் தலையீடும் உத்தியோக வர்க்கத்தினரின் இடையூறுகளும் தடையாக இருக்குமென்பதைக் கவனத்திற் கொண்டு டோக்கியோ மகாநாட்டில் சர்வதேச சமூகம் எழுத்து மூலமான கடுமையான நிபந்தனையொன்றை விதித்தல் வேண்டும். அதாவது வட கீழ் பிராந்திய புனர்நிர்மாணப் பணி துரித கெதியில் முன்னெடுக்கப்பட்டதன் பின்னரே தென் இலங்கையின் அபிவிருத்திக்கான நிதியுதவி விடுவிக்கப்பட வேண்டும் என்பதாகும்.

எனவே, மேற்குறிப்பிட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் புனர்நிர்மாணப் பணிகளை வட,கிழக்கில் மேற்கொள்வதற்கான நிர்வாகப் பணிகளை பிரதம மந்திரி உடனடியாக யுத்த அடிப்படையில் மேற்கொள்ளுதல் வேண்டும். உதாரணமாக தென் இலங்கையில் ஓர் வெள்ளப் பெருக்கோ அன்றேல் மண்சரிவோ ஏற்பட்டால் எவ்விதம் யுத்த அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்படுமோ அவ்வாறே வடகீழ் பிராந்திய புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் புனர்நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப் படுதல் வேண்டுமென்ற அழுத்தத்தை சர்வதேச சமூகம் இலங்கை அரசாங்கத் துக்க்குக் கொடுத்தல் வேண்டும்.

மூன்று வருடங்களுக்கு முன்னர் சாவகச்சேரியில் இராணுவ பூகம்பம் மூலம் அந்நகரமே அழிந்து போய்விட்டது. பிரதமரே இதனை நன்கு விபரித்திருந்தார். ஆர்மிரேஜ் சாவகச்சேரியை நேரில் பார்த்துக் கண்கலங்கினார். செயலளவில் அங்கு எவ்வித் புனரமைப்போ புனர் நிர்மாணமோ மேற்கொள்ளப்படவில்லை. எனவே, யுத்த அவசர



அடிப்படையில் இப்பணிகள் மேற்கொள்ளப்படாது விடில் சர்வதேச சமூகம் சிங்களவர் பக்கமாகவே செயற்படுவதாகத் தமிழ் மக்கள் கருதுவர்.

சர்வதேச சமூகம் யதார்த்த நிலையை நன்குணர்ந்து இந்தப் புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் புனர்நிர்மாணப் பணிகளில் விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்பையும்,பங்களிப்பையும் சர்வ துறைகளிலும் பெற்றுக் கொள்வதற்கு முயற்சிக்க வேண்டும். இவ்விடயத்தில் ஜப்பானிய அரசாங்கமும் நோர்வே அரசாங்கமும் அதிக பங்கினை வகிக்க வேண்டியது இன்றியமையாததாகும்.

இறுதியாக வட கீழ் பிராந்திய புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் புனர்நிர்மாணப் பணிகளின் முன்னேற்றமும் தென் இலங்கை அபிவிருத்திக்கான நிதியமும் ஒன்றோடொன்று இணைந்திருக்க வேண்டுமென உதவி வழங்கும் நாடுகளின் டோக்கியோ கூட்டத்தில் வலியுறுத்த வேண்டியது ஜப்பானிய அரசாங்கத்தின் கடமையாகும். இந்த நிலைப்பாட்டுக்கு மேற்குலக நாடுகளின் ஒத்துழைப்பைப் பெற்றக் கொள்வதற்கான அணுகுமுறைகளை நோர்வே அரசாங்கம் மேற்கொள்ளுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

34

# இனநெருக்கடிக்கு காரணமான தரப்பிடம் தமிழர்கள் நீதியை எதிர்பார்ப்பதில் உள்ள சங்கடத்தை சர்வதேச சமூகம் உணர வேண்டும்.

விடுதலைப் புலிகளும், அரசாங்கமும் ஒருங்கிணைந்து அமைத்த அவசர மனிதாபிமான, புனர்வாழ்வு தொடர்பான உபகுழு, ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி மற்றும் ஐக்கயி நாடுகளை எதிர்கொண்ட பிரதேசங்களின் தேவைகள் தொடர்பான அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு கேட்டிருந்தது. இக்கோரிக்கைக்கு இணங்க மேற்கூறிய மூன்று சர்வதேச ஸ்தாபனங்களும் கடந்த ஏப்ரல் 7ஆம் திகதியன்று சுருக்கமான அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு கேட்டிருந்தது. இக்கோரிக்கைக்கு இணங்க மேற்கூறிய மூன்று சர்வதேச ஸ்தாபனங்களும் கடந்த ஏப்ரல் 7ஆம் திகதியன்று சுருக்கமான அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தன.

இந்த அறிக்கையை நாம் பரிசீலிக்க வேண்டியது மிகவும் அவசியமானதாகும். மேற்கூறிய அறிக்கை வடகிழக்கு தொடர்பானதாக விருந்தாலும் வட, கிழக்குக்கு அண்மித்துள்ள பிரதேசங்களும் பாதிப்படைந்துள் ளதாக அங்கு குறிப்பிடப்பட்டிருந்தது. அதனை நாம் ஆட்சேபிக்க முடியாது. ஆனாலும், மேற்குறிப்பிட்ட ஸ்தாபனங்கள் அத்தோடு நின்று விடாமல் தென் இலங்கையும் பாதிப்பை எதிர்நோக்கியதாவும் அவர்க்ளுக்கும் உதவ வேண்டிய கடப்பாடுள்ளதாகவும் தெரிவித்தன. அவர்களின் இந்த நிலைப்பாட்டைப் பொருளாதார ரீதியாகவும், அரசியல் ரீதியாவும் நாம கடுமையாக ஆட்சேபிக் கின்றோம்.

வட, கீழ்ப் பிராந்தியத்தில் 85 வீதத்திற்கும் மேலான வீதிகள் மிக மோசமாகச் சேதமடைந்துள்ளன. ஆனால், தென் இலங்கையில் ஒரு யார் வீதி கூடப் பாதிப்படையவில்லை. வட,கீழ்ப் பிராந்தித்தில் இரண்டு இலட்சத்துக்கும் மேற்பட்ட வீடுகள் சேதமாக்கப்பட்டுள்ளன. ஆனால், தென் இலங்கையில் ஒருவீடு கூடச் சேதமாக்கப்படவில்லை. வட, கீழ்ப் பிராந்தியத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட இந்துக் கோவில்களும், கிறிஸ்தவ தேவாலயங்களும் சேதமாக்கப்பட்டுள்ளன. தென் இலங்கையில் ஒரேயொரு பௌத்த விகாரை சேதமாக்கப்பட்டது. வட.கீழ்ப் பிராந்தியத்தில் 1968 பாடசாலைகளில் 500 இற்கு மேலானவை



சேதமாக்கப் பட்டுள்ளன. தென் இலங்கையில் ஒரு பாடசாலையாவது சேதமாக்கப்படவில்லை. யுத்தத்தினால் வட,கிழக்கில் 67,000க்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். ஆனால், தென் இலங்கையில் அப்பாவிச் சிங்கள மக்கள் 1,500 க்கும் மேல் கொல்லப்படவில்லை. மேற்குறிப்பிட்ட புள்ளி விபரங்கள் யாவும் யுத்தத்தினால் ஏற்பட்ட பாதிப்புக்களாகும். அண்மையில் இலங்கையில் வெள்ள அனர்த்தத்தினால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கும் மேற்குறிப்பிட்ட புள்ளி விபரங்களுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை.

தமிழ் இனத்தின் விடுதலைப் போராட்டத்தைப் பூண்டோடு அழிக்க வேண்டு மென்ற கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு, சனத்தொகை ரீதியில் உலகில் ஆகக் கூடிய இராணுவம் தென் இலங்கையில் உருவாக்கப்பட்டது. இரண்டு இலட்சத்துக்கும் மேற்பட்ட சிங்களவர்கள் இராணுவத்திற் செயற்படுகின்றனர். இவர்களுக்கு நல்ல வேதனமும், இதர சலுகைகளும் வழங்கப்படுகின்றன. இதன் மூலம் பத்து இலட்சம் சிங்கள மக்கள் நேரடியாக நன்மையடைகின்றனர். மறை முகமாக இன்னும் பத்து இலட்சம் சிங்கள மக்கள் நன்மையடையும் வாய்ப்புள்ளது. இதன் பலனாக தென் இலங்கையின் பொருளாதாரம் வளர்ச்சியடைகிறது.

இதற்கு மேலாக யுத்தத்துடன் தொடர்புடைய கைத்தொழில்களும் வளர்ச்சியடைகின்றன. ஆனால், வட,கீழ்ப் பிராந்தித்தைப் பொறுத்தவரையில் 13 இலட்சத்துக்கு மேற்பட்ட தமிழ் மக்கள் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் அகதி வாழ்க்கை வாழ்கின்றனர். அதேவேளையில், ஏழு இலட்சத்துக்கு மேற்பட்ட சிங்கள இளைஞர்களும், யுவதிகளும் வெளிநாடுகளில் பணியாற்றுவதன் மூலம் கிடைக்கப் பெறும் வருவாயும் இங்கு வந்து சேர்கின்றது.

பொருளாதார நிலை இவ்வாறிருக்கையில் தென் இலங்கையும் பாதிக்கப் பட்டுள்ளதாகவும் அவர்களுக்கும் உதவ வேண்டும் என்ற சர்வதேசநிலைப் பாட்டை எவ்வாறு ஏற்றுக் கொள்ள முடியும்? தென் இலங்கையில் உள்ள பொருளாதார உண்மையை வெளிப்படுத்துவதற்கு மேற்குறிப்பிட்ட சர்வதேச ஸ்தாபனங்கள் மூன்றும் ஏன் தயங்குகின்றன என்பது புரியாத புதிராகவுள்ளது.

அரசியல் ரீதியாக தென் இலங்கை மக்கள் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை பூண்டோடு அழிக்க வேண்டுமென நடாத்திய யுத்தத்திற்கு ஆதரவு வழங்கும் வகையிலா சர்வதேச சமூகம் தென் இலங்கை மக்களுக்கு உதவி வழங்க முன் நிற்கிறது? சிங்கள அரசாங்கம் தமிழ் மக்களைப் பூண்டோடு அழிக்க வேண்டு மென்ற கொள்கையைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளபாடங்களைக் கொள்வனவு செய்தது.

மேற்குறிப்பிட்ட சர்வதேச நிறுவனங்கள் மூன்றினதும் அறிக்கை எட்டுத் துறைகளை உள்ளடக்கியிருந்தது. அவையாவன. பாதுகாப்பு, மீள் குடியமர்தலும், சுகாதாரம், கல்வி, வீடமைப்பு, கட்டமைப்பு, கமத்தொழில், ஜீவனோபாயம் மற்றும் அபிவிருத்தி ஆற்றல் முதலியவையாகும். இவ்வறிக்கையில் கைத்தொழிலுக்கு முக்கியத்துவம் வழங்காதிருந்தமையை மாபெரும் தவறென்றே குறிப்பிட வேண்டும். அவர்களின் மதிப்பீட்டின் முதலாவது துறையான பாதுகாப்பும் மீள்குடியமர்த்தலும் தொடர்பாக ஒரு வசனமாவது குறிப்பிட்டிருக்கவில்லை.

யாழ்ப்பாணம், மன்னார், திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு பகுதிகளிலுள்ள மக்கள் தங்கள் சுய உழைப்பில் கட்டிய வீடுகளிலிருந்து பலாத்காரமாக வெளியேற்றப்பட்டு பாதுகாப்பு வலயங்கள் அமைக்கப்பட்டன. அவ்வாறு வெளியேற்றப்பட்ட மக்களை அவர்களின் சொந்த இடங்களில் குடியமர்த்துவது தொடர்பாக ஒரு வசனமாவது வெளியிடப்படவில்லை.

ஆகவே, இந்த விடத்தில் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஐக்கிய நாட்டு ஸ்தாபனங்கள் தமது கடமைகளிலிருந்து மிகக் கடுமையாக தவறி விட்டன என்பதே எமதுவாதம். பிறப்புரிமை என்ற விடயம் ஐக்கிய நாடுகள் ஸ்தாபத்தில் அங்கீகரிக்கப்பட்டு அதற்குத் தகுந்த மதிப்பும் வழங்கப்படுகின்றது. ஆனால் வட கீழ்ப் பிராந்தியத்தில் அதியுயர் பாதுகாப்பு வலயங்களை அமைத்ததன் மூலம் தமிழ் மக்களின் பிறப்புரிமையை சிங்கள இராணுவம் பறித்தெடுத்ததனை இந்த மூன்று ஸ்தாபனங்களும் கவனத்திற்கெடுக்காமல் விட்டது மன்னிக்க முடியாத குற்றமாகும்.

அதாவது, இவ்விடயம் பாதுகாப்பும் மீள்குடியமர்த்தலும் என்ற துறையைச் சார்ந்தமையால் இதனை நாம் சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது. இந்தத் துறையில் மனித உரிமைகள் தொடர்பாகவும், நன்கு விளக்கியிருந்தனர். வட கீழ்ப் பிராந்தியத்தில் மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமென மேற்குலகமும் விசேடமாக அமெரிக்காவும் குரல் கொடுத்து வருகின்றன. அந்நாடுகளின் வேண்டுகோளின் பிராகரமே இம்மூன்று ஸ்தாபனங்களும் குரல் கொடுக்கின்றன.

மனித உரிமை பேணப்படவேண்டுமென்பது சகலராலும் ஏற்றுக் கொள் ளப்படும் ஒரு விடயம்.

ஆனால், மனித உரிமைகளை அமுல்படுத்துவது சூழ்நிலையைப் பொறுத்தே அமைகின்றது. பட்டினியால் வாடுபவன் ஆண்மீக



உபதேசத்தை விளங்க முடியாமல் இருப்பது போல பல ஆண்டு காலமாக ஆசாபாசங்களை தனது குடும்பங்களை மறந்து தனது இனத்தைக் காப்பாற்றுவதற்கு துப்பாக்கி ஏந்தி யவனிடம் மனித உரிமைகள் தொடர்பான கீதோபதேசம் செய்தால் அவனால் அதனை விளங்கிக் கொள்ள முடியுமா? இதுதான் இன்றைய யதார்த்த நிலை. நாடுகளில் மூன்று வகையான யுத்தங்கள் நடைபெறுகின்றன. ஒன்று விடுதலை யுத்தம், இரண்டாவது உள்நாட்டு யுத்தம். மூன்றாவது நாடுகளுக்கிடையிலான யுத்தமாகும். இவ்விதமான மூன்று யுத்தங்களில் எந்தவொரு யுத்தம் ஏற்பட்டாலும் அங்கு மனித உரிமைகள் இல்லாமல் போய்விடும். வட, கிழக்கில் 19 வருடமாக நடைபெற்ற யுத்தத்தில தற்போது யுத்த நிறுத்தமொன்று ஏற்பட்டதே தவிர, நிரந்தரமான சமாதானம் ஏற்படவில்லை. இந்த நிலையில், மனித உரிமைகள் பேணப்பட வேண்டுமெனக் கூறுவது யதார்த்தத்துக்கு உகந்ததல்ல. இரண்டாவது உலக மகா யுத்தத்தில் ஜப்பான் அமெரிக்கா மீது போர் தொடுத்த போது, அமெரிக்கா தன் நாட்டிலிருந்து ஜப்பானியர்களை சிறைப்படுத்தியமை மனித உரிமை மீறல் இல்லையா?

அடுத்த துறையான சுகாதராத் துறையைப் பொறத்தவரையில் தென் இலங்கையுடன் ஒப்பிடும் போது வட, கீழ்ப் பிராந்தியம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதென்பது யாவரும் அறிந்த விடயம். 5 வயதிற்குக் கீழ்ப்பட்ட பிள்ளைகளின் நிறைக் குறை வட கீழ்ப் பிராந்தியத்தில் 46வீதமாகவும், தென் இலங்கையில் 25 வீதமாகவுமுள்ளது. நிறைகுறைவாகப் பிறக்கும் குழந்தைகளின் தொகை தென் பிராந்தியத்தில் 16 சத வீதமாகவும், வட,கீழ்ப் பிராந்தியத்தில் 25 சதவீதமாகவும் இருக்கிறது. வட,கீழ்ப் பிராந்தியத்தில் சுகாதராத்துறையில் 34 வீதமான வெற்றிடங்கள் நிரப்படவில்லை. மேற்குறிப்பிட்டவற்றிலிருந்து வட, கீழ்ப்ப பிராந்தியத்தின் சுகாதாரம் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதென்பது நன்கு புலனாகின்றது.

கல்வித்துறையைப் பொறுத்த வரையில் இடைநடுவில் கல்வியைக் கைவடும் தொகை தென் இலங்கையில் 4 வீதமாகவும், வடகீழ்ப் பிராந்தியத்தில் 15 வீதமாகவும் உள்ளது. தமிழ் ஆசிரியர்களின் பற்றாக்குறை 4,650க்கும் மேலானதாகும். 500க்கும் மேற்பட்ட பாடசாலைகள் சேதத்துக்குள்ளாகியுள்ளன.

வீடமைப்புத் துறையைப் பொறுத்தவரையில் வட,கீழ்ப் பிராந்தியத்தில் 326,700 வீடுகள் சேதத்துக்குள்ளாகியுள்ளன. இவற்றில் 88 வீதமானவற்றில் வீட்டுச் சொந்தக்காரர்களே தங்கியிருந்தனர். கட்டமைப்பைப் பொறுத்தவரையில் சேதமடைந்த குளக்கட்டுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பான புள்ளி விபரங்கள் குறிப்பிடப்பட வில்லை.

## வடக்கு, கிழக்கில் போரினால் அழிவை எதிர்கொண்ட பிரதேசங்களின் தேவைகள் தொடர்பான மதிப்பீடு

ஜீவனோபாயம் தொடர்பாக தென் இலங்கையை விட, வட, கீழ்ப் பிராந்தியத்தில் வேலையற்றோர் தொகை 25 சத வீதம் அதிகமானதாகும். வட, கிழக்கில் பெருந்தொகையான பட்டதாரிகள் வேலையற்றிருப்பது அறியக் கிடைத்தது. வட,கீழ்ப் பிராந்தியத்தில் ஆண்களை விடப் பெண்களே அதிகளவில் வேலையின்றி இருக்கின்றனர். 325,000 இளைஞர்களும்,யுவதிகளும் வேலையின்றி இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட எட்டுத் துறைகளினதும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு 11.:2 வருடத்திலிருந்து 2 வருடங்களுக்குள் அவசரமாகச் செய்யப்பட வேண்டும். 3 வருடங்களிலிருந்து 6 வருடங்களுக்குள் செய்யப்பட வேண்டியவைக்கும் தேவையான நிதியானது 1,841 மில்லியன் அமெரிக்க டொலராக மதிப்பிடப்பட்டுள்ளது.

சுகாதாரத் துறைக்கு 126 மில்லியன் அமெரிக்க டொலர் தேவையாக வுள்ளது. வீடமைப்புக்கு 326 மில்லியன் அமெரிக்க டொலர் தேவையாகவுள்ளது. கட்டமைப்புக்கு 868 மில்லியன் அமெரிக்க டொலரும் தேவையாகவுள்ளது.

மேற்குறிப்பிட்ட மதிப்பீடுகள் யதார்த்த நிலைக்கு எந்தளவுக்கு உகந்தது என்பதை எம்மால் கூற முடியாது. இந்த மதிப்பீட்டினை உலக வங்கியும், ஆசிய அபிவிருத்தி வங்கியும், ஐக்கிய நாடுகள் ஸ்தாபனமும் மேற்கொண்டிருந்த போதிலும் இதற்கான நிதி உதவியை யார் செய்யப் போகின்றார்கள் என்பதே கேள்வி. இம்மதிப்பீடுகள் காலப் போக்கில் மேலும் உயரலாம். இந்நிதியைப் பெற்றுக் கொள்வதற்கான பொறுப்பினை உலக வங்கியோ, ஆசிய அபிவிருத்தி வங்கியோ, ஐக்கிய நாடுகள் ஸ்தாபனங்களோ நிச்சயமாக ஏற்கப் போவதில்லை.

எனவே, இத்தேவைகளை நிறைவேற்றுவதற்கு மேற்கூறிய ஸ்தாபனங் களுடன் இணைந்து செல்வந்த வெளிநாடுகளும் செயற்பாட்டுத் திட்டங்களைத் தயாரித்து அவற்றை அமுல் செய்தல் வேண்டும். மேற்குறிப்பிட்டுள்ள துறைகளில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய விடயங்கள் இனங்காணப்பட்டுள்ளன. மேற்குறிப்பிட்ட சர்வதேச நிறுவனங்கள் மூன்றினதும் விரிவான அறிக்கை வெளியிடப்படுகையில்,



சகல விடயங்களும் வெளிவருமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்விடயங்களில் இரண்டு அதி முக்கிய துறைகளை தமிழ்ச் சமுதாயம் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் புனர்வாழ்வுப் பணிகளுக்குத் தேவையான நிதியை எவ்விதம் பெற்றுக் கொள்வதென்பது ஒன்று. அதனைவிட அதி முக்கிய விடயமானது பெற்றக் கொள்ளும் நிதியைக்கொண்டு இப்பாரிய திட்டங்களை அமுலாக்குவது யார் என்பதாகும். முதலாவது துறைக்கு உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் செல்வந்த நாடுகளின் உதவியைப் பெற வேண்டிய நிலை தமிழ்ச் சமுதாயத்துக்குள்ளது.

இலங்கை அரசாங்கம் மூலம் வட. கிழ்ப் பிராந்தியத்தில் இனங்காணப்பட்ட தேவைகள் பூர்த்தி செய்யப்படுதலாகாது என ஆணித்தரமாகவும், அழுத்தமாகவும் கூற விரும்புகின்றோம். ஏனெனில், கொடுமை செய்தவனிடம் நீதியை எதிர்பார்க்க முடியுமா என்பதைச் சர்வதேச சமூகம் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். இந்த யதார்த்த நிலையையும் உண்மைகளையும் அமெரிக்கா. ஜப்பான் மற்றும் மேற்குலக நாடுகள் நன்குணர வேண்டும். அவர்கள் உணரவில்லை என்பது தான் எமது கவலை. எனவே, இதனை அமுல் செய்வதற்கு விடுதலைக்காகத் தங்களை அர்ப்பணித்துள்ள விடுதலைப் புலிகள், அமைப்பொன்றினை ஏற்படுத்தி அந்த அமைப்பின் மூலம் சுதந்திரமாக இலங்கை அரசாங்கத்தின் தலையீடு இல்லாது இப்பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டுமெனத் தமிழினம் எதிர்பார்க்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தமிழர் விவகாரத்தில் சர்வதேச சமூகம் தன் மனச்சாட்சியை அடகு வைக்கக் கூடாது.

அரசாங்கம் விடுதலைப்புலிகளின் இடைக்கால நிர்வாகத்தை நிராகரித்தமை மிகவும் பாரதூரமான ஓர் விடயமாகும். இந்நிராகரிப்பினால் பாரதூரமான விளைவுகள் எதிர்நோக்கப்படலாம்.

இவ்விதமான நிரகரிப்பின் பின்னணியில் சில அடிப்படை விடயங்கள் உதயமாகின்றன. தமிழ் பிரதேசத்தில் அரச இராணுவத்தினால் ஏற்படுத்தப்பட்ட பேரழிவுகளை நிவிர்த்தி செய்யும் பணிகளுக்கு யதார்த்த நிலையில் வட, கிழக்கில் அமைந்த விடுதலைப்புலிகளின் அமைப்புக்கு சிறியதோர் விடயமான இந்த இடைக்கால நிர்வாகத்தைக் கொடுக்க விரும்பாத ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம், அரசியல் தீர்வுக்கான சமஷ்டி விடயத்தில் எவ்விதம் இணக்கம் காணமுடியும்?

தமிழ் இனத்தைப் பொறுத்தவரையில் அவர்கள் கடந்த 80 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக ஏமாற்றப்பட்டதோர் சமுதாயமாகும். எனினும், பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு என்ற கோட்பாட்டில் இனியும் தமிழ் சமூகம் சிங்கள அரசியற் தலைமைப் பீடங்களை ஒரு போதும் நம்புவதற்குத் தயாரில்லை.

இலங்கைத் தமிழர் இனப்பிரச்சினை சர்வதேசப் பிரச்சினையாக மாறி விட்டமையினால் சர்வதேச சமூகம் நீதியாகவும், நேர்மையாகவும் நடுநிலையைக் கடைப்பிடித்துச் செயற்பட வேண்டியது மிகவும் அவசியமானதாகும். யுத்தநிறுத்தத்தைத் தொடங்கியவர்கள் விடுதலைப்புலிகள் என்பதனைச் சர்வதேச சமூகம் நன்கு உணர வேண்டும். சர்வதேச சமூகத்தின் பிரதிநிதியான நோர்வே அரசாங்கத்தினால் ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை விடுதலைப் புலிகள் முழுமனதுடன் ஏற்று நடைமுறைப்படுத்துகின்றனர்.

அமெரிக்காவையும், இந்தியாவையும் தவிர்ந்த ஏனைய சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகள் கிளிநொச்சிக்குச் சென்று விடுதலைப்புலிகளின் தலைமைப் பீடத்துடன் பேச்சுவார்த்தை நடாத்தி வருவது உலகறிந்த விடயம்.

கடந்த பொதுத் தேர்தல் காலத்தில் விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்ற கோட்பாட்டியிட்டு தமிழர் தேசியக் கூட்டமைப்பு 16 ஆசனங்களை வென்றெடுத்ததன் மூலம் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் விடுதலைப்புலிகள் மாத்திரமே என்பது உறுதியாகிவிட்டது. இந்த யதார்த்த நிலையை அங்கீகரிக்காத பிரதமர், அன்ரன் பாலசிங்கத்துக்கு எழுதிய கடிதத்தில் விடுதலைப்புலிகளின் பங்களிப்பு தொடர்பாக ஒரு வசனம் கூடக் குறிப்பிடவில்லை.

விடுதலைப்புலிகளின் பங்களிப்பு இல்லாது இலங்கையில் ஒரு போதும் சமாதானம் ஏற்படப் போவதில்லை. இந்த அப்பட்டமான உண்மையை சிங்கள அரசியல் சமூகமும் சர்வதேச சமூகமும் நன்குணர்ந்து அதனை அங்கீகரித்து தற்கேற்ப தங்கள் செயற்பாடுகளை மேற்கொள்ளுதல் வேண்டும். அப்படியானால் தான் இலங்கையில் நிரந்தர சமாதானம் ஏற்படுவதற்கான வாய்ப்புண்டு. எனவே சர்வதேச சமூகம் நோர்வே நாட்டுப் பிரதமரின் அறிவுரைகளைக் கேட்டுச் செயற்பட வேண்டும்.

நோர்வேயின் பிரதமர் அண்மையில் ஜப்பான் சென்ற போது சில உண்மைகளை நன்கு வெளிப்படுத்தியிருந்தார். மூன்று விதமான கருத்துக்களை அவர் வெளியிட்டடிருந்தார். முதலாவது சமாதான விடயத்தில் ஜனாதிபதியை விட ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கமே முன்னணியில் நிற்பதால் சமாதானத்திற்கான முன்னெடுப்புகளை அவர்களே மேற்கொள்ள வேண்டுமென்பது. இரண்டாவது ரணில் விக்கிரமசிங்க விடுதலைப்புலிகளின் இடைக்கால நிர்வாகம் தொடர்பாகக் கூடியளவுக்கு இணங்க வேண்டுமெனக் கூறியிருந்தார். மூன்றாவதாக இம்மாதம் டோக்கியோவில் நடைபெறவிருக்கும் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் விடுதலைப்புலிகள் கலந்து கொள்ளாவிட்டால் தாம் மத்தியஸ்தம் செய்யப் போவதில்லையென அழுத்தமாகக் கூறியிருந்தார்.

## நோர்வே பிரதமரின் அறிவுரைகளை கேட்டுச் செயற்படுவதே அவசியத் தேவை

இவ்விடயங்களைக் கவனத்திற் கொள்ளாமல் அரசாங்கம் விடுதலைப் புலிகளைக் கடுமையாக ஓரங்கட்டடியமை சகலருக்கும் வியப்பாகவுள்ளது. எனவே, இந்தப் பின்னணியில் டோக்கியோ மாநாட்டில் விடுதலைப்புலிகள் கலந்து கொள்ளாதுவிடில் அம்மாநாட்டைச் சிறிது காலத்துக்குப் பிற்போடுவதே உகந்தது.

வட-கிழக்கில் மாத்திரம் 3,26,000 வீடுகள் சேதமாக்கப்பட்டன. 500க்கு மேற்பட்ட பாடசாலைகள் அதிக சேதத்துக்குள்ளாகின. 85 வித வீதிகளுக்குக் கடும் சேதம் ஏற்பட்டது. அண்மையில் தென் இலங்கையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட்ட வெள்ளத்தினால் அநேக மக்கள் வீடுகளை விட்டு வெளியேறினர். ஆனால், யாழ். குடா நாட்டில் மட்டும் ஒன்றரை இலட்சம் தமிழ் மக்களை இராணுவத்தினர் தமது பாதுகாப்பு நலன் கருதி வெளியேறியுள்ளனர். பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் அகதிகளாக வாழ் கின்றனர்.

தெற்கில் நடந்தது இயற்கை அனர்த்தம். ஆனால், யாழ்குடாநாட்டில் நடந்தது இனமேலாதிக்க அழிப்பு என்பதைச் சர்வதேச சமூகம் உணர வேண்டும். தமிழ்ப் பிராந்தியத்தில் சகல வளங்களும் அழிக்கப்பட்டுள்ளன. தென் இலங்கையில் யுத்தத்தினால் பாதிக்கப்படவில்லை. இந்தச் சூழ்நிலையில் சர்வதேச சமூகம் வி-கிழக்குக்கு மாத்திரமே நிதியுதவி செய்யக் கடமைப்பட்டுள்ளது. தென்இலங்கை யுத்தத்தினால் பாதிக்கப்படவில்லை. வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவது தொடர்பாக நாம் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. ஆனால் இன்று நடப்பது என்ன?

வட-கிழக்கில் பேரழிவை சர்வதேச சமூகத்திற்கு காட்டி அதன் மூலம் கிடைக்கப்பெறும் நிதியை இராணுவ ரீதியாக தமிழ் மக்களைப் பூண்டோடு அழிப்பதற்குப் பயன்படுத்தினால் அது தமிழினத்தை அழிப்பதற்கான சர்வதேச சமூகத்தின் உதவி என்றே எண்ண வேண்டும்.

டோக்கியோ மாநாட்டில் 300 கோடி அமெரிக்க டொலர் திரட்டப்பட்டு இலங்கை அரசாங்கத்துக்கு வழங்கப்படவுள்ளதாக அறியக் கிடைக்கின்றது.வட-கிழக்குப் புனர்நிர்மானம், புனர்வாழ்வு, மீளக் குடியமர்தல் அபிவிருத்தி போன்றவற்றுக்கு 300கோடி அமெரிக்க டொலர் போதாது என்பதே உண்மை நிலைவரமாகும்.

வட-கிழக்கு தமிழ் பிராந்தியத்தின் தேவைகள் தொடர்பான மதிப்பீட்டினை மேற்கொண்ட உலக வங்கி ஐ.நா. நிறுவனங்கள் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் வட-கிழக்கில் சில துறைகளுக்கு மாத்திரம் 184 கோடி அமெரிக்க டொலர் தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது. கைத்தொழில் துறை மற்றும் வணக்கத்தலங்களின் புனர்நிர்மாணம் ஆகியவை சேர்க்கப்படவில்லை. சேர்க்கப்படாத துறைகள் பல இன்னமும் உள்ளன.

16 மாதங்களுக்கு மேலாக யுத்த நிறுத்தம் நடைமுறையிலுள்ளது. இக்காலவரையில் இலங்கை அரசாங்கம் எத்தனை கோடி ரூபாவுக்கு யுத்த தளபாடங்களைப் பெற்றுள்ளது? அமெரிக்காவிலிருந்து பாரிய யுத்தக் கப்பலொன்றினை இலங்கை அரசாங்கம் கொள்வனவு செய்வதற்குள்ளது. இந்தப் பின்னணியில் வெளிநாட்டிலிருந்து கிடைக்கப் பெறும் நிதியுதவியை இலங்கை அரசாங்கம் எவ்வாறு பயன்படுத்தும்



என்பதை சுலபமாகப் புரிந்துகொள்ள முடியும். எனவே சர்வதேச சமூகம் தென் இலங்கைக்கு உதவிசெய்யாது வட-கிழக்கில் யுத்தத்தினால் ஏற்பட்ட அனர்த்தங்களை நிவிர்த்தி செய்வதற்கு மாத்திரமே உதவி செய்ய வேண்டுமெனத் தமிழினம் எதிர்பார்க்கிறது.

300 கோடி அமெரிக்க டொலர் வட.கிழக்கில் எவ்விதம் செலவிடப்பட வேண்டும்? டோக்கியோ மகா நாட்டில் விடுதலைப்புலிகள் பங்குபற்றினாலும், பங்குபற்றாவிட்டாலும் 300 கோடி அமெரிக்க டொலரை வட-கிழக்கின் புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் புனர் நிர்மானப் பணிகளுக்காகச் செலவிடுவதற்கான கட்டமைப்பொன்று விடுதலைப்புலிகளின் பாரிய பங்களிப்புடன் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி ஐ.நா நிறுவனங்கள் மற்றும் சர்வதேச நிதியாகையில் இக்கட்டமைப்பு சுதந்திரமாக இயங்க வேண்டியது அவசியம். இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பு குறைவாக இருப்பதும், தலையிடாக் கொள்கையை அனுசரிப்பதும் அவசியம். எனவே, இவ்வாறான கட்டமைப்பு பொன்றினை ஏற்படுத்துவதற்கு சர்வதேச சமூகம் விடுதலைப் புலிகளுடன் கலந்துரையாடி உகந்த முன்னெடுப்புகளை மேற்கொள்ள வேண்டும்.

300 கோடி அமெரிக்க டொலரில் சிறு தொகையாவது குறைக்கப் படுதலாகாது என்பதே எமது வேண்டுகோள். சுருக்கமாகக் கூறுவதானால், விடுதலைப்புலிகள் வாயிலாக ஏற்படுத்தப்படும் இக்கட்டமைப்பின் செயற்பாடுகள் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி ஐ.நா.நிறுவனங்கள் மற்றும் சர்வதேச சமூகத்தினால் கண்காணிக்கப்படுதல் வேண்டும்.

சர்வதேச நிறுவனங்களின் மேற்பார்வையில் விடுதலைப்புலிகளின் வாயிலாக மேற்கொள்ளப்படும் இக்கட்டடிமைப்புக்கு இலங்கை அரசாங்கம் இணங்காதுவிடில். இலங்கை அரசாங்கத்திற்குச் சர்வதேச சமூகம் வழங்கும் நிதியுதவியை நிறுத்த வேண்டிய நிர்ப்பந்தம் சர்வதேச சமூகத்திற்கு ஏற்படலாம். இந்த ஒழுங்கு முறையில் விடுதலைப்புலிகளுக்குப் பாரிய பங்களிப்பும் சர்வதேச சமூகத்துக்கு அதிக ஈடுபாடும் கிடைப்பதனால் இலங்கை அரசாங்கத்தின் இறையாண்மை பாதிக்கப்படும்.

இந்த வாதத்தை யதார்த்த நிலையில் ஏற்றுக்கொள்ள முடியாது. புரிந்துணர்வு ஒப்பந்தம் அரசியல் யாப்புக்கு அப்பாலேயே செய்து கொள்ளப்பட்டது. மேற்படி ஒப்பந்தத்தில் இறையாண்மை உள்ள இலங்கை இராணுவம் வட-கிழக்கில் 70 வீதத்திற்கும் மேற்பட்ட விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களுக்குள் உட்புக முடியாதெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

300 கோடி அமெரிக்க டொலர் நிதியுதவியை வி-கிழக்குக்கு வழங்காது தென் இலங்கைக்குப் பயன்படுத்துவதானால் அதனை சர்வதேச சமூகம் தனது மனச்சாட்சியை அடகு வைத்தாகத் தமிழினம் கருதும். இந்த நிலைப்பாட்டுக்கு இந்தியா கடுமையாக எதிர்ப்புத் தெரிவிக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. வட-கிழக்கில் ஏற்பட்ட பேரழிவுகளுக்கும், அனர்த்தங்களுக்கும் எவ்வித உதவியும் செய்யாத அண்டைநாடு, அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்துக்கு உடனடியாக உதவ முன் வந்தமை இதற்கோர் எடுத்துக் காட்டாகும்.

1995 டிசம்பர் மாதத்தில் இலங்கை இராணுவம் யாழ்.குடாநாட்டை ஆக்கிரமித்த வேளையில் 5,10,000 தமிழ் மக்கள் கால்நடையாகச் சென்று வன்னியில் தஞ்சமடைந்த போது ஐ.நா.செயலாளர் நாயகம் பூட்ரஸ் பூட்ரல் காலி, மனிதாபிமான முறையில் யாழ்.குடாநாட்டுத் தமிழ் மக்களுக்கு உதவி புரியுமாறு உருக்கமான வேண்டுகோளொன்றினை உலக மக்களுக்கு விடுத்திருந்தனர்.

அவ்வேளையில் ஒரு போத்தல் பாலையோ, ஒரு மருத்துவ வில்லையைக் கூடத் தமிழ் மக்களுக்கு பக்கத்துநாடு அனுப்பி வைக்கவில்லை. ஆனால் அண்மையில் தெற்கில் இடம்பெற்ற வெள்ளப் பெருக்குக் காரணமாக உடனடியாக யுத்தக் கப்பலை அனுப்பிய உணவுப் பண்டங்கள், மருந்து வகைகள், டாக்டர்களை அனுப்பி தனது மனித நேயத்தை வெளிப்படுத்தியது.

இலங்கை அரசாங்கத்துக்கே 300 கோடி அமெரிக்க டொலரை வழங்க வேண்டுமென வற்புறுத்தி அதில் ஒரு சிறு பகுதியை இலங்கை அரசாங்கத்தின் மூலம் வடகீழ் பிராந்தியத்துக்கு செலவு செய்யலாம் என்ற கருத்து முன்வைக்கப்பட்டால் ஐரோப்பிய ஒன்றியம், கனடா முதலிய நாடுகள் நிராகரித்து 300 கோடி அமெரிக்க டொலரை வட-கிழக்குக்கு மாத்திரம் விடுதலைப்புலிகளின் கட்டமைப்பின் மூலம் செலவிடப்பட வேண்டும் என்பதை எடுத்துரைத்தல் வேண்டும்.



# 36

## தமிழர்களின் நியாயமான நிலைப்பாட்டை 'சர்வதேச சமூகத்தை' பயன்படுத்தி பலவீனப்படுத்தும் முயற்சி

தமிழர் வரலாறு தொடர்பாக சர்வதேச சமூகம் நன்கு அறிந்து வைத்திருக்கவில்லை என்பது யாவருக்கும் தெரிந்த விடயம். 1956, 1958, 1977 ஆகிய வருடங்களில் இடம்பெற்ற இனக் கலவரங்கள், அதன் தாக்கங்கள் தொடர்பாக சர்வதேச சமூகத்திற்கு எதுவும் தெரியாது. ஆயினும், உலகே கண்டிராத வகையில் 1983 ஆம் வருடம் கொழும்பு நகரிலும் ஏனைய இடங்களிலும் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களை தொலைக்காட்சி மூலம் கண்டு கொண்ட உலக நாடுகள் இலங்கையை வேண்டாத்தகாத ஒரு நாடாகக் கருதத் தொடங்கின. தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட இன்னல்களையும், அலவங்களையும் துயரங்களையும் அதானித்த நாடுகளான இந்தியா மற்றும் ஐரோப்பிய நாடுகள் யாவும் விசா இல்லாமலே தமிழ் மக்கள் தத்தமது நாடுகளில் வந்து குடியேறுவதற்கு ஊக்கமளித்தன.

மறைந்த இந்தியப் பிரதமரான இந்திராகாந்தி , அன்றைய இலங்கை ஜனாதிபதி ஜயவர்த்தனவுக்கு தமிழ் இனப்படுகொலைகளை இந்தியா சகித்துக் கொள்ளாது என்று கடும் எச்சரிக்கை விடுத்தார். இந்திராகாந்தி மேலுமொருபடி முன்னேறிச் சென்று இந்திய, தென் பிராந்திய இராணுவத் தலைமைப் பீடத்தை உஷார் நிலையில் வைத்திருக்கும்படி கட்டளையிட்டதையும் மறந்து போகவில்லை. இந்திரா காந்தியின் அறிவுறுத்தலின் பிரகாரம் இலங்கைப் பிரச்சினை ஐ.நா. சபையில் கிளப்பப்பட்டதோடு, அதற்குப் பாரியளவிலான ஆதரவும் கிடைத்தது. சுருக்கமாகக் கூறுவதானால் உலக அபிப்பிராயம் தமிழ் மக்கள் சார்பாகவே இருந்நது.

1994 இல் சந்திரிக்காவின் ஆட்சி ஏற்பட்டதன் பின்னர் தமிழ் மக்களுக்குக் கெதிரான மனித உரிமை மீறல்கள் உலகம் கண்டிராத அளவில் நடைபெற்றபோதிலும், கதிர்காமர் அதனை மூடி மறைக்கும் பொருட்டு, விடுதலைப் புலிகள் ஓர் விடுதலை இயக்கமல்ல, அதுவோர் பயற்கரவாத இயக்கமென்று மேற்குலக நாடுகளில் பிரசாரம் செய்து வெற்றிகளைப் பெற்றுக் கொண்டார். ஆயினும், மேற்குலகின் மனித உரிமை மீறல்கள் தொடர்பான நிறுவனங்கள் இலங்கையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பட்டமையால், அவர்கள் மூலம் உண்மையான நிலைவரத்தை அறிந்து 1997 ஏப்ரல் மாதத்தில் ஜெனீவாவில் நடைபெற்ற ஐ.நா.மனித உரிமைக் குழுக் கூட்டத்தில் உலக சரித்திரம் காணாத அளவிலான மனித உரிமை மீறல்களில் இலங்கை அரசாங்கம் முதலிடம் வகிப்பதாக சர்வதேச நிறுவனங்கள் முதலிடம் வகிப்பதாக சர்வதேச நிறுவனங்கள் குரலெழுப்பின. இதன்படி, இலங்கை தொடர்பான சர்வதேச சமூகத்தின் அபிப்பிராயம் 1997 இலும் இருந்தது என்பதாகும்.

ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிக்கு வந்தவுடன் விடுதலைப்புலிகள் தன்னிச்சையாக யுத்த நிறுத்தத்தை அறிவித்தது. ஐக்கிய தேசியக் கட்சியும் யுத்த நிறுத்தத்திற்கு உடன்பட்டு கடந்த 18 மாத காலமாக யுத்தம் வெற்றிகரமாக நிறுத்தப்பட்டுள்ளத. அதைத் தொடர்ந்து 2002 பெப்ரவரியில் நோர்வே நாட்டின் அனுசரணையுடன் தயாரிக்கப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டது.

விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாக சிங்கள இராணுவத்தினரால் வெற்றி பெற முடியாது என்ற நிலைப்பாட்டுக்கு வந்தமையால், விடுதலைப் புலிகளின் ஆதிக்கத்தை இராணுவ ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் முற்றாக அழிக்கும் பொருட்டு ஓர் தந்திரோபாயம் உருவாக்கப்பட்டது. அது யாதெனில், அண்டை நாடான இந்தியாவுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் கசப்புணர்வு நிலவுவதால் இவ்விடயத்தில் இந்தியாவின் உதவியைப் பெறுக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது. உலக வல்லரசான அமெரிக்காவின் உதவியையும் பெறுவது அவசியமானதாகையால், இவ் விடயங்களில் அமெரிக்காவின் பங்களிப்பும் கோரப்பட்டது. இலங்கையில் சமாதானம் ஏற்பட வேண்டும் என்ற போர்வையில், காலூன்ற திட்டங்களை வகுத்துக் கொண்டது. அதுபோல, இந்தியாவும் இலங்கையில் சமாதானம் மலர வேண்டுமெனப் பேச்சளவிற் சொன்னாலும் தனது நாட்டு நலனிலேயே அக்கறையாகவுள்ளது. இலங்கை அரசாங்கம் ஒரு கல்லால் இரண்டு மாங்காய்களை வீழ்த்த முயற்சித்தது. இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் இந்தியாவினதும், அமெரிக்காவினதும் உதவியுடன் விடுதலைப் புலிகளை முற்றாக நசுக்குவதற்காகச் செயற்படுகின்றது.

இலங்கையில் அமெரிக்கா அதிக கவனம் செலுத்துவதை இந்தியா விரும்பவில்லை. இந்தியா அதிக கவனம் செலுத்துவதை அமெரிக்கா விரும்பவில்லை. இந்த இரு நாடுகளது நலன்களும் ஒன்றுக்கொன்று முரணானது. இதுவோர் ஆபத்தான விடயமும் கூட என்பதை இலங்கை இன்னமும் புரிந்து கொள்ளவில்லை.

இதேவேளையில், பல காரணங்களுக்காக இந்தியா



அமெரிக்காவுடன் வெளிப்படையாகப் பகைத்துக் கொள்ள விரும்பவில்லை. அவ்வண்ணமே இந்து சமுத்திரத்தின் கேந்திர ஸ்தானமான இலங்கையில் காலூன்ற அமெரிக்காவுக்கு விருப்பமிருந்த போதிலும், தனது வர்த்தக நன்மை கருதி இந்தியாவுடன் பகைத்துக் கொள்ள விரும்பவில்லை.

ஆயினும், தனக்கு "ஆமாம்" போடும் செல் வந்த நாடான ஜப்பானை அமெரிக்கா இலங்கையின் சமாதானப் போர்வைக்குள் இழுத்துக் கொண்டது. இதன் பலனாக அமெரிக்காவின் எண்ணங்களை நடைமுறைப்படுத்தும் நாடாக ஜப்பான் மாறிவிட்டது.

இந்து சமுத்திரத்தில் தனது இராணுவ நலனுக்காக இலங்கையை அமெரிக்கா குறி வைக்கும் அதேவேளையில், தனது முதலீடுகளுக்கு உகந்த இடமாக இலங்கையைக் கருதும் ஜப்பான், அதற்கான இலஞ்சமாக 100 கோடி அமெரிக்க டொலரையும் வழங்கியுள்ளது. வட கிழக்கின் புனர் நிர்மாணத்துக்கும், தெற்கின் அபிவிருத்திக்குமென 100 கோடி அமெரிக்க டொலரோ அதற்கு மேலாகவோ ஜப்பான் வழங்குகின்ற போதிலும், அதன் இலாபம் யாவும் ஜப்பானிய கம்பனிகளையே சென்றடையவுள்ளன.

இப்புதிய முகங்களான அமெரிக்காவும், ஜப்பானும் இலங்கை தொடர்பாக அதிக அக்கறை எடுப்பதை இந்தியா தொடர்பாக அதிக அக்கறை எடுப்பதை இந்தியா உன்னிப்பாக அவதானித்து வருகின்றது. விடுதலைப் புலிகளை நசுக்குவதற்காக இதுவரையில் இந்தியா மற்றும் அமெரிக்காவின் இராணுவ மற்றும் அரசியல் உதவிகளை நாடி நிற்கின்றது. யுதத்த்தினால் பாதிக்கப்பட்ட கம்போடிய நாட்டுக்கு புனர்நிர்மாண உதவி என்ற தோரணையில் ஜப்பானிய நிறுவனங்களே அதிக இலாபமடைந்தன.

ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் தமிழ் இனத்தையும், விடுதலைப்புலிகளையும் ஓரங்கட்டுவதற்கு சர்வதேச பாதுகாப்பு வலைப்பின்னல் என்ற ஓர் மாயையை உருவாக்கி அதில் முக்கிய பங்காளிகளாக அமெரிக்காவையும், இந்தியாவையும் அங்கம் வகிக்கச் செய்வதற்குப் பெருமுயற்சி செய்கின்றது.

விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில், தமிழ் மக்களின் அபிலாஷைகள், அவர்கள் அடைந்த துன்ப துயரங்கள், பேரழிவுகள் தொடர்பாக கவனத்திற் கொள்ளாத சர்வதேச சமூகம் தத்தமது நாடுகளின் சுயஇலாபம் கருதிச் செயற்படுவதை கவலையுடன் நோக்குகின்றனர் என்பதில் ஐயம் எதுவும் இல்லை.தமிழ் மக்களின் பேரழிவுகளை நிவிர்த்தி செய்வதற்கும், அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்குமாக விடுதலைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலிகளால் முன் வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாகம் தொடர்பாக இலங்கை அரசாங்கத்துக்கு சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்காமலிருப்பது தொடர்பாக அவர்கள் மிகுந்த கவலை கொண்டிருப்பது நிரூபணமாகிவிட்டது.

அமெரிக்காவாலும், ஜப்பானாலும் இலங்கை விடயமாக ஜூன் 9 மற்றும் 10 ஆம் திகதிகளில் நடாத்தப்பட்ட மாநாட்டை சர்வதேச மாநாடு என்று கூற முடியுமா? அதிகபட்சமாக அமெரிக்காவுக்கும், ஜப்பானுக்கும் "ஆமாம்" போடும் நாடுகளே பங்குபற்றின. சர்வதேச மாநாடொன்றிற் கடைப்பிடிக்கப்பட வேண்டிய முக்கிய கோட்பாடுகள் இம்மாநாட்டிற் கடைப்பிடிக்கப்பட்டனவா? உதாரணமாக மாநாடொன்றின் முடிவில் நகல் பிரகடனமொன்றைத் தயார் செய்வதற்கு ஜனநாயக ரீதியிலான குழுவொன்று நியமிக்கப்பட்டதா? இக் கொடையாளிகளின் மாநாடு யாருக்காகக் கூட்டப்பட்டது. வடகிழக்கின் சகல வளங்களையும் அழித்தவர்கள் தென்னிலங்கையின் அபிவிருத்திக்காகவே குரல் கொடுத்தனர். இவ்விதமாக முரண்பாட்டுக் கொள்கைகளைக் கடைப்பிடித்த மாநாடு அர்த்தமற்றது. பேரழிவுகளை உண்டு பண்ணியவர்களுக்கு அனுதாபம் காட்டியும், பேரழிவுக்கு உட்பட்டவர்கள் தொடர்பாக எதுவும் குறிப்பிடப்படாமலும் இந்த மாநாட்டில் முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. எனவே, விடுதலைப்புலிகளை வலையினுள் வீழ்த்துவதற்காக இலங்கை அரசாங்கத்தின் வேண்டுதலின் பேரில் அமெரிக்காவும், ஜப்பானும் சேர்ந்து கூட்டாக நடாத்திய ஒரு சதிமுயற்சியில் விடுதலைப்புலிகள் பங்குபற்றாது விட்டமை தமிழஜனத்திற்கு ஆற்றிய முக்கிய கடமையாகும். அமெரிக்க இராஜாங்க பிரதிச் செயலரின் நேர்காணலிலிருந்து ஜப்பானிய விசேட தூதுவரின் அறிக்கையிலிருந்தும் இந்த உண்மை நிரூபணடாகிவிட்டது.

1983 இலிருந்து 1992-1998 வரையில் இலங்கையை ஓர் விரும்பத்தாத நாடாக சர்வதேச சமூகம் கருதியதனை நாம் மறந்து விடலாகாது. அமெரிக்கா எக்காரணம் கொண்டும் இலங்கையில் விடுதலைபுலிகளுக்கு எதிராக இராணுவ ரீதியில் செயற்பட முடியாது. விடுதலைப்புலிகளின் இராணுவத் திறமை-தியாகம்-ஆற்றல் தொடர்பாக அமெரிக்கா நன்கு அறிந்து வைத்துள்ளது.

எல்லாவற்றிக்கும் மேலாக, இலங்கையின் எப்பகுதியிலாயினும் அமெரிக்கா இராணுவ ரீதியில் தலையீடு செய்வதனை இந்தியா விரும்பாது. இவ்வண்ணமே இந்தியாவும் சிங்கள அரசாங்கத்துக்கு சார்பாக இலங்கையில் இராணுவரீதியில் தலையிடுவதற்கான வாய்ப்புமில்லை. எனவே, இலங்கையில் அமெரிக்காவோ, இந்தியாவோ இராணுவ ரீதியில் தலையிட முடியாது என்பது ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்துக்கு ஏன் புரியவில்லை என்பது புதிராகவுள்ளது.



# 37

## விடுதலைப் புலிகளின் விரக்தியை உணர்ந்த நிலையில் டோக்கியோவில் சர்வதேச சமூகம் வெளியிட்ட கருத்துக்கள்.

டோக்கியோ மாநாடு தொடர்பாக, உணர்ச்சி வசப்படாத வகையில் மதிப்பீடு செய்ய வேண்டியது அவசியமாகும். இம் மாநாட்டுக்கு 51 நாடுகளும், 22 சர்வதேச அமைப்புகளும் சமுகமளித்திருந்தன. ஆனால், மாநாட்டை இரு பிரதான நாடுகள் வழி நடத்தியிருந்தன. அவையாவன ஜப்பானும், அமெரிக்காவும்.

சர்வதேச அமைப்புகளிடம் உலக வங்கி தனது அறிக்கையைச் சமர்ப்பித்திருந்தது. ஆகவே, முக்கிய கதாபாத்திரங்களாக இலங்கைப் பிரதமர், அமெரிக்க இராஜாங்க பிரதிச் செயலாளர் மற்றும் ஐரோப்பியப் பிரதமரும் விளங்கினர்.

அர்ச்சுனன் இல்லாது மகாபாரத நாடகம் நடந்தேறி விட்டது போல், சமாதானத்தின் முக்கிய பங்காளியான விடுதலைப் புலிகள் இல்லாது மாநாடு முடிந்து விட்டது. 51 நாடுகள் எனக்குறிப்பிட்டாலும் இலங்கைக்கு 450 கோடி டொலரை 4 வருட காலங்களில் கொடுப்பதற்கு ஒரு சில நாடுகளே வாக்குறுதியளித்துள்ளன. இந்த வாக்குறுதியைக் கொடுத்த நாடுகளில் ஜப்பான் முன்னணி வகிக்கிறது. 100 கோடி அமெரிக்க டொலர் தருவதாக அவர்கள் வாக்குறுதியளித்துள்ளனர். இது மகிழ்ச்சிகரமான விடயம். இதனைத் தொடர்ந்து ஆசிய அபிவிருத்தி வங்கி (அதனுடைய தலைவரும், ஜப்பானைச் சேர்ந்தவர்) 100 கோடி அமெரிக்க டொலர் வழங்குவதற்கு முன் வந்துள்ளது. உலக வங்கியும், சர்வதேச நாணய நிதியமும் தமது பங்களிப்பாக 130 கோடி அமெரிக்க டொலர் வழங்குவதற்கு முன் வந்துள்ளன. ஐரோப்பிய ஒன்றியம் 25 கோடி அமெரிக்க டொலரை வழங்க முன் வந்துள்ளன. நமது அயல்நாடான இந்தியா இந்த மாநாட்டிற் பங்குபற்றிய போதிலும் ஒரு டொலர் கூட வழங்க முன்வரவில்லை.

### மாநாட்டின் குறைபாடுகள்

20 வருட கால யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு அயராது உழைத்த நோர்வேயினாலேயே இம் மாநாடு கூட்டப்பட்டது. மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட பிரகடனத்தை அலசுகையில் பாரிய தவறொன்று காணப்படுகிறது. பிரகடனத்தின் ஐந்தாம் பந்தியா சமாதான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னெடுப்பின் வரலாறு தொடர்பாக விளக்கப்பட்டுள்ளது. சமாதானத்துக்கான காரணம் கொடூரமான இருபது வருட யுத்தமாகையால் அக்கொடூர யுத்தத்தினால் அப்பகுதி மக்கள் எவ்வாறு பாதிக்கப்பட்டனர் என்பது குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். அத்துடன், வடக்கு, கிழக்கு நகரங்களில் யுத்தம் நடைபெறவில்லை. அப்படியிருந்தும் இந்த நகரங்களில் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளை இராணுவ நலனுக்காக அதியுயர் பாதுகாப்பு வலயமெனப் பிரகடனப்படுத்தி அப்பகுதிகளில் வாழ்ந்த மக்களை விரட்டியடித்து அகதிகளாக்கி, அவர்கள் வாழ்ந்த வீடுகளைச் சட்ட விரோதமாக இராணுவம் எடுத்த விடயம் உலக சரித்திரத்திற் கேள்விப்படாததொன்று. இந்த உண்மையாவது சர்வதேச சமூகம் தனது பிரகடனத்தில் வெளிப்படுத்தி யிருக்கலாம்.

டோக்கியோ மாநாட்டு பிரகடனத்தின் ஆறாம் பந்தியில் மாநாட்டின் நோக்கம் தொடர்பாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. இப்பணிகளை வட, கிழக்கில் மேற்கொள்வதற்குத் தேவையான நிர்வாகக் கட்டமைப்பு எவ்விதம் அமைய வேண்டுமெனக் குறிப்பிடப்படவில்லை. அதற்குப் பதிலாக வட,கிழக்கு புனரமைப்புக்கும் அபிவிருத்திக்கும் அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் பங்காளிகளாக இருக்க வேண்டுமென வற்புறுத்தப்பட்டுள்ளது.

பாலஸ்தீனத்தின் காஸாப் பகுதியை அழித்த இஸ்ரேலும் பாலஸ்தீனமும் பங்காளிகளா அதனைக் கட்டியெழுப்ப வேண்டுமெனப் புத்திமதி சொன்னால் அது யதார்த்த பூர்வமானதா? அவ்வண்ணமே சிங்கள சமூகமும், தமிழ்ச் சமூகமும் ஒன்றிணைந்து வடக்கு, கிழக்கை அபிவிருத்தி செய்வது முடியாத ஒன்று.

பிரகடனத்தின் 13 ஆம் பந்தியில் வட, கிழக்குக்கு எவ்வாறு உதவலாம் என்பது தொடர்பாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. வட,கிழக்கில் புனர் நிர்மாணத்திற்குத் தேவையான நிதியை உலக வங்கியின் பாதுகாப்பில் வைப்பது என்ற விடயம் மகிழ்ச்சியான ஒரு விடயமாகும்.

18 ஆம் பந்தியில் முக்கியமான விடயமொன்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது, கொடையாளிகளின் கொடுப்பனவுக்கு சமாதான முன்னெடுப்புக்களில் முன்னேற்றம் காணப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இப்பிரகடனத்தை நன்கு ஆராய்கையில், அதிமுக்கியமான விடயங்கள் தொடர்பாக குறிப்பிடப்படவில்லை. அவ்விடயங்கள் தொடர்பாக இரண்டு அல்லது மூன்று பந்திகளாவது அமைந்திருத்தல் வேண்டும். மாநாட்டில் விடுதலைப் புலிகள் பங்குபற்றாமைக்கான காரணம்-அவர்களது விரக்திக்கான காரணம் மற்றும் அவர்களது



கோரிக்கை தொடர்பாக நன்கு விபரமாகக் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

## இடைக்கால நிர்வாக கட்டமைப்பு இயங்க வேண்டிய விதம் குறித்து மாநாட்டு பிரகடனத்தில் வெளியிட்ட கருத்துக்கள்

விடுதலைப்புலிகள் இன்றைய யதார்த்த நிலையை உணர்ந்தும், கடந்த காலங்களில் தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்ட கசப்பான அனுபவங்களை நினைவூட்டியும் வட,கிழக்கில் சுதந்திரமான இடைக்கால நிர்வாகம் அமைக்கப்பட வேண்டிய கோர்க்கையையும் வலியுறுத்தியிருந்தனர். இக்கோரிக்கையை கொள்கையளவில் பிரதமர் எற்றுக் கொண்டாலும், அதனை நடை முறைப்படுத்துவது எவ்விதம் என்று விரிவாக கூறாமையாலேயே விடுதலைப்புலிகள் மாநாட்டிற் பங்குபற்றவில்லை.

முக்கிய அமைச்சர்கள், சட்ட மா அதிபர் மற்றும் உயர் அலுவலர்களை அழைத்துச் சென்ற பிரதமர் அவர்களோடிணைந்து அமெரிக்க மற்றும் ஜப்பான் நாட்டுப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி இடைக்கால நிர்வாகத்தைச் செயற்படுத்தும் முறை தொடர்பாக மேற்படி பிரகடனத்தில் உட்படுத்தியிருந்தால் தமிழ் மக்கள் மகிழ்ச்சியடைந்திருப்பர். இவ்விடயம் தொடர்பாக எதுவும் குறிப்பிடப்படாமையால் தமிழ் மக்கள் ஏமாற்றமடைந்துள்ளனர். இந்த ஏமாற்றத்தை விட மிக மோசமான ஏமாற்றமாவது வட, கிழக்குத் தமிழ் மக்களின் அவலங்களையும் துயரங்களையும் பேரழிவுகளையும் சர்வதேச சமூகத்துக்குச் சுட்டிக்காட்டியதன் மூலம் பெற்றுக் கொள்ளவுள்ள 450 கோடி அமெரிக்க டொலரில் வட, கிழக்குக்கென எவ்வளவு தொகையை ஒதுக்குவதென குறிப்பிடாததாகும்.

இலங்கை அரசாங்கத்திடம் 450 கோடி அமெரிக்க டொலரையும் வழங்கினால் அதிலிருந்து வட,கிழக்கிற்கான தொகையை இலங்கை அரசாங்கம் வழங்கினால் அதனை பெற்றுக் கொள்வதற்கும் தமிழ் மக்கள் தயாராயில்லை. இந் நிலைப்பாட்டுக்கான காரணம் கடந்த கால கசப்பான அனுபவங்களாகும். திரும்பவும் ஏமாற்றப்படுவதற்கு தமிழினம் தயாரில்லை.

இலங்கை அரசாங்கத்திடமே பணம் வழங்கப்படுமானால் இடையன் தன் ஆட்டுக் குட்டிகளை ஓநாயின் பாதுகாப்பில் விட்டது போலாகிவிடும். இந்நிலைப் பாடே சர்வதேச சமூகம் தனது மனச்சாட்சியை மிகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலிந்த விலைக்கு விற்று விட்டது என்று எண்ணுவதற்கான காரணமாகும்.

மேற்குறித்த 450 கோடி அமெரிக்க டொலர் கொடுப்பனவு தொடர்பாக ஏற்கனவே, சில சந்தேகங்கள் எழுந்து விட்டன. இக்கொடுப்பனவில் ஒரு பகுதியை இராணுவ நலன்களுக்காகச் செலவிட வேண்டுமென ஜனாதிபதி கூறியதாக பத்திரிகைகள் வாயிலாக அறியக் கிடைத்தது. ஜப்பானிலிருந்து திரும்பிய பிரதமர் வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கும் இந்நிதியிருந்து ஒரு பகுதியைப் பயன்படுத்தலாகும்.

இச் செய்திகள் உண்மையானால், இந்நிலைப்பாட்டைக் கவனத்துக்கு எடுக்க வேண்டியது சர்வதேச சமூகத்தின் கடமையாகும். தமிழ் இனத்தைப் பொறுத்தவரையில் 450 கோடி அமெரிக்க டொலரில் குறைந்தது 300 கோடி அமெரிக்க டொலராவது வட,கிழக்கின் புனரமைப்புக்குத் தேவையானதாகும். வட,கிழக்கின் தேவைகள் தொடர்பாக உலக வங்கி,ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஐ.நா. நிறுவனங்கள் மேற்கொண்ட மதிப்பீடொன்றின் பிரகாரம் ஒரு சில துறைகளுக்கு மாத்திரம் 184 கோடி அமெரிக்க டொலர் தேவையென மதிப்பிடப் பட்டுள்ளது. ஏனைய துறைகளையும் சேர்த்துப் பார்க்கையில் 300 கோடி அமெரிக்க டொலருக்கு மேலான தேவையுள்ளது. இந்த மதிப்பீடு டோக்கியோ மாநாட்டிலும் சமர்ப்பிக்கப்பட்டது.

கடந்த காலங்களில் தமிழ் இனம் ஏமாற்றப்பட்டதைப் போல் சர்வதேச சமூகமும் ஏமாற்றப்படமாட்டாதென தமிழினம் எதிர்பார்க்கின்றது.

விடுதலைப் புலிகள் அதிக சக்தி வாய்ந்த இடைக்கால நிர்வாகம் அமைக்கப்பட வேண்டியதனை நன்கு தெளிவுபடுத்தியுள்ளனர். இது தொடர்பான அவர்களது விரக்தியை சர்வதேச சமூகம் நன்குணர்ந்துள்ளமை டோக்கியோ மாநாட்டுப் பிரகடனத்தில் வெளியாகியுள்ளது. இந்த இடைக்கால நிர்வாகம் இலங்கையின் சட்ட திட்டங்களுக்கும் அரசியல் யாப்புக்கும் அப்பாற்பட்டிருக்க வேண்டுமெனக் கூறியுள்ளனர். ஆயினும் அது இலங்கையின் சட்ட திட்டங்கள், அரசியலமைப்புக்குள் இருக்க வேண்டும் எனக்கூறியுள்ளார்.

1996 ஆம் ஆண்டு வடக்குப் புனரமைப்பு, புனர்நிர்மாண அதிகாரசபை அவரசகாலச் சட்டத்தின் கீழ் ஜனாதிபதியின் கீழ் அமைக்கப்பட்டது. தற்போது அவசரகாலச் சட்டம் அமுலில் இல்லாமையால் அந்த அதிகாரசபையின் தலைவரையும், பணிப்பாளர் சபையையும் கலைத்து விட்டு அதனது செயற்பாடுகள் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. இதே ரீதியில் அதிக சக்தி வாய்ந்த சுதந்திரமான வட,கிழக்கு இடைக்கால நிர்வாகம்



பிரதமரின் கீழ் அமைக்கப்படலாம். இந்த இடைக்கால நிர்வாகம் சுதந்திரமாகவும், அதிகசக்தி வாய்ந்ததாகவும் செயற்படுவதற்கு 10 பணிப்பாளர்கள் நியமிக்கப்படலாம். இப்பத்து பணிப்பாளர்களில் ஏழு பேர் விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளாக இருத்தல் வேண்டும். இருவர் முஸ்லிம் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கும், ஒருவர் சிங்கள சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கும் நியமிக்கப்படலாம். இந்த இடைக்கால நிர்வாகத்திற்கு இலங்கை அரசின் தலையீடில்லாமல் சகல துறைகளையும் சார்ந்த பணிகளை மேற்கொள்வதற்கு முழுமையான அதிகாரம் இருத்தல் வேண்டும். எனினும் சர்வதேச நிதி கிடைப்பதனால் வங்கியின் ஆலோசனைக்கிணங்க செயற்படுவது அவசியமாகும்.

வட,கிழக்கிற்குத் தேவையான நிதியொன்றை உலக வங்கி ஏற்படுத்தி விட்டது. ஆகவே, சர்வதேச சமூகம் வட,கிழக்கிற்கு வழங்கும் உதவிகள் யாவும் உலக வங்கியின் கணக்கில் வரவு வைக்கப்படுதல் வேண்டும். இந்த விடயத்தில் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஏனைய நிறுவனங்கள் தேவையான ஆலோசனைகளை விடுதலைப்புலிகளுக்கு வழங்கலாம். ஏதாவது நாடுகள் வட,கிழக்கிற்கான நிதியுதவியை இலங்கை அரசாங்கத்திடம் வழங்கினால் அந்நிதியும் உலக வங்கியின் கணக்கிற்கு அனுப்பப்படவேண்டும். இதன் அடிப்படையில் வட,கிழக்கின் புனரமைப்பு, புனர்நிர்மாணத்திற்குத் தேவையான நிதியை உலக வங்கி விடுதலைப்புலிகளுக்கு வழங்கிக் கொண்டிருக்கும். இந்த ஒழுங்கு முறையில் சுதந்திரமாகவும், அதிகசக்தி வாய்ந்த வகையிலும் செயற்பட முடியும். இதனால் கொடை வழங்கும் நாடுகளுக்குள் விடுதலைப் புலிகள் குறித்த நம்பகத்தன்மை அதிகரிக்கும்.

இடைக்கால நிர்வாகம் தொடர்பாக பிரதமர் பாராளுமன்றத்தில் பதிலளிப்பார். அதேவேளையில், இந்த ஒழுங்கு முறை இலங்கையின் சட்ட திட்டங்களுக்கும், அரசியல் யாப்புக்கும் முரணானதல்ல என்பதே எமது வாதம். இந்த இடைக்கால நிர்வாகம் பெயரளவில் மாத்திரமே பிரதமரின் கீழிருக்கும், செயலளவில் விடுதலைப்புலிகள் சுதந்திரமாகவும், சக்தி வாய்ந்த வகையிலும் செயற்பட முடியும். எனவே, இருதரப்பினதும் நிலைப்பாட்டினையும் இதன் மூலம் சமரசம் செய்து வைக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் ரீதியில் எந்த விட்டுக் கொடுப்பையும் செய்யாத அரசு போர் மூண்டால் அமெரிக்கா, இந்தியா உதவுமென்று கனவு

கடந்த இருபது வருடகாலமாக தமிழ் மக்கள் அனுபவித்த துன்பங்கள், துயரங்கள் மற்றும் பேரழிவுகள் யாவற்றையும் மனதிற்கொண்டு, மேலும் ஒரு யுத்தத்தைச் சந்திக்க விரும்பாத நிலையில் தமிழ் மக்கள் உள்ளனர். நூற்றுக்கு நூறு வீதமான தமிழ் மக்கள், அதிலும் விகிழக்குத் தழிழ் மக்கள் சமாதானத்தையே விரும்பும் அதேவேளை , பேராசிரியர் ஹெட்டிகேயின் ஆய்வின்படி 87 வீத சிங்கள மக்களும் சமாதானத்தையே விரும்புகின்றனர்.

இந்த யதார்த்த நிலையில் இன்னொரு யுத்தம் வெடித்தால் இந்தியா மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகள் சிங்கள மக்களுக்கு ஆதரவாகச் செயற்படுவார்களென சிங்கள அரசியல் தலைமைப் பீடங்கள் 'பகற்கனவு' காண்கின்றன. இந்தியா திரும்பவும் இராணுவ தீதியில் தலையிடுமா என்பது தொடர்பாக முதலில் பார்த்தால் எந்த ஒரு நாடும் தனது அயல் நாட்டுக் கொள்கைக்கேற்பவே தமது இராணுவ நிலைப்பாட்டை அமுல்படுத்த நினைக்கும், தனது நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுமாயின் அதனை எதிர்கொள்வதற்கும் முனைப்பாக இருப்பார்கள். இந்த அடிப்படையிலேயே நிச்சயமாக இந்தியாவின் கொள்கையும் அமையும். எனவே மீண்டும் யுத்தம் ஏற்பட்டால், அந்த யுத்தம் எந்தவகையில் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கும் என்பது கேள்விக்குறி..

கடந்த காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த ஜனாதிபதி ஜயவர்த்தன தனது புத்திக்கூர்மையால் இந்தியப் படையினரை அழைத்து அவர்கள் மூலம் விடுதலைப் புலிகளைக் கொன்று குவிப்பதற்குச் சூழ்ச்சி செய்தார். இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி ஜயவர்த்தன விரித்த வலையில் சிக்கிவிட்டார். அதன் பலனாக ஒன்றேகால் இலட்சம் இந்திய இராணுவத்தினர் வட.கிழக்கில் நிலைகொண்டு ஆயுத பலத்தில் மிகவும் பலவீனமாக விருந்த விடுதலைப் புலிகளுடன் போரிட்டனர். அந்தப் போரில் 6500 இற்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் கொலை செய்யப்பட்டனர். சித்திரவதைக்கும், பாலியல் வல்லுறவுக்கும் உள்ளாக்கப்பட்டனர்.



எனினும், இந்த யுத்தத்தில் இந்திய இராணுவத்துக்கு ஏற்பட்ட உயிர்ச்சேதம், பாக்கிஸ்தானுடன் நடைபெற்ற யுத்தத்தை விடக் கூடியதாகும். இந்திய அரசின் உத்தியோகபூர்வ அறிக்கையின் பிரகாரம் 1150 இந்திய இராணுவத்தினர் உயிரிழந்தனர். ஆயிரக் கணக்கான இந்தியப்படைவீரர்கள் காயமடைந்தனர். இதனால் இந்தியாவில் கடும் அதிருப்தி ஏற்பட்டது.

சிங்கள அரசாங்கத்தின் வேண்டுதலின் பிரகாரம் தமிழ் மக்களைக் கொன்று குவிப்பதற்கென அழைக்கப்பட்ட இந்தியப் படையை எதிர்த்துப் போராடுவதற்காக ஐக்கிய தேசியக்கட்சியையே சேர்ந்த ஜனாதிபதி பிரேமதாஸ, விடுதலைப்புலிகளுக்கு நிதியுதவியும், ஆயுத உதவியும் வழங்கியதோடு இந்தியப்படையை வெளியேற்றுவதற்கான இராஜதந்திர அழுத்தங்களையும் கொடுத்ததன் மூலம் சிங்கள மக்களின் நன்றி கெட்ட கொள்கையை அகில உலகத்துக்கும் எடுத்துக்காட்டினர்.

இலங்கையில் தமிழர் பிராந்தியத்தில் இந்தியப் படையினரின் செயற்பாட்டினால் தமிழ்நாட்டில் கொந்தளிப்பானநிலை தோன்றியதையும் மனதிற் கொள்ள வேண்டும். இக்கொள்கையினால் ராஜீவ்காந்தி தேர்தலில் தோல்வியுற்று வீ.பி.சிங் பிரதமரானார். வீ. பீ. சிங் பிரதமரானதும் தனது இராணுவ ஆலோசகர்களின் ஆலோசனைகளையும் புறந்தள்ளி உடனடியாக இந்தியப்படையை இலங்கையிலிருந்து வாபஸ்பெற வேண்டுமென உத்தரவு பிறப்பித்தார். எனவே ராஜீவ்காந்தி அனுஷ்டித்த கொள்கை பிழையானதென்பது நிரூபணமாகிவிட்டது. இது இந்தியாவுக்கு நல்லதொரு பாடமாகவும் அமைந்துவிட்டது.

அதாவது ஆழமறியாமல் காலை விடுதலாகாது என்பதை இந்தியா நன்கு அறிந்து விட்டது.சிங்கள சமூகத்தின் நன்றி கெட்ட கொள்கையையும், தமிழ்ச்சமூகத்தின் தியாக சிந்தனையையும் இந்தியா நன்கு உணர்ந்திருக்கவில்லை.இந்தப் பாடத்தைத் தற்போதைய இந்தியப் பிரதமர் வாஜ்பாய் நன்கு கற்றறிந்தமையால்தான் ஆனையிறவைத் தம்வசமாக்கி, யாழ்குடாநாடு நோக்கி முன்னேற இருந்த விடுதலைப்புலிகளை குண்டுவீசி அழிக்குமாறு இரகசியமாக இந்தியா சென்று கதிர்காமர் கேட்டிருந்த போதும், இந்தியப் பிரதமர் அதனைத் தட்டிக் கழித்துவிட்டார். இந்த யதார்த்த நிலையில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் மீண்டும் இந்தியா இறங்குமா என்பது கேள்விக்குறியே.

ராஜீவ் காந்தியின் மரணத்தின் பின்பு விடுதலைப்புலிகள் மீது இந்தியா மிகமோசமான கசப்புணர்வைக் கொண்டுள்ளது என்பது யாவரும் அறிந்த விடயம். ஆனால் இந்தியா மீது தமக்கு எவ்விதமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கசப்புணர்வும் இல்லையென்பதை விடுதலைப்புலிகள் வெளிப்படுத்துகின்றனர். இன்றைய நிலையில் விடுதலைப்புலிகள் ஆட்பலமும், ஆயுத பலமும் 1987ஐ விட 7 மடங்கு சக்திவாய்ந்ததாக அமைந்துவிட்டது. இந்த ரீதியில், இந்தியா மீண்டும் தலையிட்டு விடுதலைப் புலிகளை ஒடுக்க வேண்டுமானால் ஒன்பது இலட்சம் படைவீரர் இலங்கைக்கு வர வேண்டும். ஆனால், இந்தியாவிடம் பத்து இலட்சம் படைவீரரே உள்ளனர். தமது பத்து இலட்சம் படையினரில் நன்றி மறந்த சிங்கள சமுதாயத்துக்கு உதவுவதற்காக ஒன்பது இலட்சம் படையினரை இந்தியா அனுப்புமா?

இந்தப் புள்ளிவிபரத்தை இன்னொரு கோணத்தில் இருந்து பார்த்தாலும் இதே நிலைப்பாட்டுக்கே வரவேண்டியுள்ளது. அதாவது இங்கிலாந்திலுள்ள சர்வதேச ஆய்வு நிறுவனத்தின் ஆராய்வின்படி ஒரு சாதாரண கெரில்லா வீரனுக்கு 22 மரபு வழி இராணுவத்தினர் சமமாகும். ஆனால், திறமையில் உலகப் புகழ்பெற்ற விடுதலைப் உறுப்பினர் ஒவ்வொருவருக்கு குறைந்த பட்சம் 44 மரபு வழி இராணுவத்தினர் சமமாக இருக்க முடியும். இதன்படி குறைந்த பட்சம் 20.000 விடுதலைப் புலிகள் இருந்தால் எட்டு இலட்சத்து எண்பதினாயிரம் மரபு வழி இராணுவத்தினர் தேவைப்படுவர். சிங்கள சமூகத்துக்கு உதவுவதற்காக இந்தயா மீண்டும் இராணுவ ரீதியில் தலையிட்டால் 50,000 லிருந்து 75,000 வரையினதான இந்தியப் படையினர் உயிரிழக்க நேரிடலாம். அப்படி நடந்தால் இந்தியாவில் பெரும் அரசியல் கொந்தளிப்பு உண்டாகும். இவை யாவற்றையும் இந்திய அரசாங்கம் நன்கு பரிசீலிக்கும். எனவே அரசியல் ரீதியாகவும், இராணவ ரீதியாகவும் பார்க்குமிடத்து இந்தியா மீண்டும் இராணுவ ரீதியில் தலையிடா.

அமெரிக்கா இராணுவ ரீதியில் தலையிடுமா? என்பது அடுத்த கேள்வி. யுத்தம் மூண்டால் அமெரிக்கா தங்களுக்குச் சார்பாகச் செயற்படுமெனப் பல அமைச்சர்கள் பகிரங்கமாக கருத்து வெளியிட்டிருந்தனர். இந்த விடயத்தில் இராணுவ ரீதியில் தலையிடுவதன் மூலம் தனக்கு என்ன பலன் கிடைக்கும் என்பதை அமெரிக்கா சிந்திக்கும். வியட்நாமில் வியட்கொங்படையை எதிர் கொண்டதில் 50,000 அமெரிக்கப் படையினர் உயிரிழந்தனர். ஆப்கானிஸ்தானில் பின்லேடனைப் பிடிப்பதற்காக அந்நாடே அழிக்கப் பட்டது. அதன் விளைவுகளை அமெரிக்கா இன்னும் அனுபவிக்கின்றது. ஈராக்கின் எண்ணெய் வளங்கைளக் கைப்பற்றுவதற்காக இராணுவ ரீதியில் தலையிட்டதற்கு உலகில் 96 சதவீதத்தினர் எதிர்ப்புக் காட்டினர்.

ஆனால், இன்றும் ஒவ்வொரு நாளும் ஈராக்கில் அமெரிக்கப் படை



வீரர்கள் மடிந்து கொண்டே இருக்கின்றனர். கடந்த வாரம் பி.பி.ஸி. மேற்கொண்ட ஆராய்வின் பிரகாரம், ஈராக்கில் அமெரிக்கா தலையிட்ட மையைப் பல உலக நாடுகள் குறை கூறுகின்றன என்ற முடிவுக்கு வந்துள்ளது. இந்த யுத்தத்தை நியாயப்படுத்த முடியுமா என்ற ரீதியில் உதவி அமெரிக்காவின் செனெட் சபை விசாரணையொன்றை நடத்த வுள்ளது. இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக அமெரிக்கா இராணுவ ரீதியாக இந்தியா கடும் எதிர்ப்புத் தெரிவிக்கும் என்பதில் எவ்வித ஐயமு மில்லை.

பாஸ்தீனப் பிரச்சினை, ஈரான் பிரச்சினை மற்றும் வடகொரியப் பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டிய நிலை அமெரிக்காவுக்க எற்பட்டுவிட்டது. விடுதலைப் புலிகள் அமெரிக்காவிலோ, அன்றேல் அமெரிக்காவின் நேச நாடுகளிலோ எவ்விதமான வன்செயல்களிலோ, பயங்கரவாத நடவடிக்கைகளிலோ ஈடுபடவில்லை என்பது அமெரிக்காவுக்கு நன்கு தெரியும். சர்வதேச அரங்கில் அமெரிக்காவின் கொள்கை கண்டனத்துக்குரியதாவிட்டது. அடுத்த வருடம் அமெரிக்கா ஜனாதிபதி தேர்தலை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இலங்கை அரசாங்கம் அமெரிக்காவுக்கும், ஜப்பானுக்கும் அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் சார்பாக நடந்தால் இந்தியாவின் எதிர்ப்பை எதிர்கொள்ள நேரிடும். ஐரோப்பிய ஒன்றியமும், அமெரிக்க இராணுவத் தலையீட்டை விரும்பாது.

தென்னிலங்கையில் அமெரிக்க இராணுவத் தலையீட்டை இடதுசாரிக் கட்சிகளான ஜே.வி..பி மற்றும் சுதந்திரக் கட்சியில் கணிசமான தொகையினர் விரும்பமாட்டார்கள். அமெரிக்கா இராணுவ ரீதியில் உதவ முன்வந்தால் அதன் நோக்கம் திருகோணமலைத் துறை முகத்தைத் தனது இராணவ நலனுக்காகப் பயன்படுத்துவதற்காக விருக்கும். அமெரிக்கா, திருகோணமலைத் துறைமுகத்தில் தளமொன்றை அமைக்க வேண்டுமாயின், விடுதலைப் புலிகளுடன் ஓர் இணக்கத்துக்கு வரவேண்டுமே தவிர யுத்தத்தின் மூலம் அதனைச் செய்ய முடியாது. ஆகவே, அமெரிக்கா தங்களுக்கு உதவும், நேசக் கரம் நீட்டும் என ரணில் விக்கிரமசிங்கவும், மிலிந்து மொரகொட, ஜி.எல்.பீரிஸ் ஆகியோர் கூறினாலும், அமெரிக்கா தனது நலனையே நன்கு பரிசீலனை செய்யும் என்பதில் ஐயமில்லை. ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்களின் நன்மைக்காக பொல்லுக் கொடுத்து அடிவாங்க அமெரிக்கா விரும்பாது.

சிங்கள சமுதாயத்துக்குச் சார்பாக, மேற்குறிப்பிட்ட காரணங்களுக்காக அமெரிக்காவோ, இந்தியாவோ அன்றேல் வேறெந்த நாடாவது இராணவ ரீதியில் தலையிடப் போவதில்லை. அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேசக்கரம் நீட்டுவார்கள் என்ற ஐக்கிய தேசியக்கட்சியின் பகற்கனவு என்றும் நனவாகப் போவதில்லை. விடுதலைப் புலிகள் யுத்தத்துக்குத் தயாராவதாக ஜனாதிபதி பகிரங்கமாகக் கூறியிருக்கிறார். ஆயினும் அரசியல் ரீதியிலான விட்டுக் கொடுப்புகள் எதனையும் அரசாங்கம் மேற் கொள்ளவில்லையென மேற்குலக இராஜதந்திரிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.



# 39

## இந்தியா பழைய கசப்புணர்வுகளை மறந்து இலங்கை இனநெருக்கடி தீர்வு விடயத்தில் ஆக்கபூர்வமான பங்களிப்பை செய்ய வேண்டும்.

சரித்திர காலந்தொட்டு தமிழர்களுக்கும் இந்தியாவுக்கும் இடையில் பல்வேறு விடயங்களில் நல்லுறவு நிலவி வந்தது. இதற்கான முக்கிய காரணம் தமிழர்களும் இந்தியாவும் மொழி ரீதியாக ஒன்றுபட்டிருந்தனர். இந்த உறவைத் தாய்க்கும், சேய்க்குமான தொப்பூழ்க் கொடி உறவேனக் கூறலாம் இதன் காரணமாகத் தான் தமிழர்கள் இந்தியாவைத் தமது தாய் நாடெனவும், தந்தையர் நாடெனவும் கூறுவதுண்டு.

இந்த நிரந்தர உறவுப் பாலத்தின் காரணமாக தமிழ் இல்லங்களில் சில வருடங்களுக்கு முன்பு இந்திய விடுதலைத் தியாகிகளாகிய மகாத்மாகாந்தி, ஜவஹர்லால் நேரு, சுபாஸ் சந்திரபோஸ் ஆகியோரின் படங்கள் இருந்ததை அவதானிக்கக் கூடியதாகவிருந்தது. மகாத்மா காந்தி 1931ஆம் ஆண்டு இந்திய விடுதலை இயக்கத்திற்கு வருகை தந்த போது யாழ். தாய்க்குலம் மகாத்மா காந்தியின் விடுதலைக்கான குரலைக் கேட்டுக் கண்ணீர் சிந்தித் தாம் அணிந்திருந்த ஆபரணங்களையே கழற்றிக் கொடுத்து.

மகாத்மா காந்தியின் மரணம் தமிழ்த் தாயகத்தை ஆறாத்துயரில் ஆழ்த்தியமை யாவரும் அறிந்த விடயம்.

அவ்வண்ணமே இந்திரா காந்தி அம்மையார் தமிழர்களுக்குச் செய்த உதவியைக் கணநேரமும் மறவாது அன்னாரின் அகால மரணத்தின் போது உருகி அழுதனர். ராஜீவ் காந்தி பிரதமரானதுடன் தமிழர்களின் அபிலாஷைகளை நிறைவு செய்யும் பொருட்டு வெளிவிவகாரச் செயலாளர் ஏ.பீ.வெங்கடேஸ்வரன் மற்றும் ஜீ. பார்த்தசாரதி ஆகியோரின் ஆலோசனைகளின் பிரகாரம் இலங்கை அரசுக்கு எதிராக கடும் அழுத்தங்களைக் கொடுத்தார். தமிழர்களுக்கெதிராக கொடூரங்கள் தொடர்பாக உலக வல்லரசுகளுக்கும் கடிதம் மூலம் அறிவித்திருந்தார். இதனைத் தமிழர்கள் மறக்கவில்லை. மறக்கவும் மாட்டார்கள். துரதிர்ஷ்டவசமாக ஏ.பீ. வெங்கடேஸ்வரனையும், ஜீ. பார்த்தசாரதியையும் ஓரங்கட்டிய காரணத்தினாலும் தமிழ்த் தாயகத்தின் யதார்த்த நிலையைச் சரிவர உணராதபடியாலும் விபரீதங்கள் ஏற்பட்டு அதன் பலனாகக் கசப்புணர்வும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட்டு விட்டது.

1941 மற்றும் 1942 இல் சுபாஸ் சந்திரபோஸ் இந்தியத் தேசிய விடுதலைப் படையை அமைத்த போது தமிழர்கள் ஆயிரக் கணக்கில் அப்படையிற் சேர்ந்து பர்மா, மணிப்பூர் மற்றும் இம்பால் முதலிய இடங்களில் நடைபெற்ற யுத்தங்களில் உயிர்த் தியாகம் செய்தனர். ஒரு சிங்களவராவது சுபாஷ் சந்திரபோஸின் படையிற் சேரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. 1955 இல் அணிசேரா நாடுகளின் பன்டுங் மாநாட்டில் பண்டிதர் ஜவஹர்லால் நேருவின் கொள்கைக் கெதிராக சீனா விடயத்தில் அமெரிக்காவுக்குச் சார்பாக இலங்கைப் பிரதமர் சேர். ஜோன் கொத்தலாவெல குரல் கொடுத்தார்.

1971 இல் நடைபெற்ற இந்தோ. பாகிஸ்தான் யுத்தத்தில் இலங்கை அரசு இந்தியாவுக்கு எதிராகவும் பாக்கிஸ்தானுக்கு சார்பாகவும் நடைமுறையில் செயற்பட்டது. மேற்குப் பாக்கிஸ்தானிலிருந்து பாக்கிஸ்தானுக்கு கட்டுநாயக்க வழியாகச் செல்வதற்கு இலங்கை அரசாங்கம் அனுமதி வழங்கியிருந்தது. இலங்கை அரசாங்கத்தின் இவ்வாறான செயற்பாடு இந்தியாவுக்கு மிகவும் விரோதமானதாகும். இந்த விவகாரம் தொடர்பாக ஐ.நா. சபையில் பிரஸ்தாபிக்கப்பட்ட போது, இலங்கையின் பிரதிநிதியின் பேச்சு பாக்கிஸ்தான் பிரதிநிதியினது பேச்சினை விட மிகவும் மோசமாகவும், கீழ்த்தரமாகவும் அமைந்திருந்தது. மேற்குஙிப்பிட் விடயங்களிலிருந்து இந்தியா, தமிழர்களின் நிலைப்பாட்டையும், சிங்கள சமூகத்தின் நிலைப்பாட்டையும், நன்கு ஒப்புநோக்க முடியும்.

தமிழர்களின் இனப் பிரச்சினை சர்வதேச மயமாக்கப்பட்டு விட்டது என்பது யாவரும் அறிந்த விடயம். ஆரம்ப கட்டத்தில் தமிழர்கள் தங்கள் இனப்பிரச்சினைகளுக்கும் அபிலாஷைகளுக்கும் சர்வதேச சமூகம் பங்குபற்றி அதன் மூலம் தமிழர்களுக்கு நீதி, நேர்மை அடிப்படையில் நியாயமான தீர்வு ஏற்பட வேண்டுமென விரும்பினர். ஆனால், இந்தியா கசப்புணர்வு காரணமாகச் சற்று விலகியிருந்தது. இந்தச் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் இந்தியா விலகியிருந்ததன் காரணமாக, அந்த விலகிய தன்மையைப் பயன்படுத்தி நோர்வே, அமெரிக்கா மற்றும் ஜப்பான் போன்ற வெளிநாட்டுச் சக்திகள் இலங்கையில் தலையீடு செய்யத் தொடங்கிவிட்டன.

அமெரிக்காவும், ஜப்பானும் தங்கள் சொந்த நலன்களுக்கு முன்னுரிமை கொடுத்து அதற்கு உகந்த வகையில் செயற்படத் தொடங்கியது நன்கு உணரப்பட்டு விட்டது. அமெரிக்காவின் இராணுவ ஆதிக்கமும், யப்பானின் பொருளாதார ஆதிக்கமும், இந்தியாவின்



கொள்கைக்கு எதிரானதாகவே இருக்கப் போகின்றது என்பது யாவரும் அறிந்த விடயம். பல வருடங்களுக்கு முன்பு தென் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் டியாகோகாஸியா தீவுகளில் அமெரிக்க இராணுவத் தளம் அமைப்பதற்கு இந்தியா கடும் எதிர்ப்பைத் தெரிவித்தது. ஆனால் இலங்கை அரசாங்கம் அமெரிக்காவுக்குச் சாதகமாகவும், இந்தியாவுக்குப் பாதகமாகவும் கருத்தைத் தெரிவித்தது. ஆனால் இன்று சமாதானப் போர்வையில் அமெரிக்கா, ஜப்பானையும் அழைத்துக்கொண்டு அரசியல் இராணுவ, பொருளாதார ஆதிக்கத்தை வேரூன்றச் செய்கின்றது. இந்த முயற்சியில் அமெரிக்கா வெற்றி பெற்றால், இந்தியாவுக்கு அது பாரிய இராணுவ அச்சுறுத்தலாக அமையும் என்பதில் ஐயமில்லை.

அமெரிக்கா இராணுவ ரீதியாக இலங்கையில் நிலை கொண்டால், இந்தியா மாத்திரமல்ல தமிழ்த் தாயகமும், சிங்களத் தாயகமும் கூடப் பாதிப்புறும் என்பதில் ஐயம் எதுவுமில்லை. சிங்கள சமுதாயம் தமிழர்களைப் பூண்டோடு அழிப்பதற்கு அமெரிக்காவுக்கு இராணுவத் தளங்களைக் கொடுத்தால், தூரநோக்கில் சிங்கள சமுதாயத்தையும், பிராந்திய அமைதியையும் சீர்குலைக்கும். இந்த விடயத்தில் 1944 ஆம் ஆண்டு சர்தார் கே. எம். பனிக்கர் இலங்கை, இந்தியாவின் பாதுகாப்பு வலயத்துக்குள் இருப்பதாக ஆணித்தரமாக நூலொன்றை எழுதியிருந்தார். அந்த நூலில் எழுதப்பட்ட கோட்பாடுகளைளுக்கமையவே, இந்திராகாந்தி இந்து சமுத்திரம் தொடர்பான தனது கொள்கையைக் அனுஷ்டித்தார். அதாவது இந்துசமுத்திரப்பிராந்தியத்தில் வேறு பிராந்தியசக்திகள் ஆதிக்கம் செலுத்தலாகாது என்ற கொள்கையைக் கடைப்பிடித்தார். இலங்கை இனப்பிரச்சனை காரணமாக வெளிநாட்டுச் சக்திகள் இலங்கையில் ஊடுருவுவதற்கு அனுமதிக்கப்பட்டால் அது இந்தியாவுக்கு அரசியல் ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் ஆபத்து நெருங்குகின்றது என்பதே அர்த்தம். இந்த ஆபத்தைத் தவிர்த்துக் கொள்வதற்கு தமிழர்களும், இந்தியாவும் பழைய கசப்புணர்வுகளை மறந்து ஆக்கபூர்வமான, அர்த்தமுள்ள செற்பாடுகளைப் பரிசீலிப்பது காலத்தின் தேவை.

இந்தியாவுக்கும், சீனாவுக்கும் இடையில் 1962 இலிருந்து கசப்புணர்வு நிலவி வந்தது. திபெத் விவாகாரத்தில் கடும் போக்கான கொள்கையை இந்தியா கடைப்படித்தாலும், யதார்த்தத்தை உணர்ந்து இந்தியா தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டது. சீனா விடயத்தில் இந்தியா ஒரு கல்லில் இரண்டு மாங்காய்களை வீழ்த்தப் பார்க்கின்றது. இந்தியாவும் சீனாவும் நட்பு நாடுகளாக மாறினால் இந்தியாவுக்கெதிராக சீனா பாக்கிஸ்தானுக்கு உதவமாட்டாதென இந்தியா நம்புகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது, இந்தியாவும், சீனாவும் நட்பு நாடுகளாக மாறினால் இந்து சமுத்திரத்திலும், இலங்கையிலும் அமெரிக்கா தனது ஆதிக்கத்தைச் செலுத்துவதற்குக் கடும் எதிர்ப்புத் தோன்றும். இந்தியாவும் சீனாவும் ஒன்று சேரும் போது, அவர்களது எதிர்ப்பை மீறி, அமெரிக்காவுக்கு இராணுவ வசதிகளை வழங்குவது சிங்கள சமுதாயத்துக்கு மிகவும் கஷ்டமாகவிருக்கும். ஆகவே, இந்த நிலையில் சிங்களச்சமூகமா, தமிழ்ச்சமூகமா இந்தியாவின் பக்கம் நிற்குமென அலசிப் பார்த்தால் அது தமிழ்ச் சமூகமாகவே இருக்கும்.

சுருக்கமாகக் கூறுவதானால், தமிழ்ச் சமுதாயத்தை இந்தியா நம்பலாம். பழைய அனுபவங்களைக் கவனத்திற் கொண்டால் சிங்களச் சமுதாயத்தை நம்பமுடியாது. எனவே, இந்தியா தமிழர் மீதான கசப்புணர்வை அகற்றுவதற்கு நடைமுறைச் சாத்தியமான செயற்பாடுகளில் இறங்குதல் வேண்டும்.

முதலில் தமிழ் மற்றும் சிங்களப் பிராந்தியங்களில் உள்ள யதாத்த நிலையை உணர்ந்து அதனை அங்கீகரிக்க வேண்டும். அதாவது, தமிழ்ப் பிராந்தியத்தில் தமிழ் மக்களின் பெரும்பான்மையான ஆதரவு விடுதலைப் புலிகளுக்கு இருப்பதனை உணர வேண்டும். யாழ்நகரில் நடந்த பொங்கு தமிழ் நிகழ்ச்சி இதற்கோர் எடுத்துக் காட்டு. தமிழர்களைப் பூண்டோடு அழிப்பதற்கு உதவுவதாக அமெரிக்கா கூறினால், சிங்களச் சமுதாயம் அதனை நம்பி அமெரிக்காவுக்கு இராணுவ வசதிகளை வழங்கும். அது இந்தியாவுக்கு அச்சுறுத்தலானது என்ற யதார்த்த நிலையை இந்தியா உணர வேண்டும். யுத்த மொனறு ஏற்பட்டு அதன் பலனாக அமெரிக்கா தமிழர்களுக்கெதிராகச் செயற்பட்டால் அதன் தாக்கம் தமிழ்நாட்டில் எப்படிப் பிரதிபலிக்கும் என்பதனையும் இந்தியா உணரவேண்டும். இந்தியா தங்களுக்கு உதவாவிட்டாலும் தங்கள் எதிரிகளான சிங்களவர்களுக்கு உதவாமல் விட்டால் அதுவெ போதும் என்பதே தமிழர் தம் நிலைப்பாடாகும்.

அமெரிக்காவோ, வேறெந்த நாடோ நேரடியாகவோ அன்றேல் மறைமுகமாகவோ தமிழ் மக்களுக்கு எதிராகச் சிங்கள சமுதாயத்துக்கு உதவி செய்தால், தமிழ் மக்கள் நிச்சயமாக இந்தியாவின் நேரடி அல்லது மறைமுக உதவியை எதிர்பார்ப்பர்.

மேற்குறிப்பிட்ட விடயங்களுக்கேற்ப இந்தியப் புலனாய்வுத் துறையினர் யதார்த்த நிலையை நன்குணர்ந்து, அவற்றை நன்கு பரிசீலித்து அப் பரிசீலனையின் பிரகாரமே அவர்களது புத்திமதி அமைய வேண்டும். எனவே, இந்தியப் புலனாய்வுத் துறையின் செயற்பாடுகளை மறுபரிசீலனை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது. இச்



செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு இந்திய தூதுவராலய அலுவலர்கள் கிளிநொச்சிக்கு விஜயம் செய்து, தேவையானால் இரகசியமான முறையிலாவது ஆலோசனை நடத்துவது உகந்தது. அதேவேளையில், அமெரிக்க இராணுவ ரீதியிலான ஆதிக்கத்தை இந்தியா சகித்துக் கொள்ளாதென இலங்கை அரசாங்கத்துக்கு இராஜதந்திர அழுத்தங்களைக் கொடுத்தல் வேண்டும். கொழும்பிலுள்ள அநேக வெளிநாட்டுத் தூதுவர்கள் கிளிநொச்சிக்கு விஜயம் செய்தமை யாவரும் அறிந்த விடயம். எனவே விடுதலைப் புலிகளுடன் முதலில் மறைமுகத் தொடர்பை ஏற்படுத்தி பின்னர் நேரடித் தொடர்புகளை ஆரம்பித்து கிளிநொச்சிக்கு விஜயம் செய்து பிரச்சினைக்குரிய விடயங்களைப் பேசித் தீர்க்கலாம்.

இவ்வாறான செயற்பாடுகளின் மூலம் இந்தியாவுக்கு ஏற்படும் அச்சுறுத்தலையும், இலங்கையில் வெளிநாட்டுச் சக்திகளின் ஊடுருவலையும், இந்து சமுத்திரப் பிராந்திய அமைதியையும் பாதுகாக்க முடியும். இதன் விளைவாக, தமிழர்களின் நேர்மையானதும், நீதியானதுமான அபிலாஷைகளை நிறைவேற்ற முடியும். அதே சமயத்தில் சிங்கள சமுதாயத்திற்கு வெளிநாட்டுச் சக்திகளின் ஆபத்துக்களையும், உள்நாட்டுத் தீயசக்திகளின் செயற்பாடுகளையும் தவிர்க்க முடியும்.

எனவே, இந்தியா இவ் விடயத்தில் மிகவும் அவதானிப்பாக இருத்தல் வேண்டும். அதுபோலவே விடுதலைப் புலிகளும் இந்தியாவுடன் புரிந்துணர்வு ஒன்றுக்கு வரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. தமிழ் நாட்டிலுள்ள அரசியலில் அவர்கள் தலையிடுதலாகாது. 41 வருட காலமாக இந்தியாவுக்கும், சீனாவுக்கும் இடையிலிருந்த கசப்புணர்வு மறுசீரமைக்கப்பட்டது போல் இந்தியாவுக்கும் தமிழர்களுக்கு மிடையிலான கசப்புணர்வும் இரு பகுதியினரதும் நன்மை கருதி மறுபரிசீலனை செய்யப்பட வேண்டியது காலத்தின் தேவையாகும். இக்கசப்புணர்வு அகன்றால் சகல தரப்பினருக்கும் நன்மை ஏற்படும். இந்தியாவின் ஒத்துழைப்பும் பங்களிப்பும் இல்லாது இலங்கையில் நிரந்தர, சமாதானம் ஏற்பட முடியாது. இதுவரை கடும்போக்கைக் கடைப்பிடித்த இந்தியா, இன்றைய யதார்த்த நிலைக்கேற்ப கடும்போக்கைக் கைவிட்டு கொள்கைகளை அனுஷ்டித்தால், இந்தியாவின் பிராந்திய நலன்கள் நன்கு பாதுகாக்கப்படும். எக்காரணங் கொண்டும் வெளிநாட்டுச் சக்திகள் இலங்கையில் ஊடுருவாமல் இருப்பதற்கு இந்தியாவும், தமிழர்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய காலம் கனிந்துவிட்டது. இந்தக் காலத்தின் தேவையைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூர்த்தி செய்யாவிட்டால், நிச்சயமாக தமிழினமும், இந்தியாவும் பின்னர் கலவைப்பட நேரிடும்.

தமிழ் இனத்தை ஒடுக்குவதற்கும், அழிப்பதற்கும் சில சிங்கள தீய சக்திகள் அமெரிக்காவினது அல்லது வேறேதேனும் நாடுகளினது உதவிகளைக் கோரினால், அம் முயற்சியைத் தவிடுபொடியாக்குவது இந்தியாவின் கடமையாகும். இக்கடமையைச் செய்யாவிட்டால் அது இந்தியாவின் பாதுகாப்புக்கே குந்தகமாக அமைந்து விடும்.



40

# தமிழ் ஈழத்தை இன்னொரு கியூபாவாக மாற்றுவதற்கு இந்தியா முயற்சிக்கிறதா?

தமிழர்களும் தமிழர்களின் அபிலாசைகளை நிவர்த்திக்கும் வண்ணம் பல தியாகங்களை மேற்கொண்டவரும் தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகளாகிய விடுதலைப்புலிகளும் இந்தியாவைத் தமது தந்தையர் நாடாகவும் தாய் நாடாகவும் எண்ணிச் செயற்பட்டு வருகையில் தமிழர்களைப் பூண்டோடு அழிக்க வேண்டுமெனச் செயற்பட்டுவரும் சிங்கள அரசாங்கத்துக்கு இந்தியா முழுமையான ஆதரவை வழங்குவதனை எண்ணி நாம் மிகவும் மனவருத்தம் அடைகின்றோம். இந்தத் துன்பகர நிலைப்பாட்டுக்கான சான்றுகள் பலவற்றை எடுத்துக்கூற முடியும்.

## விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள்

தமிழ் மக்களின் தமிழ் மக்களின் ஏகப் பிரதி நிதிகள் விடுதலைப் புலிகளே என்பதனை நாம் ஆணித்தரமாகவும் அழுத்தமாகவும் பல சான்றுகளுடன் எடுத்துரைக்க விரும்புகின்றோம். வட-கிழக்கின் தமிழர் தொகை மிகக் குறைவானதாக இருந்த போதிலும் 17,600க்கு மேற்பட்ட விடுதலைப் புலிகள் தமது இன்னுயிரை மாய்த்தமை தமிழ் மக்களுக்காகவே. தமிழ் மக்களுக்காக வேறெந்தவொரு இயக்கமும் இவ்வாறான பாரிய தியாகத்தை மேற்கொண்டதில்லை. இதிலிருந்தே விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்பது நன்கு புலனாகிறது.

அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் சட்டமும் ஒழுங்கும் சீர்குலைந்து அங்கு கொலைகளும் கொள்ளைகளும் பாலியல் வல்லுறவுகளும் தலைவிரித்தாடுகிறது. இதற்கு நேர்மாறாக தமிழர் பிரதேசத்தில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள 71 வீதமான பகுதிகளில் ஒரு கொலையோ. ஒரு கொள்ளையோ, ஒரு பாலியல் வல்லுறவோ நடைபெறவில்லை. தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளே என்பதற்கு இதுவுமோர் எடுத்துக் காட்டாகும்.

இந்த யதார்த்தத்தை நன்கு அறிந்து கொண்ட இராஜதந்திரிகள் விடுதலைப்புலிகளின் ஆட்சித் தலைமைப் பீடத்துடன் மாத்திரம் அடிக்கடி சென்று பேச்சுவார்த்தைகள் மேற்கொண்டனர். எனவே விடுதலைப்புலிகளே தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்பத்றகு இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராஜதந்திரிகளின் நிலைப்பாடே மிக முக்கிய சான்றாகும்.

சிங்கள சமுதாயம் விடுதலைப் புலிகளுடன் மாத்திரமே புரிந்துணர்வ ஒப்பந்தம் செய்து கொண்டது. நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக சிங்கள அரசாங்கம் நோாவேயின் அனுசரனையுடன் உலகின் நாலாபகுதியிலுமுள்ள நாடுகளில் பல சுற்றுப் பேச்சுவாாத்தைகளை நடத்தியது. எனவே சர்வதேச சமூகம் மாத்திரமல்லாது சிங்கள அரசாங்கம் கூட விடுதலைப் புலிகளுடன் மாத்திரமே சமாதானப் பேச்சு வார்த்தைகளை நடத்த முடியும் என்ற நிலைப்பாட்டுக்கு வந்துள்ளனர். இதன் மூலம் தமிழ் மக்களின ஏகப் பிரதிநிதித் தன்மையை விடுதலைப் புலிகள மாத்திரம் கொண்டுள்ளனர் என்பதை உலகம் நன்கு அறிந்து விட்டது.

இலங்கைக்கு நிதி வழங்கும் நாடுகளின் டோக்கியோவில் நடைபெற்ற கூட்டத்தில் விடுதலைப் புலிகள் பங்குபற்றாமையை எண்ணி சர்வதேச சமூகம் மிகவும் வருத்தமடைந்தது. 1987 ஆம் ஆண்டு ஜூன் மாதம் விடுதலைப் புலிகளின் ஒப்பற்ற தலைவனாகிய பிரபாகரனை மாத்திரம் விசேட விமானத்தில் அழைத்து ராஜீவ் காந்தி பேச்சுவார்த்தை நடத்தினார். இதிலிருந்து நாம் எதனை அறிந்து கொள்ள முடியும்? சர்வதேச சமூகம் முழுமையாக விடுதலைப் புலிகளையே தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டாலும், தமிழ் மக்கள் தமது ஏகப் பிரதிநிதிகளாக விடுதலைப் புலிகளை ஏற்றுக் கொண்டமைக்கான புள்ளி விபரத் தவவுகளையும் நாம் சிந்தித்தல் வேண்டும்.

கடந்த பொதுத் தேர்தலில் நான்கு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்புக்கே தமிழ் மக்கள் ஆதரவு வழங்க வேண்டுமென விடுதலைப் புலிகள் கேட்டிருந்தனர். அந்தத் தமிழ்க் கூட்டமைப்பே வடகிழக்கில் 16 ஆசனங்களைப் பெற்ற மாபெரும் வெற்றியீட்டியது. இதன் மூலம் விடுதலைப் புலிகளே ஏகப் பிரதிநிதிகள் என்பது புள்ளிவிபர அடிப்படையில் நிரூபணமாகிறது. விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்பதை தற்போதைய இந்திய அரசு அங்கீகரிக்க வில்லை.

சர்வதேச சமூகமும் சிங்கள அரசாங்கமும் தமிழ் மக்களும் ஏன் ராஜீவ் காந்தியும் கூட விடுதலைப் புலிகளைத் தமிழ் மக்கள் ஏகப் பிரதி நிதிகளாகக் கருதிய போதிலும் இன்றைய இந்திய மத்திய அரசாங்கமும் இலங்கையிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயமும் அதனை ஏற்றுக் கொள்ள மறுக்கின்றன.

எமது நிலைப்பாட்டை நிரூபிப்பதற்கு பல சான்றுகள் உள்ளன. உலகின் எந்தவொரு நாட்டிலாவது விடுதலைப் புலிகள் பங்குபற்றும்



சர்வதேச மாநாட்டில் தாம் பங்கு கொள்ளப் போவதில்லையென்ற இந்திய மத்திய அரசாங்கத்தின் நிலைப்பாடு எதனை உணர்த்துகிறது? விடுதலைப் புலிகளை தாம் தடை செய்துள்ளதாக இந்தியா கூறினாலும், விடுதலைப் புலிகளைத தடைசெய்த பல நாடுகள் விடுதலைப் புலிகள் பங்கு பற்றும் சர்வதேச மாநாடுகளில் கலந்து கொள்வதினைப் பார்க்குமிடத்து, இந்தியாவின் நிலைப்பாட்டை நியாயப் படுத்த முடியாது.

ஒரு சில மாதங்களுக்கு முன்னர் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த இந்திய வெளிவிவகாரச் செயலர். இலங்கைத் தமிழரின் பெருமதிப்பை பெற்ற கட்சியான தமிழ்க்கூட்டமைப்பைச் சந்திக்கவில்லை.

தமிழ்க் கூட்டமைப்பினர் விடுதலைப்புலிகளின் ஆதரவாளர் என்பதே அதற்கான காரணமாகும். அதேவேளையில் பாராளுமன்றத்தி ஒரு அங்கத்துவரையாவது கொண்டிராத கட்சியையும், ஒரு சில ஆசனங்களை மட்டும் கொண்டுள்ள கட்சிகளையும் சந்தித்தார். இம் மூன்று கட்சிகளும் விடுதலைப் புலிகளுக்கு அரசியல் ரீதியாக விரோதிமானவை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

இந்தியாவின் இவ்வாறான நிலைப்பாடானது விடுதலைப் புலிகளின் அரசியல் ரீதியாகவும் மறைமுக இராணுவ ரீதியாகவும் நிர்மூலப்படுத்தும் கொள்கையைத் தெட்டத் தெளிவாக வெளிப்படுத்துகின்றது.

முன்னாள் உயர்ஸ்தானிகர் கோபால கிருஷ்ண காந்தியினதும் தற்போதுள்ள உயர்ஸ்தானிகரான நிரூபம் சென்னினதும் செயற்பாடுகளுக் கிடையிலான வித்தியாசத்தைத் தமிழ் மக்கள் நன்கு அறிந்து கொண்டனர். கட்டுநாயக்க விமானப் படைத்தளம் தாக்கப்படுவதற்கு முன்பு, இலங்கை விமானப் படை யாழ்ப்பாணக்குடா நாட்டு அப்பாவித் தமிழ் மக்கள் மீது குண்டுமாரி பொழிந்தது இந்தக் குண்டு வீச்சு சமாதானத்துக்கு உகந்ததல்ல என கோபால கிருஷ்ண காந்தி கடும் கண்டனம் தெரிவித்திருந்தார்.

அதன் மூலம் தமிழ் மக்களுக்காக் குரல் கொடுத்தார். அவர் பணியாற்றிய குறுகிய காலத்திற்குள் தமிழ் மக்களின் இதயங்ளை நன்கு கவர்ந்து கொண்டார். அவர் மகாத்மா காந்தியின் பேரனாகையால், அவர் உண்மையையும் நேர்மையையும் நீதியையும் அரசியலுக்காக விலை பேச மாட்டார் என்பதை நிரூபித்துவிட்டார். அதற்கு எதிர்மாறாக தற்போதைய உயர்ஸ்தானிகர் தமிழ் தரப்பினர் மத்தியில் பிளவுகளை ஏற்படுத்த முயற்சிக்கின்றார் என்பதைப் பத்திரிகைகள் வாயிலாக அறியக் கிடைக்கிறது.

இவரது கொள்கைகளை நன்கு அலசிப்பார்க்கும் இடத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலைப் புலிகளை ஓரம் கட்டுவதனைக் கொள்கையைக் கொண்டுள்ளமை உணர முடிகின்றது. இலங்கை அரசாங்கம் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான எச்சரிக்கை செய்வதற்கு இந்திய உயர் ஸ்தானிகருக்கு இராஜதந்திர உரிமை உண்டு. இவ்வாறான எச்சரிக்கையை பகிரங்கமாகவோ அன்றேல் மறைமுகமாகவோ தூதுவர்கள் மேற்கொள்ள முடியும் முன்னாள் இந்தியத் தூதுவரான டிக்ஷித் இலங்கை அரசாங்கத்துக்கு சில எச்சரிக்கைகள் விடுத்ததாக பத்திரிகைகள் மூலம் அறிந்தோம்.

இலங்கையிலுள்ள இந்தியப் பிரஜைகளின் பாதுகாப்புக்குப் பாதிப்பு ஏற்படும் வேளையில் அது தொடர்பாக எச்சரிக்கை மேற்கொள்வதற்கு இந்திய ஸ்தானிகருக்குப் பூரண உரிமை உண்டு. இந்தியப் பிரஜைகளைப் பாதுகாப்பதற்கு இலங்கை அரசாங்கம் தவறுமிடத்து இந்தியப் பிரஜைகளின் பாதுகாப்புக்காக இந்தியப் படையைக் கொண்டுவரும் உரிமையும் இந்திய ஸ்தானிகருக்கு உள்ளது. 1958இல் இனக்கலவரம் நடைபெற்ற வேளையில் இந்தியப் பிரஜைகள் பாதிக்கப்பட்டமையால், அன்றைய இந்திய தூதுவர் மகாதேசாதிபதியான சேர் ஒலிவர் குணத்திலக்கவிடம் தனது மக்களின் பாதுகாப்புக்காக தனது படையைக் கொண்டுவரப் போவதாக அறியக் கொடுத்ததன் விளைவாக அவசர காலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு இனக் கலவரம் அடக்கப்பட்டது என்தை வாசகர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறோம்.

அரசாங்கங்களுக்கிடையில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு கடும் எச்சரிக்கைகளும் மிரட்டல்களும் விடப்படுவது சாதாரண இராஜதந்திர விடயங்களாகும்.

ஆனால், மக்களால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களை அழைத்து அவர்களது செயற்பாடுகள் தொடர்பாகக் கண்டனம் தெரிவிப்பதும், விடுதலைப் புலிகளுக்குச் சாதகமான செயற்பாடுகளை மாற்றிக் கொள்ளாவிடில், அவர்களால் இந்தியாவுக்கு அச்சுறுத்தல் என்று கூறினர்.

அவர்கள் இந்தியாவுக்குப் பணிப்பதற்கு விஸா கொடுப்பதற்கு மறுப்பதாக பத்திரிகை வாயிலாக அறிந்தோம். இது இராஜதந்திர மரபுக்கு அப்பாற்பட்ட செயல் என்பதை வாசகர்களுக்கு மாத்திரமல்ல, கொழும்பிலுள்ள ஏனைய தூதுவர்களின் கவனத்திற்கும் கொண்டு வர விரும்புகின்றோம்.

இவ்விதம் வேறுநாடுகளில் அல்லது இந்தியா விலகுதல் நடைபெறுமானால், அந்தத் தூதுவரை "நம்பிக்கை இழந்தவர்" என்று கூறி (Persona - Non-Grata) அவர் நாடு கடத்தப்படுவார். இவ்விதம் மறைந்த



இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாச ஒரு பிரச்சினையில், பிரித்தானிய உயர்ஸ்தானிகரை இவ்வாறு கூறி நாடு கடத்தினார்.

இந்திய உயர் ஸ்தானிகராலயம் தொடர்ந்தும் இம்முறையைக் கடைப்பிடிக்குமானால், இந்தியப் பிரதமருக்கும், துணைப் பிரதமருக்கும், எதிர்க்கட்டிசித் தலைவியான சோனியா காந்திக்கும், தமிழ் நாட்டு அரசியல் பிரமுகர்களுக்கும் இது தொடர்பான சகல விடயங்களையும் எடுத்துரைக்கத் தமிழ் மக்கள் பின்னிற்கமாட்டார்கள்.

புலிகளை நிர்மூலமாக்கும இந்திய மத்திய அரசினதும் இந்திய தூதுவரினதும் செயற்பாடுகளுக்கு இந்திய புலனாய்வத்துறையினரின் அறிக்கைகளும் அறிவுறுத்தல்களும் காரணமோ தெரியவில்லை. ஒரு சில வருடத்திற்கு முன்னர் எல்லை கடந்த பயங்கரவாதிகள் 8 மதங்களாக கார்கில் என்ற பிரதேசத்தில் ஊடுருவி நிலை கொண்டிருந்தமை இந்திய புலனாய்வுத் துறையினருக்குத் தெரிந்திருந்தும் கூட அது தொடர்பாகப் பிரதமருக்கு அறியக் கொடுக்கமாலிருந்தமைக்கான காரணம் என்ன என்பதை நன்கு சிந்திக்க வேண்டும்.

அதுபோல் பல வருடங்களுக்கு முன்பு தென்பிராந்தியப் பலனாய்வுத் துறை தளபதி தமிழ் நாட்டிலிருந்து இலங்கையின் ஆயுதக் குழுக்களுக்கு நன்கு உதவி செய்தும், பணத்துக்காக அவ்விடத்தை அடிக்கடி இலங்கை அரசாங்கத்துக்கும் கூறிவந்ததும் வாசர்கள் அறிவார்களென நினைக்கிறோம். புலனாய்வுத்துறையினர் சில வேளைகளில் பணத்துக்காக இரட்டை வேடம் (Double Agent) போடுவது சகஜம். இதே தளபதி இன்னொரு வல்லரசுக்கு இந்திய இராணுவ இரகசியங்களைக் கொடுத்து உதவிய போது கையும் மெய்யுமாகப் பிடிபட்டு அக்குற்றத்துக்காக திஹர் சிறைச்சாலையில் சிறைவாசம் அனுபவித்தார் என்பதனை வாசகர்களுக்குத் தெரிவுபடுத்த விரும்புகின்றோம்.

எனவே இந்தியப் புலனாய்வுத் துறையினர் பணம் பாதாளம் மட்டும் செல்லும் என்பதை நன்றிந்து வைத்துள்ளார்கள்.ஆகவே , புலனாய்வுத் துறையின் அறிக்கையும் அறிவுரைகளும் தெய்வீகமானவை என இந்தியா எண்ணுவது தவறு.

எனவே மேற்கூறியவற்றைக் கவனத்திற் கொண்டு அறிவுறுத்தல்களையும் அறிக்கைகளின் ஏகப் பிரதிநிதிகள் என்ற யதார்த்த நிலைக்கு இந்தியா வராதவிடத்து, இந்து சமுத்திரத்தின் இன்னொரு கியூபாவாக தமிழ் ஈழத்தை மாற்றுவதே இந்தியாவின் முயற்சியாகவிருக்கும்.

சீனா, இந்திய-சீன எல்லையாகிய மெக்மோஹன் கோட்டு எல்லையை மீறி இந்தியாவின் சிலபகுதிகளை ஆக்கரமித்தும் தீபெத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீது ஆதிபத்தியம் செலுத்தியும் இருந்த போதிலும் கூட 41 வருட காலமாகவிருந்தமையை இந்தியா மறந்து, இந்தியா தனது பார்துகாப்பு நலன் கருதியும் பொருளாதார நன்மை கருதியும் ஒரு இணக்கப்பாடடுக்கு வந்துள்ளது.

இதற்கான முக்கய காரணம். அமெரிக்காவும் ஜப்பானும் ஒன்றிணைந்து இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தங்களின் ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்குத் திட்டமிட்டிருப்பதாகும்.

தூரதிஷ்ட நோக்கில் அமெரிக்காவும் ஜப்பானும் இந்திய சீனக் கூட்டை எதிர்கொள்வதற்கு சுதந்திர தமிழ் ஈழத்தை உண்டாக்கி அதன் பிரகாரம் தமிழ் ஈழத்தை ஓர் கியூபாவாக மாறுவதற்கு சிங்கள சமூகமோ அல்லது அமெரிக்காவோ காரணமல்ல. ஆனால் இந்தியாவின் குறுகிய மனப்பான்மை ஒன்றே காரணமாக அமையலாம்.



# 41

## இடைக்கால நிர்வாகத்தில் தமிழரின் பிரதிநிதித்துவம் 1981 குடிசன மதிப்பீட்டின் பிரகாரம் அமைதல் வேண்டும்.

கடந்த 80 வருடங்களுக்கு மேலாக தமிழர்களை சிங்கள அரசியற் பீடங்கள் ஏமாற்றி வந்தமை சரித்திர உண்மை. சேர்.பீ. இராமநாதன் சட்டசபையில் அங்கத்துவம் வகித்த வேளையில் தனது நேரத்தில் 95 சதவீதத்தை சிங்களவர்களுக்கும், பௌத்தர்களுக்குமாகக் குரல் கொடுப்பதிலேயே செலவிட்டார். அதனை எண்ணி நாம் பொறாமை கொள்ளவில்லை.

1915 ஆம் ஆண்டில் சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் இனக் கலவரம் ஏற்பட்ட வேளையில், பிரித்தானிய ஆட்சியாளர்கள் சிங்களத் தலைவர்களைக் கைது செய்து சிறைக்கு அனுப்பிய வேளையில் மரண தண்டணையை எதிர் நோக்கியிருந்த சிங்களத் தலைவர்களுக்கு சேர்.பொன். இராமநாதன் தனது உயிரையும் மதிககாது இங்கிலாந்து சென்று அவர்களுக்கு ''உயிர்ப்பிச்சை'' வாங்கிக் கொடுத்தார்.

பாதிப்பை எதிர்நோக்கியிருந்த சிங்களத் தலைவர்கள் குதிரைகளை அகற்றிவிட்டுத் தாங்களே குதிரையளாக மாறி கொழும்புத் துறைமுகத்திலிருந்து அன்னாரின் வீடுவரை அவரை இரதத்தில் இருத்தி இழுத்துச் சென்றனர்.

சிங்களத் தலைவர்களின் அவ்வாறான நன்றி மனப்பான்மை ஒரு சில வருடங்கள் மாத்திரமே நீடித்தது.அவரது பிற்கால அரசியல் வாழ்க்கையில் சட்ட சபையில் தமிழரின் நலன்களுக்காகக் குரல் கொடுத்தமையால் அவரால் உயிர்பிச்சை பெற்ற சிங்களத் தலைவர்கள் அவருக்கு தமிழ் இனவாதி என முத்திரை குத்தினர். அவர் அவர் விரக்கதியடைந்த தமிழ்மக்களை ஓரங்கட்டினால் நிச்சயமாக தமிழ் இனம் பிரிந்து செல்லும் எனத் தீர்க்கதரிசனமாகச் சொல்லிவிட்டார். அது மாத்திரமல்லாது சிங்கள மக்களுக்காக நன்கு செயற்பட்ட அவரது தம்பியாரின் செயற்பாடு தொடர்பாகவும் சிறிய எச்சரிக்கை யொன்றினை மேற்கொண்டார்.

அவர் மறைந்து அநேக வருடங்களுக்குப் பின்பே அவரது உருவச்சிலையை தேசிய சட்ட சபையில் முன்பாக்கமாக வைக்காமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்புறமாக வைத்தனர். அவருக்குச் செய்த துரோகத்தை தமிழ் மக்கள் மன்னிக்க மாட்டார்கள்.

1956 ஆம் ஆண்டு தொடக்கம் 2001 வரையிலான 45 வருடகாலமாக தமிழர்கள் இனக் கலவரங்கள், இனப்படுகொலைகள், பேரழிவுகளை எதிர்கொண்டது போல உலகில் வேறெங்கும் நடைபெறவில்லை.

இக்காலவரையறையிலேயே தமிழர்களின் உரிமைகளுக்காக சாத்வீக முறையில் போராடிய ஈழத்துக் காந்தி என அழைக்கப்பட்ட செல்வநாயகம், பண்டாரநாயக்கவுடனும் டட்லி செனநாயக்கவுடனும் செய்து கொண்ட உடன்படிக்கைகள் யாவும் காற்றில் பறந்தன. சிங்கள அரசியல் தலைமைத்துவங்களிடம் நேர்மையோ, கண்ணியமோ, நம்பகத் தன்மையோ இல்லாதபடியால் தமிழ் ஈழம், இழந்த சுதந்திரத்தை மீண்டும் பெற்றுக்கொள்ள வேண்டுமென வட்டுக்கோட்டையில் பிரகடனப்படுத்தினார்.

அவர் தனது மரணத்துக்கு முன்னர் தீர்க்கதரிசனம் ஒன்றையும் கூறியிருந்தார். அதாவது தமிழர்களுக்கு இனிமேல் கடவுள் தான் உதவ வேண்டும் எனக் கூறியிருந்தார்.

கடந்த 20 வருடகாலமாக பிரபாகரன் ஈட்டிய உலகம் கண்டிராத இராணுவ வெற்றிகளின் பலனாக தமிழ்ப் பிரதேசத்தில் 71% சுதந்திரம் அடைந்து விட்டது.

எனவே, கடவுள் தான் தமிழர்களுக்கு உதவ வேண்டுமென்ற செல்வநாயகத்தின் விருப்பம் நிறைவேறி வருவது வெள்ளிடை மலை.

## சிங்கள சமூகத்தின் பிரதிபலிப்பு

விடுதலைப் புலிகள் அடைந்த இராணவ வெற்றிகளின் பலனாக இராணுவம் விடுதலைப் புலிகளை வெல்ல முடியாதென்ற நிலைப்பாட்டுக்கு அரசாங்கம் வந்தமையால், இவர்களுடன் பேச்சுவாத்தை நடாத்த முற்பட்டது. யுத்த நிறுத்தமும் புரிந்துணாவு ஒப்பந்தமும் பேச்சுவார்த்தையை நடாத்துவதற்கு உதவியாக இருந்தன. ஆயினும் சிங்களச் சமூகம் தமிழ் மக்களுடன் சமாதானமான, நீதியான, நேர்மையான, நிரந்தர அரசியல் தீர்வொன்றுக்கு வர முயற்சிக்கின்றதா என்பது கேள்விக்குரிய விடயமாகும்.

தென் இலங்கையில் மாத்திரமே பொருளாதாரம் வளர்ச்சி அடையவேண்டுமென்ற நோக்கில் கடும் போக்குடைய சிங்கள சமுதாயம் இருக்கின்றது. புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டு 18 மாதங்கள்



கடந்துவிட்ட நிலையிலும் தமிழ்ப் பிரதேசங்களில் இயல்புநிலை தோன்றவில்லை. பொருளாதார முன்னேற்றம் ஒரு விதத்தாகுதல் அதிகரிக்கவில்லை. அதனை நன்கு அவதானித்த விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் தற்காலிகமாக நிறுத்திவிட்டனர்.

சமாதானப்பேச்சுவார்த்தை தொடரப்பட வேண்டுமாயின் வட, கிழக்குப் பிராந்தியத்துக்குப் பூரணத்துவம் பெற்ற அதிகாரமுள்ள, நிதி வசதியுள்ள அரசியல் பொருளாதார இடைக்கால நிர்வாகமொன்று ஏற்படுத்தப்பட வேண்டுமென்ற கோரிக்கையை விடுதலைப் புலிகள் விடுத்தனர். ஆனால் அரசாங்கம் "யதார்த்தத்தை" முழுமையாக உணராமல் மிக மோசமான நழுவல் போக்கினையும் அநேக சிக்கல்கலையும் உண்டாக்கியுள்ளது. தற்போது அரசாங்கம் முன்னாள் நோர்வே தூதுவரின் மூலமாக நான்கு பக்க யோசனைகளை விடுதலைப் புலிகளுக்கு அனுப்பி வைத்துள்ளது.

## புதிய யோசனைகள்

இப்புதிய யோசனைகள் மிகவும் ஆபத்தானவையாகும். இப்புதிய யோசனைகளின் பிரகாரம் இடைக்கால நிர்வாகத்தில் விடுதலைப் பலிகள் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகளாக ஏற்றுக்கொள்ளப்படும் விடுதலைப் புலிகளக்கு மாத்திரம் பெரும்பான்மை இடங்கள் கொடுக்கப்படும் எனவும் கூறப்பட்டிருந்தது. பெரும்பான்மையின் வரைவிலக்கணத்தை முதலில் அறிந்து கொள்ள வேண்டும்.

அங்கத்தவர் தொகையில் 51 வீதத்திலிருந்து 99 வீதம் வரை பெரும்பான்மை எனக் கருதலாம். விடுதலைப் புலிகளுக்கு 51% கொடுத்தால் அது பெரும்பான்மை என ஏற்றுக்கொள்ள முடியுமா? 51% அல்ல 60% கிடைத்தாலும் கூட அதனை ஏற்றுக்கொள்ளக் கூடாது. அதறகு மாறாக நீதி நேர்மை என்ற அடிப்படையில் 1981 ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டின் பிரகாரம் வட, கீழ் பிராந்தியத்தில் தமிழர்கள் என்ன வீதத்தில் இருந்தார்களோ அந்த வீதத்திலான அங்கத்தவர் தொகை விடுதலைப் புலிகளுக்கு வழங்கப்படுதல் வேண்டும். வட, கீழ் பிராந்திய சனத்தொகையில் தமிழர்கள் 75% இருந்தால் இந்த இடைக்கால நிர்வாகத்தில் 75% அங்கத்துவம் இருக்க வேண்டும். 1981 ஆம் வருடத்துக் குடிசன மதிப்பீட்டில் முஸ்லீம்களும் சிங்களவர்களும் என்ன விகிதத்தில் இருந்தனரோ அதேஅடிப்படையிலேயே அவர்களுக்கு அங்கத்துவம் வழங்கப்பட வேண்டும்.

பொதுவாக எந்த நாட்டிலும் யுத்தம் நடைபெறும் போது குடிசன மதிப்பீடு மேற்கொள்ளப்படுவதில்லை. இலங்கையில் யுத்தம் நடைபெற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளையில் 2001 ஆம் வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட குடிசனமதிப்பீடு தமிழ் மக்களுக்கு மிகவும் பாதகமாக அமைந்து விட்டது. இன்னமும் கூட யுத்தம் காரணமாக தமிழ் மக்கள் உள்நாட்டு அகதிகளாகவும் வெளிநாட்டு அகதிகளாகவும் வாழ்ந்து வருகின்றனர்.

அரசாங்கத்தின் புதிய யோசனைகளின் பிரகாரம் இடைக்கால நிர்வாகத்தில் காணி, காவல்துறை, பாதுகாப்பு, வரி எதுவும் கொடுக்கப்படவில்லை.அதற்கு மாறாக புனர்நிர்மாணம், புனரமைப்பு மற்றும் புனர்வாழ்வு போன்ற விடயங்களிலும் வேறு சில விடயங்களிலும் மாத்திரம் செயற்பட அதிகாரமுண்டு. இந்த அடிப்படையில் விடுதலைப்புலிகள் கட்டிட ஒப்பந்தக்காரர்களாக மட்டுமே செயற்பட முடியும். ஆனால், இன்றைய யதார்த்த நிலையில் வட, கீழ் தமிழ் பிரதேசத்தின் 71% நிலப்பரப்பில் சுதந்திர அரசாங்கமொன்றுக்கு இருக்க வேண்டிய சகல குணாதிசயங்களையும் விடுதலைப்புலிகள் கொண்டுள்ளனர். தங்களிடமுள்ள இராணுவம், காவல்துறை, நீதிபரிபாலனம், நிர்வாகம், வரிகாணியுரிமை யாவற்றையும் தூக்கியெறிந்து விட்டு கட்டிட ஒப்பந்தக்காரராகுவதற்கு விடுதலைப்புலிகள் இணங்குவார்கள் என அரசாங்கம் எவ்வாறு எதிர்பார்க்க முடியும்.

எனவே, இந்த யோசனைகளை தமிழர்களுக்கெதிரான பாரியதொரு சதி முயற்சியாகவே கருத வேண்டும். அரசாங்கம் என்ன காரணத்திற்காக வட-கிழக்கின் யதார்த்த நிலையைப் புரிந்து கொள்ளவில்லை? யதார்த்த நிலைக்கேற்பவே யோசனைகளும் அமையவேண்டும். எனவே, வட-கிழக்கின் 71% வீத நிலப்பரப்பில் எவ்வாறு அவர்களது இராணுவம், காவல்துறை, நீதித்துறை, வருமானத்துறை மற்றும் நிர்வாகம் செயற்படுகிறதோ அவ்வாறே மிகுதியான 29% பிரதேசத்திலும் செயற்படுவதற்கேற்ற வகையில் இடைக்கால நிருவாகம் வழங்கப்படுதல் வேண்டும்.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் 13 ஆவது திருத்தத்தைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றி மாகாண சபைகள் உருவாக்கப்பட்டன. அந்த மாகாணசபைகளுக்கு அதிக சக்தியுள்ள அதிகாரங்கள்இல்லாவிட்டாலும் காவல்துறை, அரசகாணி போன்ற துறைகள் வழங்கப்பட்டிருந்தன. ஆனால். புதிய யோசனைகளின் பிரகாரம் அரசாங்கம் பொடுக்கப்பட்ட அதிகாரங்களைக் கூட அகற்றிவிட்டது. இந்தக் கொடூரமான செயல் மூலம் தமிழ் மக்களுடைய சுய மரியாதையை அரசாங்கம் மிகவும் மலினமாக்கி விட்டது. பொதுவாக இடைக்கால நிர்வாகத்துக்கும் இறுதி அரசியல் தீர்வுக்கும் இடையிலான



வித்தியாசம் 10 அல்லது 15 வீதமாக இருக்கலாம். அரசாங்கத்தின் இறுதி அரசியல் தீர்வ எப்படி இருக்குமென்பதை அதிலிருந்து நாம் அறிந்து கொள்ள முடியும்.

1946 ஆம் ஆண்டு பிரித்தானிய அரசாங்கம் இந்திய உப கண்டத்தில் இடைக்கால அரசாங்கமொன்றை அமைத்தது. அந்த இடைக்கால அரசாங்கத்தில் ஒரு பூரண சுதந்திர அரசாங்கத்திற்கு இருக்க வேண்டிய குணாதிசயங்களில் 75-80% வழங்கப்பட்டது.

விடுதலைப்புலிகளை இராணுவரீதியில் அடக்குவதற்காக அரசாங்கம் புது வகையான இராணுவத் தளபாடங்களை அமெரிக்கா மற்றும் இஸ்ரேலிலிருந்து பெற்றுக் கொள்கிறது. ஒரு புறம் யுத்த நிறுத்தம், புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் சமாதானப் பேச்சுக்கள். மறுபுறம் விடுதலைப்புலிகளையும் தமிழ் மக்களையும் அழிப்பதற்கு தயார்படுதல்.

இதேவேளை, எதைக் கொடுத்தாலும் ஏற்றுக்கொள்வதற்கு விடுதலைப்புலிகள் தயாரில்லை. அவர்கள் சமாதானத்தை விரும்பவில்லை என்று சர்வதேச சமூகத்துக்குக் காட்டும் வகையில் புதிய யோசனைகளை விடுகின்றனர்.அரசாங்கம் அரசியல் ரீதியாக விடுதலைப்புலிகளை ஓரங்கட்டுவதற்காக அமெரிக்காவிடமிருந்தும் உலக நாடுகளிடமிருந்தும் அரசியல் ரீதியாக மாத்திரமல்லாது இராணுவரீதியாகவும் உதவிகளை எதிர் பார்க்கின்றது. இந்தச் சூழ்நிலையில் விடுதலைப் புலிகள் புதிய யோசனைகளை நிராகரித்து, அதற்கு மாறாக காவல்துறை, அரசகாணிகள், வரி, பாதுகாப்பு, சுதந்திர நிர்வாகம், நீதித்துறை போன்றவற்றை உட்புகுத்துவதற்கான கோரிக்கைகளை விடுத்தல் வேண்டும். அதற்கு அரசாங்கம் இணங்கினால் மாத்திரமே பேச்சுவார்த்தைகளில் ஈடுபடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

42

# Tamil Analyst warns of Indian intervention in Lanka
## P.K. Balachanddran
## Colombo,
## Hindustan Times - April 19

A leading pro- LTTE Sri Lankan Tamil political commentator has warned the Tamils of the island that India may be planning to intervene in the Sri Lankan peace process to weaken the LTTE in the short run, and to establish its hegemony over the entire country in the long run.

In his latest column in the Colombo-based daily Thinakural on Friday, analyst Thillaikoothan said that by attending the mini Aid Lanka consortium meeting in Washington on April 14, after boycotting all previous meetings, India might in signalling a desire to shed its "stand-offishness" vis-a-vis the peace process and take on a pro-active role. But instead of throwing its weight behind the forces of peace, it could be wanting to strengthen the "anti-peace" lobby headed by President Chandrika Kumaratunha weaken the LTTE. he said.

Thillaikoothan, the pen name of an ex-senior UN oficial, said that India's main objective would be to back President Kumaratunga's efforts to wreck the LTTE's current status as the "sole reprentative " of the Tamil people and also weaken it militarily.

When political changes take place at the end of 2003, strategy experts representing India and President Kumaratunga could meet to chalk out joint plans, he said. One of their mian aims of these deliberations would be deny the LTTE its sole representative status by getting other Tamil groips involved in the peace process.

Thillaikoothan said that President Kumaratunga's recent visit to India and her meeting with all important Indian leaders, incliuding the anti-LTTE Tamil Nadu Chief Minister Jayalaithaa, showed a confluence of interest between the Sri Lanka anti-peace lobby and the Indian leadership. He said that it was extremely significant that Jaya;alithaa had broken tradition by meeting a Sri Lankan leader. All previous Tamil Nadu



Chief Minsters, whether C.N. Annadurai, M.G. Ramachandran or M. Karunanidhi, had refrained from meeting Sri Lank leaders, he pointed out.

Thillaikoothan appealed to the LTTE and its parliamentary representative, Tamil National Alliance (TNA) to raise their voice against any move to involve other Tamil groups in the peace talks and dilute the LTTE's position.

The commentator warned that India might also ask for representation in the now exclusively Scandinavian-staffed Sri Lanka(Ceasefire) Monitoring Mission (SLMM). "If this demand is made the Tamil people and the LTTE must reject it outright," he demanded.

The other fear expressed by Thillaikoothan is that Inda may try to impose the Indian model of federalism on the Tamils. This is an old fear which has gained fresh impetus since the Indian High Commissioner recommended that the Tamil leadership read the Indian constitution also, in his speech at a function to gift over 1000 Indian books to the Jaffna Public Library recently. Among the gifts were books on the Indian constitution.

But the Tamils, from the extremist LTTE down to the moderate Tamil United Liberation Front(TULF), consider the Indian model too inadequate. They United Liberation Front (TULF), consider the Indian model too inadequate. They point to the fact that Centre can sack a state government even if the latter has two thirds support in the state legislature. "This sort of federalism will not suit the Sri Lankan Tamils, "Thillaikoothan said. Warning of a larger Indian design vis-a-vis Sri Lanka in his concluding para, Thillaikoothan said: "Indian's intervention in the future will be detrimental to the interest of the Tamils and helpful to the interests of the Sinhalese. If India's efforts succeed, Sri Lanka will be dominated politically, economically and militarily, and it will be turned into a Finland."

The reference was to Finland's subordinate status vis-a-vis the former Soviet Union.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

43

# India will not militarily intervene in Sri Lanka: Analyst

## PK. Balachanddran

## Colombo.

## Hindustan Times - June 28

A Tamil political analyst has said that the Sri Lankan government is "day dreaming" if it thinks that either India or the US will militarily intervene to defend the country in case the peace process collapses and war with the LTTE resumes.

In his column in the Tamil daily "Thinakural" on JUNE 24, commentator Thillaikoothan said that both India and the US would have good reasons not to intervene militarily in Sri Lanka.

Taking the case of India first, he says that present Indian government is well aware of what happened when new Delhi intervened in July 1987 under the Indo-Sri Lanka Accord. According to Thillaikoothan, Prime Minister Vajpayee, knows that the Sinhala- najority has been " ungrateful" for the military help rendered to subdue the Tigers. Vajpayee also appreciates the commitment shown and the sacrifices made, by the Tamils, for their cause. This is why, the author adds, Vajpayee turned a deaf ear to the Sri Lankan govenment's plea for military assistance in 2000, when the LTTE was on the verge of capturing Jaffna.

According to Thillaikoothan, the Indians are aware that the casualties suffered by the Indian Peace Keeping force (IPKE) between 1987 and 1990 (1150 dead and thousands wounded) were higher than those suffered in the Indo-Pakistan wars.

He quotes a study done by an UK-based international institute to say that to tackle a guerilla force, a conventional army will have to have 22 men for every guerilla. And in the case of an efficient group like the LTTE, the ratio will have to be 1:44. If there are 20,000 LTTE fighters, a conventional army opposing it will have to have 850,000 men. Thillaikoothan goes on to say that if India were to come to the aid of the "Sinhala majority" again and take on the LTTE, it will have to lose 50,000 to 75,000 men, Thillaikoothan says.



The strength of the LTTE, he says, has increased seven fold since the days of the India-Sri Lanka Accord. Given the required army-guerilla manpower ratio, the Indians will have to deploy a force of 900,000 men in Sri Lanka - a far cry from the 125,000 men deployed between 1987 and 1990. Such huge deployment is not a feasible proposition in view of the fact that entire Indian army is only one million strong, Thillaikoothan says.

He also gives a political dimension to the Indian reluctance to military intervene in Sri Lanka. According to him, the V.P. Singh govenment withdrew the IPKE because there were strong protests in Tamil Nadu state against the IPKE which, he says, had killed 6500 innocent Tamil and Muslim civilians in the process of fighting the LTTE. The point that Thillaikoothan is driving home here in that New Delhi will not want to alienate Tamil Nadu in a saimilar way again.

As regards, the United States, he says that it is already facing opposition to its military action in Iraq. Every day there are reports of the US forces suffering casualties in Iraq. The US Senate is to inquire if the war in Iraq could be justified at all. If the US does intervene mulitarily in Sri Lanka against the Tamils, there is "no doubt" that India will raise "strong objections", Thillaikoothan feels. India, which is readying for parliamentary elections in the coming year, will not also tolerate the US, Japan or any other extra-regional power, gaining too great a political, economic or military influence in Sri Lanka, he adds.

Futhermore, the US and its allies know very well that the LTTE has never indulged in any kind of violence in the US or in any allied country. there will, therefore, be no reason for the US to intervene in Sri Lanka against the LTTE, he argues. If the US is interested in Trincomalee a deal with the LTTE, tather than confront the LTTE militarily.

The US is also aware that the leftist opposition in Sri Lanka, led by the Sri Lanka freedom Party (SLFP) and the Janatha Vimukthi Peramuna(JVP), will oppose US intervention. Western commentators have also noted that the Sri Lankan govenment has not given the Tamils a fair deal so far. Thillaikoothan has do doubt that the US will act only in its interest, and not in the interest of Prime Minister Wickremesinghe and his close aides, GL Peiris and Milinda Moragoda.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org